உ

சிவமயம்

ஸ்ரீ சங்கரநாவலர் செய்த

# கன்னியாகுமரித்தலபுராண

# மூலமும்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்

நூற்பரிசோதகர்

## மு. ரா. அருணாசலக்கவிராயர்

செய்த

## சுருக்கவசனமும்.

இவை

சற்கார் மலையாளம் தேரூர்

பிரைமறி ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

மகா-ள-ள-ஸ்ரீ

தருமவிநாயகப்பிள்ளையவர்கள்

நன்முயற்சியால்

மதுரை சுப்பிரமணிய விலாசம் பிரஸில்

பதிப்பிடப்பெற்றன.

இதன்விலை 1—0—0

ஓம்:

# முகவுரை.

நான்முகக்கடவுளது படைப்பினுள் மேன்மையுற்று விளங்குகின்ற மானிடயாக்கையா லெய்தற்பாலன அறம், பொருள், இன்பம், வீடென்னுந்திறம்படு புருடார்த்தங்கள்நான்குமேயாம். அந்நான்கை யு மடைதற்கு முக்கியமான சாதனங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தமென்னு மூன்று; அம்மூன்றனுள் சமயவேறுபாடுபெற்றி, அவ்வச்சமயத்தார் வெவ்வேறு கொள்ளப்படும் மூர்த்தி தலம்போலாது எல்லாச் சமயத்தாரு மொன்றாகப் போற்றப்படுவது தீர்த்தமொன்றேயாம்.

இத்தகைய தீர்த்தங்கள் புண்ணியபூமியாகிய இப்பரதகண்டத்திற் பல்லாயிரமுள்ளன. அவற்றுட் சிறந்ததீர்த்தங்கள் சிற்சிலவே. அவற்றுள்ளும் மிகச்சிறப்புற்றோங்குந் தீர்த்தங்களென்று தேவருமுனிவரும் யாவருங்கொண்டாடப்பெற்றன வடதிசைக் கங்கையுந் தென்றிசைக் குமரியுமேயென்பது "கங்கையாடிப்போந்தேனொருகூறை" "என நன்னூல் விருத்தியுரையிலும் "குமரியாடிப் போநதே னொருபிடிசோறு தம்மின்" என இலக்கணவிளக்கச் சூறாவளியினும் உதாரணமாக வெடுத்துக்காட்டிய பண்டைப் பழமொழிகளாலே நன்கறியற்பாலது. இனி (மகாபாரதம்) அருச்சுன சந்நியாசி யுயர்ந்த தவவொழுக்கச்சிறப்பு நிரம்பிய தூயோனொனத்தன்னை பதித்தற்பொருட்டுப் பாண்டியராசனிடத்திற் "கன்னியைக் கண்ணுற்றுடவந்தனம்" என்று கூறியதனாலுங் கன்னியாகுமரித்தீர்த்தம் மிக்க மான்மியமுள்ளதென்று விளங்குவதன்றோ? இஃதன்றியும் மேற்குறித்த கங்காநதி தீரத்துக்கப்பாலுமுள்ள எண்ணில்லாத மாந்தர்கள் தினந்தோறும் வந்து தீர்த்தமாடிச் செல்வதை யின்றும் பிரத்தியட்சமாக எல்லாருங்காண்கின்றோம்.

இவ்வரிய பெரிய மகத்துவம் பெற்ற கன்னியாகுமரித் தீர்த்தத்தைத் தன்னிடத்துட்கொண்டிருக்குங் கன்னியாகுமரித்தலபுராண விசேடங்கள் வடநூற்கடலுட் பற்பல மணிகள்போல ஆங்காங்குப் பதிந்துகிடந்தவற்றை யொருங்குதிரட்டி யெடுத்து, தென்மொழியாற்றின் எளிதிலே யாமெல்லாம் பெறும்பொருட்டு (856) செய்யுட்களால் பதினெட்டுச் சருக்கங்களாகப்பாடிக் குமரிநகர்த்தல புராணமெனப் பெயரிட்டுத்தந்த வித்வசிகாமணியாவார் ஸ்ரீ சங்கரநாவலரெனும் பெயரிய பெரும்புலவரென்பதும் இவரது தந்தையார்

சிவசங்கரநாவலரென்பதும் இந்நூலுட்கூறிய பாயிரம் 19 ஆம்செய்யுளாலே தெரிகின்றன; அவற்றோடு இப்புராணத்தைப் பாடும்படி வேண்டிக்கொண்ட விவேகபத்திமான்களாவார் கோட்டாற்றிலுள்ள வணிகப்பிரபுக்களென்பதுங் காணப்படுகின்றது. இவரது நாடு, நகரம், காலமொருவாற்றானும் புலப்படவில்லை. புராணமுழுது நன்கு படித்துப்பார்க்கும்பொழுது, இவரது மெய்ப்பத்தியின் விளக்கமும், கற்பவர் மனத்தைக் கவருஞ் செம்பொருளுடைத்தாகிய வாக்குநயமும், பெருங்காப்பியத்தினிலக்கணமாகிய நாற்பொருள்பயக்குநடை முதலிய பல நலங்களுமமைந்துள்ளதாக அறிஞர் பலருமறிவரென்பதற்கைய மணுவளவேனுமில்லை.

சிறப்புப்பாயிரஞ்செய்வார் காலம் களன் காரணம் ஆகியவிவற்றை யொருதலையாகக் கூறவேண்டுமென்னும் யாப்புறவில்லாமையால் இந்நூற் சிறப்புப்பாயிரஞ் செய்தார் காரணத்தை மட்டுங்கூறி, மற்றிரண்டையுங்கூறாது விட்டார்போலும். காப்பியத்தின் தலைவி பகவதியாகிய கன்னிநாயகி யாதலின் அத்தேவி சந்நிதியிலே யரங்கேற்றி யிருப்பர். அதுபற்றிக்களன் அத்தேவியாலயமென்றே முடிவுரைகூறலாம். இனி, திருவிளையாடற்புராணஞ் செய்தார் முதலிய பிற்பட்ட நூலாசிரியர்போல இந்நூலாசிரியர் திணையின் பாகுபாடுசெய்து, அவ்வத் திணைகட்குரிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் முதலிய சிறப்புக்களை வியந்துபாடாது, முற்பட்ட நூலாசிரியர்கள் போலவே இன்ன இன்ன தலங்களையுடையது இந்தநாடெனா நாட்டுச்சருக்கத்தைப்பாடி முடித்திருத்தலால் நாலைந்து நூற்றாண்டுகளுக்காவதுமுன்னென்றே யொருவாறு காலத்தை யூகித்தறியலாம் நிற்க.

இப்புராணம் நம் தமிழ்நாட்டிற்கின்றியமையாத தொன்றெனவெண்ணி யிற்றைக்குப் பத்துவருடங்கட்குமுன் எனது நண்பரும் சைவசித்தாந்த சாஸ்திரப் பயிற்சித் தலைவருமாகிய திருநெல்வேலி ஸ்ரீமத் பால்வண்ண முதலியாரவர்கள் தங்கரத்துப் பரம்பரை வித்வகுலதிலகராகிய ஸ்ரீமாந் நெல்லையப்பன் கவிராஜரவர்களது புத்தகசாலையிற் கண்டெடுத்து, என்னிடங் கொடுத்துப் பரிசோதித்து அச்சிற்பதிப்பித்து வெளிவரச் செய்யுமாறு வேண்டிக்கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோட்கிசைந்து அவ்வண்ணமே யாராய்ச்சி செய்து இதுகாறும் வைத்துக்கொண்டிருந்தேன். இதை இம்மது

ரைத் தமிழ்ச்சங்கத்துக்கு வந்திருந்த வடிவீசுரம் ப்ருமஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரியாரவர்களறிந்து தம்முடன கூடவிருக்கின்ற சற்கார் மலையாளம் தேரூர் பிரைமறி ஸ்கூல் எட்மாஸ்டரும் நாகர்கோவில் மகா-ள-ள-ஸ்ரீ அழகப்பபிள்ளையவர்கள் குமாரருமாகிய தருமவிநாயகம்பிள்ளையவர்களுக் கறிவித்து, அவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதியொன்றை யெனக்கனுப்பும்படிசெய்தனர்.

பிள்ளையவர்கள் "மெய்த்துணையாற் கருத்தினாற் காண்டலே காண்டல்" என்னும் ஆன்றோர் ஆப்தவாக்குக் கிலக்கியமாகச் சாஸ்திரியாரவர்காளாலுந் தங்கருத்தாலு மென்னைத்தெரிந்து, அவ்வேட்டுப்பிரதியுடன் ஓரருமைப்பாசுரமுமனுப்பினார்கள். அப்பாசுரத்தை நோக்குந்தோறும் பிள்ளையவர்கள் பத்திமுதிர்ச்சியும் பரோபகார தருமசீலமுங் கல்வித்திறமை முதலிய நற்குணங்களும் வெளிப்படக்கண்டு களிப்புற்று முன்னரே யெழுதிவைத்திருந்த கையெழுத்துப் பிரதியுடன் அவ்வேட்டுப்பிரதியை யொப்புநோக்கி அச்சிறபதிப்பிக்கத்தொடங்கினேன்.

பிள்ளையவர்களிது தெரிந்து கோட்டாறு ஸ்ரீமாந் குமாரசாமிசெட்டியாரவர்கள் குமாரர் இராமநாதன்செட்டியாரவர்கள் மிக்க சிவநேசமும் சீவகாருண்யமுமுள்ளவர்களாதலால் அவர்களாதிய கனவான்களுக்குத் தெரிவித்துச் சிற்சில கையொப்பமும் பணமும புததகம்பெறுவாரிடத்தில் வாங்கி யனுப்பியதுடன் கோட்டாறு இறிகேஷன் சூப்பர்வைஸரும் வள்ளலுமாகிய ஸ்ரீமத் சந்திரபானு லாலா அவர்கள் வாக்குச் சகாயத்தாலின்னு மியன்றவளவு பேருதவி புரிவதாகவு மெழுதியனுப்பினார்கள். "காலத்தினாற் செய்தநன்றி சிறிதெனினு ஞாலத்தின் மாணப்பெரிது" என்றபடி சமயநோக்கிப பிள்ளையவர்கள் செய்ததிரவிய சகாயவுதவிக்கு என்றும் நன்றி பாராட்டுங்கடமை பூண்டுள்ளேன். இங்ஙனங் கூட்டி முடித்த எல்லாம் வல்ல இறைவியாகிய கன்னிநாயகி திருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்

இங்ஙனம்

மதுரைத்தமிழ்ச்சங்கம்

நூற்பரிசோதகர்

மு. ரா. அருணாசலக்கவிராயர்.

# கையொப்பஞ்செய்து பொருளுதவிய கனவான்கள்.

மகா-ா-ா-ஸ்ரீ அகஸ்தீசுவரம் தாலூகா தாசில்தார், எம். வி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள். B. A.

,, கோட்டாறு கு. இராமநாதன் செட்டியார் அவர்கள்.

,, அகஸ்தீசுவரம் ஜனப்பிரதிநிதி சுசீந்திரம் என். வேலாயுதப்பெருமாள் பிள்ளையவர்கள்.

,, நாகர்கோவில் முன்சிப் கோர்ட்டு வக்கீல் எஸ். அனந்து பிள்ளையவர்கள்.

,, கோட்டாறு சு. வ. அருணாசலம் பண்டாரம் அவர்கள்.

,, பறக்கை கீழத்தெரு எஸ். மகாதேவன்பிள்ளையவர்கள்.

,, ஷை தெற்குத்தெரு முத்தம் பெருமாள் பிள்ளையவர்கள்.

,, கோட்டாறு தமிழ்நார்மல் ஸ்கூல் அஸிஸ்றன்று தேசிக விநாயகம்பிள்ளையவர்கள்.

,, திருநெல்வேலிஜில்லா கல்லிடைக்குறிச்சி குமாரகோவில் தெரு சுக்கிரவாரக்கட்டளைமடங்கட்டிய சி. நமசிவாயம்பிள்ளையவர்கள்.

,, ஷையூர் இங்கிலீஷ் ஸ்கூல் மாஸ்டர் கந்தசாமிப்பிள்ளையவர்கள்.

,, கல்லிடைக்குறிச்சி குமாரகோவில் தெரு செ. கனகசபாபதிபிள்ளையவர்கள்.

,, வடசேரி சொக்கலிங்கந் தரகனாரவர்கள்.

,, வடிவீசுரம் கணக்கு இ. தாணுமாலயப்பெருமாள் பிள்ளையவர்கள்.

,, நாகர்கோவில் பி. மயிலேறும்பெருமாள்பிள்ளையவர்கள்

,, இறிகேஷன் சுப்பர்வைசர் சந்திரபானுலாலா அவர்கள்.

,, காக்குமூர் வயிரவநாதபிள்ளையவர்கள்.

,, சுசீந்திரம் சமாபந்திக் கணக்கு என். ஆறுமுகம்பிள்ளையவர்கள்.

,, கோட்டாறு சேனையாதிபர் ஆறுமுகப்பெருமாள் மூப்பனாரவர்கள்.

,, கோட்டாறு மு. வலம்புரிச்செட்டியாரவர்கள்.

,, கல்லிடைக்குறிச்சி தளச்சேறி சக்கரலிங்க ஓதுவார் மூர்த்தியவர்கள்.

,, புத்தேரி கணக்கு செ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்

,, நாகர்கோவில் ஆர். சண்முகம் பிள்ளையவர்கள்.

சிவமயம்.

தென்குமரி யென்னும்

# கன்னியாகுமரித்தலபுராணம்.

## இந்திரகாந்தவிநாயகர் வணக்கம்.

மந்திர வுருவ மாக வந்தருள் பெருமான் வால
சந்திரன் போலு மொற்றைத் தடமருப் புடையோன் முன்னா
ளிந்திரன் பூசித் தேத்து மிந்திர காந்த நாமச்
சிந்துர வதனத் தான்பொற் சேவடி சிந்தை செய்வாம். (௧)

## சத்திவணக்கம்.

உலகெலா நிறைந்து நின்ற வோங்கொளிச் சத்தி வையத்
தலகிலா வுயிர்க ளெய்து மருந்துய ரகற்ற வேண்டி
நிலவரு ளுருவங் கொண்டு நெடுங்கடற் குமரி யென்னுந்
தலமிசைத் தவஞ்செய் வாள்போற் சமைந்தவள் சரணம்போற்றி.

## இதுவுமது.

கைப்பொரு ளென்ன யாவுங் கண்டிடுங் கன்னி வேத
மெய்ப்பொருள் வாழு மிக்க வியன்பதி தீர்த்த மூன்றிற்
கெப்பொரு ளமைப்பான் வேண்டு மென்பதிங் கெனக்குத் தோற்றி
யப்பொரு ளமைக்க வன்னா ளடியிணை யகத்துள் வைப்பாம். (௨)

## தாணுமாலயன்.

காணுமா லயஞ்சேர் வாசக் கமலமா கயிலை யென்னும்
பேணுமா லயங்க ளுள்ளார் பெருமைசேர் சுசீந் திரத்திற்
றாணுமா லயனென் றோர்பேர் தரித்தினி திருந்து கொன்றை
பூணுமா லயனு நாதன் பொன்னடி போற்றல் செய்வாம். (௩)

## பரசிராமவிநாயகர்.

கன்னிவாழ் குமரி தன்னிற் கடல்கரை கடவா வண்ணம்
பன்னருந் தவத்தின் மிக்கோன் பரசிரா மப்பேர் பெற்றோன்
முன்னைநாட் பூசித் தேத்து முழுமுதற் கணேசன் பொற்றாள்
சென்னிமேல் வைப்பா மிந்நூல் சிதைவின்றி நடத்தல் செய்வான்.

## முருகக்கடவுள்.

ஒருமயி லூருந் தீர னுண்மையி லசுரர் மாளப்
பொருமயி லெடுத்த வீரன் பொய்மையில் புலவர்க் கெல்லா
மருமையி லதிக சேனா பதிபதி யாறென் றோதும்
பெருமையில் வாழு மெங்கள் பிரானெமைப் பிரியா னம்மா. (௬)

வேறு.

## திருமால்.

வண்ணந் தருஞ்சூன் முதிர்மழையோர் வடிவ மெடுத்து வாய்ந்தவ
கண்ணு முகமுங் கரதலமுங் காலு முந்திச் சுழியும்விரை [ருட்
நண்ணுங் கமலம் பூத்தினிய நளினத் திருவோ டனந்தனென
வெண்ணும் பாய லறிதுயில்கொ ளெம்மா னெனக்கிங் கிரங்குவனால்.

## சரசுவதி.

கரும்பங் கயம்போற் கண்மலருஞ் செம்பங் கயம்போற் கதிர்முகமு
மிரும்பங் கயத்தி னருப்பேய்க்கு மிளமா முலையு மேந்திவெள்ளை
யரும்பங் கயத்தி னகத்துறையு மனத்தை யம்மா றிருவுந்தி [பேன்.
தரும்பங் கயத்தோ னுவாளைத் தமியே னுளப்பங் கயத்தில்வைப்

வேறு.

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

அளவி லாவறி வளித்தரு டிருமுலை யமுதை
யுளம கிழ்ந்துறப் பவளவாய் மடுத்துணு மொருசேய்
வளமை சேருநாற் கவிபொழி மாமறை மலர்த்தாள்
புளக மெய்யுற வன்பொடும் புந்திமேற் புணர்ப்பாம். (௯)

## வேறு.

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

மாதுபாகர் மறைவனத்து வளரா லயத்தின் மறையடைத்த
தீதி லாத மணிக்கதவந் திறப்பச் சிறப்பார் திருப்பதிக
மோதுந் திருநா வுக்கரச ரொளிர்பொற் பதமா மொண்கமலப்
போதெப் போதுஞ் சிரமீதும் புந்தி யகத்தும் பொருந்தவைப்பாம்.

### சுந்தரமூர்த்திசுவாமிகள்.

விஞ்சரண் வேறு காணு விதியரி விண்ணோர் நஞ்சா
னுஞ்சர ணென்ன வஞ்ச னுவலரு ளாளர் தம்மைச்
செஞ்சரண் மிகவுஞ் சேப்பச் செஃறூது விடுத்த தோழர்
தஞ்சர ணென்னும் பொற்றா மரைமலர் தலைமேற் கொள்வாம். (௧௧)

### மாணிக்கவாசகசுவாமிகள்.

பன்னிடு மறைகள் காணுப் பரம்பொரு ளுருக்கொண் டன்பாச்
சென்னிமேல் வைத்த செங்கை மிகச்சிவப் பேறச் செப்பு
மின்னிசைப் பாடன் முற்று மெழுதிடச் செய்த வெம்மான்
பொன்னிணை மலர்த்தா ளன்பாற் புந்தியி லிருத்தல் செய்வாம். (௧௨)

### ஆழ்வார்.

இமிழ்திரைப் பரவை ஞாலத் தியாவரு நீகதிசேர்ந் துய்ய
வமிழ்தெனத் தேம்பா கென்ன வருஞ்சுவைக் கனியீ தென்னத்
தமிழ்மறை யுரைத்த வாழ்வார் தயங்குபொற் சரண மென்னு
முமிழ்நறைக் கமலப் போதெம் முளக்கம லத்தே வைப்பாம். (௧௩)

### குருவணக்கம்.

கையின் மழுமான் கரந்துநுதற் கண்ணுங் கரந்து கருணையினான்
மெய்யு மனித வடிவாகி விருப்ப முறுவேற் கெதிர்தோன்றிச்
செய்ய கமலத் திருவடியென் சிரத்தி லிருத்திச் சிறியேனிங்
குய்யும் படியாட் கொண்டருளு மொருவ னுளம்விட் டகலானால்.

## அவையடக்கம்.

கற்றிலேன் மறைக்குந் தோற்றுக் கன்னிவாழ் பதிதீர்த் தங்க
ளுற்றிடும் பெருமை யானு முரைப்பனென் றவாவுற் றன்னன்
முற்றுபா றயிர்நெய் யென்னு முக்கட லினையோர் பூனை
வற்றிடக் குடிப்பே னென்ன மாநசை வைத்தல் போலும். (கச)

இதுவுமது.

மான்மதம் பொதிந்த புன்றோன் மலினம தெண்ணார் போல
நான்முகன் படைத்த பாரி னரர்செயும் பாவம் போக்கும்
பான்மொழிக் கன்னி வாழும் பதியதன் பெருமை யாலிந்
நூன்மறு வதனை யோரார் நுண்ணறி வுடைய நூலோர். (கரு)

வேறு.

## நூல்வரலாறு.

தூய நெறிசேர் மாதவத்துச் சூதன் றனக்கு வியாதனெனு
லாய முனிவ னருளியமூ வாறு புராண மதிற்பாற்ப
மேயுங் காந்த மியன்மார்க்கண் டேயம் பாக வதத்தினுஞ்சொ
றேயம் புகழுங் குமரியின்மூ விசேட மிந்நூல் செப்பிடுமால். (கஎ)

இதுவுமது.

உரைசெய் மூன்று புராணத்து முண்மைப் பாக வதத்தினுஞ்சொல்
கரையில் பெருமைக் குமரிநகர்க் கதிமூ விசேடக் காதையினைத்
தரையி லெவரு முணர்ந்திடுவான் றமிழில் விருத்தப் பாவதனாற்
புரையி லந்தத் தலத்தினுக்கோர் புராண மெனயான் புகன்றனனால்.

வேறு.

## நூல்செய்வித்தவர் நூல்செய்தவர்.

பலகலையுஞ் சிவாகமமும் படித்துத் தேர்ந்து பதிபசுபாசத்தி
னுண்மை பதிந்த வுள்ள, மிலகுமொரு திருமேனிப் புலவர் தம்போ
லீனறசிவ சங்கரன்சேய் சங்கரநா வலன்பா, லலகில்புகழ்க் கோட்
டைவணி கேசர் மூந்நூ லரிதாகத் தேடியதைப் பாடச் சொல்லத்,
தலமகிழுங் குமரிநகர்த் தலபுரா ணந்தான் றமிழ்நூலா லுலகுய்யச்
சாற்றி னனால். (கஅ)

பாயிரம் முற்றிற்று.

முதலாவது

# நைமிசாரணியச்சருக்கம்.

பன்னிய மறையுங் காணாப் பராபரை பகருங் காலைத்
தன்னிகரில்லா னெல்லா வுலகமுந் தானே யீன்றுங்
கன்னியென் றுரைக்க வந்த கருணையா ளெனதுள் ளத்தே
முன்னிய பொருள்க ளெல்லாந் தருவளென் முன்னம் வந்தே. (க)

அயன்றனை நோக்கி மிக்க வருந்தவ ரையா யாங்கண்
முயன்றுமா தவங்கள் செய்ய முதிர்வன மருளு கென்ன
வியைந்தவித் தருப்பை நேமி வீழ்தலத் திருந்து நீவிர்
நயம்பெறு வேள்வி யாதி நற்றவம் புரிதி ரென்றான். (உ)

அந்தநற் றருப்பை நேமி யம்புவி யிடத்திற் றாய
விந்தநற் றலத்தில் வந்தங் கிருந்தவவ் வியல்பி னாலே
நந்தலி லதற்கு நாமம் நைமிசா ரணியமென்ன
வந்ததவ் வனத்தின் மிக்க மகிமையார் வகுக்க வல்லார். (ங)

சூதமா முனிவ னெல்லாப் புராணமுஞ் சொல்லத் தேர்ந்தோர்
மேதகு குமரி யின்சீர் கேட்குறும் விருப்பின் மிக்கார்
நீதிமா தவத்தோர் வாழு நேமியா ரணியத் துள்ள
தீதிலாப் பெருஞ்சீர் தன்னிற் சிறிதியான் செப்பு வேனால். (ச)

அளவிலாக் கற்பங் கண்ட தாங்கதி லணைந்தோர் தங்க
ளுளமெலாம் புனித முற்றங் கொளிருமின் மலமா யார்க்குங்
களவுலா வியபு லன்கள் வழிச்செலாக் கருத்துங் காட்டும்
வளமெலா நிறைந்த நேமி வனமெனச் சொல்வ தம்மா. (ரு)

இலங்குபல் லுயிரைப் பற்றி யிடைவிடா திருக்கு மந்த
மலங்கண்மூன் றென்னு மாயா வல்லிருட் கிரவி போலும்
விலங்குதா வரங்க ளுக்கும் வீடுபெற் றுய்ய வாய
நலந்தரு பெருமை சேர்ந்த நைமிசா ரணிய மம்மா. (சு)

இயம்புதொன் மறைக ணான்கு மிருக்குமா லயம தாகும்
வயங்கெழு தருமப் புத்தேள் வண்ணவா டாங்கு மாகும்
பயன்றரு தவங்க ளென்னும் பயிர்விளை நிலமு மாகு
நயங்கெழு சிறப்பின் மிக்க நைமிசா ரணிய மம்மா. (எ)

வவ்வுறு துயர மெய்த வரும்பல பிறவி யென்னுங்
கவ்வையங் கடலை விட்டுக் கடத்திடுங் கலமு மாகும்
வெவ்வினைப் பாவம் போக்க விதித்தபுண் ணியமும் போலு
மவ்வனத் துறைந்து வாழு மருந்தவ ரளவி லாதார். (அ)

ஞானமொன் றெய்த வெண்ணி நன்மனத் திரண்டு மாய்ந்தே
யானமுத் தீயு மோம்பி யரியநான் மறையுந் தேர்ந்தே
யீனவைம் புலனைச் செற்றங் கியம்புநல் லாறு சேர்ந்து
மோனநற் றவங்கள் செய்யு முனிவர ரநேக கோடி. (கூ)

மூற்படு கால மாதி மொழியுமுப் போது மூழ்கிப்
பொற்புறு மலரி னோடு புனிதமஞ் சனமுங் கொண்டங்
கெற்படு பிறைசேர் வேணி யிறைவனை யுளத்தின் மிக்க
வற்பொடு மருச்சித் தேத்து மருந்தவ ரநேககோடி. (க0)

சங்குசக் கரங்க டாங்குந் தடமலர்க் கையி னோடும்
பொங்கெழிற் பொன்னு மின்னைப் பூத்தொளி ராகத் தோடுஞ்
செங்கம லக்கண் ணோடுஞ் சிறந்தருண் மழையன் றனைத்
தங்கணன் மனத்துள் வைத்துத் தவஞ்செய்வ ரநேக கோடி. (கக)

நாரணி நளினச் செங்கை நாயகி நான்கென் றோது
மாரணி யழகின் மிக்க வம்பிகை யண்ட மீன்ற
காரணி யறங்கள் செய்யுங் கன்னியெவ் வுலகு மாய
பூரணி யவளை யன்பாற் பூசிப்போ ரநேக கோடி. (க௨)

மாரியின் காலஞ் சீதம் வளர்பனிக் காலந் தோறு
நீரினின் மூழ்கி வேனி னிகழிலை யெரியி னுப்பண்
வேர்வெழ வங்க மெல்லா மெலிவுற வெம்மை பற்றிச்
சேர்வுறத் தவங்கள் பூண்டு செய்பவ ரநேக கோடி. (க௩)

சருகிலை யருந்தி நின்று தவஞ்செய்வா ரநேக கோடி
பருகுநீ ரருந்தி யாற்று மருந்தவ ரநேக கோடி
வருபட வரவு போல வாயுபக் கணரே யாகிப்
பெருகுவெம் பசியைச் செற்ற பெருந்தவ ரநேக கோடி. (௧௪)

ஒற்றையங் காலி னுள்ள வொருபெரு விரலை யூன்றி
மற்றையோர் கான்மு ழந்தாண் மடக்கிநீள் குறங்கில் வைத்துப்
பற்றிரு கரமுங் கூப்பிப் பரந்துவீழ் சடையி னோடுஞ்
சற்றுமூ ணின்றி நின்று தவஞ்செய்வ ரநேக கோடி. (௧௫)

கிளியொடு பூவை யெங்குங் கிளத்துநான் மறைக ளோது
மளிகள்வீழ் மதங்கள் சிந்து மானையு மடங்கி நிற்குந்
துளிநற வொழுகும் பூவுஞ் சுவைதரு கனியுங் காயுங்
களிகொள்வண் டுறைபூஞ் சோலை காலமன் றியுமே காட்டும். (௧௬)

பொன்னொடு புனலும் பூவும் பொலிந்தசெந் நெல்லும் பெய்தே
நன்னிற முகில்க ளென்று நாடொறு நல்கு மங்கண்
மின்னெழின் மாதர் மைந்தர் விழியொடு மனமும் வாக்குஞ்
சொன்னல வறத்தி னூய தூயநன் னெறிக்கே செல்லும். (௧௭)

ஞானமெய்ம் முனிவ ராற்று நன்மகத் தெழுந்து விம்மி
வானெழும் புகைக்கு ழாத்தை வளர்பெரு முகிலென் றெண்ணி
மீனிற மயில்க ளெல்லா நெடுஞ்சிறை விரித்து நின்று
கானிறை குழலார் போலக் களிநடம் புரியு மாதோ. (௧௮)

வல்வரி வேங்கை யோடு மானுமோர் துறையி னங்கட்
செல்வர வச்ச மின்றிச் சென்றுநீர் பருகி யுண்ணுங்
கொல்வரி யரவுஞ் செங்கட் குளிர்சிறைக் கருடன் றானுஞ்
சொல்லரும் பகைதா னின்றிச் சுகத்தினி தங்கண் வைகும். (௧௯)

மாவெலா மான்போ னிற்கு மற்றவவ் வனத்து ணிற்குங்
காவெலாங் கனக நாட்டுக் காவெனச் சிறப்புக் காட்டும்
பூவெலாம் புகழு மந்தப் புண்ணிய வனத்தைப் போற்று
நாவெலா நரகங் காணா நன்மையுங் கொடுப்ப தம்மா. (௨௦)

இந்திரன் சுரபி வந்தாங் கிருந்தமா தவரி யற்று
மந்திர வேள்விக் கியாவும் வேண்டுவ வழங்கி நிற்கு
மந்தரத் தமர ராலு மருந்தவ முனிவ ராலும்
வந்துரை செயய முற்று மகிமையு முடைய தம்மா. (உக)

இப்பெருந் தன்மை யெய்தி யிடுநேமி வனத்து வாழ்வோர்
செப்பரும் வேள்வி முற்றுஞ் செய்தநற் றிறத்தி னுள்ளோ
ரொப்பருந் தவத்தின் மிக்கோ ரொழித்தளித் துதிக்கப் பண்ணு
முப்பெருந் தொழில்கள் பூண்ட முதல்வரை யனைய நீரார். (உஉ)

மிடற்பகைப் புலன்க ளைந்தும் வென்றிடும் விறலி னுள்ளோ
ருடற்பகை யென்னுங் காம மாதியா யுள்ள வாறும்
விடப்படு மேலோர் நெஞ்சின் மேவுசஞ் சலங்க ளில்லோர்
திடப்படக் காலந் தோறுஞ் செய்கடன் யாவுஞ் செய்வோர். (உ௩)

நீற்றொளி நெற்றி யங்க நேர்கொள வணிந்து ளோரும்
போற்றுவெண் ணீற்றை முற்றும் புனைந்தொளிர் பொலிவி னோருஞ்
சாற்று நற் றவத்தின் மிக்க சவுனக ராதி யாய
மாற்றரும் பெரியோ ரெல்லாம் வந்தொரு சூழல் சார்ந்தார். (உச)

முதலாவது நைமிசாரணியச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (ச௩.)

## நைமிசாரணியச்சருக்கச் சுருக்கவசனம்.

பிரமதேவனைநோக்கி அநேகமுனிவர்கள் யாங்கள் தவஞ்செய்வதற்கோரிடம் அருளிச்செய்யவேண்டுமென்றுகேட்க அவன் ஒரு தருப்பைப் புல்லைச் சக்கரமாகச்செய்து இந்தச்சக்கரம் உருண்டு போய்நின்ற இடத்திலே தவஞ்செய்திருங்களெனக் கூறினன். அங்ஙனமே அந்தநேமி சென்றுபோய்நின்ற இடமே நைமிசாரணியமென்னப்படுவது. அந்த இடத்திலேயிருந்து முனிவர்களெல்லாருஞ் சூதமுனிவரிடத்திலே பதினெண்புராணமும் கேட்கும் ஆசையுடை

யவார்யினர். அந்த நைமிசாரணியமானது: அநேககற்பகாலங்களைக் கண்டது. தன்னையடைந்தோரைப்பரிசுத்தப்படுத்துவது. ஐம்புலன் வழிச்செல்லாத மனத்தைக்காட்டுவது. ஆன்மாக்களைப்பற்றி விடாத மும்மலமாகிய இருளுக்குச்சூரியன்போல்வது. மரமுதலிய தாவரப்பொருளுக்கும் மோக்ஷந்தருவது. வேதங்களிருப்பதற் கிடமாவது. தருமதேவதைநடிப்பதற்குச் சபையாயுள்ளது. தவமாகியபயிர் விளையுநிலமாவது. பிறவிக்கடலைக் கடத்துந் தோணியாவது. தீவினையைக்கெடுக்கும் புண்ணியத்தை நிகர்ப்பது. யாகாக்கினியை வளர்த்து வேதங்களையாராய்ந்து இந்திரியங்களைவென்று தவஞ்செய்யும் ருஷிகளும், திரிகாலமும் ஸ்நானஞ்செய்து சிவார்ச்சனைசெய்யும் முனிவர்களும், விஷ்ணுவைப்பூசிக்கும் தவசிகளும், பார்வதியைப்பூசிக்கும் பத்தர்களும், பஞ்சாக்கினிமத்தியிலே தவஞ்செய்பவரும், சருகு இலை உள்ளங்கையிலுழுந்தமிழ்ந்துநீர் காற்று இவைகளைப்புசித்துத் தவஞ்செய்பவரும், உபவாசமாக இருந்து தவஞ்செய்பவரும் அநேகரிருத்தற் கிடமாயுள்ளது.

நான்குமேகங்களு மழைவளஞ்சுரக்கும் அவ்விடத்துள்ளார் யாவர்மனமும் நல்வழியிலே செல்லாநிற்கும். யாகாக்கினியின்புகையை மேகமென்றுநினைத்து மயில்களெல்லாம் நடனஞ்செய்யும். புலியும் மானும்பயமின்றி யொருதுறையிலே நீருண்ணும். பாம்புங் கருடனும் பகையின்றித்திரியும். மிருகங்களெல்லாம் காமதேனுவைப் போலநிற்கும். விருக்ஷங்களெல்லாங் கற்பகம்போலநிற்கும். தேவேந்திரனுடைய காமதேனுவந்து முனிவர்களுக்குக் கேட்டவற்றைக் கொடுத்துநிற்கும். இத்தன்மையுடைய அந்தவனத்திலுள்ளமுனிவர்கள் திரிமூர்த்திகளை நிகராக இருப்பர். வலிமையுள்ள ஐம்புலன்களையுங் காமமாதியாயுள்ள ஆறுகுற்றங்களையுங் கடிந்து துன்பமில்லாதவராய்க் காலந்தோறும் நித்தியகன்மமுடித்து விபூதியையுத்தூளனஞ்செய்து திரிபுண்டரமாகத்தரிக்குஞ் சிவவேடப் பொலிவுள்ள சவுனகர்முதலிய மகருஷிகளொருங்கு கூடியிருக்கும் அந்த நைமிசாரணியத்தின்பெருமை யொருவராலுஞ் சொல்லமுடியாது.

2

## இரண்டாவது

# குமரித்தல வினாவிடைச் சருக்கம்.

ஆயவர்க டென்குமரி யம்பதியின் மேன்மை
நேயமொடு கேட்கவெழு நெஞ்சுறு விருப்பாற்
றாயநெறி சேரரிய சூதனை நினைப்பத்
தாயினுந லன்புபுரி தன்மையனும் வந்தான். (க)

வந்தவொரு சூதனெனு மாதவனை யன்பா
லந்தமுறு நற்புனித வாசன மிருத்தி
முந்துசெயல் போலவழி பாடுமுறை செய்து
சிந்தைமகிழ் வோடுசில நன்மொழி தெரிப்பார். (உ)

மெய்ம்மைமறை முற்றுணர் வியாதனருள் பெற்றுப்
பொய்ம்மைதவிர் மேதகு புராணமுரை செய்தோய்
செம்மைபெறு பல்கலைக டேர்ந்துணரு மிக்கோ
யம்மைபெறு பேறுமஃ திம்மையி லடைந்தோய். (ங)

யானென தெனச்சொன்மத மெய்திருளி னோடுங்
காணபுல னைவகை யவாவின்வலி செற்றோய்
ஞானமெனு மோர்பொரு ணலந்திகழ வாழுந்
தானமிவ னென்றுலகு சாற்றவரு தக்கோய். (ச)

மின்படியு நின்வதன மென்பதுமம் விண்ட
வொண்பதி னிரட்டியென வோதிய புராண
வின்பமுறு தேனையினி தியாஞ்செவிகொ டுண்டு
மன்பினொடு மின்னுமுறு மாசையள வின்றால். (ரு)

யாங்கள்செய் தவப்பலனொ ரின்பவடி வெய்தி
யீங்கருளி னோடுமினி தெங்களெதிர் தோன்றி
வாங்கரிய வானமுதம் வந்ததென வந்த
வோங்கிலுளர் மாதவ வுரைப்பசில வுண்டால். (சு)

போந்தசிவ காதைசொல் புராணமொரு பத்திற்
காந்தமென வோதிய கடற்குண்மிகு மேன்மை
தோய்ந்ததெனு மேதகு சுசீந்திர மெனப்பே
ரேய்ந்தநக ரப்பெருமை யெங்களொ டுரைத்தாய். (எ)

மூவீரென யாவரினு முற்பெருமை சாலுந்
தேவரவ ரோருருவு கொண்டுதிரு மேவு
மாவரிய ஞானவன மென்பதனில் வைகி
மேவருள்செய் தன்மைபல வுஞ்சொலி விரித்தாய். (அ)

ஞானவன * மென்பதி னலம்பெறுமெய்ஞ் ஞான
மானவொரு தீர்த்தமு மதன்பயனு மன்றித்
தானமிக மூழ்குபல தீர்த்தமவை தாமு
மானமொடு சொல்லவவை கேட்டுள மகிழ்ந்தோம். (கூ)

போர்த்தசடை மேவுநதி பொங்குபுன லோடும்
வார்த்ததிரு மஞ்சனமு மற்றுமவை கீழ்போ
யார்த்தகும ரித்துறையி னங்கணொரு தானு
தீர்த்தமுள தென்றுமுரை செய்தபெரி யோய்கேள். (க0)

வேறு.

மண்டலம் புகழுங் குமரிநற் றலத்தின் மகிமையும் வானுல கே த்தும், பண்டரு மொழியாள் கன்னியென் றுரைக்கும் பராபரை யவள்வர லாறுந், தெண்டிரைப் பரவை யதனிடத் துள்ள தீர்த்தநற். பெருமையு மளவி, லெண்டருந் தவத்தோ யாங்கள்கேட் டுவப்ப வியம்புக வெனவவ னியம்பும். (கக)

நல்லது கேட்டி ரிக்கதை முன்னா ளனில முழுவதும் பரித் தோன், வெல்லுமா யிரந்தோ ளுடையவன் கார்த்த வீரிய னென்னு மன் னவற்குச், சொல்லருந் தெத்தாத் திரையனு முனிவன் சொல் லிய ததனைநீர் கேட்டி, நல்லறீர் மனத்தீ ருங்களுக் கியானு மறிந்த வா றறைகுவன் கேண்மின். (கஉ)

* ஞானவனம் - சுசீந்திரம்.

ஆதவன் குலத்தி னுதித்தவ தரித்தோ ராயிர மடல்வலிக் கரத்தோன், பூதல முழுது மொருகுடை நிழலிற் பொலிவுறப் புரந்தருள் புரிந்தோ, ரோதிய சக்ர வர்த்திக ளாறி லொருவனென் றுரைத்திடு முரவோன், மேதகு பெருஞ்சீர் நாமமுங் கார்த்த வீரியனென் னுமவ் வேந்தன். (கந)

புரிந்தமா தவமு நிறையுமிக் கருளும் பொறையுமோர் வடிவெடுத் தனையான், விரிந்தபொற் கமலத் தவிசின்வீற் றிருக்கும் வேதியனென்னநான் மறைக, டெரிந்திடுந் தெத்தாத் திரையனு முனிவன் சேவடிச் சரோருக மீதிற், சொரிந்தநன் மலர்கொண் டருச்சனை புரிந்து தொழுதுநின் றினையன சொன்னான். (கச)

அருங்கதி யளிக்குங் குமரிமா நகரி னருமையு மதிற்றவஞ் செய்யப், பொருந்திய * கனிநா யகிவர லாறும் பொருதிரைப் புணரியின் கரையிற், றிருந்திய தீர்த்தப் பலன்களு மெனக்குச் செப்பிட வேண்டுமென் றுரைப்பப், பெருந்தவ வடிவா முனிவரன் கேட்டுப் பெரிதுவந் தன்பொடும் புகல்வான். (கரு)

இந்நகர் காதை விரும்பிநீ கேட்பா னியம்பினை யிங்கிதன் பெருமை, சிந்தையா னினைந்து நாவினன் முழுதுஞ் செப்பிடுந் தன்மையன் றெனினும், புந்தியா லறிந்த வவ்வள வுரைக்கேன் புகல்நீ கேட்டியென் றரசன், சுந்தர மகர குண்டல மிலகு சுடர்முக நோக்கியொன் றுரைப்பான். (கசு)

மன்னநின் குலத்து முன்னவர் தம்மில் வாய்மையுந் தருமமும் வலியு, முன்னுடைச் செங்கோன் முறைமையுங் குடிக ளோம்பலும் பொறுமையுங் கொடையும், பன்னருங் குரவன் மீதினிற் பூண்ட பத்தியும் வீரமு மளியு, நின்னிடத் ததிகங் கண்டன மதனு னீயிது கேட்பதற் குரித்தால். (கஎ)

இந்தவம் புவியி லரியநற் றலங்க ளொடுத்தெடுத் தியம்புதற் குளவா, லந்தநற் றலங்கட் குண்மிக மகிமை யடைந்திடுந் தலங்களோ

* கனி - கன்னியென்பத னிடைக்குறை.

ரந்தும், வந்தவோ ரேழு மொன்பதும் பத்தும் வகுத்தவிம் மாத
லங் களையே, முன்துறா லெடுத்து மொழிந்திடும் யானு முறைப்படி
மொழிகுவன் முன்னர். (௧௮)

பொருவில்சீர் மேவு மைந்துநற் றலங்கள் புகன்றிடிற் புண்ணி
யத் தலமாக், கருதுமக் காசி கன்னிகா குமரி காஞ்சியவ் விராமனற்
சேது, வருமையா வுள்ள செனார்த்தன மிந்த வைந்துநற் றலங்களைப்
புவியிற், பெரிதுள மகிமைத் தலங்களென் றுயர்நூல் பெருக்கவே
பேசிடு மம்மா. (௧௯)

இசைத்தல வயோத்தி * மதுரைப்ர யாகை யினியமா யாபுரி
புலியூர், குசைத்தல மரங்கங் குறித்தவேழ் தலமுங் கோதிலா வரிதி
ருத் தலமாந், திசைத்தலம் புகழு மத்தல மதனைத் தெரிசிக்கப் பெ
ற்றுளோர் தமக்கு, நசைப்பெரும் பாசப் பிணிப்பறு மென்ன நவி
லுநான் மறைகளு மம்மா. (௨0)

சத்திய மல்லி கார்ச்சுன மத்தி சயிலம்வேங் கடந்திரி கூட, ம
த்திரி தீர்த்தஞ் சிலாமய மலைய மானைநற் காகும்ப கோண, முத்தம
தேவ பீசமோ டொன்பா னுயர்பெரு மகிமைசேர்ந் துள்ள, வித்த
லங் கன்னி பாகனெப் பொழுது மின்புற விருக்குமென் றிசைப்
பார். (௨௧)

மந்தரங் கயிலை மேருமைந் நாக மயேந்திரம் வச்சிர சயிலங்,
கந்தமா தனங்கந் தசயில மிக்க கயேந்திர சுரேந்திர மோக்க, மிந்த
நற் றலங்கள் பத்துமண் ணினுக்கு மிலங்கும்விண் ணுலகுக்கு மின்
பம், வந்திடக் கொடுக்கு மெனவிமை யோர்கள் வாயினு லெடுத்தெ
டுத் துரைப்பார். (௨௨)

ஆயவித் தலங்க ளனைத்தினும் பெருமை யதிகமுற் றுளதுநல்
லறத்திற், றாபதிவ் வுலகத் துள்ளமா வளங்கள் சுரந்தெழில் பெறல
ருஞ் சிறப்பு, மேயது வேதா கமங்கடாங் குடிகொண் டிருப்பது த
வத்தெழிற் கன்னி, நாயகி நீங்கா விருப்பொடு மிருக்கு நலந்திகழ்
குமரிநன் னகரம். (௨௩)

---

* மதுரை - வடமதுரை.

என்றிவை சொல்லிப் பின்னுமொன் றுரைப்பா னினியவிக் கதையென்ப தெழில்சேர், பொன்றிகழ் கமலப் பொருட்டயற் குரியு பொருவிலாப் பாற்மமாம் புராணத், தொன்றிய க்ஷேத்ர காண்டத்தி ன் மிக்க * வுவரிபா கத்தினி னுளதிந், நன்றிசேர் குமரித் தலவிசே டத்தை நாவினாற் சொல்லினு நலனால். (உச)

திருநகர்க் குமரித் தலவிசே டத்தைச் சிந்தையில் விருப்புறக் கேட்டோ, ரிருநிதிக் குபேர னெனத்தனம் படைத்தே யிதமுறு புதல்வர்க ளில்லாண், மருவிய சுற்றத் தொடுமினி திருந்து மனத்தினி னினைந்தவை யடைந்து, பெருகிய வளத்தோ டிருப்பர்பின் னெவரும் பெறலருங் கதியினைப் பெறுவார். (உரு)

ஆதலாற் குமரிமூ மூவிசே டத்தி லரியதிக் குமரியென் றுரைக்குங், கோதிலா நகரி னுட்டதின் சிறப்புக் கூறுகேன் முன்னெனக் கூறித், தீதிலாக் குருவை யருட்கண பதியைச் செஞ்சடைக் கடவுளைமாலை, நீதியான் மனத்தி னினைந்தருண் முனிவ னேயமிக் கரசனுக்குரைப்பான். (உசு)

மன்னவர் மன்ன விரும்பிநீ கேட்ட மகிமைசேர் குமரியென் றுரைக்கு, நன்னக ரெந்த நாட்டகத் துள்ள நகரெனி னன்மதிக் குலத்துப், பன்னருஞ் சிறப்பின் மன்னராண் டிருக்கும் பாண்டிநன் னாடெனப் பகர்வ, ரன்னெடுந் திருநாட் டாங்கதின் மகிமை யறிந்ததிற் சிறிதறை குவனால். (உஎ)

இரண்டாவது குமரித்தல வினாவிடைச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் எ0.

---

* உவரிபாகம் - மேற்பாகம்.

# இரண்டாவது
## குமரித்தல விறுவிடைச்சருக்கச் சுருக்கவசனம்.

சவுனகாதிமுனிவர்கள் நைமிசாரணியத்திலே கன்னியாகுமரித்தலத்தின் மான்மியத்தைக்கேட்கும் ஆசையுடையவராயிருந்தனர். அந்தச்சமயத்திலே தாயினுமன்புமிகுந்த சூதமுனிவரவ்விடத்திலெழுந்தருளினர். அவரை எல்லாமுனிவரும்வணங்கி ஆசனத்திலெழுந்தருளச்செய்து பூசித்துச்சொல்லுவார். வேதவியாசமுனிவரது திருவருள்பெற்றுப் பதினெண்புராணங்களையு மருளிச்செய்தீர். சகல சாஸ்திரங்களையுமுணர்ந்து மறுமையிலேயடையும்பிரயோஜனத்தை யிம்மையிலே யடைந்தீர். அகங்காரங்களையும் ஐம்புலன்களையும் ஆசையினையுமவித்து ஞானகரமாக உலகத்தார் துதிக்கவாழ்ந்தீர். உம்முடைய திருவாக்காற் கேட்டபுராணங்களை யின்னுமொரு முறை கேட்கும் பேராசையுடையேம். யாங்கள்செய்ததவப்பலத்தினொருருவெடுத்துத் தேவாமிர்தம்வந்தது போலிங்கெழுந்தருளினீர். சுவாமி! அடியேங்கள் தெரியப்படுத்தும் விண்ணப்பமொன்றுண்டு. நீரருளிச்செய்த சிவபுராணம் பத்தினுள்ளொன்றாகிய காந்தமென்னும் புராணத்திலிருந்து சுசீந்திரஸ்தலபுராண மான்மியங் கூறினீர். சுசீந்திரமென்னும் ஞானவன க்ஷேத்திரத்திலுள்ள வொருதீர்த்தமு மதன் பிரயோஜனமும் மற்றைய தீர்த்தங்களுஞ் சொல்லக்கேட்டு மகிழ்ச்சியுற்றோம். சுசீந்திரத்திலுள்ள தாணுமாலய மூர்த்திக்கபிடேகஞ் செய்ததிருமஞ்சனங் கீழேசென்றுபோய் நிறைந்த குமரித்துறையிலே தாணுதீர்த்தமுள்ளதென்று கூறியமகருஷியே கேட்பீராக.

குமரித்தலத்தின் மான்மியமும் கன்னிகாயகியாகிய பராசக்தி வரலாறும் அத்தலத்தின் சமுத்திரக் கரையிலுள்ள தீர்த்தங்களின் பெருமையும் கூறவேண்டுமென்றுகேட்கச் சூதமுனிவர் சொல்லுவார். முனிவர்களே! நல்லதுகேட்மீர். இக்கதை கார்த்தவீரியனென்னும் அரசனுக்குத் தெத்தாத்திரைய முனிவர்கூறியது. அதனையுங்களுக்குச்சொல்லுகின்றேன். அவ்வரசன் சூரியகுலத்திலுதித்தவன் சக்கரவர்த்திகள் அறுவரிலொருவன்; அவன் தெத்தாத்திரையமுனிவர் பாதபங்கயங்களைப பூசித்து நீங்கள் கேட்டபடியேகே

ட்க அவர்சொல்லுவார்; கன்னியாகுமரித்தலத்தின் மான்மியம் மனத்தால் நினைந்து நாவினால் முழுதுஞ்சொல்லமுடியாது. ஆயினு மிஃதொன்றமட்டுஞ் சொல்லுகின்றேன். அரசனே! உன்னுடைய குலத்திலுள்ள அரசருக்குள் சத்தியமுந்தருமமும் வலிமையும் செங்கோல்முறைமையுங் குடிகளைக்காத்தலும் பொறுமையுங் கொடையுங் குருபத்தியும் வீரமும் அன்பும் உன்னிடத்திலே மிகுதியாக இருக்கக்கண்டேன். ஆதலால் நீயிந்தக்கதை கேட்பதற்குத் தகுதியுடையவனாவாய். இந்தப்பூமண்டலத்திலேயுள்ள தலங்களில் மகிமையுடைய தலங்கள் * இருபத்தாறு அவைகளிலொன்றாகிய கன்னியாகுமரி க்ஷேத்திரம். மிக்கமான்மியமுள்ளது. தருமத்தைப்பார்க்கினும பரிசுத்தமுள்ளது. இவ்வுலகத்திலுள்ள சகலவளங்களு நிறைந்துள்ளது. வேதாகமங்கள் குடிகொண்டிருப்பது. தவவொழுக்கம் நீங்காத கன்னிநாயகியாசையுடனிருப்பது.இச்சரிதம் பிரமனுக்குரியபாற்மபுராணத்துள்ளே க்ஷேத்திரவைபவ காண்டத்திலே உவரிபாகத்திலேயுள்ளது. இதைநாவினாற்சொன்னாலும் நல்லது. இச்சரிதங்கேட்டவர் குபேரசெல்வம் பெறுவர். இம்மட்டோ? மனைவிமக்கள் சுற்றத்தாரோடு மினிதாகவாழ்ந்திருந்து இஷ்டகாமியங்களெல்லாம் பெற்று இறுதியிலே மோக்ஷத்தையுமடைவர்.

ஆதலாலே கன்னியாகுமரித்தலம் தலம்தீர்த்தமூர்த்திகளாலேயுயர்ந்தது. இந்த ஸ்தலத்தையுடையபாண்டிநாட்டின்சிறப்பை முதலாவதுசொல்வேனென்று சொல்லித்தன்னுடைய குருவையும்விநாயகரையும் பரமேசுரனையும் விஷ்ணுவையு மனத்திலே நினைத்துத் தியானித்துச் சந்திரகுலத் தரசர்களாகிய பாண்டிய ராஜாக்களாலே ஆண்டுவரத்தக்கதென்று பாண்டிநாட்டின் சிறப்பினைக் கூறுவாராயினர்.

---

* இருபத்தாறு தலங்களின்பெயர்களைச் செய்யுளிற்காண்க.

மூன்றாவது

# நாட்டுச் சருக்கம்.

அருணாட்டி லிருநாட்டத் தமுதனையா ளருமறையாம்
பொருணாட்டும் பொருளாய புகழ்நாட்டுங் கன்னிவைகு
மருணாட்டு மஞ்ஞான *மன்னாட்டுக் குறிப்பகற்றித்
தெருணாட்டுங் குமரிநகர்த் திருநாட்டின் சிறப்புரைப்பாம். (௧)

வெங்கயந்தேர் விறற்பரியாண் மிகுஞ்சேனைத் திரளுடைய
தங்கயலா ரரசர்குறும் பறவொழித்தே யடன்மருளித்
தங்கவட வரைதிரித்த தனிச்செண்டோ டவ்வரைமேற்
செங்கயல்வண் கொடிபொறித்த திருவழுதி நன்னாடு. (௨)

பொருவிளைவார் சாலிவளம் பெருகியதென் மதுரையெனு
மரு*விளையா மலர்க்கடம்ப வனத்தில்வாழ் சுந்தரனார்
கருவிளையா தின்றதுய ருயிர்களுக்குக் கடிவகற்குத்
திருவிளையாட் டறுபத்து நாலருளுந் திருநகரம். (௩)

பொன்னகரு மலரயனுங் குலவரையும் பூதலமும்
பன்னகம்வாழ் பாதலமும் பலவெவையு மழிந்திடினு
மின்னகர மழியாதென் றியம்பிடுநா லெனின்மதுரைத்
தொன்னகரின் பெருமையான் சொல்லுதற்கிங் கெளிதாமோ. (௪)

பங்கயநற் றடத்தினொடும் பலதீர்த்த முமாமா திசீர்
தங்கயன்மா ரெழுதேத்துந் தகைமையது தயங்கருள்சே
ரங்கயற்கண் ணுமையம்மை யரசிருப்பா மத்தாணி
பொங்கியகல் வளமதுரைப் பொற்பதிபெற் றுளநாடு. (௫)

கருச்சுழிசேர் பவப்போக்குங் கருணையினா டிருவுந்திக்
குருச்சுழியா லுலகீன்றா டன்னோடுங் கொழும்பவள
வுருச்சுழியச் செயுஞ்சடையா ருண்மகிழ்ந்தங் குறைந்திருக்குந்
திருச்சுழியாம் வளம்பதியுந் திகழ்ந்துளதத் தென்னாடு. (௬)

---

* மனநாட்டக் குறிப்பென்றும் பாடம்.

கேடகத்திற் செறியமணர் கிளர்வாதின் மெய்யுண்மை
நாடகத்துத் திருஞான நன்மதலை நளிவையை
யூடகத்தங் கெதிரேற வோதியநற் றிருப்பதிக
வேடகத்திற் சேர்ந்ததிரு வேடகமு முளநாடு. (எ)

புரங்குன்ற நகைத்தெரித்தோ னருள்புதல்வன் பொருஞ்சூரன்
வரங்குன்றச் சிங்கமுகன் வலிகுன்றத் தாருகன்வல்
லுரங்குன்றப் பொரும்வேற்கை யொருமுருக னுறைந்ததிருப்
பரங்குன்ற மெனுந்தலமும் படைத்துளதத் திருநாடு. (அ)

பெறும்பலன்பெற் றிடுமூவர் பெரும்பதிகம் பெற்றுளதங்
குறும்பலவண் சினையினொடு மொளிர்வேரின் முதலிடத்து
நறும்பலவின் னறைபெருக்கி நாடுபல வுகங்கடந்த
குறும்பலவி னற்புதமுங் குலவுதிருக் குற்றாலம். (௯)

அந்தியிளம் பிறைமருப்பி னளியயிலுங் கலுழிமத
தந்தியினை யருவியுமிழ் தடவரையென் றதன்மீது
மந்திகுதி பாய்ந்துலவும் வரையிலுயர் குடுமியினிற்
சிந்துநறுந் தேன்பெருகு சிவமதுகங் கையுமுடைத்தால். (௧௦)

நற்றாலம் புகழ்பொதிய நன்மலைவாழ் தொன்முனிக்கா
வுற்றால மதிற்றுயின்ற வொருவனெனுந் திருநெடுமான்
முற்றால மணிமிடற்று முதல்வனாச் சமைந்திடுமக்
குற்றால மெனுந்தலமுங் கொண்டுளதத் தமிழ்நாடு. (௧௧)

விண்களிப்ப முனிக்கணங்கள் விழிகளிப்ப வெற்பரசன்
பெண்களிப்ப மணம்புரிந்து பெருமைசெறி குறுமுனிவன்
கண்களிப்ப மணக்கோலங் காண்பித்தார் *மலயவரை
மண்களிப்ப வருஞ்சாரல் வளநகரு முளநாடு. (௧௨)

நடைமருதப் பண்பாடி நாறுநடுங் கடைசியர்கண்
மிடைமருத வேலிகள்சூழ் மிக்கவளஞ் சிறந்ததுவல்

* மலயவரைச்சாரல் - பாவநாசம்.

லடைமருதம் பிளந்தவனு மறிவரிய பெருமையுடைப்
புடைமருதூ ரெனுநகரும் பொருந்தியசீர்ப் புகழ்நாடு. (கங)

ஆதிமூல மென்றழைத்த வானையைக்காத் தருண்மாயன்
றீதில்குணக் கருவூரிற் சித்தரழைத் திடுநாமச்
சோதியா னியமூன்றீ சுரமுடையா ரென்னுமிரு
நாதருறை *யத்தாணி நல்லூரு முளநாடு. (கச)

சொல்வளஞ்சேர் முத்தமிழுந் தோமறுசீர் நான்மறையும்
பல்வளஞ்சே ரைந்திணையின் பால்வளமும் பாகதிக்கா
நல்வளமுந திகழ்நகர நலந்தரும்வே யீன்றமுத்தாஞ்
செல்வரவ ணிருந்தமையாற் சிறந்த¶வரை வனமெனலாம். (கரு)

களபமணி மணிமுலையார் கனிந்தவிசைப் பாடலொடு
மிளமயில்போ னடனமிடற் கிசைந்ததொனி மூழவதிர
வுளமயில்கண் மழைமுழக்கென் றுவந்துசிறை விரித்தாடும்
வளமலர்ப்பூம் பொழிறிகழ்ந்து வயங்குமெழில் வரைவனந்தான். ()

சந்தமார் தமிழ்ப்பொதியத் தடவரைமேற் றவழ்ந்துவரு
முந்துவான் றிரைமறியு பொண்டிரைசேர் தண்பொருந்தச்
சிந்துபூந் துறைமருவித் திகழ்திருநெல் வேலியெனு
முந்துபெய ருந்தரித்த முதுநகரு முளநாடு. (கஎ)

மறங்காத்த வன்னெஞ்ச வஞ்சகரை வலிதகற்றுலகி
லறங்காத்த பெருமானு ராதிநா ராயணர்த
முறங்காத்தண் புளியகத்தி லுறைந்துதிரு வாய்மொழிப்பண்
டிறங்காத்தங் கருளாழ்வார் திருநகரு முளநாடு. (கஅ)

இந்தூருஞ் சடைமுடியா ரீன்றருள்சேய்க் கினிதிருப்பா
நந்தூரின் றிரைக்கடலி னல்வளமு மிளந்தென்றல்
வந்தூரு மணிமுன்றில் வாய்ந்தமணி மேடையுஞ்சேர்
செந்தூரந் திருநகருந் திகழ்ந்துளதத் திருநாடு. (கக)

---

*அத்தாணிநல்லூர்-அத்தியாழ்நல்லூர்; இதைஅத்தாழநல்லூரென்கிறார்கள்
¶வரைவனம் - மூங்கில்வனம்; திருநெல்வேலி.

ஈனுமா னிளங்கன்றுக் கிரங்குதல்போற் பத்தருக்குத்
தானுமா வுளமிரங்குந் தயவுடைமா னுறைதலமாங்
கானுமா மலையுமருந் தவம்புரிவோர் கருதுதிரு
வானுமா மலையென்னும் வளநகரு முளநாடு. (உ0)

நண்ணென்பா னெனுங்கண்ட நானிலமும் வானிலமும்
பண்ணென்பா னிரட்டியுறும் பாடல்சொலும் பத்தர்பத்து
மெண்ணென்பான் பிரமர்களு மேத்து*நம்பி யறிவுடையோர்
கண்ணென்பான் வாழ்$குறுங்கைக் கடிநகரு முளநாடு. (உக)

எண்ணிலருந் தவம்புரிந்தங் கிருந்தபல பாரிடமும்
பண்ணியலுந் தமிழ்நாட்டுப் பாண்டியனும் பூசித்த
தண்ணிலவு நிலவுசடைத் தற்பரனு ருறைந்திருக்கும்
புண்ணியநற் றவப்¶பூதைப் பொற்பதியு முளநாடு. (உஉ)

கருப்பதியா துயிர்க்கருளுங் கடவுள்சடா யப்பருமங்
கிருப்பததா மலர்த்திருவாழ் மார்பருக்கு மினியதலர்
விருப்பதிக முள்ளபல திருப்பதிக்கு மிக்காய
திருப்பதிசா ரப்பதியுஞ் சிறந்திருக்குந் தென்னாடு. (உங)

வேறு.

தாவில் கருணைத் தனியீசர் தயங்கு மிடற்றி னெழில்காட்டுங்
காவி மலர்கள் கண்காட்டக் கமல மலர்கண் முகங்காட்ட
மேவு மருப்பு முலைகாட்ட மிகுஞ்சை வலங்கள் குழல்காட்ட
வாவி மடவா ரெழில்காட்டும் வடசைப் பதியு முளநாடு. (உச)

எல்லா நாட்டி லுளபொருளு மெல்லாத் தீவி லுளபொருளுஞ்
சொல்லா லெண்ணத் தொலையாத தொகுமா நிதியுஞ் சுடர்மணியு
மொல்லா நிற்கு மாவணமு மோங்கு மன்ன சாலைகளுஞ் [று.
செல்லார் சுதைபொன் மேடைகளுஞ் சிறந்தே யிலங்குங் கோட்டா

---

* நம்பி - விஷ்ணுபிரான். $குறுங்கை - திருக்குறுங்குடி.

¶பூதை - பூதப்பாண்டி.

காவி லொளிர்முக் கனிச்சாறுங் கமழ்பூஞ் சோலை யுமிழ்சாறு
மேவிச் சாலி தனைவளர்க்கு மிகுபூம் பணையும் விரைமலர்த்தண்
வாவித் தடமும் வரையாத வள்ளி யோரு மறையோரும்
பூவிற் றிகழும் பொன்மாதும் பொலிவுற் றிருக்குங் கோட்டாறு. ()

கல்வி முதிர்ந்த பெரியோருங் கற்பு நிறைந்த மடவாருஞ்
செல்வ நிதிக்கோன் றனைப்போலச் சிறந்த வணிக மரபோரு
நல்வித் தகரும் பல்குடியு நவிலும் வாய்மை தவறாத
சொல்லைத் திருக்கு நல்லோருந் தொலையா வளஞ்சேர்கோட்டாறு

அடியார் சிந்தித் தலையருளு மருள்சேர் வல்லி யழகாளை
வடிவார் பாகந் தனில்வைத்த வடுகே சுரரா லயத்துடனற்
படியார் புற்றி னிடத்துறையும் பரமர் நாகேந் திரங்கமைத்த
கொடியா டெயில்சூ ழாலயஞ்சேர் கோட்டாற் றாரு முளநாடு. (௨௮)

அளவில் வலிசேர் மதுகையிட வரைமுன் னமர்செய் துயிருண்டு
துளப முடனே விறல்வாகை சூடு மதுசூ தனமாயன்
களப மணியு மணிமுலைப்பொற் கமலத் திருவி னுடன்வாழும்
வளமை மருவும் பட்சிபுர மங்கைப் பதியு முளநாடு. (௨௯)

விரியும் புலன்க ளைந்தினையும் வென்று காம முதலாறு
மரியக் கடிந்து கரணங்க ளெல்லா மொருமைப் படவொடுக்கி
யரிய தவஞ்செய் தத்திரிமா முனிவ னுரிய லன்பினொடு
பரிவுற் றிருந்த தலநாமம் பகரின் ஞானவனமென்பார். (௩௰)

சிலையைச் சிலையாக் கியதாணுத் தேவர் தம்மைத் தேவுலகா, டலைமை பெற்ற விந்திரனைத் தலத்திற் றழைத்த பத்தியொடு, மிலகு மலர்கொண் டருச்சனைசெய் தேத்திப் பூசை யியற்றுதலாற், றொலைவில் பெருமைச் சுசீந்திரமென் றதற்கோர் நாமஞ் சொலப் *பெற்ற.

பானெய் முதலா மபிடேகம் பரிவாத் தாணுப் பரம்பொருட்குச்
சோனை மழைபோற் சொரிந்தாலுந் துளியொன் றேனும்வெளிநில்லா
தான மில்லா முடிக்கங்கை யுடன்கீ ழுற்றுக் குமரியினி
லான தாணு தீர்த்தமரு ளழகார் நகரு முளநாடு. (௩௨)

---

* பெற்ற - பெற்றதென்னு முற்றிறுதிதொக்கது; மேல்வருவனவுமது.

வேறு.

களமுறை நெஞ்சங் காணுள் கல்வலி தென்று பாண்டிக்
குளமுறை யிரக்கங் கண்டங் குலைத்தன ளவ்வை தானு
மிளமுறைக் கங்கை யென்ன விலங்குதண் பொருந்த வாற்றின்
வளமுறைந் தளவில் செல்வம் வளர்வது வழுதி நாடு. (௩௩)

உரைசெய்நான் மறையு மின்ப மோங்குமுத் தமிழு மாய்ந்தோன்
குரைகட லங்கை யுள்ளே கொண்டிட வடக்கி யுண்டோன்
புரையின்மா தவத்தோன் வாழும் பொதியமால் வரையி னுள்ள
கரையின்முத் தமிழுஞ் சந்துங் கமழ்வது கன்னி நாடு. (௩௪)

விரிகட லிலங்கைக் கன்று வேகமா ருதியின் றேகப்
பெரிதுயர் சிகரம் பெற்ற பெருவரை முனிவர் சித்த
ரசியநற் றவங்கள் சித்தி யாற்றியங் கிருந்து செய்தற்
குரியது மயேந்தி ரப்பே ருற்றவெற் புளதா நாடு. (௩௫)

பொங்குபல் கலைக ளெல்லாம் புரையறத் தேர்ந்து கற்ற
சங்கநற் றமிழோர் வாழுந் தமிழ்வள நாடென் றோது
மங்கதன் பெருமை நாவா லனந்தனுஞ் சொல்லற் காற்று
னிங்கித முணரா வென்னு லியம்புதற் கெளிய தாமோ. (௩௬)

நாட்டுச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் (௱௬.)

———o———

நாட்டுச்சருக்கமும் நகரச்சருக்கமும் பெரும்பாலுங் கதைகளை யயப்பெறுவாதலால் வசனமெழுதவில்லை.

நான்காவது

# நகரச்சருக்கம்.

அணிபெறு மிந்த நாட்டிற் காவியோ முகமோ கண்ணோ
பணியுறு பரணந் தானோ பரிபளத் திலதமோ பொற்
கணிதமா முடியோ வந்தக் கவின்முடி முடிமேல் வைத்த
மணிகொலோ வென்ன மன்னும் வளநகர்க் குமரி யம்மா. (௧)

வேறு.

சீத முழங்குந் திரைக்கடலின் சிலைத்த லடங்கச் சிறந்தசங்கி
னாத முழங்கும் வீதியெங்கு நவினான் மறையோர் நயந்தோதும்
வேத முழங்கு மவரியற்றும் விதிமா தலத்து வேள்விபுரி
கீத முழங்கு நல்வளங்க ணிறைதென் குமரி நீணகரம். (௨)

முன்னங் கொடுத்துச் செல்விருந்தை முழுது மோம்பி விடுத்த
ன்பாற், பின்னுங் கொடுப்பான் வருவிருந்தைப் பேணிப் பார்த்தங்
கணைந்தவர்க்குச், சொன்னங் கொடுக்குங் கொடை மடஞ்சேர் தூ
யோர் சமைத்த கொடைமடமு, மன்னங் கொடுக்கு மறச்சாலை மட
மு நிறைந்த தந்நகரம். (௩)

விண்ணுங் குளபெய்ப் புலவோரு மிகவே கலைகள் கற்றுணர்ந்த
கண்ணுங் குளநற் புலவோருங் கவிகொண் டேத்தும் புலவோரும்
பண்ணுங் குளசொற் புலவோரும் பலரும் புகழும் பதியதனி [தே.
லெண்ணான் கறமு முலைறமுறையே யியற்றி விளங்கு மெழிலுடைத்

சிந்து திரைவா ரிதிவளமுஞ் சிறந்த கன்னி வளநாடு
தந்த வளமு மலைநாட்டிற் றயங்கு வளமு முல்லைநிலத்
தந்த வளமுந் தீவிலுள்ள வரிய வளமு நகர்வளமு
மெந்த வளமு நிறைந்துநிறைந் திலங்குங் குமரி யெழினகரம். (௫)

நத்து மனைவயின் றெளிர்முத்து நலஞ்சே ரிப்பி பரிந்தீன்ற [து
முத்தும் பவளக் கொழுங்கொடியு முழங்குந் திரைகண் முகந்தெறிந்
தத்தி மறியுந் தண்டுறையிற் றயங்குஞ் சிறப்பைக் காண்குநர்தஞ்
சித்த மகிழ்வுற் றதிசயிப்பத் திகழும் வளஞ்சேர் தென்குமரி. (௬)

பவளக்கொடிக ளிதழ் காட்டப் பணிலங் களத்தி னெழில்காட்டத்
தவளத் தரள நகைகாட்டத் தடச்செங் கயல்கள் விழிகாட்டக்
குவளைத் தடங்கண் ணரியலென் றெவருங் குறித்து மதிமருளத்
துவளத் திரைகண் மிகவாரித் துறைக டோறுஞ் சொரிந்திடுமால்.()

வாசங் கமழு மான்மதமு மகிழ்சந் தனமுங் குங்குமமும்
வீசு மணஞ்சேர் காரகிலும் விரைப்பா ளிதமும் பன்னீருந்
தேசங் கொளிர்நன் னிறப்பட்டுந் தேயந் தொறுமுள் ளோர்விடுப்ப
மாசில் கன்னி தனக்காக வழங்குங் கலங்கள் பலவுளவால். (அ)

பொன்னு மொளிரு நவமணியும் பொருவி லரிய மயிற்பீலி
மின்னுங் கவரித் தொகுதிகளு மிளிர்பன் னிறஞ்சேர் பூம்பட்டும்
பன்னும் பன்ன னறுந்துகிலும் பகரு நலஞ்சேர் பலசரக்கு
மன்னுந் துறையில் வணிகர்கொள வழங்குங் கலங்கள் பலவுளவால்.

எழுமா தவாகள் புடைசுற்று மியல்பாற் பிறைசே ரெழின்மு டியாற், செழுமா வலனுர் சக்கரந்தான் சேர்கை யதனுற் சித்திரத் தாற், கொழுமா மணிசேர் தனக்குவட்டாற் கொடியா டிரையாற் குவலயத்தோர், தொழுமா தவஞ்சுக் கன்னியைப்போற் றோன்றுங் கன்னி மதிளுமம்மா. (கo)

புன்னீர் மையனு மெனைக்கமலப் பொற்றாள் வழுத்த வருள்புரிந்த
வின்னீர் மையினுள் குமரிநக ரெம்பி ராட்டி யெயிலகழி
முன்னீ ரதனோ டிகலுதற்கு முழங்கித் திரைக ளலைமோதி
நன்னீர்க் கடலிங் கிருந்ததென நவிலுந் தகைமை யுடைத்தம்மா.()

ஆண்டங் குலகப் பொருளனைத்து மடக்கிக் கொளலா னுல்களக்க, நீண்ட நெடியோன் வயிறொத்து நேடி யினைந்தங் கடைந்தோர்க்கு, வேண்டும் பொருள்கள் வழங்குதலால் விரும்பி யடைந்தோர்க்கிரக்க மிகப், பூண்ட கன்னி நாயகியைப் போன்று முளவா லாவணங்கள்.

தெள்ளித் தெளித்த வெண்சுதைக டீற்றி நிலவின் கதிர்விரித்து, வெள்ளி வரைபோ லொளிர்மேடை வீதி விளங்குங் குமரியென்னு, மெள்ளி னகரச் சிறப்பைமுற்று மெடுத்தின் னிசைப்பத் தொலையாதால், வள்ளி யோய்கீ யந்நகர மகிமை யுரைப்பன் கேட்டியால். (கூ)

குரவரை மறையோர் தம்மைக் கோதின்மங் கையரைத் தூய
பரவரும் பசுவை யின்சொற் பாலரைப் பற்று விட்ட
வுரவரை முற்று நம்பி யுற்றுளோர் தம்மை யோங்குங்
கருவுறு கருப்பந் தன்னைக் கழிந்திடச் செகுத்துள் ளோரும். (௧௪)

பொற்புடை வடிவார் மேனி பொருந்துகன் னியரைத் தக்க
கற்புடை மடநல் லாரைக் கலன்கழி மகளிர் தம்மை
வற்புற வலிதிற் பற்றி மருவியே தீமை நோக்கா
தற்புறு காம நோய்கொண் டலைவுறும் பாவத் தோரும். (௧௫)

அடும்பசி யதனு ளுள்ள மலைந்துளோர்க் கிரங்கி யன்பா
விடும்புசிப் பதனை யன்னோர்க் கிடாதுதான் விலக்கி னோரு
நெடும்பெருஞ் செல்வங் கண்டு நெஞ்சினிற் பொறாமை பூண்டு
கெடும்படி யொருவன் றன்னைக் கெடுத்திடுங் கெடுதி யோரும். (௧௬)

உள்ளுதே வால யத்து ளுளபண்டம் பயனின் றேனு
மெள்ளள வுந்தான் *கட்டா லிதற்கொழி வெங்கு மில்லைக்
கள்ளமாச் செய்யு மெல்லாக் களவினுங் கொடிய தாய
வொள்ளிய செம்பொன் கட்டற் குவந்துசெய் பாவத் தோரும். ()

கொலைசெய்தல் களவு செய்தல் கொடுங்களி தருங்கள் ளுண்ட
னிலையுறு குரவர் தம்மை நிந்தனை செய்த னெஞ்ச
மலைவிலா திவைகட் கெல்லா மன்பினோ டுடன்பா டுள்ள
றொலைவின்மா பாத கத்தின் றொடர்பூண் டுள்ளோர் தாமும். (௧௮)

மெய்ம்மையாம் வேத நூலை மிக்கவா கமத்தைச் சற்றும்
பொய்ம்மையில் புராண நூலைப் பொய்யெனப் புகறீ யோரு
மிம்மையி லறங்கள் செய்தா லிதன்பய னின்பங் கூர
வம்மையிற் கிடைத்தல் கண்ட தியாரெனு மத்தீ யோரும். (௰௯)

இசைபெறத் தருவோ மென்றங் கிசைந்ததை யீந்தி டாதே
நசையுறும் வார்த்தை சொல்லி நடத்திக்கா றளர்ந்த பின்னர்
வசையுற வில்லை யென்னும் வஞ்சக மனத்தி னோரு
மிசையுறச் செய்த நன்றி கொன்றதீ வினையி னோரும். (௨௰)

---

* கட்டல் - களவுசெய்தல்

அரசனைக் கொல்ல வெண்ணு மறக்கொடும் பாவத் தோரும்
விரவும்வெஞ் சமரி லஞ்சி வேந்தனைப் பகைஞர் முன்விட்
டுரைசெயும் வசையுந் தன்னு ருயிரையுந் தாங்கி யோடி
நிரையம்வீழ் தீமை பூண்ட நெடுங்கொடும் பாவத் தோரும். (உக)

வலியுறு புலித்தோல் போர்த்து வலியிலான் மேய்தல் போலப்
பொலிவுறு பொய்ம்மை வேடம் பூண்டவப் புன்மை யோரு
மெலிவுறு மெளியர் தம்மை மிக்கதம் வலிமை யாலே
நலிவுறு துன்பம் வன்பா னடத்திவாழ் பாவத் தோரும். (உஉ)

தென்புலப் பிதிர்சா பங்கள் சிறந்தகற் புடையோர் சாபம்
வன்புலன் வென்றோர் சாப மறையவர் சாப மேற்றோர்
நன்புல னுடையோர்க் கின்ன ணுடொரு நலியச் செய்யும்
புன்புல முடையோ ரிந்தப் பொருவரும் பாவத் தோரும். (உங)

இவர்முத லாக வெண்ணு மெண்ணரும் பாவம் பூண்ட
வவர்களு மறம்வ ளர்த்தா ளருட்பதிக் குமரி நண்ணி
நவையறு தீர்த்த மாடி நலந்திகழ் கன்னி நற்றாள்
சுவைகொளப் பணிகு வாரேற் சுரர்தொழுஞ் சுரர்க ளாவார். (உச)

எத்தலத் தினுஞ்செய் பாவ மிந்தவண் குமரி யென்னு
மத்தல மதனிற் றீரு மதிற்செயும் பாவந் தீர்ப்பான்
மெய்த்தலம் வேறொன் றில்லை விறற்கால வயிர வன்றன்
முத்தலைச் சூலத் தன்றித் தீர்வுறு மொழியும் போதில். (உரு)

ஆரிய னான வந்த வருண்முனி வரன்றன் காத்ய
வீரிய னென்னு நாம வேந்தனை நோக்கி மன்னு
வாரியங் கருணை பூத்த மதர்விழிக் கன்னி வாழுஞ்
சீரிய குமரி மேன்மை செப்புகே னின்னுங் கேட்டி. (உசா)

வேறு.

கண்ணினாற் காணின் மனத்தினு னினைக்கிற் காலினு னடந்தெதிர் செல்லி, லெண்ணிநாத் துதிக்கிற் செவியினாற் கேட்கி லிருந்தவப் பதியுளோர்க் காணிற், பண்ணிய பாவ மெண்ணரி தேனும் பஞ்செரிப் படுதல்போ லாமாற், புண்ணியத் தலமாங் குமரிநற் பதியைப் பொருந்துவர் புண்ணியத் தலத்தோர். (உள)

அப்பதி யிருந்தங் கருந்தவம் புரியி லத்தவ மொன்றதா யிரமாந், கைப்பொரு ளொன்றங் கேற்பவர்க் கீந்தாற் கணக்குற வதுவுமப் படியாந், துப்புறு மன்ன மொருபிடி கொடுக்கிற் றொகுத்ததோர் மலையள வன்ன, மொப்புறக் கொடுத்த பலன்றரு முடையொன் றுதவிடி லதுவுமப் படியாம். (உஅ)

புனிதமா மகமொன் றத்தலத் தியற்றிற் புகலரும் புண்ணியங் கொடுக்கு, மினியநன் மகங்க ளாயிர மியற்றி விட்டநற் பலத்தினை யீயு, மனிதர்வா ழுலகு மாயினுங் குமரி வளநகர் மகிமையை மதித்து, முனிவர்வி ண்ணவர்கண் முதலினோ ரிருந்து முயல்குவ ரரியநற் றவங்கள். (உகூ)

ஆழியா னவனை யம்பிகை பாகத் தமலனை யவரவர் தேவை
வாழியங் கிருந்து மனமுவந் தொருநாள் வழிபடு மருச்சனை புரிந்தா
லூழிநற் கால மிருந்தினி தியற்றி யுள்ளவப் பலத்தினை யுதவுந்(மால்
தாழ்வின்மந் திரந்தா னொருருச் செபிக்கிற் சகத்திர வுருப்பலன் றரு

இறந்ததம் பிதிர்க டங்களை நோக்கி யெறிதிரைக் குமரியந் தலத்தின், மறந்துமோர் பிண்ட மிட்டிடிற் பிதிர்கள் வன்கொடு நரகிடைக் கிடந்து, *பறந்துள நடுங்கிப் பீதைத்துவெந் துயரப் படுகுத லொழிந்தெழுந் தின்பஞ், சிறந்தபொன் னுலகிற் றேவர்கள் சூழச் சிறப்புட னினிதுவீற் றிருப்பார். (௩க)

பொருளைவேண் டுநர்க்குஞ் செல்வம்வேண் டுநர்க்கும் பொருவருங் கல்விவேண் டுநர்க்கு, மருளைவேண் டுநர்க்குங் கதியைவேண் டுநர்க்கு மடன்மிகு பகைவரெல் லோரு, மருளவேண் டியசூர் வலிமைவேண் டுநர்க்கு மனத்தினின் வேண்டிய ஞானந், தெருளவேண் டுநர்க்குங் கொடுக்குமாற் கன்னித் தெய்வநா யகியுறை நகரம். (௩உ)

வறுமையா நோய்க்கு மருந்தினுற் றீரா வன்பெருங் கொடிய வெந் நோய்க்கு, முறுமயல் செய்யு மொழிவிலாப் பேய்க்கு முணர்விலா மூடமாம் பேய்க்குஞ், சிறுமைசேர் மனத்தோர் செய்திடுங் கொடிய தீர்விலாக் குத்திரப் பகைக்கும், பொறுமைசேர் குணத்துக் கன்னிநா யகிவாழ் புரமலா லொழிவிலைப் புகலில். (௩௩)

---

* பறத்தல் - விரைதல்.

இந்திர னிருந்தன் இருந்தவம் புரிந்திட் டெண்ணினற் றவக்கவு தமனுல், வந்தவெஞ் சாப மொழித்துமெய்த் தாணு வாதனு மருள் செயப் பெற்றே, யந்தரத் துறையு மமரர்க ளிறைஞ்ச வரசுசெய் திருந்தயி ராணி, சுந்தரக் களபத் துணைமுலை தழுவித் தொலைவிலா வின்பமுற் றிருந்தான். (௩௪)

பரையருட் சத்தி மயிடனைக் காய்ந்த பகவதி பார்தழைத் தோங்க, வுரைதரு மெண்ணுன் கறத்தினை யோம்பு முத்தமி யுலகெலா மடக்கும், வரமுடை வாணன் றலையரிந் திட்ட வயிரவி வடிவுறுங் கன்னி, புரைதவிர் தவந்தான் புரிந்தவ ணிருந்தாற் புகல்வதார் குமரியின் பெருமை. (௩௫)

அந்தரத் திமையோர் கோன்முத லமர ரஞ்சியே யொளித்திட வாடல், வந்திடு மவுண வாணனென் பவன்றன் வன்றலை யரிந்து மண் வீழ்த்துஞ், சுந்தரி யென்னுங் கன்னிநா யகிதான் றுலங்குற விருந்தருள் செயலா, லிந்நகற் றலத்தைக் கன்னிகா க்ஷேத்ர மென்னவு மியம்புவ ரம்மா. (௩௬)

கலங்கலில் கொடிய விராவணன் றன்னைக் களைந்திடக் கைச்சிலை யிராம, னிலங்கையிற் செல்வான் கடலிடைச் சேதிங் கியற்றுதற் கித்தலத் தெய்தி, யலங்கன்மெய்க் கன்னி யருளினுற் சேதிங் கமைத்தலா லதியா மிந்தத், தலந்தனைச் சேது மூலமென் றெவருஞ் சாற்றவு மொருபெயர் தரித்த. (௩௭)

ஒங்கிய வுவரி பெருகுநீர் முழுது மொருகையி லுழுந்தள வாக வாங்கிய பெருமைக் குறுமுனி வரன்முன் வந்திவ ணிருந்தசங் கரனைப், பாங்குறு மன்பா லருச்சனை புரியப் படுவதித் தலமெனிற் புனிதர், தாங்கிய குமரித் தலமதின் பெருமை சாற்றலாந் தகைத்ததோ நம்மால். (௩௮)

ககபதி முதலாம் வானுளோர்ச் சிறைசெய் வலியுடைச் சூரனைச் செற்ற, குகனெனும் பெருமைக் குமரனும் விருப்பாக் குமரியந் தலத்தினைக் குறித்தே, யநேகச் சிவனை யருச்சனை செய்த தந்நகற் றலமெனி னதன்சீர்ப், புகலரும் பெருமை புவியுளோர் தம்மாற் புகல்வதற் கெளியதோ வம்மா. (௩௯)

நகரச் சிறப்புச் சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் (க௪௫)

# ஐந்தாவது

## குமரியென்னும்பெயர் வரலாற்றுச் சருக்கம்.

அளவிடற் கரிதாங் குமரியின் பெருமை யனைத்தையு மருள்செயக் கேட்டிங், குளமகிழ் வுற்றேனென்றட லரச னுரைத்தனன் பின்னுமொன் றுரைப்பான், வளமலி நகர்க்குக் குமரியென் றுரைக்க வரும்பெயர் வருவதற் கேது, இளர்பெருந் தவத்தோ யருளென்வதனைக் கேடிலான் கேட்டியென் றுரைப்பான். (௧)

இத்திர மியாருங் கேட்பதற் கெண்ணு ரிதனைநீ கேட்டனை யெண்ணி, யத்திர மதனை விரித்தெடுத் துரைக்கி லவ்வுரை மிகப்பெரி துளதான், மெய்த்திறல் வேந்த வதனைநீ கேட்பான் விருப்பினை யாங்கது விளம்பிற், பொய்த்திற மில்லாக் காந்தநற் புராணம் புகல்வது கேளெனப் புகல்வான். (௨)

பாரெர்ளி ரண்ட மொன்றினுக் களவு பகரிலீ ரைம்பது கோடி
நேரெழு முயர்வும் விரிவுமவ் வளவாய் நின்றன கீழொடு மேலா
யீரெழு வுலக முளவதிற் புவிக்கீ ழேழுல கத்தொடு மப்பா
லேருறு மண்டப் பித்திகை வரைக்கு மியோசனை யைம்பதுகோடி.

இத்தல முதலா வும்பரே ழுலகு மிவையொடு மிலங்கிய வண்டப்
பித்திகை வரைக்கு மளவெடுத் துரைக்கிற் பேசுவ ரைம்பது கோடி
வைத்தவிப் புவிக்கு நடுவினிற் கனக வரையெனு மேருவொன் றுளதா
லத்தட வரையின் மட்டுமிப் பூமிக் கைம்பது கோடியோசனையே. ()

இம்பர்மண் கனமு மியோசனை யியம்பி லிருபதி னாயிர மிதற்கு ளம்பொன்மால் வரையின் வேரள வீரெண் ணாயிர மியோசனையாகு மும்பர்சென் மேருத் தட்டுமூன் றுளவா லொவ்வொரு தட்டின்மே லுயர்ச்சி, யைம்பதிற் பாதி யாயிர மமைத்த வளவுறு மியோசனை யாமால். (௫)

ஆங்கதன் கீழ்த்தட் டதன்விரி வுரைக்கி லையிரண் டாயிரமாகு மோங்கிய நடுத்தட் டதன்விரி யீரே ழாயிர மியோசனை யுடைத்து தீங்கிலிவ் விரண்டு தட்டினு மிருப்பர் சித்தர்கிம் புருடர்தே வர்கள் சீர்ப், பாங்குறு மூன்றுந் தட்டியோ சனைதான் பதினெண்ணா யிரம் விரி வடைக்கால். (௬)

வேறுள வதன்பேர் சக்கரவாட மிளிர்நவ மணிகளால் விளங்குங்
கோலவத் தட்டுக் கெண்டிசை யதிலுங் கொடுமுடி யெட்டுள கீழ்பாற்
சாலுமக் குவடு பலமணி யதனாற் றயங்குமத் தலப்பெயர் சாற்றி
லேலுநல் லமரா பதியதி லிருப்ப னிந்திர னிமையவ ரேத்த. (எ)

அங்கியின் றிசைநற் கொடுமுடி யதனி லாடக நிறத்தரு மணி யுஞ், செங்கதிர் மணியு மழுத்துபொன் மதிலுஞ் செறிந்தகோ புரத் தொடு சிறப்பாப், பொங்கிய பெயர்தே சோவதி யென்னும் பொற் பதி காத்த தீக்கடவு, டங்கழல் போலும் பாரிட மநேகந் தன்பணி கேட்கவாங் குறைவன். (அ)

தென்றிசைக் குவட்டிற் பஞ்சலோ கத்தாற் செய்திடு மதிலுங் கோ புரமுந், தான்றிய சங்கு யமுனிபட் டணத்திற் றாய்நெறிச் ச மன சிருப்பன், கன்றிய கன்மப் பிணிகளும் பேயுங் காலனும் பா சமும் பிதிரு, மொன்றிய கணக்குச் சித்திர குத்த ருடன்முத லாயு ளோர் சூழ. (கூ)

கன்னியின் குவட்டி னீலவொண் மணிகள் கதிரொளிபரப்பிடக்கரிய
நன்னிற முடைய தயித்திய பதிக்கு நாயக னிருதிபேற் றிக்கிற்
பன்னிறங் கவரும் பளிங்கினாற் செய்யப் படுமெயிற்கோபுரம்விளங்கு
மன்னகர் சுத்த பதியதற் கரச னருட்கொடை வருணனென்பவனே.

வியன்வட மேற்குக் குவட்டினி லுயர்ந்த வெண்கொடி பரப்பி யொண் மணிசேர், வயமுறு மதில்சூ ழெழில்பெறு கந்த வதியெனு ம் பதியினில் வைகி, நயமுறு மருத்துக் கடவுளங் கிருப்ப னன்னக ர்க்காவலா யளவில், புயவலிப் பூத கணங்கள்வெம் படைகள் பொலி வுறத் தாங்கியே சூழ. (கக)

வடதிசைக் குவட்டிற் சந்திர காந்த மணியினான் முத்தினால் வ யங்கி, யிடனுறு மிமய வரையென விமைக்கு மியனகர் மகோதய மதனிற், சுடர்நவ மணிக ளொளிருமா மகுடச் சோமனங் கிருந்தர சளிப்பன், கடவுண்மா முனிவர் கணக்கடா ரகையின் கணங்கள் போற் சூழ்ந்தவ ணிருப்ப. (கஉ)

மிளிர்வட கிழக்குக் குவட்டினிற் காந்தி விரித்தபன் மணிகளி [ப்பர் னொளிர, வொளிரொகா வதியி லுருத்திரர் சூழவுவந்துநல் லீசரங் கிரு

வெளியடைத் திடுமிக் கொடுமுடி யெட்டும் விரித்தநற் சக்கர வாட
களிபடு தட்டிற் பாதியு மடைக்கு நடுவிலோர் பதியுள தாங்கே (கரு)

படர்நடு விரிக்கும் பதியத னுமம் பகர்பனே வதியெனப் படைத்தங்
கிடனுறும் விரிவீ ரெழாயிர மென்னு மியோசனை யிருப்பதங் கதனி
லடர்புலி னடக்கி யியமமே முதலா வாற்றிய வருந்தவர் சூழ [னல்.
விடலரு முயிர்கள் வினைவழி படைக்கும் விதியவ ணினிதுவை குவ

குலவயன் பதிக்குக் குடதிசை தனிலோர் கோடுள தாங்கதிற்
சிறப்பாப், பலமணி களினல் விளங்குமோர் பதிதான் பகர்பதி னுல
தா யிரமா, நலவியோ சனைதா னுள்ளதங் சதன்ற னுமமும் வைகுண்
ட பதியத், தலமதி னெடுமா லினிதுவீற் றிருப்பன் சதுமுகன் முத
லினோர் வணங்க. (கசு)

இப்பதி யதற்கு வடகிழக் காக விருப்பதோர் கொடுமுடி யதுதான்
றுப்பொளிர் கதிர்கள் பரப்பியே யுதய சூரிய னெனவொளி சுடரு
மப்பதி சோதி ளக்கமென் றறைவ ராங்கதிற் கணபதி கந்தன்
செப்பரு ணந்தி யொடுமகா காளன் சேர்வுற மயேசுர ரிருப்பர். ()

இப்பொலன் வரைக்குத் தென்புற நிடத மேமகூ டம்மிம கிரி
மூன், றப்பெரு வரையொவ் வொன்றினுக் குயர மயுதயோ சனையத
னிடமுநீ, செப்பியோ சனையீ ராயிர மிடையிற் றிகழ்வெளி யொ
ன்பதா யிரமாம், வைப்புறு நீளங் கிழக்கொடு மேற்கு வாரிதி மட்டி
னிற் செலுமால். (கஎ)

மேருவின் வடபா னீலமால் வரையு மிக்கெழு சுவேதமால் வரையுஞ்
சேருநற் சிருங்க வரையுமிம் மூன்றுந் தென்புல வரைக்குள திறனு
மோருநற் கீழ்பான் மாலிய வானு முயர்கந்த மாதன மேற்கு
மேருற நிற்கு மெழுச்சியு மயுத யோசனை யிடமுமா யிரமாம். (கஅ)

மாலிய வாற்கு மேற்குநீள் கந்த மாதன மதனுக்குக் கிழக்கு
நீலமா கிரிக்குத் தெற்குவிண் ணோங்கு நிடதமால் வரைக்கதன் வ
டக்குச், சாலுமத் தலந்தா னிளாவிர்த *வருடந் தன்னுளே மேரு
வுக் கடையாய், நாலுமால் வரையங் குளவவை வகுத்த நாற்றிசை
யதனினு நிற்கும். (ககூ)

---

* வருடம் - கண்டம்.

ஒவ்வொரு வரைதா னைம்பதா யிரமா யிரயோசனை யுடைத்ததன் கீழ்பாற், செவ்விதி னிற்கும் வெண்மைமந் திரமாஞ் சிலையின்மேற் செழுங்கடம் பொன்றங், கெவ்வமில் சகத்ர யோசனை யுயரத் தெழுந்தல னிற்குமவ் வரைக்கீ, ழுவ்விடத் துளவ ருணேறுகந் தடமு மதிற்சயித் திராதவ வனமும். (௨0)

ஆனதென் புறத்தி லடையெனுங் கந்த மாதனப் பொற்சிலை யதன்மே லூனமில் சகத்ர யோசனை யுயர்ந்த வொருபெரு நாவலின் கனிச்சா றீனமில் கனக நதியதாய் மேரு வெனும்வரை சுற்றியோ டிடுமான் மானத சரசா மடுவுமா னதநல் வனமுமவ் வரையடி மருவும். (௨௧)

மேற்றிசைக் கடையா நீலநல் விபுல வெற்பின்மே னிற்பதோ ரரசு, சாற்றிடு முயர்வு சகத்ரயோ சனையத் தடவரை யடியினிற் றயங்கித், தோற்றுசெங் கதிர்போ லொளிவிடுங் கமலத் தொகையுடைச் சிதோதவா வியுநீ, ளேற்றிசை கமழு மலர்வயிப் பிராச நந்தன வனமுமங் குளவால். (௨௨)

வடக்கடை வரையாஞ் செங்கிறச் சுபாரி சுவந்தனில் வளர்சினை யாலுக், கடக்கியோ சனையு மாயிர மாகு மவ்வரை யடியிற்பத் திரக, தடத்தினிற் கமழுந் *தாமரை மிகவாற் றண்ணறுஞ் சோலை யொன் றுளதவ், விடத்தினி லிருப்ப ததன்பெயர் திருதி யென்றுரை செய்வரெல் லோரும். (௨௩)

இவ்விளா விரதத் திருந்திடு மவருக் கேழிரண் டாயிர மாயு ளவ்வவர் புசிப்பு நாவலங் கனிச்சா றவர்நிற மாடக நிறமாந் திவ்விய சாம்பு நதிநடு மேருச் சிலையினைச் சுற்றியோ டுதலா லெவ்வமில் குணத்தோர் நாவலந் தீவென் றியம்பின ரிந்நடுத் தீவை.

மாலிய வானும் வரையதன் கிழக்கு வாங்குகீழ் கடற்குநேர் மேற்குப், பாலதன் பேர்பத் திராசுவ வருடம் பரிந்ததி லிருப்பவர்க் காயுள், சாலுறு மாண்டீ கயுதமென் றுரைப்பர் சந்திரோ தயமனா நிறத்தார், நீலவுற் பலந்தான் புசிப்பது மவர்க ணிறைந்தநற் குணத்தினன் னிலையோர். (௨௪)

கந்தமா தனமாம் வரையதன் மேற்குக் கருதமேல் கடற்குநேர் கிழக்கு, வந்தவத் தனித்தை யாவருங் கேதுமாலமாம் வருடமென்

ன் றுரைப்ப, ரிந்தாற் றலத்தி லிருப்பவர்க் காயு ளெண்ணிடி லயுத
மென் றுரைப்ப, ரந்தாற் குவளை நன்னிற மவருங் காய்புசிப் பரும்
பலாக் கனியே. (௨௬)

சொல்லிய நீல கிரியதன் வடகுச் சுவேதாற் கிரியதன் றெற்கா
மெல்லையுங் கதனுக் கிரமியவருட மென்பர்க ளிந்நிலத் திருப்போர்க்
கல்லலில் வயது மாறிரண் டாய வாயிர மவர்நிறம் பானன்
மெல்லிய வாலின் பழமது புசிப்பா ரிரும்புவ ரவ்விடந் தனிலே. ()

சீரிய சுவேத வரையதன் வடக்குச் சிருங்கமால் வரையதன் றெற்கு
ளோரிய லகத்தை யிரணிய வருட மென்பர்க ளிதிலுறை வோர்க்கு
மூரிய மதியி னொளிநிறம் புசிப்பு *முருகதின் கனியுமிழ் சாறு
வீரிய வயது சொல்லின்மூந் நான்கு மேவிடு மாயிர மாமால். (௨௮)

மருவிய சிருங்க வரையதன் வடக்கு வடகடற் கரையதன் றெ
ற்குக், குருவரு டந்தா னதிலுறை வோர்க்குக் குறித்திடும் வயதுமூ
வயுத, முருவொளிர் நிறந்தான் பச்சையென் றுரைப்ப ருண்பது வி
ருப்புறு கனிக, டிருவொளிர் மேரு வரையதன் றெற்கிற் றெரிந்திடு
ம் வருடமே லுரைப்பாம். (௨௯)

எரிமணி நிடத கிரியதன் றெற்கங் கேமகூ டத்ததன் வடக்குள்,
ளரிவரு டந்தா னுங்கதி லுறைவோர்க் காறிரண் டாயிர மாயு, டரு
நிறம் வெண்மை புசிப்பது கருப்பஞ் சாறுசற் குணத்தவர் தமக்கங்,
கிருதுவேற் றுமைதா னில்லையெப் பொழுது மென்பரா லிருங்கலை
வல்லோர் (௩௦)

ஏமகூ டத்து மிமயமால் வரைக்கு மிடைவெளி கிம்புருட கண்டத்
தாமவர் வயது மயுதம்பொன் னிறத்தா ரத்தியின் பழம்புசிப் பாமா
னுமவ் வருடமெட்டினு மிருப்போர் நரைதிரை மூப்பொடுமின் றிச்
சேமமா யுகங்க ளொன்றினு மறிவுந் திகழுடல் வலியுமெஞ் சாரால்()

திருந்திய விமய கிரியதன் றெற்குத் தென்கடற் கரையதன் வடக்குப்
பொருந்திய தலத்தைப் பாரத வருட மென்பரிப் புவியினிலுறைவோ

*முருகு-எலுமிச்சை.

ரருந்தவ தன்னை மாதிபா வுள்ள தங்கவர்க் காயுறு றென்ப
ரிருந்தவ ணியற்றும் புண்ணியபாவ மிரண்டினைப் பன்னருந்துவரால்,

இப்பொழில் சம்புத் தீவத னளவு மிலக்கயோ சனையிதைச் சுற்று
முப்புறு கடலு மப்படி யளவென் றுரைப்பரவ் வுவரியைச் சுற்றுஞ்
செப்பமார் சாகத் தீவிரண் டிலக்கஞ் சேர்ந்தபாற் கடலுமவ் வளவா
மப்புறங் குசைத்தீ வளவுநா லிலக்க மதின்றயிர்க் கடலுமவ் வளவே,

ததிக்கடற் கிரட்டி கிரவுஞ்சத் தீவு தன்னையே சுற்றுநெய்க் கடலும்
பதித்தவவ் வளவப் பாலதற் கிரட்டி பகருவ ரிலவ நற்றீவு
விதிப்பரங் கதைச்சூழ் கன்னலின் சாற்று வேலையு மவ்வள வாக [வே
மதிப்பதற் கிரட்டி கோமேதநற் றீவு வளைந்ததேன் கடலுமவ் வள

தேங்கடற் கிரட்டி புட்கரத் தீவுஞ் சேருநன் னீர்க்கட லதுவும்
வாங்குறு கடலோ ரேழுந் தீவேழும் வகுத்திடும் யோசனை கூறி
லாங்கவை யிரண்டு கோடியோ டிலக்க மைம்பதி னுன்கென லாகுந்
தாங்கிய வைம்ப தாயிர மப்பாற் றமனியத் தலந்தச கோடி (௩௫)

தமனியத் தலத்தை வளைந்துகொண் டிருக்குஞ் சக்கர வாளமெ
ன் றொருவெற், பமைவுறு மிடமு மயுதயோ சனையா மப்புற மிருநில
மதற்குச், சமையுமை யேழு கோடியோ டிலக்கஞ் சாற்றுமீ ரொன்
பதிற் சார்ந்த, அமைதரு மயுதநான்கதா மதைச்சூழ் தொடுகட லொ
ன்றுள தந்த (௩௬)

அந்திதான் கோடி மூவொன்ப திலக்க மாங்கதற் கப்புற மண்
டப், பித்திகைக் கணமுங் கோடியோ சனையாம் பேசிய தொகையை
யொன் றாக்கின், மெய்த்தொகை யெல்லா மைம்பது கோடி மேருவி
ன் வடக்குமவ் வள்வா, மொத்தபொன் வரைக்குக் கிழக்கொடு மே
ற்கு யோசனை யொருசத கோடி. (௩௭)

நங்கித னடுவா நாவலந் தீவுக் கிருந்தர சியற்றுமோர் வேந்த,
ருங்கவ னுமை மாக்கினேத் திரனு மவன்றன தன்புறு புதல்வ, ரோ
ருருமொன் பதின்மர்க் கொன்பதுநாமத் தொன்பது வருடமும்
கொடுத்தான் யாங்குள தென்பாற் பாரத வருடம் பரதனென் ப
வனைக் காண்டான். (௩௮)

வையகந்தருக் கொடையான் பரதனென் றுரைக்கும் பகலவன்கு
லநா பதிக்கங், கிந்திரன் கசேரு தாம்பிர வருண னிசைபெறு கப
த்தி மாநாகன், சந்த்ரன்கர் திருவன் வருணனோ டெண்மர் தனை
மைசால் வலியுடைத் தலைமை, மைந்தர்தம் மோடு குமரியென் றொ
ருபெண் வந்தனள் மற்றவன் றவத்தால். (௩௯)

ஔபது பேர்க்கும் பாரத வருட மொன்றையும் பரதனென்
பவன்று, னின்புறும் படியே யொன்பது கண்ட மிட்டதைக் கொடு
த்தன னியல்பாற், றென்புலக் கண்டங் குமரிபெற் றனளத் திசையி
லத் தலத்தர செய்தி, யன்பொடு குமரி யிருந்தன ளதனு லதன்பெ
யர் குமரியா னதுவே. (௪௰)

அப்பதிப் பெருமை யனந்தனு லாகா வனந்தநா வுள்ளவ ரொ
னினுஞ், செப்புதற் கரிய சிறப்புடைத் தலமாந் திரைக்கடல் சூழ்பு
வி மீதி, லொப்பிலாக் கன்னி நாயகி யுறைந்தங் குயர்தவம் புரிகுவ
ளென்றான், மெய்ப்பதிக் குமரிப் பெருமையை யாவர் விளங்குற வி
ளம்புவ ரம்மா. (௪௧)

குமரியென்னும்பெயர் வரலாற்றுச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம், (௱அசு)

## குமரியென்னும்பெயர் வரலாற்றுச்சருக்க சுருக்கவசனம்.

அளந்து சொல்லுதற்கரிய குமரித்தலத்தின் பெருமையெல்லாங்கேட்டு மகிழ்ந்தேன். இந்தத் தலத்துக்குக் குமரியென்னும் பெயர் வந்த காரணம் என்னை யென்று காத்தியவீரிய அரசன் கேட்கத் தெத்தாத்திரைய முனிவர் கூறுவார். உண்மைத் திறமுடைய அரசனே! நீ வினவியதன் காரணம் பதினெண் புராணங்களுளொன்றாகிய கந்தபுராணத்திலிருக்கின்றது. இப்பூமியின்கண்ணே விளங்காநின்ற ஒரு அண்டத்தின் உயர்ச்சியும் விசாலமும் ஐம்பதுகோடி யோசனை தூரமாம். இவ்வண்டத்தின் மேலே யேழுலகமுங் கீழே யேழுலகமுமுள்ளன. அவ்வுலகங்கள், அண்டப்பித்திகை வரைக்கும் ஐம்பதுகோடி யோசனை தூரங்களுள்ளன. இத்தகைய பூமிக்கு மத்தியிலே மகாமேரு மலையிருக்கின்றது. அவ்விடம் இ[illegible]மிக்கு ஐம்பது

கோடியோசனை தூரமுள்ளதாம். அம்மலையின் மேலே யொவ்வொன்றும் இருபத்தையாயிரம் யோசனை தூரங்கொண்ட மூன்று தட்டுகள் உள்ளன. கீழ்த்தட்டின் விரிவு பதினாயிரம் யோசனைதூரம். நடுத்தட்டின் விரிவு பதினாலாயிரம் யோசனைதூரம். இவ்விரு தட்டினுள்ளும் சித்தர் கிம்புருடர் தேவர் வசிப்பார்கள். மேற்றட்டுப் பதினெண்ணாயிரம் யோசனைதூரம் விரிவுள்ளது. அத்தட்டின் பெயர் சக்கரவாடம். அதனெட்டுத்திசையினும் எட்டுக் கொடுமுடிகளுள்ளன. கீழ்த்திசையின் பெயர் அமராவதி. அதிலே யிந்திரனும், அக்கினி திசையின் பெயர் தேசோவதி. அதிலே யக்கினி தேவனும், தென்றிசையின் பெயர் யமுனி. அதிலே யமனும், கன்னித்திசையின் பெயர் தயித்தியபதி. அதிலே நிருதியும், மேற்குத் திசையின் பெயர் சுத்தபதி. அதிலே வருணனும், வடமேற்குத் திசையின் பெயர் கந்தவதி. அதிலே வாயுவும், வடதிசையின் பெயர் மகோதயம் அதிலே சந்திரனும், வடகிழக்குத்திசையின் பெயர் ரசாவதி. அதிலே யீசானனும் அவரவர் பரிசனங்கள் சூழ இருப்பார்கள். இவ்வெட்டுத் திசைக்கு நடுவிலே யேழாயிர யோசனை விசாலமுள்ள மனோவதியென்னும் பட்டணத்திலே பிரமதேவரிருப்பார்.

மனோவதிக்கு வடகிழக்கிலே சோதிலூக்கமென்னும் ஒரு கொடுமுடியுண்டு. அதிலே விநாயகர், கந்தர், நந்தி, மகாகாளர், மயேசுரர் இருப்பார்கள். இத்தகைய மேருமலைக்குத்தென் பக்கத்திலே நிடதம், எமகூடம், இமகிரி யென்னு மூன்று மலைகளுள்ளன. அவற்றுளொவ்வொன்றும் பதினாயிரம் யோசனை தூரமுயரமுள்ளது. வடபக்கத்திலே நீலமலையுஞ், சிருங்க மலையுமுள்ளன. ஒவ்வொன்றும் பதினாயிரம் யோசனை தூரமுள்ளது. கீழ்பக்கத்திலே மாலியவானென்னு மலையும் மேல்பக்கத்திலே கந்தமாதன மலையும் ஒவ்வொன்றும் பதினாயிரம் யோசனை தூரமுள்ளது. மாலியவானுக்கு மேற்குங் கந்தமாதனத்துக்குக் கிழக்கும் நீலமலைக்குத் தெற்கும் நிடதமலைக்கு வடக்குமுள்ள பூமியே இளாவிரத கண்டமெனப் பெயர்பெறும். அதிலே நாற்றிசையினு நான்கு மலை மேருமலைக்கு அடைகல்லாக நிற்கும். கீழ்பக்கத்திலேயுள்ள வெண்மைமந்திரமலையிலே கடம்ப விருக்ஷமொன்று ஆயிர யோசனை தூரமுயரமுள்ளது. அம்மலையின் கீழே வருணோதக தீர்த்தமும் சயித்திராதவனமுமுள்ளன. தென்பக்கத்திலே கந்தமாதன மலைமேலே யாயிரயோசனை தூரமுயர்ந்த நாவல் விருக்ஷத்தின் பழச்சாறு சொர்ன நதியாகி மேருமலையைச் சுற்றிச் செல்லாநிற்கும். அம்மலையினடியிலே மானதசரசு தடாகமும் மானதவனமுமுள்ளன. மேல்பக்கத்திலே நீலமலையின் மேலே யாயிரயோசனை தூரமுயர்ந்த அரச விருக்ஷமும் அம்மலையினடியிலே சிதோதவாவியும் வயிப்பிராச நந்தவனமுமுள்

ளன. வடபக்கத்திலே சுபாரிசுவமலையின்மேலே யாயிர யோசனை தூர முயர்ந்த ஆலவிருக்ஷமும் அம்மலையினடியிலே பத்திரக தடாகமுங் குளிர்ந்த திருதியென்னுஞ் சோலையுமுள்ளன. இந்த இளாவிரத கண்டத்திலேயிருப்பவருக்கு ஆயுள்நாள் பதின்மூவாயிரம் வருடங்களாம். அவர் நிறம் பொன்னிறம். அவருணவு நாவற்பழச்சாறு. இந்தச் சாறுகிய சாம்பூநதியோடுதலாலே யிந்த நடுத்தீவுக்கு நாவலந்தீவென்று பெயர் சொல்லுவர். மாலியவானுக்குக் கிழக்குங் கீழ்கடற்கு மேற்குமுள்ள பூமி பத்திராசுவ கண்டமெனப்படும். அதிலிருப்பவருக்காயுள் நாற்பதினாயிரம் வருடங்களாம். அவர் சந்திரோதயம் போன்ற நிறமுள்ளவர். அவருணவு நீலோற்பலமலராம். கந்தமாதனத்தின் மேற்கும் மேல்கடற்குக் கிழக்குமுள்ள பூமி கேதுமாலகண்டமெனப்படும். அதிலிருப்பவர் வாழ்நாள் பதினாயிர வருடம். அவர் நீலோற்பல நிறமுள்ளவர். பலாக்கனியே அவருணவாகும். நீலமலைக்கு வடக்கும் சுவேதகிரிக்குத் தெற்குமுள்ள பூமி இரமியகண்டமெனப்படும். அதிலிருப்பவர் வாழ்நாள் பன்னீராயிர வருடங்கள் அவர் நீலோற்பல நிறமுள்ளவர் ஆலம்பழம் புசிப்பவர். சுவேத வரைக்கு வடக்குஞ் சிருங்கவரைக்குத் தெற்குமுள்ள பூமி இரணியகண்டமெனப்படும். அதிலிருப்பவர்க்கு ஆயுள்நாள் பன்னீராயிர வருடங்கள். அவர் சந்திரன் போன்ற நிறமுள்ளவர் எலுமிச்சம்பழச்சாறு புசிப்பவர். சிருங்கவரைக்கு வடக்கும் வடகடலுக்குத் தெற்குமுள்ள பூமி குருகண்ட மெனப்படும். அதிலிருப்பவர் வாழ்நாள் மூவாயிர வருடங்களாம். அவர் பச்சை நிறமுள்ளவர் பிரியமான கனிகள் புசிப்பவர்.

மேருமலைக்குத் தென்பக்கத்திலே நிடதகிரிக்குத் தெற்கும் ஏமகூட மலைக்கு வடக்குமுள்ள பூமி அரிகண்டமென்னப்படும். அதிலிருப்பவர் வாழ்நாள் பன்னீராயிரம் வருடங்களாம். அவர் நிறம் வெண்மை. உணவு கருப்பஞ்சாறு. அவர்க்கெப்போதும் பருவங்களின் வேற்றுமையில்லை. ஏமகூடமலைக்கும் இமயமலைக்கு மிடையிலுள்ள பூமி கிம்புருட கண்டமெனப்படும்; அதிலுள்ளவர்கள் வாழ்நாள் பதினாயிரம் வருடங்கள். அவர் பொன்னிறமுள்ளவர் அத்திப்பழம் புசிப்பவர். இந்த எட்டுக்கண்டத்திலுமிருப்பவர்க்கு நரைதிரை மூப்புகள் இல்லை. நான்கு யுகத்திலும் அவர்களுக்கு அறிவும் பலமுங் குறையமாட்டா. இமயமலைக்குத் தெற்குந் தென்கடலுக்கு வடக்குமுள்ள பூமி பாரத கண்டமெனப்படும். அதிலுள்ளவருக்கு உணவு அன்னமாதிகள். அவர் வாழ்நாள் நூறுவருடங்கள். புண்ணிய பாவ பலன்களையனுபவிப்பவர். இந்தப்பூமியே சம்புத்தீவு. இத்தீவும் இதைச்சூழ்ந்த உப்புச்சமுத்திரமுந் தனித்தனி லக்ஷயோசனை தூரமுள்ளது. இந்தச் சமுத்திரத்தைச் சூழ்ந்த சாகத்தீவும் அதைச்சூழ்ந்த பாற்சமுத்திரமும்

தனித்தனி யிரண்டிலக்ஷ யோசனை தூரமுள்ளது. அதைச்சூழ்ந்த குசைத்தீவும் அத்தீவைச்சூழ்ந்த தயிர்க்கடலுந்தனித்தனி நாலிலக்ஷயோசனை தூரமுள்ளது. அதைச்சூழ்ந்த கிரவுஞ்சத் தீவும் அத்தீவைச்சூழ்ந்த நெய்க்கடலுந் தனித்தனி யெட்டிலக்ஷ யோசனை தூரமுள்ளது. அதைச்சூழ்ந்த இலவத்தீவும் அத்தீவைச்சூழ்ந்த கருப்பஞ்சாற்றுக்கடலுந் தனித்தனி பதினறுலக்ஷ யோசனை தூரமுள்ளது. அதைச சூழ்ந்த கோமேதத் தீவும் அத்தீவைச்சூழ்ந்த தேன் கடலுந் தனித்தனி முப்பத்திரண்டிலக்ஷ யோசனை தூரமுள்ளது. அதைச்சூழ்ந்த புட்கரத் தீவும் அத்தீவைசசூழ்ந்த நல்ல தண்ணீர்க் கடலுந் தனித்தனி அறுபத்து நான்கிலக்ஷ யோசனை தூரமுள்ளது. அக்கடலுக்கு அப்புறமுள்ள பொன்னுலகம் பத்துக்கோடியேயைம்பதினுயிரம் யோசனை தூரமுள்ளது. அவ்வுலகத்தைச சூழ்ந்த சக்கரவாளமலை பதினுயிரம் யோசனை தூரமுள்ள இடத்தையுடையது. அம்மலைக்குவெளிப் புறத்திலேயுள்ள நிலமாகிய வெற்றிடம் முப்பத்தைந்துகோடியே பதினெட்டு லக்ஷத்து நாற்பதினுயிரம் யோசனை தூரமுள்ளது. அவ்விடத்தைச்சூழ்ந்த பெரும்புறக்கடல் ஒருகோடியே யிருபத்தேழுலக்ஷ யோசனைதூரமுள்ளது. அதற்கப்புறமிருக்கிற அண்டச்சுவர் ஒருகோடி யோசனை தூரங்கனமுள்ளது. இவ்வளவைகளெல்லாங் கணக்குச்சேர்க்கில் ஐம்பதுகோடி யோசனைதூரமாகும். மேருவின் வடபக்கமும் அவ்வளவினையுடையதாகும். மேருவுக்குக் கீழ்பக்கமு மேல்பக்கமும் தனித்தனி ஐம்பதுகோடி யோசனை தூரமளவுள்ளது. மேற்கூறிய தீவினுள்ளே நடுத்தீவாகிய நாவலந்தீவிலேயிருந்து அரசுபுரிந்த சூரியகுலத்து ஆக்கினேத்திரனென்னுமரசனுக்கு ஒன்பது புத்திரர்களிருந்தனர். அவ்வொன்பதின்மருக்கும் அரசன் ஒன்பது தீவுகளையுந் தனித்தனி ஒவ்வொன்றாகக் கொடுத்துக்காக்கும்படிசெய்தான். அவ்வொன்பதின்மர் பெயர்களே அத்தீவுகளுக்குக் காரணப்பெயர்களாயின. தென்பக்கத்திலே பாரத கண்டத்தைப் பரதனென்பவன் ஆண்டுவருங்காலத்திலே அவனுக்கு இந்திரன், கசேரு, தாம்பிரவருணன், கபத்திமாநாகன், சந்திரன், கந்திருவன், வருணன் என்று சொல்லப்பட்ட எட்டுப்புத்திரர்களும் குமரி யென்ற ஒரு புத்திரியும் பிறந்தனர். இவ்வொன்பது பிள்ளைகளுக்கும் பரதனுகிய அரசன் பாரத கண்டத்தையொன்பது பாகமாக்கித் தனித்தனி கொடுத்து ஆண்டு வரும்படி செய்தனன். அவைகளுள்ளே தென்பாகத்தைக் குமரி யென்பவள் ஆண்டு வந்தனள். ஆதலால் அத்தலத்துக்குக் குமரி யென்னும் பெயர் வந்தது. அத்தலத்திலே விஷ்ணுமூர்த்தி தங்கையாகிய கன்னிநாயகி தவஞ்செய்திருந்தனளென்ருலதன் பெருமையை யாவர் சொல்ல வல்லவர்.

ஆறுவது

# சேதுமூலத்தலவரலாற்றுச்சருக்கம்.

அடலுடை யிராம னென்பா னூழிசூ ழிலங்கைக் கேகக்
கடலிடைச் சேது வொன்று கட்டிடக் கருத்தி னுன்னி
மடலவிழ் மாலைச் செங்கை மாதவக் கன்னி வாழுந்
திடருறு குமரி யென்னுந் தென்கடற் கரைக்கண் வந்தான். (௧)

வந்திடு மயோத்தி மன்னன் வான்றிரை மறிந்து சிந்துஞ்
சிந்துவைத் தூர்த்துச் சேது கட்டியே செல்வா னெண்ணி
யந்தமா கடலிற் றீர்த்த மதன்கரை யுளதாந் தீர்த்தம்
புந்தியி லன்பாப் பத்தி பூண்டுசென் றாடி யப்பால். (௨)

தேவியை யன்பி னோடுஞ் சிறப்புறு பூசை செய்தான்
மேவுமப் பூசை கொண்டு விருப்புற மகிழ்ச்சி கூர்ந்தே
யோவிய மனைய கன்னி யுரைசெய்வா ளுனக்கு வேண்ட
லாவதிங் கெல்லாம் யானு மறிந்தனன் றருவ னென்றாள். (௩)

கருதிடுஞ் சேது வொன்று கட்டவுங் கட்டுஞ் சேது
வருமிடை யூறொன் றின்றி வழிக்கொண்டு செலவு மற்றப்
பொருவலி யிராவ ணாதி யரக்கரைப் பொருது கொல்வான்
பெருவலி பெறவுந் தந்தே னென்றவள் பின்னுஞ் சொல்வாள். (௪)

சேதுவின் கீழ்பா லாய தேவிபட் டணத்துக் கிப்பா
லோதிய மேல்பாற் சேது மூலமா யுள்ள தூய
வாதியாங் குமரி யென்னு மத்தலத் திருந்தி யானும்
பேதியா ததனைக் காத்தல் செய்குவன் பேணிப் பேணி. (௫)

எனுமொழி கன்னித் தேவி யியம்பிட விறைஞ்சி யேத்து
மனுமொழி யிராம னென்பான் வரமிவை வாங்கி யப்பாற்
றனுவலான் பாசி ராமத் தவமுனி முன்பூ சித்த
முனியெனுங் கரமைந் துள்ள மூர்த்தியை வணங்கிச் சொல்வான். ()

பெருக்குநீர்க் கடலுட் சேது பெலமுறக் கட்டச் செல்காற்
செருச்செய்வ லரக்கர் தம்மாற் சிதைந்திடை யூறு றாது
தருக்குறக் கட்டுஞ் சேது தன்னையே காவ லாக
விருக்கவும் வேண்டு மென்ன விசைத்தன னொருகோட் டண்ணல். ()

அவ்வரங் கொள்ளப் பெற்ற வடல்வலி யிராம னானுஞ்
செவ்விதிற் பூசித் துள்ள தேவிவாழ் குமரி தன்னைத்
திவ்விய சேது மூல மென்பது செப்பப் பெற்ற
தெவ்வமி லத்த லத்தின் பெருமையா ரியம்ப வல்லார். (௮)

அந்தநற் சேது தன்னை யன்பொடு தரிசித் தோர்க்கு
நிந்தைசெய் பிரம கத்தி முதலிய நீங்கு மென்றும்
வந்திபெண் பவட்கு நல்ல மைந்தரைக் கொடுக்கு மென்று
முந்திய மனுநூ லாதி தருமநூன் மொழியு மம்மா. (௯)

ஆங்குள விராம சேதுக் காதியாஞ் சேது மூல
மீங்கிது வென்னி லிந்தத் தலத்தினை யெடுத்து மிக்கா
யோங்குபுண் ணியத்த லந்தா னென்பதை யுரைப்ப தென்சீர்
தாங்கிய குமரி யெந்தத் தலத்தினுந் தலைமை யாமால். (௰)

சேதுமூலத்தலவரலாற்றுச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் (௱௯௯)

## சேதுமூலத்தலவரலாற்றுச் சருக்கச்சுருக்கவசனம்.

பலர்தங்கிய இராமர் சமுத்திரஞ் சூழ்ந்த இலங்கைப்பட்டணத்துக்குப் போதற்காகக் கடலினிடத்துச் சேதுவென்னும் அணைகட்டி அதன்வழியே செல்ல நினைத்து இதழ் விரிந்த பூமாலையைக் கையிலே யேந்திநிற்குந் துர்க்கையாகிய கன்னிநாயகி வாசஞ்செய்யுந் தென்சமுத்திரக் கரையின்கண் வந்து அச்சமுத்திரத்திலும் அதன் கரையிலுள்ள தீர்த்தங்களிலுந் தீர்த்தமாடித் துர்க்கா தேவியை யன்புடன் பூசித்தனர். அப்பூசையை யுவந்து தேவி இராமரை நோக்கிச் சேதுகட்டவும் அதன் வழிச்செல்லவும் இராவணன் முதலிய அரக்கரைக் கொல்லவும் பெரிய வலிதந்தேனென்று பின்னுஞ் சொல்லுவாள் சேதுவுக்குக் கீழ்த்திசையிலிருக்கிற தேவிபட்டணத்திலும் மேற்றிசையிலிருக்கிற சேதுமூலமாகிய குமரியென்னு மிந்தத்தலத்திலும் இருந்து சேதுவைக் காத்துக்கொள்வே னென்றருளிச்செய்தலும், அவ்வரங்களை யிராமர் வணக்கஞ்செய்து வாங்கி மீண்டு, பரசிராமராலே பூசிக்கப்பெற்ற விநாயகக்கடவுளைக் கும்பிட்டுச் சேது கட்டுதற்கு அரக்கர்களாலிடையூறெய்தாவிதம் இரக்ஷித்தருள்வேண்டுமென்று வரம்பெற்றுக் கொண்டு சென்றனர். இந்தக் காரணத்தாலே குமரித்தலம்: சேதுமூலத்தலமென்று சொல்லப்பெற்றது. இத்தகைய சேதுமூலத்தலத்தைத் தரிசித்தவருக்குப் பிரமகத்தி முதலிய தோஷங்கள் நீங்கும். மலடிக்கும் புத்திரப்பேறருளும் அந்தத் தலத்தைப் புண்ணியத்தலமென்று சொல்லவேண்டுமோ? எந்தத்தலத்தினுங் குமரித்தலமே யுயர்ந்ததாகும்.

## ஏழாவது
# குகனாண்டேசுரச்சருக்கம்.

அண்ணலங் கயிலை யீச னருளிய குகன்று னிந்த
மண்ணினிற் பெருமை சாலு மகிமைசேர் தலத்தை யெல்லா
மெண்ணியே குறித்துப் பார்த்திங் கெழிறிகழ் குமரி யென்னும்
புண்ணியத் தலம்போ லில்லை புனிதநற் றலந்தா னென்றே. (க)

ஆங்கதி லரனைப் பூசித் தருச்சனை புரிந்து ளோருக்
கோங்கதி பலந்தா னுண்டா மென்றவ னுளத்தி லெண்ணித்
தேங்கமழ் சோலை சூழுந் திருநகர்க் குமரி யென்னும்
பாங்குறு பெருமை மிக்க பதியத னிடத்தி னெய்தி. (உ)

மகனெனுங் குகன்று னந்த மகிமைசேர் குமரி யங்க
ணகமகிழ் தாதை யான வரன்றனைத் தாபித் தன்பாற்
றகைமைசே ருபசா ரங்க டம்மொடும் பூசை செய்து
குகன்றனை யாண்ட வீச னெனும்பெயர் கூறிப் பின்னர். (ங)

தொலைவிலா வாயுள் பெற்ற சூரனே முதலா வுள்ள
வலிமைசே ரசுரர் தம்மை மாய்த்திட வடிவே லொன்று
பொலிவுறத் தந்தாய் போற்றி புண்ணியா போற்றி யானு
மெலிவுறு வண்ண முன்பால் வேண்டிய தருள்வாய் போற்றி. (ச)

இன்னன பன்னி யேத்த வின்புறு சேயை நோக்கி
முன்னவ னான வீசன் முகமலர்ந் தருளி னோடு
மென்னுழை வேண்டல் செய்வ தென்னென விறைஞ்சி நின்றிங்
குன்னரு டனையெப் போது முடையனா *யிருப்பான் வேண்டும்.

பூசித்தோர் தெரிசித் தோர்கள் புகழ்ந்தனைப் போற்றி செய்து
நேசித்தோர் பாவம் போக்கி நினைத்தவை கொடுத்து நீயு
மாசற்ற குமரி யென்னு மணிநகர் தனிலெப் போது
மாசற்றே யிருத்தல் வேண்டு மெனவவன் மகிழ்வுற் றீந்தான். (ரு)

மன்னிய வரமும் வாங்கி மலரடி வணங்கி யப்பான்
முன்னிய குமரித் தீர்த்த முழுவது முறையி லாடிக்

* இருப்பான்-இருத்தல், பானிங்கே தொழிலை யுணர்த்தி நின்றது.

கன்னிநா யகிமென் பாத கமலங்கள் பணிந்து செங்கை
சென்னிமேற் கூப்பி நின்று தேவியை யேத்தி னானல் (எ)

தொழுதுநின் றேத்துஞ் சேயைத் துணைக்கயல் விழியா ளேகி
யெழுதிடா மறையி னாலு மினியவா கமத்தி னாலும
வழுவிலாப புராணத் தாலு மதித்திடா மகிமை யெய்தப்
பழுதிலா துனக்குத் தந்தே னென்றனள் பரிவு கூர. (அ)

தயவுடைக் கன்னி தன்னாற் சகலசித் திகளும் பெற்ற
புயவலிக் குகனும் போற்றும் பொருவில்சீர்க் குமரி யென்ன
நயனுடைச் சூத னென்பா னைமிசா ரணியத் துள்ள
வியனெறி முனிவர்க் கன்புற் றியம்பின னின்ப மெய்த. (கூ)

குகனண்டேசுரச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (௨௱௫)

## குகனண்டேசுரச்சருக்கச் சுருக்கவசனம்.

உலகத்திலே பெருமை மிக்க தலங்களை யெல்லாங் குமாரக்கடவுள் ஆலோசித்துக் குமரித்தலத்தைப் போலும் பரிசுத்தமுள்ள தலமில்லை யென்று திருவுளங்கொண்டு அந்தத்தலத்திலே சிவபிரானைப்பூசித்தவருக்கு அதிக பலனுண்டாகுமென்று அங்கே வந்து சிவலிங்கந்தாபித்து அருச்சனை யாதிகள் செய்து குகனண்டேசுரனென்னுந் திருநாமங்கூறிப் பற்பலவித மாகத் தோத்திரஞ்செய்து சுவாமீ! யும்முடைய திருவருளுடையேனாக நானிருக்கவேண்டும. உம்மைப் பூசித்தவர் தரிசித்தவர் புகழ்ந்தவர் விசுவா சித்தவருடைய பாவங்களைப் போக்கி நினைத்த வரங்களெல்லா மருளிச் செய்து நீருமித்தத் தலத்திலே யெழுந்தருளி யிருத்தல் வேண்டுமென்று வரங்கள் பெறறு, மீட்டும் வணங்கி அங்குள்ள தீர்த்தங்களி லெல்லாம் ஸ்நானஞ்செய்து வந்து கன்னிநாயகியைத் தொழுது துதிசெய்து நின்றனர். கன்னிநாயகி கடைக்கண்பார்த்து வேதாகம புராணங்களால் மதித்திடப் படாத மான்மியமெல்லா முனக்குத் தந்தேனென் றருள்புரிந்தனள். இத் தன்மையாகிக் குமாரக்கடவுளும் வணங்கத்தக்கது குமரித்தலமென்று சூதரிஷி நைமிசாரணிய வாசிகளாகிய சௌனகாதி முனிவர்களுக்குமகிழ்ச் சியுண்டாகச் சொல்லியருளினர்.

## எட்டாவது

# இந்திரன்றவம்புரி சருக்கம்.

தண்ணிழற் கவிகை மன்னன் றவமுனி வரனை நோக்கி
மண்ணினிற் பெருமை மிக்க குமரியின் வரலா றென்னு
முண்ணிறை யமுத முற்ற வுண்டனன் செவிவா யாக
வெண்ணருந் தவத்தோ யொன்றிங் கின்னுநீ யியம்ப வேண்டும்.(க)

ஐந்தரு நிழலில் வைகி யரசுசெய் யமரர் வேந்த
னிந்தவண் பதியின் வைகி யிருந்தருந் தவங்கள் செய்வான்
வந்தகா ரணமு மன்னோன் மாதவக் கோத மன்றான்
சிந்தையால் வெகுண்ட சாபஞ் சேர்ந்ததுஞ் செப்பு கென்றான்.(உ)

பகலவன் மரபிற் றோன்றிப் பகையிரு ளொடுக்கி யெங்கு
மிகலறத் தறத்தை நாட்டி யிருநிலம் புரக்கு மன்னா
புகலருந் தவத்தைப் பூணுப் பூண்டகோ தமன்றன் பன்னி
யகலிகை யவளால் வந்த தென்றுவிண் டனைத்துஞ் சொல்வான். ()

மந்தர கிரியை நாட்டி வாசுகி நாணுப் பூட்டிச்
சந்திர னைமை கிழ்மேற் றங்குபா தார மாக்கி
யிந்திர னயன்மால் விண்ணோ ரியாவரு மிருப்பா லாழி
சிந்துறக் கடைந்த வந்நாட் டிகழமு துடன்வந் தாளால். (ச)

வந்திடு மகலி கைப்பேர் மடக்கொடி வடிவு கண்ட
விந்திர னவளைக் கேட்ப வினையில்கோ தமன்றா னென்னு
மந்தமா முனியு மன்புற் றாங்கவ டன்னைக் கேட்பக்
கந்தமா மலரில் வைகுங் கடவுளோன் றுரைக்க லுற்றான். (ரு)

திருவின்மிக் கழகு செய்யுஞ் சேயிழை யவளை வேட்ட
விருவரு நீவிர் சென்றங் கிருங்கட லப்ப ணெய்தி
மருவிடு *மகாத மூழ்கி வைகுமந் நாளி லாற்றா
தொருவர்முன் வந்தோர்க் கன்னா ளுரியவ ளல்ல ளென்றான். (சு)

பொருவரும் வனப்பின் மிக்க பொற்கொடி பொருட்டா லந்த
விருவருங் கடலுண் மூழ்கி யிருக்குமந் நாளின் முன்னந்

---

* அகாதம்-பள்ளம்.

தருநிழ லரசு வைகுந் தலைவனுற் றுது போனன்
மருவருந் தவத்தோ னங்கு வைகின னெடிது காலம். (எ)

நாள்பல கழியு நாளி னற்றவக் கோத மன்றன்
றோளிணை யிரண்டின் மீதுந் தோன்றுய்வே யிரண்டுந் தொட்டு
நீள்சிலைச் சிலையாற் கொன்றும் நெடுஞ்சிலைக் குடையாற் பொன்றுங்
கோளிகல் செயவில் லாக்கிக் கொடுத்தனன் றேவ தச்சன். (அ)

அத்தரு வாங்குங் காலை யாழிவிட் டெழுந்து தூய
மெய்த்தவ முனியும் போந்து விரும்பக லிகையைச் சேர்ந்தங்
குத்தம முறவி ருந்தா னெண்டொடி கொடுத்த மாலாற்
பித்துறு மனத்த னுனன் பெருமைசான் *மாலு மன்னே. (கூ)

ஆதவ னடைந்த பின்ன ராரிரு ளிரவு நள்ளிற்
காதல்கூ ருளத்து மாலுங் காக்கையி னுருவ மாகிக்
கோதினற் குணத்தின் மிக்க கோதம னென்னுந் தூய
மாதவ னிருந்த சூழல் வந்தவண் கரைந்து நின்றுன். (ய)

கருதிய காகம் பல்காற் கரைவது கேட்டு மிக்கோன்
வருதுயி லொழித்து மூழ்கு மாநதிக் கரைக்கட் சென்றுன்
பெரிதுள விரக மாலும் பெருந்தவன் பன்னி யோடு
மருவுமவ் வேலை வேலை யறிந்தம்மா தவனும் வந்தான். (யக)

வந்தமா தவனைக் கண்டு மயலுற வளரும் பன்னி
முந்துறு மானத் தாலே முகமலர் கூம்பிச் சாம்பிக்
கொந்தல ரவிழ்ந்த கோலக் குழற்றலை கவிழ்ந்தங் கஞ்சிச்
சிந்தையுண் ணடுக்க முற்றுத் தெளிவின்றித் திகைத்து நின்றுள். ()

நின்றவ டன்னை நோக்கி நீகருங் கல்லே யாக
வென்றனன் சாப மேற்று ளிதற்கொழி வியம்பு கென்றுள்
வென்றிவில் லிராமன் மென்கான் மிதிலையிற் செல்காற் றீண்டு
மன்றுநின் சாப நீங்கி யுகலிகை யாவை யென்றுன். (யஉ)

உடன்முனி முனிவைக் கண்டங் கொளித்திடு மரியைக் கண்ட
திடமுனி சென்றங் கெய்தித் தேவநா யகவுன் னுசை

---

* மால்-இந்திரன்.

யடைவுறு மியோனியொன்றுக் காயிர மியோனி யாயுண்
டடமிசை வருக வென்று சபித்தனன் றவப லத்தால். (௰௪)

உடம்பினில் யோனி யெங்கு முற்றவப் புன்மை நோக்கித்
தொடர்ந்தெழு நாணத் தாலே சுரருல காட்சி நீங்கித்
தடங்கொண்மா னதவா விக்குட் டாபரைத் தண்டு நாளத்
திடந்தரும் வெளியிற் புக்கி யிருந்தன னிமையோர் கோமான். (௰௫)

ஆயவ னங்கு வைக வயிராணி சுரரா சான்பா
ஞயகற் காணே னென்ன நன்மனத் தாசா னெண்ணித்
தீயவை விளைந்த வெல்லாஞ் சிந்தையிற் கண்டா னஞ்சேல்
போயவன் வருவ னென்றான் புலோமசை பொருந்திப் போனாள். ()

மனத்தில்வா சவனை நோக்கி வருகவென் றுசான் வல்லே
நினைக்கவாங் கவனும் போந்து நினைத்தவன் மலர்த்தாள் சூடித்
தனக்குவெஞ் சாபம் வந்த தன்மையைச் சாற்ற வாசா
னுனக்கிது தக்க தோவென் றுளங்கவன் றுரைக்க லுற்றான். (௰௭)

அசைவுறுப் பாதா ரத்தி னணிமுலை யழகை நோக்கி
நசையுறி லன்று டோயு நலம்பெற லரிதாற் றூலு
மிசையுறு பெருமை குன்றி யாவரு நகைக்க வெண்ணும்
வசையுறு மல்லா லப்பான் மறுமையு நலனெய் தானல். (௰௮)

அன்புகொ ளொருவன் பாரி யச்சமுற் றணையப் பெற்ற
வின்பமோ சிறிதி தற்கா மிம்மையி லிழுக்கு மெய்தி
வன்புறு மறலி யென்னும் வன்கணன் செய்யுந் தீய
துன்பமோ பெரிதாப் பெற்றுத் தொலைவிலா நரகத் தாழ்வான். ()

மறங்கெட வுலகஞ் சொல்லும் வசைகெட வருக்குந் தீமைத்
திறங்கெட வாழ்வர் நல்லோர் செயல்கெட வொருவ னில்லின்
புறங்கடை காத்து நிற்கும் புன்மைசேர் தன்மை யோர்க
ளறங்கெடத் தீமை செய்யு மவரினுந் தீயோ ராமால். (௨௰)

கலன்கழி மகளிர் தம்மைக் கலந்திடி லாயுள் குன்று
மலங்கக் கன்னியரைத் தோயின் மறுமையி னரகத் தாழ்வன்
விலங்குப்வே சையரைத் தோயின் மேன்மையும் பொருளும் போமா
லலந்தித் மொருவன் பாரி நாடிலிந் நான்கு நண்ணும். (௨௧)

தனத்தினைக் கல்வி தன்னைத் தவத்தினைத் தகைமை சான்ற
மனத்தினை யறிவை நட்பை மானத்தை வலிமை சேர்நல்
வினைத்தினை யெல்லாஞ் சுட்டுங் கெரிபடு சாப ராக்குங்
கனத்தெழு தனத்தார் காமக் கடுங்கன லென்ப தப்பா. (௨௨)

இந்நெறி யறிந்த நீதா னியனெறி யறியார் போலத்
துன்னெறி யதனை மேவித் தொழுநெறிக் கோத மன்ற
னன்னெறிப் பன்னி யின்ப நாடினை நாட லாலே
வெந்நெறிச் சாப மேற்றாய் விடுநெறி யெங்ங னென்றான். (௨௩)

ஆய்ந்தநல் லாசான் றேவர்க் கரசநன் முனிவன் கோபந்
தோய்ந்தவெஞ் சாபம் யாருந் துடைப்பரி துன்றன் மெய்யி
லேய்ந்திடு மியோனி யெல்லா மியாவர்க்குங் கண்ணுக் காண
வாய்ந்தநல் வரந்தந் தேனென் றுரைத்தனன் மகிழ்ச்சி கூர. (௨௪)

அன்னது சொலக்கேட் டோவை வந்தண னடியில் வீழ்ந்து
பின்னரு முள்ள குற்றம் பிரிவதற் கெங்ங னென்ன
*மன்னனுஞ் சொல்வான் மண்ணில் வளர் †ஞான வனமென் றோது
நன்னக ரிருக்குந் தாணு நாயக னிடத்தே கென்றான். (௨௫)

குரவன தருளைப் பெற்றுக் குளிர்மல ரனைய பொற்றாள்
சிரமிசைப் புனைந்து கொண்டு தேவநா யகனுந் தாணு
வரதனை நோக்கி ஞான வனத்தினில் வந்து சேர்ந்தான்
சுரர்தொழத் தருவி னீழ லிருந்தர சியற்றுந் தூயோன். (௨௬)

வேறு.

சேர்ந்த விந்திரன் ஞானதீர்த் தத்தடஞ் சென்று
சார்ந்தந் நீரினிற் படிந்தந்தத் தலத்தினி லுறையும்
வார்ந்த செஞ்சடைத் தாணுவை மனத்தினிற் பதித்தே
யார்ந்த வன்பொடு மிருந்தனன் றன்குறை யகற்ற. (௨௭)

உள்ள மன்றியு மற்றுள வுறுப்புநெக் குருகும்
வெள்ள மங்கதின் மூழ்கிய விந்திரன் விருப்பைக்
கள்ள நெஞ்சினர் காண்குறாத் தாணுவாங் கருணை
வள்ள றானறிந் தவன்முனம் வெளிப்பட வந்தான். (௨௮)

---

* மன்னன்-தேவகுரு. † ஞானவனம்-சிவசயிலம்.

தொழுத கையொடுஞ் சொரிந்தநீர் விழியொடுந் துலங்கும்
பழுதி லிந்திரன் றனையருட் கண்கொடு பார்த்து
வழுவி லாதமெய்ப் புண்ணியன் வாசவா வேண்டன்
மொழிகு வாயெனத் தொழுதுநின் றினையன மொழிவான். (௨௯)

ஆதி மாதவ னம்புயத் தவன்றொடர்ந் தறியாச்
சோதி நாயக நீயனேற் கெளிதினிற் றோன்றி
லேத மென்னிடத் திருக்குமோ வேண்டல்வே றென்னை
யோது கோதமன் சாபமென் பாலுள தொழிப்பாய். (௩௰)

என்னக் கூறிய விந்திரன் றனையிறை நோக்கி
யுன்னி டத்துள சாபம தொழித்திடற் குரியாள்
கன்னி யென்னுமோர் கௌரிதென் கடற்கரைக் குமரி
தன்னில் வாழ்கின்றா ளத்தலத் தேகெனச் சாற்றி. (௩௧)

அத்த லத்தினிற் கன்னியாம் பரையவ ளுறையு
ளுத்த ரத்தினி லரியநற் றீர்த்த மொன் றுளதச்
சுத்த நீரினிற் றினந்தினம் படிந்தருட் டூய
சத்தி யையருச் சனைசெய்து தவஞ்செயுங் காலை. (௩௨)

பத்தர் சொல்லிய கொடுத்திடும் பராபரைக் கன்னி
யுத்த மியவள் வெளியில்வந் துன்குறை யொழிப்ப
ளத்த கையருள் பெற்றுநீ யத்தல நீங்கி
யித்த லத்தினில் வருதியென் றரனிசைத் தேக. (௩௩)

தாணு நாயக னருளிச் சொற்றலைக் கொண்டு
வாணி லாவிய பொன்னகர்க் கரசனும் வானோர்
பேணு நாயகி தன்னருள் பெறுகுவான் வேண்டிப்
பூணு மன்பொடு குமரியந் தலத்தினிற் போந்தான். (௩௪)

வேறு.

பேர்ந்தமால் கரைக் கடற்கட் புனிதபாஞ் சுத்த நீரிற்
றோய்ந்தபின் னருள்சேர் கன்னி துணைப்பதம் வணங்கி யேத்தி
யாய்ந்தநன் மலர்கள் கொண்டங் கருச்சனை புரிந்த பின்னர்
வாய்ந்தமா தவந்தான் செய்வான் மனத்தினி லெண்ணி னானால். ()

அந்தரத் திமையோர் கோன்வந் தருந்தவ முயலுங் காலை
வந்திடு மிடையூ றின்றி மாதவ முற்ற வெண்ணி
யிந்திர காந்த னென்ன வியம்புநன் ஞமஞ் சேர்த்தி
யைந்துகைக் களிற்றைப் பூசித் தன்பொடாண் டிருக்க வைத்தான் ()

ஐயரி போலச் சாபத் தகப்பட லொழித்தற் காக
வையரி யவன்று னுள்ள மலைக்குமைம் புலன்க ளாய
வையரி கடிந்தே யண்டத் தளவுஞ்சென் றளாவும வெய்ய
வையரி நாப்பண் வைகி யருந்தவ மியற்றல் செய்தான். (௩௭)

அன்னமே முதல வாய வவிபுண்ணு தடைந்த *சாப
வன்னமே லனுகா வண்ண மருட்கன்னி நீக்கு மென்ன
வன்னமே லயனு நீல வலர்மலர்ப் பூவைப் பூவை
யன்னமே னியனு மாற்று வருந்தவ மாற்றி னுனல். (௩௮)

மாவனத் துறைந்து சீத மாரியிற் பனிக்கா லத்தின்
மாவனத் திருந்து வேனில் வருங்காவந் தளிர்க ளீன்ற
மாவன செந்தீ யைந்தின் மத்திம மிருந்துந் தீயின்
மாவன முறைபூப் போல வாடிமா தவங்கள் செய்தான். (௩௯)

வேறு.

விண்ணில் வேந்தனு மருந்தவம் பற்பல விதமா
வெண்ணுங் காற்பதி னுயிர மாண்டவ னியற்ற
வுண்ண யந்தவ னரியமா தவஞ்செய னுணர்ந்து
கண்ணி னுளவ னிடத்தினிற் கன்னிநா யகிதான். (௪௰)

மண்டு மையெரி நாப்பணின் வதிந்தவா சவனைக்
கண்டு நீயிவண் வருகவென் றழைத்தருட் கன்னி
விண்டு நீயுரை வேண்டுவ வெனவவன் விரைதோய்
முண்ட கச்சரண் பணிந்துநின் றினையன மொழிவான். (௪௧)

கோத மன்கொடுஞ் சாபமென் பானுறுங் குறைதா
னீத விர்த்திட வேண்டுமென் றுங்கவ னிற்பப்

*சாபவன்னம்-சாபஅல் நம்-சாபமாகிய இருள் நம்மு '' எனப்பொருள்
கொள்க.

போத முற்றவ ரிதயநற் போதினும் பொய்தீர்
வேத முற்றினு மிருப்பவன் விருப்பொடு விளம்பும். (௪௨)

வெம்ப கங்களோ ராயிரந் தானுமுன் மெய்யி
லம்ப கங்களா யுனக்குமே காண்குற வமைத்தேன்
பம்ப கம்மறப் பாவநா சத்தினிற் படிந்து
கம்ப கந்திகழ் கடலினீ ராடுதி கடனால். (௪௩)

ஆய தீர்த்தங்க ளனைத்தையுஞ் சென்றுநீ யாடிற்
றீய பாவங்கள் யாவையுந் தீர்ந்தொளி திகழத்
தூய னாகுவை யென்றன டொடர்ந்துகொ ளரவின்
வாயி னுண்டுமிழ் மதியினைப் போலொளி வயங்க. (௪௪)

அந்த நல்வர மருளிய கன்னிநா யகியவ்
விந்தி ரன்றொழு தேத்திட வமரரெல் லோருஞ்
சுந்த ரத்தரு நறுமலர் தூவியே துதிப்ப
வெந்தி ரப்பொறி யெயிலுடைக் கோயில்புக் கிருந்தாள். (௪௫)

வேறு.

அமரர்தங் கோனு மந்நா ளருளிய வழிக்கே சென்று
குமரிநற் றீர்த்த முற்றுங் குறித்தவ ணாடித் தேவி
கமலமென் மலர்ப்பொற் றாளைக் கருத்துற வணங்கி யேத்தி
விமலநன் மேனி பெற்றான் விடைகொடு போயி னானால். (௪௬)

இந்திரன் றவம்புரி சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் (௨௫௧)

## இந்திரன்றவம்புரிசருக்கச் சுருக்கவசனம்.

குளிர்ந்த நிழலைச்செய்யும் சந்திரவட்டக் குடையையுடைய காத்திய வீரிய அரசன் தெத்தாத்திரைய முனிவரை நோக்கிச் சுவாமீ! குமரித்தல வரலாறாகிய அமுதத்தைச் செவியாகிய வாயினாலேயுண்டு தெவிட்டாநின்றேன். இனித் தேவேந்திரன் குமரித்தலத்தில் வந்திருந்து தவஞ்செய்த காரணமும் அவன் கௌதம முனிவராற் சாபம்பெற்ற காரணமும் அருளிச்செய்யவேண்டுமென்று வினவலும் அம்முனிவர் கூறுவார்;—சூரியகுலத்திற்றோன்றி யுலகத்தை யிரக்ஷிக்கு மரசனே! [illegible]னிவர் மனைவி

யகலிகையாலே தான் இந்திரனுக்குத் தீங்கு நேர்ந்ததென்று தொகுத்துக் கூறி வருத்துச சொல்வார். மந்தர மலையை மத்தாக நிறுத்தி யிந்திரன் முதலிய தேவர்களெல்லாரும் பாற்சமுத்திரத்தைக் கடையும்போது, அதினின்றும் அமுதத்துடனே யகலிகை தோன்றினள். அவளுடைய அழகு முதலியவற்றைக்கண்டு இந்திரனும் கௌதமமுனிவருங் காதலித்து அவளைக் கேட்டனர். பிரமதேவர் அவ்விருவரையு நோக்கிச் சமுத்திரத்தின் மத்தியிலே யாழ்ந்த இடத்திலே நீரிருவருந் தவஞ்செய்திருக்கவேண்டும். யாரொருவர் முந்தியெழுந்து வந்தனரோ அவருக்கு இவளுரியவளாகாள். பிந்தி யெழுந்து வந்தவருக்கே யுரியவளாவாளென்று விதித்தனர். அது கேட்டு அவ்விருவரும் நடுக்கடலினுள்ளேபோய்த் தவஞ்செய்திருக்கும் போது இந்திரன் முந்தியெழுந்து வந்து அகலிகையை யிழந்துபோயினன். பின்னர் நெடுங்காலம் கௌதம ரங்கிருக்கும்போது அவர திரண்டு தோளிகலும் இரண்டு மூங்கில்கள் முளைத்து வளர்ந்தன, அவைகளைத் தேவதச்சன்கண்டு வெட்டி யிரண்டு வில்லாகச் சமைத்துச சிவபிரானுக்குந் திருமாலுக்குந் தனித்தனி யொவ்வொரு வில்லைக் கொடுத்தனன்.

அம்மூங்கில்களை வெட்டும் அதிர்ச்சியினாலே கௌதம ரெழுந்துவந்து அகலிகையை மணந்து தமதிருப்பிடஞ் சேர்ந்தனர். பின்னர் இந்திரன் அகலிகையின் காமத்தினாலே துன்பமுற்று ஒருநாள் நடுராத்திரியிலே காக்கை யுருவங்கொண்டு கௌதமமுனிவ ராச்சிரமத்தின் பக்கத்திலே வந்து கரைந்து நின்றான். அவ்வோசையைக்கேட்டு முனிவர் விடியற்காலமாயிற்றென்று ஸ்நானஞ் செய்தற்கு வெளியேறிச்சென்றனர். உடனே யிந்திரன் தன்னுருவங்கொண்டு உள்ளே போய் அகலிகையோடு காமநுகர்ச்சி செய்திருந்தனன். முனிவர் நெடுநேரமிருக்கிறதென்று தெரிந்து ஆசிரமத்துக்கு வந்து அங்கே நடந்த விஷயங்களைக்கண்டு கோபித்து அகலிகையை நீ கருங்கல்லாவாயெனச் சபித்தனர். அவளச் சாபத்தைப்பெற்று இதற்கு விமோசன மெப்போதென்று முனிவரை வணங்கிக்கேட்க, முனிவர் மனமிரங்கிச சீதையை விவாகஞ்செய்ய இராமன் வரும்போது அவன் பாதம் பட்டவுடனே யகலிகையாவா யென்றருளிச் செய்தனர். இவையெல்லாங் கண்டு ஒளித்தோடு மிந்திரனை முனிவர் நோக்கி ஒருயோனிக் காசைப்பட்டு வஞ்சித்தமையா லுன்னுடம்பு முழுதுமாயிரம் யோனியாகுகவென்று சபித்தனர். உடனே யிந்திரன் அவ்வாயிரம் யோனிகளையுந் தன் சரீரத்திற்கண்டு வெட்கமுற்றுப்போய் மானததடாகத்திலே யொரு தாமரைத் தண்டினுள்ளே யொளித்திருந்தனன். பின்ன ரிந்திராணி தன்னாயகனாகிய இந்திரனைக் காணாமல் தன் குருவாகிய வியாழ பகவானிடத்திலே வந்து சொல்ல அவர் நடந்தவையெல்லாந் தெரிந்து இந்திரனைத் தமது மனத்திலே நினைத்த

னும், இந்திர னெதிரே வந்து வணங்கித் தனக்குச சாபம்வந்த வரலாற்றைச சொல்லி நின்றனன். குரு அதுகேட்டுத் தேவேந்திரனே! நீ யிந்தக் கெட்டகாரியஞ் செய்யலாமாவென்று கவலையடைந்து சொல்லுவார். பரதாரத்தைச சேர்ந்தவன் பெருமைகெட இகழப்பட்டு இம்மை மறுமைப் பயனையுமிழந்து விடுவன். யமதண்டனைக்கு ளகப்பட்டு நரகத்திலு மழுந்துவன. வஞ்சகம், வசை, தீமை முதலியவைகளைச செய்யாமலே நல்லோர் வாழ்வர். பிறன் மனையாளை யிச்சிக்குந் தீயவர் தருமத்தையழிக்கும் பாதகரினுங் கொடியவராவர். விதவையைச சேர்ந்தவருக்கு ஆயுள் குறையும். கன்னிப் பெண்களைச சேர்ந்தவர் மறுமையிலே நரகத்திலழுந்துவர். மிருகப் புணர்ச்சி செய்தவருக்கு மேன்மை கெட்டுப்போகும். வேசையரைத் தோய்ந்தவருக்குப் பொருள் போய்விடும். பிறன் மனையாளைக் கலந்தவருக்கு இந்நான்கு மொருங்கே கைவசமாகும். பொருள், கல்வி, தவம், மனம், அறிவு, சிநேகம், மானம், வலிமை, நல்லினம் இவையனைத்தையுங் கெடுத்துவிடுவ காமாக்கினியின் குணத்தையறிந்த நீ யொன்றுந் தெரியாதவன் போலக் கௌதம முனிவர் சாபத்துககாளாகினை யிது தீர்வதெவ்விதம் அம்முனிவர் சாபத்தை மாற்றுதலரிது. ஆயினும் உன்னுடைய தேகத்திலே தோன்றும் யோனிகளெல்லாம் பிறருடைய கண்களுக்குக் கண்களாகக் காணும்படி வரந்தந்தேனென்றருளிச செய்தனர்.

அதுகேட்டு இந்திரனொருவாறு மகிழ்ச்சியடைந்து திரும்பவும் தனதாசிரியரை வழிபாடுசெய்து முழுவது மிச்சாபநோயொழியு மிடமெதுவென்று வருந்திக்கேட்டனன். ஆசாரியர் கருணைகூர்ந்து சொல்லுவார். பூலோகத்திலே ஞானவன க்ஷேத்திரம் (சிவசயிலம்) இருக்கிறது. அங்கே யெழுந்தருளியிருக்கும் தாணு நாயகரிடத்திலே போவாய் என்று கட்டளையிட்டனர். அக்கட்டளையுடன் குரு வருளையும்பெற்று அவர் திருவடியைத் தலையிலே தாங்கிசசென்று ஞானவனத்தையடைந்து, அங்குள்ள ஞானதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து நீண்ட சடையினையுடைய தாணுமூர்த்தியைத் தியானித்து நெஞ்சநெக் குருகியிருந்தனன். அவனுடைய அன்புக்கிரங்கித் தாணுநாயகர் பிரசன்னராகி யிந்திரனே! யுனக்குவேண்டிய வரங்கேளென்றருளிசசெய்தனர். இந்திரன் கண்களிகூரத்தரிசித்துநின்று பிரம விஷ்ணுக்களாலறியப்படாத எம்பெருமானே! யடியேனுக்கு இலேசாக நீர் தரிசனங்கட்டளையிட்டபின்ன ரடியேனிடத்தி லினிக்குற்றமிருக்குமோ? கௌதம முனிவரிட்ட சாபத்தை யொழித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். தாணுநாயகர் இந்திரனே! நீ தென்சமுத்திரக்கரையிலிருக்கிற குமரித்தலத்திலேபோய் அத்தலத்தின் வடபக்கத்திலேயுள்ள தீர்த்தத்திலேஸ்நானஞ்செய்து அங்கிருக்கிற கன்னிநாயகியென்னுந் தெய்வத்தைத் தினந்தோறும் அருச்சனைசெய்து

தவஞ்செய்வாயாகில் அக் கன்னிநாயகி யுன்னுடைய குறையை யொழித்த ருளுவளென்று விடை கொடுத்தனர். அவரது ஆஞ்ஞையைத் தலைமேலே தாங்கிச்சென்று குமரித்தலத்தைச் சேர்ந்து தீர்த்தமாடிக் கன்னிநாயகியைப் பலமலர்களா லருச்சனைசெய்து தவம்பண்ண முயன்று தவமிடையூறின்றி முடிதற்காக இந்திரகாந்தனென்னும் விநாயகரைப் பதிட்டைசெய்து பூசித் துப் பஞ்சாக்கினி மத்தியிலே தவம்புரிந்து கொண்டிருந்தனன்.

இங்ஙனம் பதினாயிரம் வருடம் அன்னபானீய முதலிய வொன்றுமருந் தாமல் மாரிக்காலத்திலும் பனிக்காலத்திலும் வேனிற்காலத்திலும் வருந் தித் தவஞ்செய்யு மிந்திரன் பத்தித் தன்மைக்கிரங்கிக் கன்னிநாயகி வெளி வந்து தரிசனந்தந்து தேவேந்திரனே! யுனக்குவேண்டிய வரங்கேளென்று திருவாய்மலர்ந்தனள். அவளிரண்டு பாதாரவிந்தங்களையும் பணிந்து இந்தி ரன் தாயே கௌதமமுனிவர் சாபநீங்கும்படி திருவருள் புரியவேண்டுமெ ன்று பிரார்த்தித்தனன். ஞானிகளிருதயத்தினும் வேதங்களிலுமிருப்பவ ளாகிய கன்னிநாயகி யிந்திரனே! உன் தேகத்திலே யிருக்கப்பட்ட குறிக ளெல்லாம் உன் கண்களுக்குங் கண்களாகத் தோன்றும்படி வரங்கொடுத் தேன்; இனிச்சென்று பாவநாசத் தீர்த்தத்திலே படிந்துமீண்டு சமுத்திர ஸ்நானஞ்செய்வாய் உனக்கு எல்லாப்பாவமும் நீங்கும். பரிசுத்தனுகுவாயெ யென்றருளிச்செய்து தனது ஆலயத்திலே தேவர்கள் புட்பமாரி பொழியச் சென்று வீற்றிருந்தனள். தேவேந்திரன் கன்னிநாயகி கட்டளைப்படி நடந் து அவளை வணங்கிப் பாவத்தைநீங்கிச சுத்தனுகித் தன திருப்பிடத்துக்குச் சென்றான்.

---

## ஒன்பதாவது
# அகத்தியேசுரச் சருக்கம்.

எமையினி தாளு மீச னிருந்தவக் கயிலை நீங்கி
யமையுறும் யோகர் சித்த ரமரர்மா முனிவ ரோடு
மிமையமால் வரைக்க ணெய்தி யிருந்தவக் கன்னி யாய
வுமையவ டன்னை யன்புற் றுயர்மணஞ் செய்வான் செல்கால். (க)

மாவள மலிந்த வந்த வடதிசை தாழ்ந்து தென்பான்
மேவிய திசைதா னேமேன் மேலுயர்ந் தெழுதல் கண்டு
தேவநா யகனுங் கும்பத் தெழுமுனி வனைத்தான் தென்பா
லாவதிற் செல்வா யென்றா னப்படி சமனுய் நிற்க. (உ)

அருளுமவ் வுரைதான் கேட்ட வகத்திய னடியே னுன்றன்
றிருமணக் கோலங் காண்பான் சிந்தனை யுள்ளே னென்னப்
பொருவரு மணக்கோ லந்தான் பொதியமால் வரைக்கண் வந்து
கருதிய வண்ண நீயுங் காண்குறத் தருவ னென்றான். (௩)

முன்னவா சகந்தான் கேட்ட வகத்திய முனியு மீசன்
றன்னடி வணங்கித் தென்பால் சமம்பெறப் பொதியம் வைகி
முன்னவன் வரல்கா ணுமன் முனிவனு முதல்வி யாய
கன்னிநா யகிதான் வாழுங் கடிநக ரதன்கண் வந்தான். (௪)

தன்றுணை யில்லாத் தெய்வ சக்கர தீர்த்த மாடிச்
சென்றருட் குகநா தன்பொற் சேவடி வணங்கிப் பின்ன
ரன்றுசென் றங்கை யுள்ளே யாழியை யடக்கி யுண்டோன்
றுன்றுதிண் கரைக்கண் வந்து தொடுகட லதனைக் கண்டான். (௫)

கண்டவன் றன்னைக் கண்டு கலங்கியே யலைகொள் வேலை
தெண்டிரைக் கரத்தான் முத்துஞ் செந்துவர்க் குவையுஞ் சேர்த்தல்
பண்டெமை யுண்டோ னென்று பயமிக வுடைய தாகித்
தண்டுறை தன்னில் வைத்தத் தவனடி பணிதல் போலும். (௬)

அக்கட லுள்ள தீர்த்த மனைத்துஞ்சென் றாடித் தூயோன்
றிக்கடல் கொண்ட வாணன் சிரந்தரை தன்னில் வீழ
மிக்கடல் செய்த தேவி மெல்லடி வணங்கி யேத்த
மைக்கடல் போலுங் கண்ணாண் மகிழ்ந்தென்கொல் வேண்டுமென்றாள். (௭)

ஒன்றுநீ தருதல் வேண்டு முத்தர திக்குக் கிந்தத்
தென்றிசை சமமாய் நிற்கத் திருவுளத் தமைப்*பான் வேண்டு
மென்றன னதற்கங் குள்ள மியைந்திட வணங்கி யன்னாள்
பொன்றிகழ் வெள்ளி வெற்பிற் போயிவண் வருவ லென்ன. (௮)

உரைத்துட னெழுந்து விண்சென் றோங்கிய சிகர முற்ற
வரைக்கெலா மகிமை பெற்ற வரையெனுங் கயிலை யின்கட்
டரைக்குண்மா தவரின் மிக்கோன் றரணியை வளைந்து சுற்றி
யிரைத்ததிர் வேலை யுண்ட விருந்தவன் வருமவ் வெல்லை. (௯)

---

* பான் தொழிற்பெயர் விகுதி.

ஆரண நெடுமா லாதி யமரர்தங் கணங்க ளோடு
நாரதன் முதலா வுள்ள நன்முனிக் கணங்க ளோடும்
பாரிடக் கணங்க ளோடும் பசாசுவெங் கணங்கள் கீதச்
சீருறு வீணை வல்லோர் சிறந்தவிஞ் சையர் கணங்கள். (௧௦)

அனந்தனே முதலா வுள்ள வட்டமா நாக மற்றை
யினந்தரு திக்கு பால ரெண்மரோ டெழுமா தாக்கண்
மனந்தரு மன்பின் மிக்க மாநந்தி கணங்க ளோடு
சினந்தவிர் தவத்துப் பாம்புஞ் செய்தவப் புலியுஞ் சூழ. (௧௧)

செந்தழன் மீது பொங்கித் திகழும்வெண் பொடிபோற் றேசார்
சுந்தர மேனி மீது துலங்குவெண் ணீறு தோன்றக்
கந்தரக் கறையு மின்னக் கண்களோர் மூன்றுங் காட்டிச்
சந்திர மௌலி யோங்கத் தயங்குடை புலித்தோல் சாத்தி. (௧௨)

அரியயன் மறைக ளாலே யரியவாழ்த் தெடுத்தங் கேத்தப்
பரிவுட னிமவான் பெற்ற பாவையாந் தேவி யோடும்
விரிகதிர்ப் பீட மீதில் வீற்றிருந் தவனை வந்து
புரியுமா தவத்தின் மிக்க பொதியமா முனிவன் கண்டான். (௰௩)

கண்டடி பணிந்து ளோனைக் கையினா லெடுத்தே யன்பு
கொண்டுள மகிழ்ச்சி கூர்ந்து குறுநகை யுற்றே யின்பா
யண்டரு மதிச யிப்ப வாங்கவ ணிருப்பு நல்கி
வண்டமிழ் விரித்தோ யீங்கு வந்ததென் னுரைத்தி யென்றான். (௰௪)

ஆரியை யென்னுங் கன்னி யருண்முகக் கமலத் துக்கோர்
சூரிய னென்னத் தோன்றுந் தோன்றலே யெவர்க்குந் தோன்றாச்
சீரியாய் பத்த ராஞோர் சிந்தித்த வெல்லா நல்கும்
பேரியல் புடையா யான்செய் பிழைபொறுத் தருள்பெம் மானே. ()

திருவுள மின்ன தென்று தெரிகிலன் றவஞ்செய் வாளாய்
மருமலர் மாலை கையில் வைத்துள கனனி யெனனு
மொருபரா சத்தி தன்னை யுன்றிருக் கண்ணு ளேக்க
வருள்புரிந் தென்னோ டத்தா வாங்கெய்த வேண்டு மென்ன. (௰௬)

ஆங்கதற் கிசைந்து கூறு மரன்றிருக் கரத்தைத் தன்கை
தாங்குறத் தெற்கு நோக்கித் தமிழ்மல யத்தி னண்ணு
வோங்கிய மணக்கோ லந்தா னுவந்தரன் காட்டக் கண்டோன்
பாங்குடன் பூசை செய்யப் பணித்திநீ யென்ன நேர்ந்தான். (௰௭)

பூசனை செய்வான் வேண்டிப் புனிதநன் னீரின் மூழ்கி
வாசனை கமழ்போ தாதி யெடுத்துமஞ் சனமுங் கொண்டே
யீசனை நோக்கி யந்த விருந்தவன் மிகுந்த புத்தி
நேசனை வோடும் வந்தா னின்மலன் றன்னைக் காணான். (௰௮)

குறைவிலா நேயம் வைத்த குறுமுனி பத்தி காண்பான்
கறையொளிர் கண்டத் தண்ணல் கான்கிலா வணண மப்பான்
மறைவுறமுனிவ னுள்ள மயங்கியுன் மத்தர் போல
நிறையருட் பரனை நேடி நினைந்துமின் றிரங்க லுற்றான். (௰௯)

சங்கரர சம்பு வேநற் றயாபரா சடையின் மீதே
பொங்கரா வோடு திங்கள் புனைந்தபுண் ணியனே மங்கை
பங்கையா பங்க யப்பொற் பதத்தருச் சனைநீ கொள்ளா
தெங்கையா வெங்கை யாமற் றெழுந்தரு ளிடந்தா.னென்றான். (௨௰)

பொங்குபல் லண்டம் யாவும் பொருந்திய வுயிரின் கண்ணே
தங்கிய நலனுந் தீங்குந் தானறிந் தளிப்போ யானுன்
பங்கய மலர்த்தாண் பீதிற் பணிசெயர்ச் சனைகொ ளாதே
யெங்கையா வெங்கை யாநீ யேகிட மறிந்தி லேனே. (௨௧)

செங்கண னெண்க ணனை யிரங்கணன் முதலாந் தேவர்
தங்க ணாயக புரத்தார் தங்கண ரழலை மூட்டு
மங்கண வடியேன் செய்யு மருச்சனைக் கன்பு றாதே
யெங்கண மறைந்தா யென்றென் றிரங்கினன் பலவும் பன்னி. (௨௨)

விண்ணிலோ கயிலை வெற்பின் மீதிலோ கன்னி வாழு
மண்ணிலோ வன்பர் தங்கண் மனத்திலோ மறைந்துற் றாய்நீ
பண்ணலே யரசே யின்ப வமுதமே யடிமை யேன்றன்
கண்ணிலே காணும் வண்ணங் கருணைசெய் யென்று நின்றான். (௨௩)

கன்னியென் றுரைக்குஞ் சீர்மைக் கருணையா டலமுற் றுனென்
றுன்னியே யவன்றன் பூசைக் குரியன யாவுங் கொண்டு
பன்னிய தவத்தின் மிக்கான் பரமனை நினைந்து ளன்பாச்
சென்னிமேற் குவித்த கையான் றென்கடற் குமரி சேர்ந்தான். ௨௪

சேர்ந்தமா முனிவ னங்குத் தேவிவாழ் தலத்தின் மேல்பாற்
சார்ந்திடுங் குரோசத் தெல்லை தன்னின்மா தவத்த ரோடும்
போந்தகத் தியனும் வேதம் புகல்விதி முறைவ மூம
லாய்ந்தொரு சிவலிங் கத்தை யதிற்பிர திட்டை செய்து. (௨௫)

நற்றவன் பூசை செய்வா னயந்ததற் குத்த ரத்தோர்
பொற்றையி னடியிற் றண்டாற் குற்றவே பொருந்த நன்னீர்
வற்றிடா தெழும்பா தால வாகினி தன்னின் மூழ்கி
யுற்றமஞ் சனமு மேகொண் டுவப்பொடு மொல்லை யெய்தி. (௨௬)

மருக்கிளர் மஞ்ச ளாதி வகுத்தநல் லபிடே கஞ்செய்
தருக்கிய முதலா வுள்ள வணிதிக முபசா ரங்கள்
பெருக்கவே யியற்றிப் பூசை பெருந்தவஞ் சிலநாட் செய்தங்
கிருக்குமா முனிவன் காண விறையவன் வெளிக்கொண் டானல். ()

கண்டவன் காணு முன்னங் கரையறு களிப்பு ளத்தே
கொண்டனன் குவித லில்லாக் கோகன கப்பூப் போலு
மண்டர்நா யகன் றன் மீதி லடிக்கடி வணங்கி நின்று
மண்டுபே ருவகை யோடு மாதவன் வழுத்து கின்றான். (௨௮)

ஆக்கிநீ யளித்த மிக்கு மாவிலா வண்ட மெல்லா
நீக்கமில் லாதே யெங்கு நிறைந்தரு ணின்ம லாசொல்
வாக்கொடு மனத்துக் கெட்டா வளர்பெருஞ் சுடரே யுன்ற
னோக்கருள் பெற்றோர்க் கல்லாற் றோன்றிடா நோன்மை யானே. ()

அலகில்பல் லுயிர்கட் கெல்லா மறிவிக்கு மறிவாய் நிற்கு
நிலைமையா யன்பர் தங்க ணெஞ்சிரு ணீக்கு கின்ற
குலமணி விளக்கே யெல்லாப் பொருள் களுங் குறிக்கி னீயென்
றிலகுமா மறைகள் சொல்லி லென்சொலி யேத்து கேனே. (௩௰)

நேயமோ டினைய பன்னி நினைத்துள முருகி நின்றங்
கேயுமா தவனை நோக்கி யெனக்குநின் பூசை தன்னு
லாயபே ருவகை பொங்க வாக்கினை மறைந்த வென்னு
னீயுநீ டியரிங் குற்றாய் நினக்குவேண் டுவசொல் கென்றான். (நுக)

உருத்திர னருளிச் செய்தங் குரைத்ததைக் கேட்டு மிக்க
விருப்பொடும் பொதியம் வாழு மெய்த்தவன் விளம்பு கின்றான்
றிருத்தமா யுன்னைக் கண்டு சேவிக்கப் பெற்ற பேற்றிற்
பெருத்திடும் பேறு முண்டோ வேண்டுவ பிறிதொன் றுண்டால்.()

ஈங்கியான் பூசை செய்த விலிங்கத்தெப் போது மெந்தாய்
நீங்கிடா திருந்து வந்து நின்றனைப் பூசித் தோர்க்கும்
பாங்குறு தீர்த்த மாடிப் பரிசுடன் றெரிசித் தோர்க்கு
மாங்கவர் வேண்டல் யாவு மருள்செய வேண்டு மென்றான். (நுநு)

அன்னதற் கிசைந்த வந்த வகத்தியே சுரத்தில் வாழு
முன்னவன் றனுந் தூய முனிவனுந் தவஞ்செய் தேவி
சன்னிதி தன்னில் வந்தார் தவமுனி வரன்று னன்னுள்
பொன்னடி வணங்கப் பெற்றுப் பொதியமால் வரையிற் புக்கான்.()

வந்தவவ் வீச னேய மாதவக் கன்னி யென்னுஞ்
சுந்தரி தவமு மன்னு டிலங்குபே ரழகு நோக்கிச்
சிந்தையின் மகிழ்ச்சி கூர்ந்து செய்தவன் பூசித் தேத்து
மந்தநற் றலத்தி லிங்கத் தன்புட னிருந்தா னம்மா. (நுரு)

இக்கதை மார்க்கண் டேயத் திருப்பதை மார்க் கண்டற்குத்
திக்குநான் முகத்து வேதன் செப்பிய ததனை நேமித்
தக்கவா ரணியத் துள்ள சவுனக ராதி யாய
மிக்கமா தவருக் கன்பா விளம்பினன் சூத னென்பான். (நுசா)

அகத்தியேசுரச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் (உ௮எ)

# அகத்தியேசுரச்சருக்கச் சுருக்கவசனம்.

எங்களை யடிமைகொள்ளுஞ் சிவ்பிரான் திருக்கயிலாச மலையை நீங்கிச் சகலதேவர்கள் முனிவராதியோர்சூழ உமாதேவியாரை விவாகஞ்செய்தற்காக இமயமலைக்கு எழுந்தருளும்போது வடதிசை தாழ்ந்தது. தென்றிசை மிகவுயர்ந்தது. அவ்விருதிசையுஞ் சமமாகும்பொருட்டுச் சிவபிரான் அகத்தியமுனிவரை நோக்கி நீ பொதியமலைக்குச் செல்லுகவென்று கட்டளையிட்டனர். அம்முனிவர் சுவாமீ! யும்முடைய திருமணக்கோல தரிசனமென்று கிடைக்குமென்று கேட்க, எம்பெருமான் பொதியமலையிலே யாமெழுந்தருளிக் காட்டுவோமென்று திருவாய்மலர்ந்தருளினர். அதுகேட்டு முனிவர்மீண்டு பொதிகையிலே வந்திருந்து திருமணக்கோல தரிசனங் கிடையாமல் குமரித்தலத்தில்வந்து சக்கரதீர்த்தத்திலே மூழ்கிக் குகனாண்டேசுரரை வணங்கி மீண்டு சமுத்திரக்கரையிலுள்ள தீர்த்தங்களெல்லாம் படிந்து கன்னிநாயகியை வந்தித்துத் தோத்திரித்தனர். கன்னிநாயகி முனிவரை நோக்கி யுனக்கு வேண்டியவரம் என்னென்று வினவினள். முனிவர் வடபூமிக்குச் சமமாகத் தென்பூமி ஆகவேண்டுமென்று தெரிவித்து அவ்வரத்தைப்பெற்றுக் கயிலாசமலைக்குப் போய்வருவேனென்று விடையும் பெற்றுக்கொண்டு புறப்பட்டுப்போய் அரிபிரமேந்திராதிகள்சூழ வெள்ளியங்கிரியில் உமாதேவியாருட னெழுந்தருளியிருக்கும் பரமேசுரனைத் தரிசித்து வணங்கித் துதித்தனர். உடனே பரமேசுரன் முனிவரை மிகவுபசரித்து நீ யிங்கு வந்த காரணமென்னென்று வினவினர். முனிவர் சுவாமீ! தென்சமுத்திரக்கரையிலே குமரித்தலத்தில் வாசனைதங்கிய பூமாலையைக் கையிலேதாங்கித் தவஞ்செய்துகொண்டு கன்னியென்னும் பராசத்தியானவ ளிருக்கின்றாள். அவளை நீர்கடைக்கணித்துத் திருவருள்புரிய எழுந்தருளல்வேண்டுமென்று விண்ணப்பித்தனர். அதற்கு நம்பெருமான் சம்மதித்து முனிவர் கையைப்பற்றி யெழுந்துவந்து பொதியமலையிலே திருமணக்கோலக்காட்சி தந்தருளினர். அக்காட்சியை முனிவர் தரிசித்து மகிழ்ந்து சுவாமீ! யும்மைப் பூசிக்க ஆஞ்ஞை தந்தருளவேண்டுமென்று, அதுபெற்றுப் பூசைக்கு வேண்டிய திரவியங்களீட்டி ஸ்நானஞ்செய்து வந்து பார்க்கும்போது சுவாமியைக்காணாமல் மதிமயங்கிப் பற்பலவிதமாக அவரது திருவருள் மான்மியத்தைத் துதித்து நின்றனராய்ப் பின்னர் பூஜாதிரவியங்களை யெடுத்துக்கொண்டு குமரித்தலத்துக்கு வந்து கன்னிநாயகி யிருப்பிடத்துக்கு மேல்பக்கங் கூப்பிடுதூரத்திலே சிவலிங்கப் பிரதிட்டைசெய்து அவ்விடத்துக்கு வடபக்கத்திலுள்ள சிறுமலையிலே தமது தண்டத்தைக்கொண்டு ஒரு தீர்த்தமுண்டாக்கி, அதிலே ஸ்நானஞ்செய்து திருமஞ்சனமெடுத்துவந்து அவ்விலிங்கத்துக்கு அபிடேக முதலியவைசெய்து பூசித்துத் தவஞ்செய்து சிலநாளிருந்தனர்.

அம்முனிவர் பூசையையுவந்து அவருக்குத் தரிசனங்கொடுக்க உடனே அவ்விலிங்கத்தினின்றும் எம்பிரானெழுந்தருளி வெளிவந்தனர். அதுகண்டு முனிவர் உள்ளங்குளிர மகிழ்ந்து தரிசித்துக் கீழேவிழுந்து நமஸ்காரஞ் செய்து எல்லா வுயிர்களையும் படைத்துக்காத்து அழித்து எங்கு நிறைந்த சோதியே! உம்முடைய திருவருள் பெற்றோருக்கன்றி யேனையோருக்குக் காணப்படாத நின்மலரே! உம்முடைய நிலைமையை யான் என்னென்றறிந்து துதிப்பேனென்று மனமுருகி நின்றனர். அம்முனிவரை நோக்கிச் சிவபிரான் கருணை கூர்ந்து உன் பூசனையையுவந்தோம். உனக்கு வேண்டும் வரங்கள் கொடுப்போமென்றருளிச் செய்தனர். முனிவர் திருவருளை வியந்து சுவாமீ! உம்மைசசேவிக்கப் பெற்றபேற்றைப் பார்க்கிலும் வேறுபேறுமிருக்கின்றதோ? ஆயினும் அடியேன் பூஜித்த இந்தசசிவலிங்கத்திலே நீரெப்போது மெழுந்தருளியிருந்து உம்மைப் பூசித்தவருக்கும் பக்கத்திலே யடியேன் செய்த பாதாலவாகினி தீர்த்தத்திலே தீர்த்தமாடினவருக்கும் கேட்ட வரங்களைத் தந்தருளவேண்டுமென்றனர். எம்பிரானவ்வாறே எல்லா வரமுங் கொடுத்து அகத்தியேசுரமாகிய அந்தத் தானத்தைவிட்டு முனிவருடன் கன்னிநாயகி தவஞ்செய்யு மிடத்துக்கெழுந்தருளி வருதலும், உடனே முனிவர் விடைபெற்றுப் பொதிய மலைக்குப் போய்சசேர்ந்தனர். பின்னர் நம்பெருமான் கன்னிநாயகி தவக்கோலத்தைப் பார்த்து வியந்து மீண்டு அகத்தியேசுரத்திலிங்கத்துள்ளே மறைந்திருந்தனர். இந்தக்கதை மார்க்கண்டேய புராணத்திலுள்ளது. இது மார்க்கண்டேயருக்குப் பிரமதேவராலே சொல்லப்பட்டது. அது தெரிந்து சூதமுனிவர் நைமிசாரணிய முனிவருக்குச சொல்லியருளினர்.

## பத்தாவது
# மூர்த்திவிசேடச்சருக்கம்.

கன்னியென் றொருபேர் கொண்டு கருணையே வடிவ மாகி
மின்னிய மின்போற் சோதி விளங்கொளி மேனி மீதி
னன்னிறக் கமலம் போல நளிமுகம் நயனஞ் செங்கை
தன்னிரு சரணங் கொண்டாள் சரணமே சரண மம்மா. (க)

சூதமா முனியை நோக்கித் தொன்னேமி வனத்தில் வாழ்வோர்
கோதிலா யருளிச் செய்த குமரியின் விசேடங் கேட்டுக்
காதல்கூர்ந் தின்ப முற்றோங் கன்னிநா யகிவி சேட
நீதிசேர் காதை கேட்பா னிகழ்த்திட வேண்டு மென்றார் (உ)

செப்புமிக் காதை தெத்தாத் திரையனு முனிவன் முந்நாண்
மெய்ப்புவி யாளுங் காத்த வீரியன் கேட்பச் சொன்ன
தப்பெருங் காதை கேட்ட ராங்கதன் முறைமை சொல்கே
ளைப்பிலம் முனியை நோக்கி யுயர்கொடை மன்னன் சொல்வான்.

கருதரும் பெருமை சார்ந்த கன்னிதன் பெருமை யென்ப
தெரிவுற வடிய னேற்குத் தேசிக வருள்செய் யென்ன
மருவுநற் றவத்தோன் சொல்வான் மாயவ னளவின் மாயைச்
சரிதையா ரறிய வல்லா ரறிந்தமை சாற்று கேன்கேள். (ச)

மாயவன் றனே யந்த வடிவுறு கன்னி யாய
நாயகி யவடன் றேற்ற மாதியா நவிலும் பாற்ப
மாயவப் புராண மென்ப ரங்கதி லுள்ள காதை
தூயவ சொல்கே னென்னத் தொன்முனி சொல்வ தானன். (இ)

எண்ணரு முயிர்க ளென்ப யாவையுங் காப்பா னைய
வண்ணறன் யாரென் றெண்ணி லரியன்றித் தெய்வ மில்லை
நண்ணுகா ரியமி மித்த நயந்தவன் பலவாச் சொல்லுந்
தண்ணளிச் சத்தி யானன் சன்மைந்தவச் சத்தி தானும். (சு)

வரமருள் கன்னி துர்க்கை மகிடமர்த் தனிமா தங்கி
பரையபி ராமி நீலி பகவதி திதி ரவுத்திரி
யரிதிருத் தங்கை மாயை யதிதிநா ரணிமா காளி
திரிபுரை யுமையாள் வாணி திருமக ளறம்வ ளர்த்தாள். (எ)

இன்னன முதலா வுள்ள வெண்ணரு நாமம் பெற்று
ளன்னம்புள் ளரசு வெள்ளே றரிகலை வராக மாதி
மன்னும்வா கனங்க ளுள்ளாள் வாய்ந்தபே ரொளிசேர் மெய்யிற்
பொன்னினன் மணியாற் பூண்ட பொலிவுறு பரண முள்ளாள். (அ)

ஐவகை யங்க மாக வணிபெற மணியாற் பொன்னன்
மொய்யணி திகழ வோங்கு முடியணி சென்னி யுள்ளாள்
பொய்வகை யசுரர் தம்மைப் பொருந்துயி ருண்பான் வேண்டித்
தெய்வமாப் படைக ளியாவுஞ் சேர்ந்திடுஞ் செங்கை யுள்ளாள் (கூ)

குண்டல மிங்கு வள்ளைக் கொடியினுண் மருங்குன் மீதா [ளாள்
கண்டலங் களிப்பக் காட்டுங் கவின்கொள்பொற் கலைசேர்த் து
விண்டல முரகர் வாழும வியன்றலம் வேலை சூழு
மண்டல மூன்றுங் காப்பான் வந்துதித் தருளு மாயாள். (ய)

ஆயவ ளாரென் றுன்னி லாழிசெங் கையிற் றாங்கு
மாயவ னறத்தை நாட்ட வயிணவி யாக வந்தான்
றாயமூன் றுகமு நீங்கித் துற்கலி தோற்று மந்நாட்
பாயிருள் போலும் பாவப் பரப்பொழித் திடுவான் வேண்டி. (யக)

கங்கைபோய்க் கடலிற் பாயுங் கரையெனுங் கீழ்த்திக் கின்பா
லங்கண்மா மாயன் சத்தி யாயிர முகத்த ளாகி
வெங்கண்வா ளசுர ராதி வெந்தொழிற் பாவத் தீயோர்
தங்களா லுலக மின்ன றுறாறு திருப்ப தானாள். (யஉ)

திரைசிந்து வளைக ளோடுந் திகழ்ந்துமே லோங்கிப் பொங்கும்
பரசந்த மேல்பா லுள்ள பர்வைமீக் கொள்ளும் வேலை
தரைசிங்க லுறுமற் றாய தருமத்தி னிலைகெ டாம
னரசிங்க வடிவ மாகி நண்ணியங் கிருந்தான் மாயோன். (யந)

வாகன்ன வூர்தி யாதி வானவர் வணங்கி யேத்துங்
கோகன்ன மென்னுந் தூய குலநகர் தன்னி லின்பா
மாகன்ன லனைய தீஞ்சொன் மலர்மக ளாகத் தோலும்
பாகன்ன வின்சொற் பாவை பாகனும் பரிந்து வாழ்வார். (யச)

வான்றொடு குடுமி சாலு மயேந்திர வரையின் மீதி
லான்றபே ரறிவின் மேலோ னடலுடை யனுமன் றன்னைச்
சான்றநல் லறத்தைக் காப்பான் றயரத ராம னென்னத்
தோன்றுமா மாய னாய தூயவன் வைகச் சொன்னான். (யரு)

தென்கடற் கரைதான் பன்னாட் செய்தவப் பலத்தி னாலே
மென்கட லனைய மேனி விளங்கரி தங்கை யானு
னன்கடற் கன்னி யென்னு நாமமுந் தரித்துக் கொண்டங்
கின்கட லமுதம் போல விருந்தனள் குமரி யின்கண். (யசு)

## வேறு.

அன்ன தன்மையள் கன்னிநா யகியென வமலன்
சொன்ன வாசகங் கேட்டலு மணிமுடி துளக்கி
யின்னுங் கேட்பவை யுளவென விருந்தவ னடிமேற்
பொன்னின் மாமுடி யுறத்தொழு தரசனும் புகல்வான். (௰௭)

அரிய நற்றல மென்னுமிக் குமரியி லைய
விரியும் பைங்கதிர் மின்னொளி மேனிமெய்க் கன்னி
யுரிய தோற்றமு முதித்தவள் சரிதையு முளத்திற்
றெரியும் வண்ணநீ செப்புதி யென்றனன் றிறலோன். (௰௮)

அந்த வாசகங் கேட்டலு மடங்கலா ரடங்க
வந்த வாண்டகை வனசநன் மலர்முக நோக்கி
யிந்த மாக்கதை யுனக்குப கதையொடு மினிதா
வுந்த வாவினை யொழித்தவ னுரைப்பனென் றுரைத்தான். (௰௯)

அரச கேட்டியா லவுணரா லருந்தவத் தோர்க்கும்
விரைசெய் பொன்மலர்க் கற்பக நாட்டுவிண் ணவர்க்குந்
தரையில் வாழ்பவர் தமக்கும்வெங் துயர்மிகச் சாரத்
திரைகொள் வாரிதி யுடைப்புவி மடந்தையுந் திகைத்தாள். (௨௰)

முடக்க முற்றது மறையவர் நன்னெறி முறைமை
திடக்கை பெற்றது தீயகா மாதிகள் சிறப்பாய்
நடக்கை யுற்றது பாதகம் யாவையு நடித்தே
யடக்க முற்றது வாய்மையு மிரக்கமு மறிவும். (௨௧)

வலிமை யாயினன் மறநெறிப் பாவமா மறவோன்
மெலிமை யாயின னறநெறி மேவுமெய்க் கடவுள்
பலித மில்லையென் றாயின பயிர்நிலப் பரப்பு
நலிவு பெற்றன வானினின் றிழியுநற் றுளிகள். (௨௨)

பொங்கி மாக்கட லெழுந்தெனப் புறமெலாம் புகுந்த
கங்கை மாநதிப் பெருமையுங் கழிந்தன கருணை
மங்கை பாகனார் வளமுறைக் கேயிலும் வனசச்
செங்கணான் றிருக் கோயிலுஞ் சிறப்பில வான. (௨௩)

நீதி மன்னர்தந் நிலைமையு மயங்கின நிறைசேர்
சோதி வாண்முகத் தோகையர் கற்புபோ தொலைந்த
வாதி யாமனு வவரவர் செய்தொழிற் கமைத்த
சாதி யானதின் வரம்புபோ தலைமயக் குற்ற. (௨௪)

ஆகை யாற்புவி மடந்தைதன் றிண்மையு மழிந்து
சோக முற்றனள் பாரமுஞ் சுமக்கவாற் றாளாய்
மாக நற்றரு நீழல்வாழ் மகபதி நினைத்தாற்
போகுந் தன்மைய தன்றிதென் றயனிடம் புக்காள். (௨௫)

காத்த ளித்தருள் கடவுட னுந்தியங் கமலம்
பூத்த தாமரைப் பொகுட்டினில் வைகிய புத்தே
ளேத்த மாதவர் விண்ணவர் சித்தர்க ணெருங்கி
வாய்த்த பேரவை யிருந்தனன் மற்றவர் சூழ. (௨௬)

நயங்கொ ளாற்றிசை முகங்களு நயனநா லிரண்டும்
புயங்க ளெட்டுநீண் மார்பின்முப் புரிதிகழ் நூலுங்
கயங்கொள் கங்கையை யடக்கிய குண்டிகைக் கரமும்
வயங்க வைகிய மான்மகன் மலர்முக நோக்கி. (௨௭)

பொறுமை யுற்றநற் பூமகள் புகன்றனள் புவிமேற்
சிறுமை யுற்றிடு மவுணர்செய் தீமையாற் றீய
வறுமை யுற்றது பாவமா மவன்சுமை வலிமைக்
குறுதி காண்கிலா துன்னிடத் தடைந்தன னுரவோய். (௨௮)

என்று பூமக ளியம்பலு மெதிர்முக நோக்கி
மன்ற லங்கம லாசனத் திருக்குமா மறையோ
னின்று கேட்டியா லன்னைநீ யுறுவலி யவுணர்க்
கொன்றெ னுன்முடிப் பரிதெனக் கூறிவே றியம்பும். (௨௯)

பாழி மாவலி யவுணரைச் செகுத்துயிர் படுப்பா
னூழி யானலா லியாவரான் முடியுமென் றயனும்
வாழி மாதவர் சித்தர்கள் வானுளோர் மற்றோர்
சூழ வேயெழுந் தேகினன் பாற்கடற் சூழல். (௩௰)

வைய மங்கையும் வளர்பசு வடிவமொன் றெடுத்துச்
செய்ய தாமரைச் செழுந்தவி சிருக்குநற் றேவா
மைய னோடெழுந் தேகின னவுணராங் கொடிய
வெய்ய பாதகர் செய்திடுந் தீமையை விலக்க. (௩௧)

பெரிய பாற்கட லுப்பணிற் பிறங்குபொன் னிறத்த
விரியுஞ் செம்மணி மிளிர்படப் பாயலின் மீதி
லரிய பூமக ளங்கையா லடியிணை வருடக்
கரிய மாக்கட லெனத்துயில் கடவுளைக் கண்டார். (௩௨)

கண்ட மாதவர் சித்தர்கள் யோகிகள் கனகம்
விண்ட மெல்லிதழ்த் தாமரை யோன்முதல் விண்ணோர்
கொண்டல் போனிற வண்ணனைக் குவலைய முழுது
முண்ட மாயனை யேத்தினன் றினையன வுரைப்பார். (௩௩)

வேறு.

உண்டென வுரைப்பார்க் குண்டா யிலதென்பார்க் கிலதா யுன்னுற்
கண்டிடு மன்பர்க் கெல்லாங் காண்குறுங் காட்சி யானே
பண்டைநான் மறையுங் காணாப் பகவனே போற்றி மிக்க
வண்டமியா வையுமுண் டாக்கி யளித்தரு ளையா போற்றி. (௩௪)

வானவர் குலத்தை முற்றும் வாழ்விக்கும் வாழ்வே போற்றி
தானவர் குலத்தை யெல்லாந் தழைப்பறக் களைவாய் போற்றி
யூனமி லிரணி யாக்க னெண்புவி யொளித்த வந்நா
ளேனமாய்ப் புவியைத் தந்த விறைவனே போற்றி போற்றி. (௩௫)

தரணியோ டுலக மூன்றுந் தனதெனத் தானே யாண்டு
முரணிமுத் தொழிலுஞ் செய்தோன் முடிவிலா வாயுள் பெற்றோ
னிரணிய னென்பான் றன்னை யெறுழ்நர மடங்க லாகி
மரணம தெய்த வன்னுன் மார்பக மிடந்தோய் போற்றி. (௩௬)

காவலங் கடவு ளாய கண்ணனீ யிருப்பக் காத்த
மாவலி யவுணன் றன்பால் வாமன வுருவ மாகி
மூவடி யிடந்தா னேற்று மூதண்ட முழுது முன்றன்
சேவடி யிரண்டுங் கொள்ளச் செய்திடு நெடியோய் போற்றி. (௩௭)

தாங்குமெந் திறங்கள் சேர்ந்த தடநெடு மதிள யோத்தி
யாங்கதிற் றோன்றி வாங்கு மடுதிறல் வில்லோன் றானே
தீங்குறு சதக்கி ரீவன் செழுங்கிளை யோடுஞ் செற்றே
யோங்கற மிறுத்திக் காத்த வொருவனே போற்றி போற்றி. (௩௮)

என்றய னோடு விண்ணோர் யாவரு மிரங்கி யேத்த
வென்றிசேர் நெடிய மாலு மேவறி துயிலை நீங்கி
யன்றயன் முதலி னோரை யருளொடு மன்பா னோக்கி
யொன்றுநீ ரஞ்சல் யானு மும்பர வுணர்ந்தே னென்றான். (௩௯)

வேறு.

உலகந்தனி லுறுவெந்துய ரொழிவுற்றிட வுடன்யான்
பெலபத்திர ராமனொடு பெயர்கிட்டின னெனவும்
வலமிக்குள வொருசத்தியின் வடிவங்கொடு வந்து
நிலனுக்குறு துயர்நீக்குவ னீர்போமென வருளி. (௪௰)

நயவொன்றிய மாலும்முறை தலமங்கதி லணைய
வயனும்புவி மகளுஞ்சில வமரர்முத லெவருந்
துயர்கொண்டுழன் மனமின்புறு சுகநெஞ்சின ராகிப்
பயமின்றியே தமதின்புறு பதியங்கதி லானார். (௪௧)

இவையிங்ஙன நிகழ்வுற்றன வினிமேலுள தறைவா
நவையெஞ்சலில் கஞ்சன்னென நவிலும்மொரு பெயரோன்
குவைதங்கிய பலமாயையின் கூடாகிய கொடியோ
னவையின்புறு மறிஞர்க்குறு துயரொன்றிட வருள்வோன். (௪௨)

விதுவென்பவன் முதுநன்குல மதில்வந்திடும் விறலோன்
பொதுவென்றிடு முலகானது தனதென்றிடு புகழோன்
மதுவென்றிடு மவுணன்பெரு வலியிற்பெரு வலியோன்
சதுரங்கவெல் படையெண்ணில தருசேனையி னுரவோன். (௪௩)

கடல்பொங்கியி வுலகுண்டிட வருபோதினுங் கவலா
னடல்விஞ்சிய பதினாயிர மானைப்பல முடையோ
னொடுபின்வர வொருபெண்கொடி யுதித்தாளுயர் தவத்தால்
விடமென்பது னொடுபின்வரு வேறோரமு தென்ன. (௪௪)

திருவென்பவ டனிலும்மெழி றிகழும்வடி வுடைய
வுருவம்பெறு பவனுமழு மொளிர்தேவகி மங்கைப்
பருவந்திகழ் வுறவந்திடு பனிமென்மொழி யவளை
வருவெந்திறன் மிகுகஞ்சனும் வசுதேவருக் களித்தான். (௪௫)

வேறு.

கண்ணகன் மண்ணும் விண்ணுங் கண்டுளங் களிப்புக் கொள்ள
வெண்ணருஞ் சிறப்புச் செய்தங் கியல்விதி முறைவ ழாமற்
புண்ணியச் சடங்கி யாவும் பொற்புறச் செய்து பின்னர்
நண்ணிய வறங்கட் கெல்லா நலனுற நல்கி னுறல். (௪௬)

இலங்குகே யூர மார மெழில்கொள்குண் டலங்க ளாதி
கலங்கண்மா மருடம் பொன்னின் கவின்கொள்பட் டாடை தாசர்
நலங்கெழு நாடி ராச நகரந்தேர் கரிவெம் பாய்மா
வலங்கெழு வீரர் சேனை மகிழ்ந்துமைத் துனனுக் கீந்தான். (௪௭)

மணம்பெறு வேள்வி முற்றி மகிழ்வொடுஞ் சிலநாள் வைகக்
குணங்கிளர் நலத்தின் மிக்க குலவசு தேவ ரென்பார்
கணங்கொள்வெஞ் சேனைக் காவற் கஞ்சனை யுவந்து நோக்கி
யணங்குடன் யாமு மெம்மூ ரதனிற்போய் வருது மென்ன. (௪௮)

வடிவுறு மைத்து னன்றன் மனக்குறிப் புணர்ந்து கஞ்ச
னடிகட முளத்துக்காவ தாகவென் றன்பு கூர்ந்தான்
றொடியணி தோளி னுளுஞ் சுடர்மணி முடியி னுனு
முடனுறை தமர்கட் கெல்லா மூர்ச்செல வுணர்த்தி னால். (௪௯)

கடிமணம் புணர்ந்து ளோரைக் கஞ்சனு மகிழ்ச்சி கூர்ந்து
கொடிநெடுந் தேரி னேற்றிக் குழைக்கின்ற கவரி வீச
விடியென முழக்க முற்றே யிரட்டுபல் லியங்க ளார்ப்பச்
சுடர்முடி யரசர் தோழர் சூழ்வர வெழுந்தா னன்றே. (௫௰)

மானவேற் கஞ்சன் றிண்டேர் வலவனு நடத்தும் போதிற்
றேனினு மின்சொ னல்லா டேவகி யெட்டாங் கர்பத்
தானவண் சேயாற் கஞ்ச னுருயி ரிழப்பா னென்ன
வானினின் றேயோர் வார்த்தை வந்தவ ணெழுந்த தன்றே. (௫௧)

அம்மொழி செவியிற் கேட்ப வழன்மனக் கஞ்ச னென்பான்
பொய்ம்மொழி யன்றி தென்று புந்தியி னுறுதி கொண்டு
செம்மொழி வசுதே வர்க்குந் தேவகி தனக்குங் கெட்ட
வெம்மொழி யவன்றான் செய்யும் வினையமொன் றெண்ணினானல். ()

சிறப்புறு மனத்தி னந்நாட் டேவகிக் கவன்று ணிந்த
குறித்தமா நகரந் தன்னிற் கொணர்ந்துதே ரதனை விட்டங்
கறத்துறை முறைவ ழாத வண்ணலோ டமுதன் றனை
மறத்துறை நெஞ்சக் கஞ்சன் வன்சிறை யிடுதற் குற்றான். (ருங)

ஆழிமால் வரையைப் போல வகன்றுவா னளந்து நிற்கு
மேழுமா மதில்கள் சூழ்ந்த வெழுநிலை மாடத் தும்பர்
சூழுமா பரிச னத்தின் றொடர்பினோ டிருத்தித் தாளிற்
பாழியந் தளையுஞ் சேர்த்துப் *பதனஞ்செய் காவல் செய்தான். ()

வாயில்க டோறு மாற்றல் வாய்த்தகிங் கரர்க ளென்போ
ராயிரம் பேரைக் காவ லாக்கிவைத் ததின்பு றத்தே
யேயிருஞ் சேனை சூழ விருத்தியே காவ லோர்க்கு
நாயக னொருவன் றன்னை நாட்டிமற் றினைய சொன்னான். (ருரு)

மாவகி ரனைய மைக்கண் மங்கையென் பின்பு வந்த
தேவகி கருப்ப முண்டாய்ச் செனித்தசேய் மண்ணின் மீதே
யாவதன் முன்னர் நீவந் தறிவிக்க வேண்டு மென்னக்
காவல னோடு வஞ்சக் கஞ்சனங் குரைத்துப் போனான். (ருசு)

அரசனுங் கஞ்ச னென்னு மடுதிறற் சீய மன்னா
னுரைசெயுஞ் சொன்ம றமை லோர்ந்தந்தக் காவ னுதன்
விரைசெய்பூங் குழலாள் கர்ப்ப வினைவுண்டாய் மகவைப் பெற்று
டரையினிற் குழவி வீழ்முன் சாற்றினன் கஞ்சன் றன்பால். (ருஎ)

நங்கையைச் சிறைசெய் காவ னுதன்வந் துரைத்த மாற்ற
மங்கவன் கேட்டு முன்ன மடுதற்கு விரைவி னெய்திச்
சிங்கவே றனையான் கஞ்சத் தீமையோன் கொடிய பாவி
மங்கைநன் மகவை மண்மே லடித்துயிர் வாங்கி னானல். (ருஅ)

* பதனம் - தவறுணை.

கலங்கலி னெஞ்சக் கஞ்சன் காவலின் றலையற் கன்பா
லிலங்குபொற் கொத்து மாலை யெடுத்துயர் மார்பி லிட்டு
நலங்கிள ரினிய வார்த்தை நவின்றுளா மகிழ வின்னும்
பலன்பெற வளிப்பன் காவல் பதனமென் றருளிப் போனான். (௫௯)

அழுகுரன் மகவைக் கஞ்ச னருயி ருண்ணக் கண்ட
தொழுதகு கற்பி னாளுந் துணைவனும் பதைத்து மண்மேல்
விழுவர்மே லெழுவ ரேங்கி விம்புறு முயிர்ப்பு மின்றி
யொழுகுகண் ணீரு மின்றி யுபயசித் திரத்தை யொத்தார். (௬௰)

சிறிதுபோ துயிருங் காணாச் சென்றபின் றுணைவர் தேற்ற
வுறுதுயர்த் தாயுஞ் சற்றே யுயிர்த்துக்கண் விழித்துப் பார்த்துப்
பெரும்வயிற் றிடித்தி டித்துப் பித்துறு மனத்த ளாகி
மறுவறு மகவை யெண்ணி வாய்திறந் தரற்ற லுற்றாள். (௬௧)

ஐயவோ வைய வோவென் றரற்றியே யலர்பூஞ் செய்ய
கையினான் முகத்தி லெற்றிக் கண்ணினீ ருதிரங் கால
மெய்யெலாம் புழுதி யுண்ண விழுந்துருண் டழுதே யையா
பெய்யுமுன் பிதிர்பா லுண்ணா தென்கொலோ பிரிவுற் றாய்நீ. (௬௨)

கண்ணினுண் மணியே முத்தே கனகமே யுயிரே தேனே
யுண்ணிடா துடறித் திக்க வோங்குமின் னமுதே யுன்னை
விண்ணினுக் காக்கி யுன்பொன் மேனியைக் கஞ்ச னென்பான்
மண்ணினுக் காக்க வென்றோ பெற்றனன் வருந்தி யையா. (௬௩)

பிறந்தவுன் றனையே யையா பெருங்கொடும் பாவி யேன்மற்
றிறந்திடக் கண்டேன் பெற்றோ ரெய்தின்பம் பெற்றி லேனே
மறந்தரு நெஞ்சக் கஞ்ச வஞ்சனென் மகவைக் கொல்ல
வறந்தருந் தன்மை யீதோ வென்றழு தாற்றி னாளால். (௬௪)

தாயுமிங் கினைய பன்னித் தளர்ந்தழு தேங்கத் தந்தை
யேயது பிடித்து ளோர்போற் பித்துறு முளத்த னாகிச்
சேயினைக் கஞ்ச னென்பான் செய்திடுந் தீமை யெண்ணி
நோயினின் மெலிவோர் போல நடுங்கியே யடங்கி னால். (௬௫)

அருகய லிருந்து ளோரு மவர்படுந் துன்ப நோக்கிப்
பெருகுசெந் தீயின் மீது பெய்ததோர் மெழுகு போல
வுருகிட வுள்ளங் கண்க ளுமிழ்ந்தவெந் நீரி லங்கந்
கருகிட வாடி வாடிக் கவலைகூர்ந் துள்ள னைந்தார். (கூகூ)

கீழ்ந்திட்டச் சிலநா ளிங்ஙன் கவலைகூர்ந் துள்ள மெல்லா
மழிந்தவர் சிறிது தேறி யாவிந்த மனைய கண்கள்
பொழிந்தகண் ணீரு மாறிப் பொறித்தவை போகா வென்றங்
கொழிந்தனர் துன்பந் தங்க ளுள்ளத்தி னறிவு மிக்கால். (கூஎ)

உறுதுய ரொழிந்து தங்க ளுள்ளத்தி னலைவு தீர்ந்து
சிறிதுநாட் சென்ற பின்னர் தேவகி கருப்ப முண்டாய்ப்
பெறுமக வொன்று பெற்றாள் பெற்றதை முன்பு போல
மறுவுறும் வசைக்கஞ் சாத வஞ்சகக் கஞ்சன் கொன்றான். (கூஅ)

இம்முறை யாறு சேயை யிரங்கிட வறிதே கொன்றான்
வெம்முறை நடத்துங் கஞ்சன் மெலிந்ததே வகியா மாது
மம்முறை யேழாங் கர்ப்ப மாயின ளதிலேழ் திங்கள்
ஷிம்முற வுதரம் பூரித் திலங்குமவ் வேலை தன்னில். (கூகூ)

திருநெடு மாலுஞ் சூல்கொ டேவகி யேழாங் கர்ப்ப
முருவழி யாமல் வாங்கி யுரோகணி வயிற்றி லாக்கிக்
ருவுறு மேழாந் திங்கட் கருப்பம்போற் காண வந்தாண்
ருவிஞ னவள்வ யிற்றின் மாயவ ளுகை யாலே. (எ0)

சூலுறு மேழாந் திங்க டோன்றிடுங் கருப்பம் போல
மாலுமின் புறவே யங்கண் வளர்ந்துவை கினளு லந்தச்
சேலுமஞ் சியவேற் கண்ணு டேவகி வயிற்றைத் தெய்வ
வாலிலை யென்ப துள்ள தாயின தறிய யாரும். (எக)

ஆவதோர் வயிற்றுந் தோன்று தாகிய வருண்மா யோனை
மூவகை யுலக மென்ப முழுவதும் வயிற்றுள் ளாக்கிக்
காவல்செய் தளிக்கு மாயக் கள்வனை வயிற்றுள் வைத்த
தேவகி பெருமை நாவாற் செப்புதற் கெளிய தாமோ. (எஉ)

வரியளி முரலும் பைந்தார் வசுதேவர் மணமுன் செய்த
வுரிமையாண் மறுவில் கற்பி னுரோகணி யுதர மீதிற்
பரிவின்முத் திங்கள் செல்லப் பயந்தனண் மகவைப் பாரில்
விரிகதி ரிரவி போல விளங்கொளி மெய்யிற் றோற்ற. (எ௩)

உற்பவ மான சேய்க்கங் குயர்நாம கன்மஞ் செய்து
நற்பல பத்தி ரப்பே ரிராமனு நாமஞ் சாத்திப்
பொற்புறு மகவை யங்ஙன் போற்றியே வளர்ப்ப விப்பா
லற்புதக் கருப்பந் திங்கள் பத்துந்தே வகிக்கு மான. (எ௪)

கொற்றமால் வரைக ளேழுங் குரைகட லேழுங் கீழா
யுற்றபா தலமோ ரேழு முயர்ந்தமே லுலக மேழு
மற்றையா ருயிர்க ளியாவும் பெற்றமா மறைவல் லோனைப்
பெற்றவன் றனையும் பெற்றாள் பெறத்தவப் பேறு பெற்றாள். (எ௫)

பெணுமா வணிமா தத்திற் பிறபக்கத் தெட்டிற் றிங்கள்
பூணுரோ கணிநன் னாளிற் புகல்புத வாரந் தன்னிற்
காணுநற் றிங்க டோன்றுங் காலத்திற் கரிய பானு
வேணுற விரவில் வந்தே யினிதுதித் ததுபோற் றோன்றி. (எ௬)

மணிமுடி யிலங்கக் காதின் மகரகுண் டலங்கண் மின்ன
வணிபல வங்க மெல்லா மழகுசெய் தொளிரக் கையிற்
றணிவில்பே ரொளிசேர் சங்கு சக்கரந் தயங்க வாங்கே
பிணியுறு தளையி னார்தாம் பெற்றசீர் மகவைக் கண்டார் (எ[illegible]

கண்டபோ துள்ள மெல்லாங் களிப்புறு மின்ப மெய்தி
விண்டநாக் குழற மெய்யும் விதிர்ப்புற விருப்பிற் சொல்வார்
பண்டைநந் தவத்தின் பேறே பாற்கடற் றுயின்று வைய
முண்டமா யவனே தன்மத் துருவமோ வறிகிலே மால். (எ௮)

கருதிடின் மதலை யிங்ஙன் கண்டதோ கேட்ட தோவென்
றருளுடைப் பிதாவு மன்பி னன்னையு மதிசயித்துத்
திருவுறை மகவைக் கஞ்சன் செகுப்பனென் றெண்ணி யேங்கி
யுருகியே மகிழ்ந்த வுள்ள முறுதுய ருடைய ராக. (எ௯)

கண்ணொடு முகமுங் கையுங் கால்களுங் கமலம் போல
நுண்ணுமக் குழவி பெற்றோர் நளினவாண் முகத்தைநோக்கித்
திண்ணிய நெஞ்சக் கஞ்சன் செகுப்பனென் றெண்ணி நீவி
ரெண்ணுறு துயரம் யாவும் விடுமினென் றியம்ப லுற்ற. (அய)

வேறு.

ஊன்பயில் வேற்க ணுரோகணி தன்பால்
யான்பல பத்திர ராம னெனப்பேர்
தான்புக லுற்றிட வாங்கு சனித்தேன்
வான்புக ழுங்களும் வந்து பிறந்தேன். (அக)

இரணிய னங்க மிடந்திட வேயான்
முரணொடு தூணின் முளைத்தனன் முந்நாட்
டரணி யொளித்திடு தானவர் கோமான்
மரணம தெய்த வராக மதானேன். (அஉ)

மூவுல குந்தன தாக முயன்று
காவல் புரிந்த கடுந்திறல் வல்லோன்
மாவலி தன்னையும் வன்சிறை யுள்ளே
மேவுற வைத்தனன் விண்ணுல குய்ய. (அங)

வானவர் தங்கிளை வாழ்வுற நாளுந்
தானவர் தங்கிளை சாய முடித்தேன்
மானமில் கஞ்சனை வல்லுயி ருண்பா
னானது தானரி தல்ல வெனக்கே. (அச)

அன்புறு நந்த னெனும்பெய ராய
னின்புறு தார வசோதை வயிற்றென்
பின்புறு பெண்ணென வந்து பிறந்தேன்
றுன்புற ருதையிர் சொல்வது கேண்மின். (அரு)

பெற்றிட வின்று பிறந்திடு சேய்போ
லுற்றிட விங்கொ ருருக்கொள்வ னென்னை
மற்றந லாயன் மனைக்கொடு வைத்தே
கொற்றவ மாய வளைக்கொடு வம்மின். (அசு)

### வேறு.

நீல நிறஞ்சேர் சேயிங்க ணிகழ்த்திப் பால னாய்க்கிடப்பப்
பாலன் மலர்வாண் முகநோக்கிப் பகர்வான் றாதை யென்னுடைய
காலிற் றளையு நெடுவாயில் காப்போர் தளையுங் கடிந்து கள்வர்
போல வரிதிற் போவதெங்ஙன் போமா றையா புகலுதியால். (௮௭)

என்னுங் காலைக் காலவிட்டங் கிடுவன் றளையுங் கழன்றவிக
துன்னு வாயில் காப்போருந் துயிலா விழியுந் துயில்வுற்றா
ரன்ன காலை மகவையெடுத் தரிய தாதை யவணகன்று
சென்னன் னெறியா றதிற்செல்லச் செலாதோ ராறு செறுத்தன்றே

செறுத்த வாறங் குடனீங்கிச் செல்லும் படிக்கு வெளிகொடுப்ப
நிறுத்து மகவி னொடுதாதை நேரே நடந்தக் கரைசேர
மறுத்தவ் வாறங் கொன்றாகி வடிவுற் றோட வசுதேவன்
பொறுத்த மகவி னொடுவிரைவிற் போனா னந்தன் மனைவாயில். ()

வாயி லடைப்பு மில்லாது வன்றா டிறந்து கிடப்ப வங்கே
போயில் லதனின் மகவினொடும் புகுந்து தாதை யசோதையெனு
மாயர் குலத்துக் கொருதீப மன்னா டியில வவன்மாயா
டாயி னயலே தன்மகவைக் கிடத்தி மாயா டனையெடுத்தான். (௯௰)

மாயை வடிவாம் பெண்மகவை மார்பி லுறத்தா னெடுத்தணைத்தே
யாயன் மனையின் வாயிலும்விட் டப்பா லாறும் வழிகொடுப்பத்
தூய நெறிசேர் வசுதேவன் றார நெறியை விரைவின் வந்து
வாயில் காப்போர் துயிறல் கண்டு வைகு மனைக்குள் வந்தனனால். ()

வந்தான் கரத்தி லிருக்குமந்த மாயை வடிவாம் பெண்மகவைச்
செந்தா மரையின் பூப்போலுஞ் செங்கை யதிற்றே வகிவாங்கி
நந்தா மணிநல் விளக்கனைய நவையின் மகட னெழில்கண்டா
லந்தோ கஞ்ச னிம்மகவை யழித்தற் கெண்ணா னெனமகிழ்ந்தாள்.

செய்ய காலில் வன்றளையைச் செறியப் பூட்டி முன்போல
வைய னிருப்ப வவ்வேலை யடற்பெண் மகவங் கழுதரற்றக்
கையிற் குழவி யழக்கேட்ட காவ னாதன் கடிது சென்று
வெய்ய கஞ்ச னொடுகுழவி பிறந்த செய்தி விளம்பினனால். (௯௩)

விளம்பு மளவில் விரைந்தெழுந்து வெகுண்டே சென்று பெ
ண்மகவை, யுளங்கொள் கொடிய கஞ்சனவ ளுறுப்பா னதின்ருள்
பிடித்திடலுங், துளங்கு மனத்துத் தேவகியுஞ் சொல்வா ளையா பெ
ண்ணதனுற், களங்க மென்னு மென்றுரைத்துக் கவலு முளத்தோ
டிரங்கினளால். (கூச)

மைந்த னெனிலென் பெண்ணெனிலென் வதைப்பே னென்று மறக்
னந்த மகவி னடிதூக்கி யடிப்ப வெடுப்ப வடிபிணித்த [கஞ்ச
பந்தந் தெறிப்பக் கால்வாங்கிப் பகைவன் கன்மார் பினிற்பைய
வுந்த மூன்றி யோசனைபோய் வீழ்ந்தா னுதிரம் வாயுமிழ. (கூரு)

வரமா யவன்றன் றங்கையென வருமா யவடான் வானிருந்து
சிரமா யிரமுஞ் சிரமீதிற் றிகழ்மா முடிக ளாயிரமுங்
கரமா யிரமுங் கரமீதிற் கதிர்வெம் படையுங் காட்டிநின்றே
யுரமா ருரத்தி னுதைபட்ட வொருவ னேடொன் றுரைத்தனளால்

வேறு.

மறையவர் மறைசொன் னீத வழிநிற்போர் மடநல் லாரா
நிறையவர் பசுக்கள் பாலர் நீத்தவர் தவஞ்செய் நீதத்
துறையவர் தம்மைக் காத்துத் தொல்வுற மதற்குத் தீய
குறைசெயுங் கொடியோர் தம்மைக் கொல்லுதற் காக வந்தார். (கூஎ)

அன்னவர் யாவ ரென்னி லடற்பல பத்தி ரப்பேர்
மன்னிய விராம னோடு மறுவில்சீர்க் கிட்டி ணன்று
னுன்னையுன் னிடத்தே வந்தே யொறுத்துய ருண்பா னிற்க
வென்னையென் னிடர்செய் தாய்நீ யென்றவண் மறைந்து போனுள்

மாயவல் லாடான் சொன்ன மாற்றம துளத்தில் வைத்துத்
தீயவன் னெறிசேர் கஞ்சன் றேவகி யோடு மன்னு
ஞயகன் றனையும் விட்டு நன்மொழி சொல்ல வன்னுர்
போயினு ரவர்தாம் வாழும் பொன்னகர் மதுரை தன்னில். (கூகூ)

வானிற் கஞ்சன் காணு மறைந்தவம் மாயை வல்லா
ளானவ ளருளான் மேலா மருமறைச் சொரூபி யாகித்
தானவர் முதலாந் தீயோர் தங்களைக் காய்ந்து தூய
ஞானநற் பத்தர்க் கென்று நல்லருள் புரிவா ளாகி. (௧00)

வரதமோ டபயம் வெற்றி வளைநேமி நான்கு நான்கு
கரமிசைத் தரித்தா ளாகிக் கவுத்துவ மணியும் பூண்டு
சிரமிசை மணியும் பொன்னுந் திகழொளி முடியுஞ் சூடி
புரமுட னங்கந் தோறு மொளிர்கல னுடையா ளாகி. (௧0௧)

பொன்னிறத் தொளிப்பட் டாடை பொலிவுறப் புனைந்தா ளாகி
மின்னுபச் சிலையின் வண்ண மேனிய ளாகி வெற்றி
மன்னிய வலியா ளாகி மங்கள ரூபி யாகித்
தன்னிக ரில்லா ளாகிச் சகலமுந் தானே யாகி. (௧0௨)

பூவின்மே லயனு மெல்லாம் பொலிவுறப் படைப்பா ளாகிக்
காவல்செய் யரியா யெங்குங் காத்தினி தளிப்பா ளாகித்
தாவில்சீ ரரனே யாகித் தாநொழித் திடுவா ளாகி
மூவர்முத் தொழிலுஞ் செய்த முதன்மையு முடைய ளானாள். ()

வேறு.

இப்பெரு மகிமை யுடையளாய் மதுகை யிடவர்க ளிறப்பதற் கியற்றி, வைப்பெரும் படைக்கை மயிடனைக் காய்ந்து வருசும்ப நி சும்பரை மாய்த்தே, தப்பின்மூ வுலகு மடக்கியாள் வாணன் றலைய றிந் திடச்செயு நிமித்த, மொப்பிலாக் கன்னி நாயகி யவளா யொ ண்பதிக் குமரியுற் றனளால். (௧0௪)

மூர்த்திவிசேடச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். (௩௯௧)

## மூர்த்திவிசேடச்சருக்கச் சுருக்கவசனம்.

நைமிசாரணிய வாசிகளாகிய ருஷிகள் சூதமுனிவரை நோக்கிச் சுவாமீ! குமரித்தலமான்மியங் கேட்டு மகிழ்ச்சியடைந்தனம். இனிக் கன்னிநாயகி யாகிய மூர்த்திவிசேடமருளிச் செய்யவேண்டுமென்று கேட்கச், சூதமுனிவர் கூறுவாராயினர். பூர்வத்திலிந்தக்கதை தெத்தாத்திரைய முனிவரால் கார்த் தியவீரிய அரசனுக்குச் சொல்லப்பட்டது. இந்தக்கதை வரலாற்றை யுங்களு க்குச் சொல்லுகிறேன். விஷ்ணு மூர்த்தியே கன்னிநாயகியாக அவதாரஞ் செய்தனர். இவ்வாறு பாற்மபுராணங் கூறுகின்றது. உயிர்களை யிரக்ஷிக் குங் கடவுள் விஷ்ணுவே; அவரையன்றி வேறொருவருங் காக்குங்கடவுளில்லை.

காரியார்த்தமாக அவ்விஷ்ணுவே நானாவித சத்திரூபமாயினர். அந்தச் சத்தி கன்னி துர்க்கை முதலிய பல நாமங்களையும் படைத்தவள், அன்னம் கருடன் முதலிய வாகனமும் பலவித ரத்நாபரணங்களுமுள்ளவள், ஐந்துவிதமாக விளங்கும் பொன்மணியாபரணங்கள் பிரகாசிக்குமுடியினையுடையவள். அசுரரை வேரறுப்பதற்காகத் தெய்வத்தன்மையுடைய ஆயுதங்கள் பலவற்றையும் பெற்றவள், திரிலோகங்களையு மிரக்ஷிப்பதற்காகவே வந்து பிறந்தவள், மாயாவென்னுமியற் பெயரையுடையவள், கலியுகத்திலே பாவத்தின் மிகுதியை யொழிக்கும் பொருட்டுக் கங்காநதி வியாபித்துச் சமுத்திரத்திலே செல்லுங் கீழ்த்திசையிலே யாயிரமுகத்தையுடையவளாகி அசுரர்முதலானவர்களால் உலகந்துன்பமுறாதவண்ணமிருந்தனள். மேற்றிசைச் சமுத்திரக்கரையிலே யுலகமுய்யுமாறு தருமத்தினிலைமை தவறாதபடி நரசிங்கரூபங்கொண்டு விஷ்ணுமூர்த்தியிருந்தனர். கோகன்னமென்னும் க்ஷேத்திரத்திலே விஷ்ணுவுஞ் சிவபெருமானும் அன்புற்று வாழ்வாராயினர். தருமத்தை யிரக்ஷிக்கும்பொருட்டுத் தசரத ராமனாகிய திருமால் மயேந்திர மலையிலே அறிவாலுயர்ந்த அனுமனை இருக்கும்படி கட்டளையிட்டனர். தெண் சமுத்திரக்கரையிலே முன் சொல்லப்பட்ட மாயாவென்பவள் கன்னியென்னும் பெயரைப் பெற்று வசித்திருந்தனள். அவளே கன்னிநாயகி யென்பவளென்று தெத்தாத்திரைய முனிவர் கூறக் காத்தியவீரியவரசன் கேட்டு மகிழ்ந்து வணங்கிக் குமரிநதியின் பக்கம் கன்னிநாயகி தோன்றியதும் அவள் சரித்திரமும் தெரியும்படி யருளிச்செய்யவேண்டுமென்று கேட்டனன். உடனே முனிவர் சொல்லுவார். அரசனே! கேட்பாய் அசுரராலே முனிவர்களுக்குந் தேவர்களுக்கும் மனிதர்களுக்குந் துன்பமிகவுண்டாக அதுகண்டு பூமிதேவி திகைப்படைந்தனள்.

அத்துன்பத்தால் பிராமணர் சன்மார்க்கங்கள் குறைந்தன. கொடிய காமக்குரோதாதிகள் திடம்பெற்றன. பாதகங்களெல்லா நடைபெற்று வந்தன. வாய்மை யிரக்கம் அறிவு ஒடுங்கின. பாவமாகிய புருஷன் வலிமையடைந்தனன். தருமமாகிய தேவன் மெலிவையடைந்தனன். நிலங்களிற் பயிர்வளங்கள் குறைந்தன. மழைத்துளிகள் குறைந்தன. கடல்போலப்பெருகிய கங்காநதிப்பெருக்கும் வறந்தன. சிவாலய விஷ்ணுவாலயங்களிற் பூசை வளங்குறைந்தன. அரசநீதி தடுமாறின. பெண்கள் கற்புங் கெட்டன. வருணாச்சிரம தருமங்களுங்கெட்டன. ஆதலினாற் பூமிதேவி தன் வலிமை குன்றிச்சோகமுற்று இவ்வருத்தம் இந்திரனிடத்திற் புகுந்தாற் போகாதென்று நினைத்துப் பிரமதேவனிடஞ் சென்று வணங்கித் தன்னுடைய துயர முழுவதுஞ்சொல்லி இத்துயரத்தை நீக்குதற்கு வந்தேனென்று கூறுதலும், பிரமதேவன் கேட்டுப் பூமிதேவியே மிகுந்த பலமுள்ள அசுரரை யென்னாற்

கொன்று உனது துக்கத்தைப் போக்க முடியாது. சங்கு சக்கரதாரியாகிய விஷ்ணுமூர்த்தியினாலேயாகுமென்று சித்தர் தேவர் முதலியோர் சூழவெழுந்து திருப்பாற் கடலின்பக்கமே சென்றனன். பூமிதேவியும் ஒரு பசுவடிவமெடுத்துக்கொண்டு பின் தொடர்ந்து சென்றனள். இங்ஙனம் சென்று பாற்சமுத்திரத்தினடுவே ஆதிசேடன் மீது இலக்குமி திருவடிகளை வருடநித்திரை செய்கின்ற திருமாலைக்கண்டு வணங்கி அவரது பெரும்பிரதாபங்களை யெடுத்துச்சொல்லிப் பற்பலவிதமாகத்துதித்து நிற்க, அதுகேட்டு அத்திருமால் நித்திரைவிட்டெழுந்து ஒன்றுக்கு நீர் பயப்படவேண்டாம். நீங்களெண்ணிவந்த காரியத்தை யறிந்துகொண்டோம் பூமிதேவியின் துன்பத்தை நீக்கும்பொருட்டுப் பலபத்திரனாகவும் கிருஷ்ணனாகவும் அவதாரஞ்செய்வோம். நீங்க ளவரவ ரிருப்பிடத்துக்குப் போகலாமென் றருளிச்செய்தனர். பிரமதேவன் முதலிய வெல்லாத்தேவர்களும் அதுகேட்டுச் சஞ்சலமொழிந்து மகிழ்ச்சியுடையரா யவரவர் தானங்களுக்குச்சென்றனர்.

அதன்மேற் சந்திரகுலத்திற்பிறந்த வஞ்சகனாகிய கஞ்சனென்பவன் உலகத்தையரசாண்டு காத்துச சதுரங்கசேனையுடையவனாய் மதுவென்னுமரசனைப்பார்க்கினு மிகுந்தபலமுள்ளவனா யொருபோதுங் கவலையில்லாதவனாயிருந்தான்; அவனுக்குத் தங்கையாகிய தேவகியென்பவள் இலக்குமியைப்பார்க்கினு மழகுவாய்ந்தவளாக இருந்தாள். பருவகாலமடைந்தவுடனே யவளைச் சருவாபரணங்களா லலங்காரஞ்செய்து கஞ்சன் வசுதேவனுக்கு விவாகஞ் செய்துகொடுத்து நாடுநகரம் ரதகசதுரகபதாதிகளுங் கொடுத்து மகிழ்ச்சியடைந்தனன். வசுதேவனுஞ் சிலநாள் தேவகியுடனே காமவின்பத்தை யநுபவித்திருந்து பின்னர் தமதிருப்பிடத்துக்குப் போகவேண்டுமென்று கஞ்சனாகிய மைத்துனனுக்குத் தெரிவித்தனன். உடனே கஞ்சனு மதற்கிசைந்து களிகூர்ந்து துசங்கள் கட்டிய தேரிலே தேவகியையும் வசுதேவனையு மேற்றிவைத்துப் பலவித வாத்தியங்க ளிடிபோலமுழங்க அரசர்கள் முதலிய யாவருஞ்சூழ்ந்துவரத் தேரைநடாத்திக்கொண்டுவந்தான். இங்ஙனந் தேரை நடாத்திக்கொண்டுவருகிற சாரதியாகிய கஞ்சன் கேட்கும்படி ஆகாயத்தினின்று மொருவாக்குத் தேவகியினது எட்டாவது கருப்பத்தாலே கஞ்சனுயிரிழந்து விடுவானென்றெழுந்தது. அவ்வாக்கைக் கஞ்சன் கேட்டு மனங்கொதித்து இது பொய்யன்று மெய்யேயென நினைத்துத் தான் சீதனமாகக்கொடுத்த நகரத்திலே தேவகியையும் வசுதேவனையுங் கொண்டுவந்து எழுநிலைமாடமொன்றிலே சிறையிட்டுக் கால்களிலே விலங்குபூட்டிவைத்து வாயில்காப்பாளராக ஆயிரங் கிங்கரர்களை நியமித்து அவர்களைச் சூழ நால்வகைச்சேனைகளையுநிறுத்திச் சேனைகாவலனாக ஒருவனைவைத்துச் செல்லுவான். வாராய் சேனைகாவ

லனே யென்றங்கையாகிய தேவகி கருப்பமுண்டாகிப் பெற்றபிள்ளை மண்ணில் விழுவதற்கு முன்னரே யென்னிடம் வந்து தெரிவிக்கவேண்டுமென்றுசொல்லித் தனதிருப்பிடத்துக்குச் சென்றனன்.

கஞ்சனிட்டகட்டளையை மறவாமற் சேனைகாவலனுந் தேவகிதேவிகருப்பமுண்டாகிப் பெற்றபிள்ளை பூமியில்விழுவதற்குமுன்னே சென்றுகஞ்சனிடந் தெரிவித்தனன். அதுகேட்டுக் கஞ்சனுடனே யெழுந்துவந்து பிள்ளையைத்தரையிலே யடித்துக் கொன்றுவிட்டுச் சேனைகாவலனுக்கு வேண்டிய வஸ்திராபரணங்களெல்லாம் வெகுமதியாகக்கொடுத்துக் காவல்பதனமென்று சொல்லிப்போய்விட்டனன். இறந்துபோகும் பிள்ளையின் அழுகையோசையைக்கேட்ட தேவகி தன்னயகனுடனே பதை பதைத்துப் பூமியிலே விழுந்து விம்முற்று ஏங்கிப் பெருமூச்சுவிட்டுக் கண்ணீர் ஆறாக ஓட அழுது வயிற்றிலறைந்து புலம்பி மனமுருகி நைந்தனள். அருகிருந்த சகிமாரும் பிறருந் தேற்ற ஊழ்வலியை விலக்குவார் யாரென்று ஒருவாறுமனந்தேறி அவ்விருவரு மிருந்தனர். சிலநாட்சென்றபின் மீளவுந் தேவகி கருப்பமுற்று ஒருபிள்ளையைப் பெற்றனள். அதையுமுன்போலவே கஞ்சன்வந்து கொஞ்சமும் பயமில்லாமற் கொன்றுவிட்டனன். இவ்வாறு ஆறுபிள்ளைகளை வஞ்சகனாகிய கஞ்சன்வீணாகக் கொல்லுதலும் தேவகி யேழாவது கருப்பமுற்று எழுமாதஞ்செல்ல வயிறு பூரிக்குஞ் சமயத்தில் விஷ்ணு மூர்த்திதெரிந்து அந்தக்கருப்பத்தை யுருவழியாமலெடுத்து வசுதேவன் முதலாவது ஸ்திரீயாகிய உரோகணி வயிற்றிலே வைத்துவிட்டுத் தாம்போய்த் தேவகிவயிற்றிலே மாயமாகச்சென்று கருப்பமாகி யிருந்தார். எல்லாவுலகத்தையுந் தம்வயிற்றுள்ளடக்கு மாயனைத் தனதுவயிற்றிலடக்கிக்கொண்ட தேவகி பெருமையை யாராலே சொல்லமுடியும். உரோகணி மூன்றுமாதஞ் சென்றவுடனே சூரியனைப்போலப் பிரகாசிக்கும் பிள்ளையைப்பெற்றனள். அந்தப் பிள்ளைக்குச் செய்யவேண்டிய கிரியைகளைச்செய்து பலபத்திராமனெனப் பெயரிட்டு வளர்த்துவந்தனர். இப்பால் தேவகியும் பத்துமாதமானவுடனே யாவணிமாதத்தின் அமரபக்ஷத்து அஷ்டமிகூடிய உரோகணி நக்ஷத்திரத்திலே புதவாரத்தன்று உதயாதியில் கருஞ்சூரியன் ரத்நகிரீடமகரகுண்டல முதலிய வாபரணங்களுடன் சங்கு சக்கர தாரியாகத் தோன்றியதுபோலொரு பிள்ளையைப்பெற்றனள்.

இந்த அதிசயமான குழந்தையை விலங்கு பூட்டப்பட்ட வசுதேவனுந் தேவகியுங்கண்டு கண்களிகூர நாக்குழற உரோமஞ் சிலிர்ப்ப மனமகிழ்ந்து பூருவத்திற்செய்த நமதுதவப்பயனோ திருப்பாற்கடலிற் பள்ளிகொண்ட திருமாலோ தருமமோ என்று வியந்து ஐயோ இத்தகைய குழந்தையைக் கஞ்சன் கண்டாற் கொலைசெய்துவிடுவானே யென்றெண்ணி யேங்கித்

துன்பத்திலழுந்தினர். அதுகண்ட அந்தக்குழந்தையாகிய விஷ்ணு மூர்த்தி தாய்தந்தையர் முகத்தைநோக்கிக் கஞ்சன் என்னைக்கொன்று விடுவானென்று பயப்படவேண்டாம் துன்பத்தைவிடுங்கள். உரோகணி வயிற்றிலே பலராமனாகப்பிறந்தேன் உங்கள் வயிற்றிலு மிப்போது சனித்தேன். முன்னைநாளிலே யிரணியனைக் கொல்லுதற்குத் தூணிலே தோன்றினேன். பூமியைக்கவர்ந்துகொண்டுபோன அரசனைக்கொல்லுதற்கு வராகவதாரமானேன். திரிலோகத்தையுங் காத்தரசுசெய்த மாவலியையுஞ் சிறைப்படுத்தி வைத்தேன். தேவர்களெல்லாம்வாழ அசுரர்கிளைகளை யெல்லாம் நாசஞ்செய்தேன். மானமில்லாத இந்தக் கஞ்சனுயிரைக் கொல்லுவது எனக்குப் பெரியதன்று. அன்புபொருந்திய நந்தனென்னும் இடையன் மனைவியாகிய அசோதைவயிற்றிலே எனக்குப்பின்வந்த பெண்ணென்று'சொல்ல வந்து பிறந்தேன். இந்த வுருவத்தை மறைத்துத் தற்சமயம் பிறந்தபிள்ளை வடிவமாகின்றே னென்னைக்கொண்டுபோய் அசோதையினிடம் வைத்து என் தங்கையாகிய மாயவளைக்கொண்டுவாருங்களென்றுசொல்லிக் குழந்தை வடிவமாகிக் கிடந்தனர். அக்குழந்தை முகத்தை வசுதேவன்பார்த்து என்னுடைய கால்விலங்கும் வாயிலாளர் காவற்றடையும் எவ்வாறு நீங்கித் திருடர் போல நான் போய்வரும் விதமெவ்வாறு சொல்லுவாய் ஐய என்றனர்.

அப்போது தன்னுடைய காலிற்பூட்டி வைத்திருந்த விலங்கு தெறித்துவிட்டது. வாயில்காப்போரது உறங்காத விழிகளும் உறங்கின. அதுகண்டு தன் புத்திரனை யெடுத்துக்கொண்டு வசுதேவன் நந்தனுடைய மனையைத்தேடி வரும் வழியிலே இடையிலே யொரு நதி பெருகிவரக்கண்டு திகைத்துநின்றனன். அந்நதியும் இடைவிட்டுப்பிரிந்து வழிகொடுத்து நிற்ப அவ்வழியே விரைந்து சென்று நந்தன் வீட்டுவாயின்கட் புகுதலும், அவ்வாயிலுமிவனைக் கண்டவுடன் பூட்டுவிட்டுத்திறந்து வழிவிட்டது. உடனே உள்ளேபுகுந்து நித்திரை செய்கின்ற அசோதை பக்கத்திலே கிடந்த புத்திரியாகிய மாயாளைக் கையிலேயெடுத்து மார்பிலணைத்துக்கொண்டு, தன்புத்திரனைக் கிடத்திவிட்டு மிகுந்த மனமகிழ்ச்சியுடனே மீண்டு விரைவில்வந்து தானிருக்கும் அரண்மனைக்குள் வாயில்காப்போரறியாமற்போய்த் தனது மனைவிகையிலே புத்திரியைக்கொடுத்தனன். தேவகியும் அப்புத்திரியினழகை வியந்துபார்த்துக் கஞ்சனிந்தப் பிள்ளையைக் கொல்லமாட்டானென்று நினைத்திருந்தனள். வசுதேவன் முன்போலக் காலிலே தளையைப்பூட்டிக்கொண்டிருந்தான். அப்போது குழந்தையாகிய மாயாள் அழுகின்ற குரலைக்கேட்ட சேனை காவலன் அதிசீக்கிரத்திற்போய்க் கஞ்சனிடத்திலே குழந்தை பிறந்த செய்தியைச் சொல்லுதலும், கஞ்சன்விரைந்தோடிவந்து குழந்தையைக் கையிலே யெடுத்துக்கொல்லத் துணிந்தவளவில் தேவகிகஞ்

சனை நோக்கி ஐயா இந்தப்பெண் புத்திரியாலே யுனக்கென்ன கேடுவரும் கொல்லக்கூடாதென்று தடுத்துங் கேளாமல் பெண்ணென்றாலென் ஆணென்றாலென் என்று குழந்தையைத்தூக்கி யடிக்கும்பொருட்டு எடுத்த போதில் குழந்தை காலையுதறிக் கஞ்சனது மார்பில் மிருதுவாகவுதைத்த லும், வாயினி லிரத்தங்கக்கக் கஞ்சன்மூன்றுயோசனை தூரத்திற்போய் விழு ந்தனன். மாயவன் றங்கையாகிய மாயவளும் ஆகாயத்திலே நின்று ஆயிரந் தலையும் ஆயிர முடியும் ஆயிரங்கையும் ஆயிரமாயுதங்களுங் காட்டிநின்று கஞ்சனைநோக்கிச் சொல்லுவாள் பிராமணர் அவர்சொல்லிய நீதிவழி நிற்பவ ர் பெண்கள் பசுக்கள் பாலர்கள் முனிவர்கள் தவஞ்செய்பவர்கள் இவர்களை க்காத்துப் புண்ணியத்துக்குத் தீங்குசெய்யுங் கொடியவரைக் கொல்லுதற் காகப் பலபத்திராமர் தசரதராமர் கிருஷ்ணர்பிறந்து உன்னையுங்கொலைசெ ய்தற்காக இருக்க என்னையே னித்துன்பஞ்செய்தாயென்று சொல்லிமறை ந்தனள். அதுகேட்டுக் கஞ்சன் பயந்து வந்து தேவகியுடனே வசுதேவனை யுந் தளையவிழ்த்துவிட்டு உபசரித்துத் தமதூருக்குப்போகும்படி யனுப்பி விட்டனன். அவ்விருவருந் தமது வடமதுரை நகரத்துக்குப்போய்ச் சேர்ந் தனர். கஞ்சனையறியாமல் ஆகாயத்திலே மறைந்த மாயவள் திருவருளாலே வேதசொரூபியாகி அசுரர் முதலிய பகைகளைக் களைந்து தொண்டர்களுக் குக் கருணைபுரிந்து வரதமுமபயமுஞ் சங்குசக்கரமு நான்குகரங்களிலுந்த ரித்தவளாய்க் கௌத்துவமணியணிந்து முடியிலே ரத்நகிரீடமு மாபரணங் களும் புனைந்து எல்லாவவயவங்களிலும் அததற்குரிய பணிகள்பூண்டு பசி ய திருமேனியும் வெற்றியும் வலிமையு மங்களமு முடையளாய்த்தனக்குத் தானே சமானமாயெல்லாந் தானுய்த் திரிமூர்த்திகள் செய்யுஞ் சிருஷ்டி தி தி சங்காரஞ்செய்பவளாயினள். அதன்மேல் மதுகையிடவர்கள் மயிடன் சு ம்ப நிசும்பர் ஆகிய அசுரரை வதைத்து வாணசுரனுடைய வலியைத் தொ லைத்துக் கொல்லுதற்காகக் கன்னிநாயகியென்னும் பெயரையுடையவளாய் க் குமரித்தலத்திலே யெழுந்தருளி யிருந்தனள்.

மூர்த்திவிசேடச் சருக்கச்சுருக்கவசனம் முற்றிற்று.

## பதினொராவது

# மதுகையிடவ சங்காரச்சருக்கம்.

உலகெலாங் கடல்கள் பொங்கி யுண்டிடு மூழிக் காலத்
திலகுமா மணிசேர் சென்னி யீரைஞ் ஞூறுடைய சேட
னலனுறு பாய லாக ஞானநித் திரைகொண் மாயன்
மலரிரு செவியி னின்று வளர்ந்தும் பியினிற்றோன்றி. (க)

வந்தன ரிருவர் திண்மை மாமது கைடப வப்பேர்
தந்திடு மசுர ரோங்குந் தடம்புய வலியி னாலே
யந்தவா னுலகில் யாரு மமர்செய்வா ரின்றி மாய
னுந்தியங் கமலந் தன்னி லுதித்தவ னிடத்திற் சென்றார். (௨)

கொடியவெங் கோபத் தோடுங் கொலைசெய வந்த வந்தக்
கடியவல் லசுரர் தம்மைக் கண்டுளத் தச்ச மெய்தி
நெடியமா யவனை நோக்கி நினைத்துவாழ்த் திடவன் னோனு
மடிகொளுந் துயிலால் வேதன் வழுத்துத லறியா னாக. (௩)

அடுத்தெதி ரசுரர் தம்மை யயனுமுங் காரந் தன்னாற்
றடுக்கவும் வந்து வந்து சார்வுற மலரின் மேலோ
னெடுத்தபல் லுயிர்கட் கெல்லா மெய்திடுந் துயில்சோம் பாதி
கொடுத்திடு மாயை தன்னைக் கொண்டுதான் மயக்கு மந்த. (௪)

மாயையாஞ் சத்தி தன்னை மறைகளால் வழுத்த வேதன்
றாயவச் சத்தி யன்னோன் றுதிக்கவுண் மகிழ்ச்சி கூர்ந்து
நேயமா நெடுமால் சோதி நிறைமுகங் கண்கண் மூக்கோ
டேயுநல் லிதய மார்பங் கெழில்பெறு வாகு பாதம். (௫)

இவைமுத லாய வங்கத் திருந்துயி லுருவ மான
குறையுறு மாயாசத்தி கோளுருக் கொண்டு வந்து
கவையுறு மலரோற் கஞ்சல் கையமைத் தருளும் போழ்தி
லவனெழுந் துணர்ந்த மாயோ னார்த்தெழு மசுரர்க் கண்டான். (௬)

ஆங்கவ ரோடு தண்டா லடுந்திறல் வாளி னற்கை
வாங்கிடும் வில்லாற் போர்கள் வலியுறச் செய்தும் வானு
ணீங்கில ராகக் கண்டு நீண்டகைப் போர்கண் மிக்கா
யோங்குமை யாயி ரத்தாண் டியுத்த நீங் காது செய்ய. (௭)

கலித்திடு மசுரர் தங்கள் கடுந்திறற் போர்க்காற் றாமல்
வலிக்குடைந் திளைத்த மாயன் மனத்தினுற் பரையை வாழ்த்த
வொலித்திடு மறையுங் காணு வொருபரா சத்தி தோன்றி
மெலித்திடு மசுரர் தம்மை வெல்லுதற் குரைப்பே னென்றாள். (௮)

உற்றவோ ருபாயத் தன்றி யோங்கிய வலியின் மிக்க
கொற்றவல் லசுரர் தம்மைக் கொன்றிடற் கரிதென் றன்னாண்

மற்றதற் குபாயந் தோற்ற மனத்தினில் வைப்பே னென்னச்
சொற்றவக் கணமு பாயந் தோற்றின மாயன் கண்ணே. (௯)

கரவலி யசுரர் தங்கள் கதிர்முக நோக்கி மாலு
முரனொடு நரகன் கேசி முதலினோ ரவுணர் தம்மி
னூரமிகு வலிநும் பாற்கண் டுவந்தன னுங்கட் கேற்ற
வரமருள் கின்றே னென்ன மற்றவர் மறுத்துச் சொல்வார். (௧௦)

எங்களில் வலியோர் தம்பால் யாம்வர மேற்ப தல்லாற்
பங்கமில் வலியி லாவுன் பால்வரங் கொள்வ தென்னோ
மங்கலில் வலியோம் யாங்கள் வரந்தர வாங்கு கென்று
ரங்கவ ருரைக்கும் போழ்தி லகமகிழ்ந் தரியுஞ் சொல்லும். (௧௧)

என்கையா லீவிர் சாவுற் றிடும்வரந் தருதி ரென்ன
வன்கையா ரசுரர் சொன்ன வார்த்தைதப் பாது சொல்வா
ருன்கையான் மடிவான் வேண்டி லோங்குநீ ரிலா விடத்துன்
றன்கையா லிறப்ப யாமுந் தந்தனம் வரந்தா னென்றார். (௧௨)

வாங்கிடும் வரஞ்சேர் மாயோன் வன்மது கையிட வப்பேர்
தாங்கிடு மவுணர் தம்மைத் தடவலிக் கரத்தாற் பற்றி
யோங்கிய வூரு மேல்வைத் தொளிதிகழ் சக்க ரத்தா
லாங்கவர் சிரங்கள் வீழ வறுத்துயி ருண்டா னம்மா. (௧௩)

வன்றிறன் மாலாற் றீமை வாழ்மது கையிட வப்பே
ரென்றிடு மசுரர் மாய வியற்றிடு முபாயத் தாலே
வென்றவள் குமரி யென்னும் வியனகர் தன்னில் வாழுந்
தன்றனிக் கிணையில் கன்னித் தயாபரா சத்தி யென்றே. (௧௪)

மாதவ மார்க்கண் டற்கு மலரில்வாழ் மறையோன் சொன்ன
வேதமின் மார்க்கண் டேயத் திருந்தவக் காதை தன்னை
நீதமா தவர்க ளாய நேமிமா வனத்து ளோர்க்குச்
சூதமா முனிவ னென்னுந் தூயமா தவன்சொன் னானால். (௧௫)

மதுகையிடவ சங்காரச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (௪௰௫)

## மதுகையிடவ சங்காரச்சருக்கச் சுருக்கவசனம்.

எல்லாவுலகங்களையு நசிப்பதற்குச் சமுத்திரங்கள் பொங்கி மேலெழு யுகாந்தகாலத்திலே ஆயிரம்பண மகுடங்களையுடைய ஆதிசேடனாகிய பாயலிலே நித்திரைசெய்கின்ற திருமால் இரண்டுசெவிகளினின்றும் வளர்கின்ற குறும்பியிலேபிறந்த மதுகையிடவனென்னும் இரண்டசுரர் தமதுபுயவலியினாலே தம்முடனெதிர்த்து வானுலகத்தில் யுத்தஞ்செய்வாரொருவருமில்லாமையால் பிரமதேவனோடு யுத்தஞ்செய்தற்குச் சென்றனர். அதுகண்டு பிரமதேவன் பயந்து மகாவிஷ்ணுவை நினைத்துத் துதிசெய்யச், சோம்பலாகிய நித்திரையினாலே அவர் அதை யுணராமலிருந்தனர். மதுகையிடவர் பிரமதேவனைநெருங்கி அவன் தடைசெய்வதையுங்கடந்து வந்துநிற்கப், பிரமதேவன் எல்லாவுயிர்கட்குந்துயில் சோம்பலாதியை விளைவிக்கு மாயாசத்தியை வேதங்களாலே துதிக்க அத்துதிக்கு மகிழ்ச்சிகூர்ந்து விஷ்ணுவின் முகங்கள் மூக்கு இருதயம் மார்பு தோள் பாதம் ஆகிய அவயவங்களிலே நித்திரைவடிவாயிருந்த மாயாசத்தி தனது சுயவடிவங்கொண்டுவந்து பிரம்தேவனுக்கு அபயாஸ்தங் கொடுத்தருளும்போதில் நித்திரை விட்டெழுந்தவிஷ்ணு மதுகையிடவரைக்கண்டு, தண்டுவாள் வில்லால் யுத்தஞ்செய்தனர். அவ்யுத்தத்தால் அவ்வசுரரிறந்தாரில்லை. பின்னர் கையினாலே யையாயிரம்வருடம் யுத்தஞ்செய்தும் மதுகையிடவருக்குத் தோற்றுவலியிழந்து மனத்தினாலே பராசத்தியைத் தோத்திரஞ்செய்தனர்.

பராசத்தி கருணைகூர்ந்து விஷ்ணுவினுடைய நினைப்பிலேயொரு உபாயத்தைத் தோற்றுவித்தனள். உடனே கைவலியுள்ள மதுகையிடவரை நோக்கி விஷ்ணுசொல்லுவார் முரகாசுரன் நரகாசுரன் கேசி முதலிய அசுரரைப்பார்க்கிலும் நீங்கள் பலமுள்ளவர்களாயிருக்கிறீர்கள் ஆதலினுங்களைச் சந்தோஷித்தேன் உங்களுக்குவேண்டிய வரத்தைக்கேளுங்கள் கொடுக்கின்றேனென்ன, அவ்விருவருங்கேட்டு எங்களைப்பார்க்கினும் வலியவர்களிடத்தில் யாங்கள்வரங்கேட்பதன்றி யெங்களிற் பலங்குறைந்த வுன்னிடம் யாங்கள்கேட்கும் வரமொன்றுமில்லை யாங்கள் கொடுக்கும் வரங்களை நீ வேண்டுமானாற் பெற்றுக்கொள்வாயென்றனர். அதுகேட்டு விஷ்ணு மகிழ்ச்சியுற்று அவரைநோக்கி என்கையினாலே நீங்களிருவரு மிறக்கும்படியானவரங்கொடுங்களென்றுகேட்க, மதுகையிடவர் இவ்வரமுனக்கு வேண்டுமானால் சலமில்லாத இடத்திலே யுன்கையினாலே நாங்களிறக்கும்படி வரந்தந்தோமென்றனர். அவ்வரம்பெற்ற விஷ்ணு அவ்வசுரரிருவரையுங் கைகளாற் பிடித்துத் தன்னுடைய தொடைமேலேவைத்துச் சக்கரத்தாலே யவர்கள் தலையையறுத்து வீழ்த்திக்கொன்றனர். வலிமைதங்கிய விஷ்ணுவாலே கொடிய மதுகையிடவர் இறக்க வுபாயந்தோற்றுவித்த பராச தியாகிய கன்னிநாயகி குமரித்தலத்திலே வீற்றிருந் தருளினளென்று க்கண்டேய முனிவருக்குப் பிரமதேவரருளிச்செய்தனர். மார்க்கண்டேய புராணத்திலிருந்த இக்காதையை நைமிசாரணிய வாசிகளாகிய முனிவருக்குச் சூதமுனிவரருளிச்செய்தனர்.

மதுகையிடவ சங்காரச்சருக்கச் சுருக்கவசனம் முற்றிற்று.

## பன்னிரண்டாவது

# மகிடாசுரேந்திரயுத்தச்சருக்கம்.

ஒப்பிலா விக்கதை யுயிர்கட் கொண்கதி
வைப்பதா யிருப்பது மார்க்கண் டேயமா
மெய்ப்புரா ணத்தினிற் றேவி மேன்மைகள்
செப்பிய வதிலுள துமக்குச் செப்புகேன். (க)

சுரிமருப் பெருமையிற் றுலங்கு மாமுக
னெரிபுரை விழியினு னெரியி னுப்பணி
னரியமா தவமிக வாற்ற லாலயன்
பெரிதுறு வரமெலாங் கொடுக்கப் பெற்றவன். (உ)

நீலவொண் கிரியென நிவந்த மெய்யினன்
ஞாலமெங் கணுந்துயர் நடத்துந் தீமையான்
காலனும் வடவைவெங் கனலுங் கார்நிற
வாலமு மஞ்சுறக் கொலைசெ யாண்மையான். (௩)

துடைப்பரும் வலத்தினன் றாய நான்முகன்
படைத்திடு முயிரெலாம் பற்றி வாயிலிட்
டடக்கிடும் வயிற்றின னடன்மிக் கோர்களுந்
தடுப்பரும் வலியுடைத் தானை மிக்குளான். (௪)

கடலெலாங் கலங்குறக் கலக்கும் வார்கழன்
மிடலுறு தாளினன் விறல்வெங் கோளினு
னடலைசெய் மாயைக ணடத்து நாயக
னடல்புனை மயிடனென் றறையு நாமத்தான். (௫)

இப்பெருந் திறத்தினு னியார்க்கு மின்னல்செய்
வைப்பெரும் படையுடை மயிட னென்பவ
னுப்பருந் தேவர்தம் முலக மெங்கணுஞ்
செப்பருந் துயர்மிகச் செய்ய லாயினன். (௬)

அன்னது கண்டவிண் ணமரர் யாவரு
மின்னுடை வயிரவாள் வேந்தன் முன்புபோய்
மன்னவ வவுணனு மயிட னம்முடைப்
பொன்னக ரனைத்தையும் பாழ்தி யாக்கினன். (௭)

என்னலு மிந்திர னெழுந்து சீற்றத்தோ
டன்னவன் மேற்செல்வா னமரர் தம்மொடும்
மின்னவெஞ் சிலையொடும் வயங்கொள் வாம்பரிப்
பொன்னெடுந் தேரொடும் போர்க்கஞ் சேகினன். (அ)

வானவர்க் கரசனும் வந்து நேருறத்
தானவர்க் கரசனுஞ் சமரின் மூண்டன
னானவப் போதினி லமரர் சேனைமே
லீனவத் தானவ ரெதிருற் றார்களால். (கூ)

வெம்புறு சக்கரஞ் சூலம் வேலயில்
பம்பிய தோமரம் பருத்த தண்டுகூ
ரம்பொடு பற்பல வாயு தங்கண்மிக்
கும்பரு மவுணரு முடன்று தூவினர். (க0)

சோனைமா மழையெனச் சொரிந்த பல்படை
வானவர் விடுத்தனர் வன்மை பூண்டவத்
தானவ ருடல்களிற் றைத்தி டந்ததா
லூனுறை யுடம்பெலா முதிரங் காலவே. (கக)

மையென விருண்டகார் வண்ணத் தானவர்
கையினற் றாவிய கதிர்கொள் வெம்படை
யையர்மேற் படுதலு மருவி வீழ்வபோன்
மெய்யினின் றிழிந்தது குருதி வெள்ளமே. (கஉ)

மறந்திக ழவுணராம் வஞ்ச நெஞ்சரு
மறந்திக ழமரரு மமர்செய் காலையிற்
றுறந்துடன் முழுவதுந் துண்ட கண்டமா
யிறந்தன ரசுரர்க ளெண்ணி லார்களே. (கங)

நமனென வெரியென நணுகி வெம்பியே
சமர்செயு மசுரர்தந் தண்டம் வாளயில்
கமருற விடந்துடல் பிளப்பக் காய்தலா
லமரரு மயங்கிவீழ்ந் தயர்ந்து சாம்பினர் (கச)

ஆயவச் சமர்தனி லமரர் சாய்வுறத்
தீயவல் லவுணருஞ் செருவிற் றார்கலால்

வாயுவன் கடவுளு மறவெங் கூற்றனுங்
காயழற் கடவுளுங் கனன்று பொங்கினர். (௧௫)

கூற்றுவன் கொடுந்தொழில் கொண்ட சண்டவெங்
காற்றுமக் கனலொடு கடவுண் மூவரு
மாற்றரும் படைகொடு வந்து தாக்கலு
மாற்றறேய்ந் தவுணர்தா மஞ்சி யோடினர். (௧௬)

அஞ்சியே யோடிய வவுணர் தம்மையும்
விஞ்சியே வெற்றிகொள் விண்ணு ளோரையும்
வஞ்சக நெஞ்சுடை மயிடன் கண்டுதன்
னெஞ்சமிக் கழன்றவ ணின்று கூறினன். (௧௭)

வலியுடை யசுரரை வலியில் வானவர்
மெலிவுறப் போரினில் வென்று ளாரினிப்
பொலிவிலா நரியும்வெம் புலியை வெல்லுமாற்
கலிகொலோ வென்றுளங் கனன்று பொங்கினன். (௧௮)

மாயிருந் திசையெலாங் கொடிம றைத்திட
வாயிரம் புரவிபூண் டணைப்ப தாகிய
சேயுயர் தேரினைச் செலுத்தி மூவர்மேற்
போயினன் மயிடனும் பொங்கு சீற்றத்தான். (௧௯)

அன்னவன் சேறல்கண் டமரர் வேந்தனுந்
துன்னிய வாம்பரித் தேரைத் தூண்டியே
முன்னுறத் தடுத்தனன் முனிந்து நோக்கினன்
றன்னிக ரின்றிய மயிடத் தானவன். (௨௦)

தேவர்தம் மரசனைச் செருவில் வென்றபின்
மூவர்தம் முயிரினை முழுது முண்பனென்
றேவிய தேரினை யிமைய வர்க்கெலாங்
கோவின்மேற் றூண்டினன் கொடிய தானவன். (௨௧)

அங்கவன் வருதல்கண் டமரர் வேந்தனுந்
துங்கமான் றேரினைத் தூண்டி யேயெதிர்த்
தெங்கடா போகவைநீ யென்னத் தானவச்
சிங்கமே றனையவன் சீறிக் கூறுவான். (௨௨)

நீயடா வென்முன நிற்கு மாண்மையான்
பேயடா தனசொலிப் பிதற்றுந் தன்மைபோல்
வாயடா தனசொலி யென்முன் வந்தனை
போயடா பிழைப்புயிர் போக்கு முன்னமே. (௨௩)

கானமாப் புலிக்கரா விடங்க ளேந்தநன்
கானமந் திரியையப் புலிய ருந்தல்போல்
வானவ ரருள்செயும் வரத்தைக் கொண்டுநீ
தானவர் தானம தழிக்கச் சார்ந்தனை. (௨௪)

என்றுவா சவனிழித் தியம்ப விவ்வுரை
வன்றிறல் வலியர்சொல் வார்த்தை யன்றென
வென்றிசேர் மயிடனும் வில்லொன் றேந்தியே
நின்றுநா ணெறிந்தன னிலங்கு லுங்கவே. (௨௫)

நிலங்குலுங் கினமிக நீண்ட மால்வரைக்
குலங்குலுங் கினவொளிர் கோதி லும்பர்தந்
தலங்குலுங் கினவதிர் தங்கு நாணொலிக்
கலங்கல்விண் ணவர்களு மஞ்சி யோடவே. (௨௬)

மந்தர வரையென வன்மை சேர்விலொன்
றிந்திர னெடுத்துநா ணெறிய வெண்டிசைச்
சிந்துரங் களுஞ்செவி செவிடு பட்டன
வந்தவல் லசுரரு மஞ்சி யோடவே. (௨௭)

படியொடு விண்டலப் பரப்பு மேருவு
நெடியமால் வரைகளு நீறு பட்டுக
முடிவுறுங் காலம்விண் முழங்கி வீழ்ந்திடு
மிடியென வதிர்ந்தமா லெறிந்த நாணொலி. (௨௮)

ஆளியே றனையவல் லசுரர் வேந்தனு
மீளியே றமரர்தம் வேந்து மிக்குயர்
கோளிகல் வில்லொடு புருவங் கோட்டியே
வாளிகள் சொரிந்தனர் மழையின் மும்மடி. (௨௯)

விண்ணையு மறைத்தன வேலை யோடுசூழ்
மண்ணையு மறைத்தன வளைந்த வெண்டிசைக்
கண்ணையு மறைத்தன கணக்க ரெண்ணிடு
மெண்ணையு மறைத்தன விருவர் வாளியே. (௬௦)

வெந்திற லவுணன்வில் விடுக்கு மம்பெலா
மிந்திர னறுத்திட விற்று வீழ்ந்ததாற்
சுந்தர வாசவன் றூவு மம்பெலா
மந்தவல் லசுரனு மறுத்து வீழ்த்தினன். (௬௧)

வரையெலா நிறைந்தன வளைந்த வாரிதித்
திரையெலா நிறைந்தன திரைகள் சிந்துமாக்
கரையெலா நிறைந்தன கலங்கு மாழிசூழ்
தரையெலா நிறைந்தன தடிந்த வாளியே. (௬௨)

வேறு.

வையப்புகள் மார்பம்புக வடுபேவிய விருவர்
வையங்கொடு பலசாரியை வந்தார்வலி பிந்தார்
வையம்புகும் வானும்புகும் வரையும்புகு முவருள்
வையம்பதின் மீதும்புகும் வயவோர்விடு மிரதம். (௬௩)

அங்கஞ்சிறு பொழுதாயினு மகலார்பொரு மிகலா
ரங்கம்முக முதலொண்கழ லணிதாள்வரை யுள்ள
வங்கம்பல வெங்கும்விடு மடுவாளிகள் படலா
லங்கங்குக வெழுசோரிக ளகல்வாரிதி பொருமால். (௬௪)

சோர்வில்லவ ரிருவோர்களு மடுபோர்பல சொல்லிப்
போர்வில்லொடு பொருபோதடு பொருவில்வலி யவுணன்
வார்வில்லினி யிவனைவெலும் வகைதானரி தென்றே
கூர்வில்லுமிழ் வடிவேலொரு கரமீதினிற் கொண்டான். (௬௫)

செவ்வேலவ னெனவேகறை திகழ்வாசவன் மீதில்
வெவ்வேலினை மயிடாசுரன் வெகுண்டேசெல விடுத்தா
னவ்வேலினை யுறும்வேலென வழல்சிந்திட வருமத்
தெவ்வேலினை யவனும்பல தெரிவாளிகொ டறுத்தான். (௬௬)

பின்னும்மொரு வடிவேலினை யெடுத்தேகனல் பெருகி
மின்னும்படி மயிடாசுரன் விடுத்தானது தடுத்தான்
பொன்னின்மணி முடிவாசவன் பொருவாளிகள் கோடி
முன்னும்பொழு தினியேயயின் முன்னங்கடி தேவி. (௩௭)

கோலங்கவை யொருகோடியை விடுத்தேகொலை செயவை
வேலங்கது தகள்பட்டமை கண்டேமிக வெப்பிக்
காலன்றன துடல்விண்டது கனல்கின்றது கடுவெஞ்
சூலந்தனை விடுத்தான்கணை தூவிந்திரன் மீதே. (௩௮)

போர்த்தானவர்க் கரசன்விறல் புகுசங்கம தூதி
யார்த்தானது கண்டானட லமராபதி யாள்வோன்
கார்த்தாரைக ளவைபோலவெங் கணைமாரிக டூவித்
தூர்த்தான்பொரு மயிடன்விடு சூலந்துக ளாக. (௩௯)

மண்டாரழ லெரிமூவிலை வைவேறுக ளாதல்
கண்டானடன் மயிடன்னழல் கண்டானுற வேகங்
கொண்டானெதிர் மகவான்பொரு கொடுவெஞ்சிலை முறியத்
தண்டாயுத மதுகொண்டெதிர் சாடிக்கடி தார்த்தான். (௪0)

வேறு.

முறிந்திடு வெஞ்சிலை மொய்வலி மானு
மெறிந்தொரு தண்ட மெடுத்தெதி ருற்றான்
மறிந்திட வில்வலி மண்டிய தண்டன்
செறிந்திடு திண்கதை யோடெதிர் சென்றான். (௪௧)

தண்டொடு தண்டெதிர் தாக்கினர் தாக்க
மண்டிய வோசையவ் வானொடு மண்ணு
மெண்டிசை யும்பய மெய்திட வோபா
ரண்டம் வெடித்தது போலதிர் வுற்ற. (௪௨)

மாறு புரிந்தெதிர் வாசவ னும்போ
ரேறிடு தானவ ரேசனு நேர்ந்தே
வேறுவெவ் வேறு விதம்பல வாகக்
கூறுபல் லாயிர சாரியை கொண்டார். (௪௩)

ஊழியி னுற்றதி ரோங்கிடி யேறு
வீழுவ போன்மிடல் வெங்கதை கொண்டு
பாழிவன் மார்பு பதைப்ப விடிப்பார்
போழ்வுற வுச்சிகள் பூண வடிப்பார். (௪௪)

ஓடுவர் போரி னுடைந்தவர் போலச்
சாடுவர் வந்தடு தண்டொடு தட்டிக்
கூடுவர் வட்டணை கொள்வர்பின் னுந்தி
யூடுவர் மல்லுறு போரினி லுற்றே. (௪௫)

எய்திடு வார்சிலை பின்னு மெடுத்தே
வெய்தென வேறு விதங்கொடு விற்போர்
செய்தனர் போரிடை விட்டிலர் சீறி
வைதனர் தங்களில் வன்பகை பூண. (௪௬)

பூண்டுள பற்பல போர்செய்து விண்ணோ
ராண்டொரு நூறு மகன்றபின் மாலு
மீண்டெழு தானவ ரேசனை யெம்மான்
மூண்டிடு போரின் முடிப்பரி தாமால். (௪௭)

என்றெணி யிந்திர னுள்ள மிளைந்தான்
வன்றிறல் வானவ ருமவலி மாய்ந்தார்
வென்றிகொ ளும்படி வெய்யவர் விஞ்சி
நின்றது கண்டன ரோர்நிலை யற்றே. (௪௮)

இடைந்திடும் வானவர் யாவரு முள்ள
முடைந்திடும் வாசவ னோடு மொளித்தார்
தடைந்தவர் போகவத் தானவ ரேச
னடைந்தனன் விண்ணுல காளர சாட்சி. (௪௯)

குறைந்திடு மவ்வலி கொண்டுள வானோர்
மறைந்தடர் சோலையு மஞ்சுகள் விஞ்சி
நிறைந்தபல் வெற்பொடு நீளுறு பாரு
முறைந்தவர் வெவ்வே றுருகொ டிருந்தார். (௫௦)

மகிடாசுரேந்திர யுத்தச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். (௪௱௯)

# மகிடாசுரேந்திர யுத்தச் சருக்கச்சுருக்கவசனம்.

நைமிசாரணிய முனிவர்களை நோக்கிச் சூதருஷிசொல்லுவார் மார்க்கண்டேய புராணத்திலே தேவி மான்மியங் கூறப்பட்டுள்ளது. அதிலே மகிடாசுரனுடனே யிந்திரன் யுத்தஞ்செய்த கதையுண்டு. அதாவது:—கூரித்த கொம்புகளையுடைய எருமை முகம்பெற்ற அசுரனொருவன் அக்கினியை நிகர்த்த கண்களுள்ளவன் பஞ்சாக்கினி மத்தியிலே தவஞ்செய்து பிரமாவினிடத்திலே மிகுந்த வரம்பெற்றவன் நீல மலைபோலுயர்ந்த சரீரமுடையவன் உலகமெங்குந் துன்பஞ்செய்யுங் கொடியவன் யமனும் வடவா முகாக்கினியும் நஞ்சும் அஞ்சும்படி கொலைசெய்பவன் ஒருவராலுங் கெடுத்தற்கரிய பலமுள்ளவன் பிரம சிருஷ்டியிலுள்ள உயிரை யெல்லாமெடுத்து உண்பவன் நால்வகைச்சேனை மிகுந்தவன் சமுத்திரத்தையுங்கலக்குங் கால்களையுடையவன் அநேக மாயஞ்செய்ய வல்லவன் மயிடனென்னும் பெயரையும் பெற்றவன்; இவன் தேவர்களுக்கு மிகவுந்துன்பஞ்செய்யத் தொடங்கினன். அது கண்டு அத்தேவர்கள் இந்திரனிடத்திலே போய் முறையிட்டனர். உடனே யிந்திரனெழுந்து தேரிலேறி வில்லெடுத்துக்கொண்டு விண்ணவர்கள் சூழ்ந்துவர மயிடாசுரனிடத்திலே யுத்தஞ்செய்யச் சென்றனன். அதுதெரிந்து அசுரர்சேனை தேவசேனைமேலெதிர்த்துச் செல்லுதலும், சக்கரம் சூலம் வேல் தோமரம் தண்டு பாணம் முதலிய பல ஆயுதங்களெடுத்து அவுணரும் தேவரும் ஒருவர்மேலொருவர் வீசியெறிந்தனர். இருதிறத்தாருடைய சரீரத்தினின்றும் இரத்தவெள்ளம் பெருகியோடியது. இங்ஙனம் யுத்தஞ்செய்யுங் காலை யெண்ணில்லாத அசுரர்கள் தேவர்கள் விடுத்த ஆயுதங்களாலே கண்டங் கண்டமாக நறுக்கப் பட்டார்கள். யமன் முதலியோர்களைப் போல் யுத்தஞ்செய்யும் அசுரர்விடுத்த படைக்கலங்களால் தேவர்களுமயங்கி வீழ்ந்து மூர்ச்சை போயினார்கள். இவ்விதமாகிய பேரைக்கண்டு வாயுவும் அக்கினியும் யமனுஞ்சேர்ந்து கோபங்கொண்டு சகித்தற்கரிய ஆயுதங்களையெடுத்துச் சண்டைசெய்தலும் வலியிழந்து அவுணர்கள் பயந்தோடினர் தேவர்கள் வெற்றியடைந்தனர்.

இவ்விரண்டையும் மகிடாசுரன்கண்டு மனங்கொதித்துச் சொல்லுவான் வலியுடைய அசுரரை வலியில்லாத தேவர்கள் போரில்வென்றனர். இனிமேல் நரியும் புலியை வெல்லும். கலிகாலத்தின்கொடுமையோ? வெனக்கோபித்து ஆயிரங் குதிரைகள்கட்டிய தேரிலேறி யமன்வாயு அக்கினியென்னு மூவர்மேல் யுத்தஞ்செய்யச்சென்றான். அதுகண்ட இந்திரன் ரதத்தைச் செலுத்திவந்து மயிடாசுரனைத் தடுத்தலும், அவன் இந்திரனுயிரைக்கொன்று பின்னரந்த மூவரையுங் கொல்லுவேனென்று நெருங்கிவந்து சீறித் தூஷணவார்த்தைகள் பலவற்றைச்சொன்னான். இந்திரன்கேட்டு அடேமயிடாசுரனே, புலிக்கு விடந்தீர்த்த வயித்தியனை யந்தப்புலியுண்ணுதல்போலத்தேவர்கள் கொடுத்த வரங்களைக்கொண்டு தேவர்களையழிக்கத் தொடங்கினையென்று இழிவு படுத்தலும், அசுரன் இந்தவார்த்தை வீரர்கள் சொல்வத

ன்றென்று வில்லெடுத்து நாணோசைசெய்தனன், அவ்வோசையாலண்டங்களெல்லாங் கலங்கின. தேவர்கள் பயந்தோடினர். அதன்மேல் இந்திரன் மந்தரமலைபோன்ற வில்லொன் றெடுத்து நாணொலி யெழுப்புதலும், திக்கியானைகள் செவியடைத்தன. அசுரர்களஞ்சியோடினர். இவ்விதமாக இருவரும் வில்லைவளைத்து விண்ணு மண்ணுந் திசைகளும் எண்ணுமறையும்படி பாணவருஷங்களைப் பொழிந்தனர். ஒருவர்பாணத்தை யொருவர் அறுத்து மலை கடல் கடற்கரை பூமி முதலிய இடங்களெல்லாம நிறையும்படி தள்ளினார்கள். அன்றியும் இருவர் மார்பிலும் வடுப்படும்படி பாணங்கள் புக இடசாரி வலசாரியாகச் சுற்றினர். இருவர் இரத்தமும் மண்ணினும் விண்ணினு மலையினும் கடலினும புகுந்துவரும். இருவருடைய எல்லா அவயவங்களினும் பாணங்களழுந்தலா லவ்விடங்களினின் றொழுகும் இரத்தஞ் சமுத்திரம் போலப்பெருகும். ஒருவரையொருவா. வெல்லமுடியாம லிவ்வாறு யுத்தஞ் செய்யும்போது அசுர னிந்திரனை வில்லால் வெல்லமுடியாதென்று வேலாயுதத்தைக்கையிலே யெடுத்து முருகக்கடவுளைப்போல வந்து இந்திரன்மேலே யெறிந்தனன். அவனும் அந்த வேலினைப் பலபாணங்களா லறுத்துத்தள்ளினன். திரும்பவு மொருவேலை யெடுத்து மகிடாசுர னிந்திரன்மேலே யேவினன். அதையும் இந்திரன் அநேக பாணங்களை விடுத்துப் பொடிப்பொடியாக நறுக்கியெறிந்தனன். பின்னர் யமனுடலையும் பிளக்கின்ற சூலமொன்றையெடுத்து அசுரன்வீசி வெற்றிச்சங்கத்தை முழக்கிநின்றனன் இந்திரன் மேகதாரைகளைப் போலப் பாண வருஷங்களைப்பொழிந்து அந்தச்சூலத்தையுந் துகளாக்கி விட்டனன். அசுரன்கண்டு மிக்ககோபங்கொண்டு ஒருதண்டாயுதத்தை யெடுத்துவந்து இந்திரன்வில் முறியும்படியடித்துக் கர்ச்சித்து நின்றனன்.

முறிந்தவில்லை யெறிந்துவிட்டு இந்திரனும் ஒருதண்டாயுதங்கொண்டு வந்தெதிர்த்து யுத்தஞ்செய்தனன். இருவர் தண்டாயுதங்களு மொன்றோடொன்று தாக்குதலாலுண்டாகு மோசையினாலே யெல்லாவண்டங்களு முடைபட்டதுபோலிருந்தன. தண்டினாலே பலபலவிதமாக மார்பு உச்சிமுதலிய வற்றி லொருவரை யொருவர் அடித்துச் சாரிகை சுற்றியோடுவர் மீளுவர் பின்னும் வில்லெடுத்தும் பகைமை மேலிடும்படி கடுஞ்சண்டை செய்த இவ்வாறு தேவவருடத்தில் நூறுவடம் போர்செய்தும் மகிடாசுரனை யிந்திரன் வெல்லமுடியாமல் மனமிடைந்தனன். தேவர்களும் வலியிழந்தனர். பின்னர் வெற்றியடைந்துநின்ற அசுரர் சேனையைக்கண்டு தேவர்களெல்லாரு முள்ளங் கலங்கியிந்திரனோடும் செடியிலும் சோலையிலு மலையிலும் பூமியிலும் வெவ்வேறுருவமெடுத்து மறைந்துகொண்டார்கள். மகிடாசுரன் உடனே வந்து விண்ணுலகத்தைக் கைப்பற்றி யரசுசெய்துகொண்டிருந்தனன்.

மகிடாசுரேந்திர யுத்தச்சருக்கச் சுருக்கவசனம் முற்றிற்று.

# தேவி மகிடாசுரனைச்சங்கரித்தசருக்கம்.

நிறையொளிக் கனக மேரு நெடுவரை யதனி னோர்பாற்
கறையொளிர் களத்தி னானுங் கமலச்செங் கண்ணி னானு
மிறைமைசா லிருவ ருந்தா மினிதுவந் திருப்ப வாங்கே
மறைவுறும் வானோர் கூடி மறையவ னோடுஞ் சென்றார். (க)

சென்றவத் தேவ ரெல்லாஞ் சிந்தைகூர்ந் திறைஞ்சி முன்னர்
நின்றிரு வரையு நோக்கி நேயத்தால் வழுத்து கின்றா
ரன்றுமுப் புரத்தைக் காய்ந்து மசுரவேந் தனையந் நாளிற்
கொன்றும்வா னவர்க டங்கள் குலத்தினைக் காத்தல் செய்தீர். (உ)

நிலம்பெருஞ் சுவர்க்க மெங்கு நீடுயர் புரிந்த வந்தச்
சலந்தர னென்னுந் தீய தகுவனை முனிந்து காய்ந்தும்
வலன்றிகழ் கனகன் றிண்ண மார்பக மிடந்தும் வானோர்
குலந்தனை யினிது காத்த கொற்றவர் நீவி ரன்றோ. (ங)

நஞ்சமன் றெழுந்தே யெம்மை நலிந்திட வந்த காலை
யஞ்சலென் றருளி நஞ்சை யடக்கியுண் டெம்மைக் காத்தும்
வஞ்சக வவுணர் தம்மின் மாய்வுற மாயஞ் செய்தே
துஞ்சலில் லாதெ மக்குத் தூயவின் னமுத மீந்தும். (ச)

வீரவேல் கொடுத்து மிக்க வெந்திறற் சேயி னாலே
வீரனே முதலா வுள்ள சுடர்முடி யவுணர்ச் செற்றும்
பாரெலாஞ் சுருட்டிப் போய பாழியந் தடந்தோள் வீரத்
தீரனா மவுணற் செற்றுந் தீதின்றி யெம்மைக் காத்தீர். (ரு)

மாற்றரும் வலியன் றீய மயிடனென் பவன்றா னெங்கள்
போற்றருந் துறக்கம யாவும் புகுந்திடர் செயப்போ யாங்க
ளேற்றெதிர் போரி னாற்றாண் டிடைந்தன மவனை வேறற்
காற்றலங் கின்றி மண்மே லஞ்சியே வாழ்கின் றேமால். (சு)

மும்மைமெய்த் தேவர் தம்மின் முதுதுய ரெமக் கிங்குற்றா
லெம்மையே காப்பா னீவி ரிருவரு மன்றி யுண்டோ
வெம்மைசேர் மயிட னால்யா மெலிவுறா வண்ணங் காப்பா
னும்மையே நோக்கி வந்தே மடைக்கல நுமக்கே யென்றார். (எ)

முன்னமட் மாற்றவ கேட்டு முன்னமே முதன்மை பூண்ட
வன்னவ ரிருவ ருக்கு மைங்கணு மழற்க ணுகி
நன்னிறப் புருவங் கோட்ட நவின்றவத் தேவர் தங்கண்
மின்னுடற் சோதி யெல்லாம் வெளிக்கொடு தோன்றிற் றன்றே. (அ)
ஆங்கொளிச் சுடர்கண் மூன்று மறவொளி மழுங்க மேலா
யோங்கொளி யொன்றாய்த் தானே யுதித்தண்ட முகடுமுட்டப்
பாங்குள விண்ணோர் பார்த்துப் பரிந்துதம் மவய வங்க
டாங்கிய சத்தி யெல்லாந் தயங்கொளிச் சத்திக் கீந்தார். (கூ)
திருமுகத் தினுக்கவ் வீசன் செழுங்குழற் கியமன் மாயோ
னிருகர மதற்கு மோங்கு மிணைத்திரு முலைக்கு மிந்து
மருவுநுண் மருங்கு லுக்கு மகபதி வருண னென்பா
னொருவருந் துடைசங் தோடு புகன்முழந் தாட்கு மீந்தார். (க0)
பூமக ளலகு லுக்குப் பொற்பதங் களுக்கு வேதன்
காமர்வண் கழல்வி ரற்குக் கதிரவன் கைவி ரற்கு
நாமநல் வசுக்க ளெட்டு நாசிக்கு நிதிக்கு பேரன்
றாமவெண் பற்கு மிக்க தசப்பிர மாக்க டாமும். (கக)
ஆயமுக் கண்ணுக் கங்கி யணிகாது புருவ நெற்றி
யேயநற் காந்தி யென்னு மிவ்வவ யவங்கட் கெல்லாம்
வாயுவே முதலா யுள்ள வானவ ரேனோ ரீந்தே
நாயகி வடிவங் கண்டு நயந்ததி சயித்து நின்றார். (க௨)
ஈசனே முதலா வுள்ள விமையவ ரெவருந் தங்க
டேசுறு படையின் சத்தி திகழ்வயப் படைக ளாக்கி
மாசிலாத் தேவிக் கின்பா வழங்கினார் பாசின் வேலை
யாசிலா முத்து மாலை யணிந்திடக் கொடுத்த தன்றே. (க௩)
குருமணி மகுடங் காதுக் குண்டலங் கடகங் கோலத்
திருவுறு பிறைகே யூரஞ் சிலம்புவண் கழுத்துப் பூண்கள்
விரலிடு மாழி மிக்க விளங்கொளி வாடா மாலை
தெரியும்வன் படைகள் யாவுங் கொடுத்தனன் றேவ தச்சன். (க௪)
வரையர சனுந்தான் சிங்க வாகன முவந்தங் கீந்தா
னுரைகிரை பாத்தி ரங்க டேங்குசீர்க் குபேர னீந்தா
னரவின்வாய் மணிசேர் மாலை யனந்தனு மணிதற் கீந்தான்
வருணனுஞ் சங்க மொன்று வழங்கினன் றேவிக் கம்மா. (க௫)

மற்றுள தேவர் தாமும் வழங்கவா பரண மெல்லாம்
பெற்றவத் தேவி யார்ப்பப் பிறங்கிட வெழுந்த வோசை
சுற்றிய கடல்பார் வெற்புத் துலங்கிட வுலகம் யாவு
முற்றுறுங் கால மண்டி முழுங்குவல் லிடிகள் போன்ற. (கசு)

ஆர்த்தவத் தேவி தன்னை யமரர்கண் மறைக ளாலே
தோத்திரம் பண்ணுந் தோறு முலகெலாந் துளங்க வார்த்துப்
போர்த்துமிக் கோதை பொங்கப் பொங்கொலி யவுணர் கேட்டு
வேர்த்தனர் மயிடன் றானும் வெம்பியி தென்கொ லென்றான். (கஎ)

இவ்வொலி பகைஞ ராலே ரெதிருறு போருக் காய
வவ்வொலி யன்றி வேறொன் றன்றென வசுரர் கோமான்
வெவ்வலி யவுணர் தம்மை வருகென விளம்பா முன்னந்
தெவ்வலி கடந்த வீரர் சேனையோ டெழுந்து போந்தார். (கஅ)

மிக்குர வசுர ராரு யிரவராம் வீரர் சூழ
வுக்கிர னென்னு நாமத் துயர்படைத் தலைவன் வந்தா
னக்கிர மஞ்செய் தீயோ னசிலோம னென்னும் பாவ
வக்கிரன் பத்திலக்க வன்படை யுடன்வந் தானால். (கசு)

பெறுதிறற் பாற்க ளப்பேர்ப் பெருவலி யவுண னென்பா
னறுபதி னிலக்கச் சேனை யவுணர்கள் சூழ வந்தா
னுறுபெரு மாயை மிக்கோ னுக்கிர தெரிச னப்பேர்த்
தெறுபடை யவுண னெண்ணில் சேனைகள் சூழ வந்தான் (உ0)

வெஞ்சினக் கூற்ற மன்னான் விலாளனென் றுரைக்கும் வீர
னஞ்சிலக் கத்தினுய வடன்மிகு மவுண ரோடு
மஞ்செனச் சொரியு மும்மை மதங்கலுழ் கரிகள் பாய்மா
வெஞ்சலில் கொடித்தே ரோடு மிகலணி யாக வந்தான். (உக)

புகலரும் வலியின் மிக்க பொருபடைத் தலைவ ரெல்லா
மகலிடஞ் சேனைக் காற்ற தென்னுமவ் வளவில் சேனை
யிகல்செயும் போர்க்கோ லங்க ளியாவையும் பூண்டு வந்தார்
சகமொடு விண்ணு மஞ்சத் தானவர்க் கரசன் முன்னர். (உஉ)

வேறு.

மண்டியெழு சேனைகள் வரம்பிலவை சேரக்
கண்டுள மகிழ்ந்துள கதங்கொண்மயி டன்றான்
றண்டலினல் விஞ்சையறி சாரதியை நோக்கித்
திண்டிறலின் மிக்கவொரு தேர்கொணர்தி யென்றான். (உ௩)

என்றுமுனம் வந்ததவ னேறிரத மென்ப
நின்றுபுவி தன்னினும்வல் வன்மையுள தம்மா
துன்றும்வலி மிக்கதது துங்கநர சிங்க
மன்னமிட லாளிகளோ ராயிர மணைத்த. (௨௪)

வண்ணமுறு நீள்கொடிகள் வன்றிசைக ளெட்டு
மண்ணும்பரந் தண்டமுக டவ்வளவு மோங்கு
மண்ணுலகும் விண்ணுலகும் வாழுரகர் நாடு
மெண்ணுமொரு யாத்திரையி னேகிவரு மத்தேர். (௨௫)

வானுலவு நீள்கொடி வயங்கிரத மீது
தானவர்கள் கோனுமெழு போதிலெழு தானை
யானைபல தேருட னடற்பரிகள் வீர
ரூனமில வொவ்வொரு வகைக்குள துரைக்கில். (௨௬)

கோடியுறல் கோடியவை கொண்டசத பத்துத்
தேடிய கணக்கினுறு சேனைபுடை சூழ
வாடனுறு வெம்படைக டேரின்மிசை யாக்கி
நீடுபடை வாத்திய மொலிப்பவுரு மேறின். (௨௭)

ஆர்க்கும்வயி ரக்கவச மாகமிசை யாக்கி
வார்க்குலவு மின்கழல்கள் வன்கழலில் வீக்கித்
தார்க்குலவு தும்பைமலர் தார்முடி யணிந்து
போர்க்குமயி டன்னதிர்செய் தேவியெதிர் போனான். (௨௮)

அப்பொழு திரத்தமழை யவ்விடை சொரிந்த
வெப்பொழுகு வெள்ளிடிகள் வீழ்ந்ததிசை யெங்குந்
துப்பொழுகு செங்கண்மயி டாசுர னிடத்தோ
ளெப்பொழுது மில்லன துடித்ததவ னெண்ண. (௨௯)

ஆயுமதி யானைகளு மானபிடி யொத்த
வேயுமத முற்றபிடி யானையினம் யாவும்
வாயின்வரு நீர்களும் வறழ்ந்திடவல் வீரர்
போயினர்க டேவிமிசை பொங்கியமர் செய்ய. (௩0)

அன்றவட *னார்ப்பினுல கெங்கணு மனுங்க
நின்றதிர்செய் நின்மலையை நீளவுணர் கண்டே
துன்றுபடை வீரர்விரி தும்பைமலர் சூடிச்
சென்றுவளை வுற்றனர்க டிண்சமர் விளைப்பான். (௩௧)

---

ஆர்ப்பு-கிளர்ச்சி.

சூலமடு தண்டுவிடு தோமரம்வேல் பிண்டி
பாலநெடு வாளொடு பருத்தெழு முஸலக்கை
வேலயில்கொள் வெய்யபடைகள் விட்டமர் விளைத்தார்
நீலநிற மெய்யினை நிகர்க்குமற நெஞ்சார். (௩௨)

செங்கணழல் கின்றதொரு தேவிவிடு மூச்சிற்
பொங்குகத மோடுவரு பூதகண மெண்ணி
லங்கவை யிலக்கமதி லண்டமதிர் கொள்ளச்
சங்கமவை யூதின தயங்குசில பூதம். (௩௩)

ஆர்ப்பொலி யெடுத்தசில பூதமவை யன்றிப்
போர்ப்பறை யடித்தசில பூதகண மற்றோர்
கூர்ப்படைகள் கொண்டவுணர் சூழ்படையின் முந்து
தார்ப்படைகள் சிந்தவடு தண்டுகொ டடித்த. (௩௪)

வெம்பிமிக வல்லவுணர் விட்டபடை யாவு
மம்பிகையு மப்படைகள் விட்டட னறுத்தா
ளும்பரது கண்டுவகை கொண்டுவிரை மண்டு
பைம்பொன்மலர் மாரிகள் சொரிந்தனர்கள் பண்ணி. (௩௫)

ஏறுமொரு வாகனம தென்னுமரி யேறு
மாறுபுரி வல்லவுணர் சேனையிடை வந்து
சீறுநர சிங்கமென வங்கம்வகிர் செய்தே
யூறிவரு செம்புனல்க ளுண்டுகளி கொண்ட. (௩௬)

கடித்திட மிதிக்கவரி கைகொடுகிர் தைக்க
வடித்திட விழுங்கவவ ரங்கம்வரு புண்ணீர்
குடித்திட விறந்துவலி குன்றவுணர் சேனை
படித்தலம் விழுந்தவவை பாதியினு நீட. (௩௭)

அங்கவுணர் விட்டபடை யாவுமட லுற்ற
சிங்கமஃ துண்டன வொழிந்ததெறி பட்ட
வெங்கண்விறல் வாளவுணர் கண்டுளம் வெகுண்டு
துங்கமுறு பல்படைக ளேவிமிக வார்த்தார். (௩௮)

அப்படையெ லாம்வருமு னப்படை விடுத்து
வெப்பமுறு தேவியு மறுத்ததை விழுத்திக்
குப்பமுறு தானவர் குழாமழிய மாய்த்தே
யொப்பிலொலி சங்கமஃ தூதியுட னார்த்தாள். (௩௯)

வேறு

ஆடின கவந்தமு மலகை யீட்டமுங்
கூடின கழுகொடு பருந்தின் கூட்டமு
மோடின வுதிரவா றோங்கி யெங்கணும்
வீடின வவுணர்தஞ் சேனை வெள்ளமே. (௪0

சாவுறு மவுணரைக் கண்டு தாமகிழ்
தேவர்க ளாவலங் கொட்டித் தேவிமேற்
பூவினன் மாரிகள் பொழியக் கண்டுதான்
மேவினன் சிட்சுர னென்னும் வீரனே. (௪௧)

எடுத்தொரு சிலையைநா ணெறிந்து வெஞ்சரந்
தொடுத்தள வில்லன தொடைதொ டைகளாய்
விடுத்தனன் விடவிட விட்ட வம்பெலாந்
தடுத்தன டேவியுஞ் சரங்க ளேவியே. (௪௨)

பின்னருஞ் சிட்சுரன் பெய்யு மாமுகில்
சொன்னமால் வரையின்மேற் சொரிவ போலவே
கொன்னெடும் வாளிகள் குறித்துத் தேவிமே
லன்னவ னேவிட வறுத்து வீழ்த்தியே. (௪௩)

கொற்றவெஞ் சிட்சுரன் கொடித்திண் டேரையும
பற்றுபாய் பரியொடு பாகன் சென்னியு
மற்றிட வீழ்த்திப்பின் னவுணன் மெய்யெலா
முற்றுற மூடினள் பொய்த்த வாளியால். (௪௪)

வாளிகள் பட்டுடல் வகிர்வு கொள்ளவு
மீளிவல் லவுணனும் வெகுண்டு வெவ்வட
லாளியின் சிரத்தினு மமர்செ யம்பிகை
தோளினும் வெட்டவா ளுண்டிக் திற்றதால். (௪௫)

மறுத்தொரு சூலத்தை வாங்கித் தேவிமே
லொறுத்தவன் விடுதலு முற்ற சூலத்தை
யிறுத்திடச் சூலமொன் றேவிச் சிட்சுரன்
வெறுத்தெறி சூலமு மெய்யும் வீழ்த்தினள். (௪௬)

அக்கணஞ் சாமர னென்னு மாற்றலான்
கைக்கண்மே வயிலினைக் கனன்றங் கேவினன்
முக்கணி முனிவொடு முனியூங் காரத்தா
லுக்கது சூலம்வே றென்றங் கேவினன். (சஎ)

மூவிலை வேல்வரு முன்னந் தூள்படத்
தேவியோர் வாளியாற் சிதைத்து வீழ்த்தினு
டாவியே சிங்கமேற் றுக்கச் சாமர
னுவியை யுண்டதவ் வடல்வெஞ் சீயமே. (சஅ)

உலைவிலா வுக்கிர னுருத்து வந்துவெங்
கொலைவிலா லம்புகள் குறித்தங் கேவிடத்
தொலைவிலா வலியுடைச் சுழல்கட் பூதங்கண்
மலைகளான் மரங்களா லவனை மாய்த்தவால். (சகூ)

வெம்பியே காரனன் வெகுண்டோர் வில்லினு
லம்புகள் சொரிந்துநின் றார்ப்ப வக்கணம்
பம்புபூ தக்கணம் பாவி சென்னியிற்
செம்புணீர் மூளையுஞ் சிதறக் கொன்றதால். (ருo)

சிலையொடு மம்பொடுஞ் சென்று பாற்கள
னலைவில்வெம் போர்பல வடர்ந்து தாக்கலுங்
குலவரை யனையதோர் குன்றி னலவன்
றலையையோர் பாரிடந் தகர்த்துக் கொன்றதால். (ருக)

போரியல் விலாளனும் பொருவி லுக்கிர
வீரியன் றன்னொடும் வெகுண்டெ ழுந்திறற்
சூரிய லுக்கிர முகனுஞ் சூழ்ந்தட
லாரியை வளைந்தன ரளவில் சேனையார். (ருஉ)

சத்திரங் கப்பணந் தண்டு தோமர
மத்திர முசலமற் றுள்ள வாயுதங்
குத்திர வவுணர்தாங் குறித்து விட்டனர்
சித்திர வடிவுடைத் தேவி மேற்செல. (ருங)

எறிந்தபல் படையெலா மிற்றுத் துண்டமாய்
முறிந்துக வாளிகண் மொய்ப்ப வேவியே

செறிந்தவல் லவுணருஞ் சின்ன பின்னமாய்
மறிந்திட வதைத்தன டேவி வாளியால். (௫௪)

கன்முகந் துள்ளவன் கடிய நெஞ்சினர்
துன்முகன் றுர்த்தர னெனும்வெஞ் சூரர்யோர்
வென்முகங் காட்டிடா வீரச் சேனையார்
நன்முகத் தேவியை நணுகிச் சுற்றினர். (௫௫)

இருவர்வெஞ் சேனைகொண் டெதிர்த்து விண்ணுளோர்
வெருவுறப் படைகளை வீசி யார்த்தெழப்
பொருவருந் தேவியும் போர்செய் சேனையி (௫௬)
லொருவரு மின்றியே யொழிய வாக்கினள்.

உடன்வரு சேனைக ளொன்று மின்றியே
யடன்மிகு தேவியங் கறுத்தல் கண்டுள
மிடனுறு மிருவரும் வெம்பி வாளிகள்
சுடரொளித் தேவிதன் றோளிற் றூவினர். (௫௭)

ஏவிய வம்பெலா மிறுத்து வாளிக
டேவிய சிலைகளுந் துணித்தவ் வாளியான்
மேவிய விருவர்தஞ் சிரமும் வீழ்த்தியே
தேவியு மார்த்தன டிசைவெ டிக்கவே. (௫௮)

வல்லவெஞ் சேனைகண் மாயக் கண்டவெங்
கொல்லிய கூற்றன மயிடன் கூறுவான்
வில்லெனுஞ் சாபத்தா லன்று வீரிதன்
சொல்லெனுஞ் சாபத்தாற் றொலைந்த தாமென்றான். (௫௯)

வேறு.

நன்று நன்றென நகைசெய்தே தேவநா யகிதான்
கொன்ற சேனையை மயிடனுங் கண்டுளங் கொதித்துத்
துன்று கோளரி பூட்டிய தேரினைத் தூண்டி
வென்றி வில்லொடு மம்பொடும் வந்தனன் வெகுண்டு. (௬௦)

தேவி மீதினுஞ் சீறரி மீதினுஞ் சீற்ற
மேவு வெங்கணைப் பூதங்கண் மீதும்வெஞ் சிலைகோத்
தேவும் வாளிக ளூழிமா மழையென வெண்ணத்
தூவி யார்த்தனன் மயிடனுங் கொடியவெந் தொழிலோன். (௬௧)

தீயவாளிகள் வருதல்கண் டாங்கவை சிதைப்பா
னேயவாளிக ளெண்ணில தெரிந்துமுன் னேவி
யாயவாளிக ளனைத்தையுஞ் சேனையு மறுத்தே
தூயவாளிகல் விழியுடைத் தேவியுந் துணிந்து. (௬௨)

தேரிற் பூட்டிய சீயமும் பாகனுந் தேரும்
போரிற் பூட்டுவெஞ் சிலையொடு தூணியும் பொடிய
வாரிற் பூட்டிய தனத்தவள் வார்சிலை வாங்கிக்
காரிற் பூட்டிவீழ் தாரைபோற் சொரிந்தனள் கணைகள். (௬௩)

ஏறு தேருமங் கெடுத்தகை வில்லுமற் றீண்டி
மீறு சேனையும் வீந்திடக் கண்டுளம் வெகுண்டு
மாறு செய்யவோர் மயிடமா யுருக்கொடு வந்தான்
சீறி நின்றவம் மயிடமுஞ் செருத்தொழில் செய்ய. (௬௪)

கூரத்தி னாற்பெரும் பூமியை யிடந்தது கொம்பா
லுரத்த மால்வரை யனைத்தையு மொடித்தது வாலாற்
றிரைத்தண் வாரிதி முழுவதுங் கலக்கியே சினத்துப்
பருத்த பூதங்கள் பயப்படச் சீறின பார்த்து. (௬௫)

கொம்பி னாற்சில பூதத்தின் வலியெலாங் குறைத்த
வெம்பி யேசில கணங்களைக் காலினான் மிதித்த
வம்பர் கண்டுளம் வெருவுறக் கணங்களு முலைந்து
கம்ப முற்றிட வாலினா லடித்தது கனன்றே. (௬௬)

மூக்கி னாற்சில கணங்களை யிடித்தது முனிந்து
தாக்கு வெஞ்சின மயிடத்தின் கழுத்தொடு தாளும்
வீக்கி வீழ்த்திடப் பாசவெம் படையினை விடுத்தா
ளாக்கு மன்பர்தம் பாசத்தை யறுத்திடு மமலை. (௬௭)

வந்த பாசத்திற் பிணிப்புறு மயிடமா மயிடன்
வெந்தி றற்பெருஞ் சீயம தாகியே வெகுண்டு
நந்தன் மேவிடாப் பெருவலிக் கணங்களை நலிய
வந்த வாளிதன் சிரத்தையோர் வாளியா லறுத்தாள். (௬௮)

மலையெ னப்பெரு வடிவுறும் புருடனாய் வந்து
மலையெ னுந்திறற் றேவிமேன் மயிடனும் வன்போர்

பலைய வாங்கவன் மார்பினை வாளியால் வகிர்ந்து
பலைய மன்னதோர் தலையையுந் துணித்தனள் வாளால். (௬௯)

பின்ன ரும்மவன் மதமெனு மருவிவீழ் பிறங்க
லன்ன வல்லுரு வடனுடை யானையாய் வந்து
மன்னும் வையமும் வானமு மஞ்சுற வயிரி
முன்னர் நின்றுதான் முழங்கினன் கணங்கள்கண் முகிழ்ப்ப. (௭௦)

மூன்றெ னும்பெரும் புவனமுந் துளக்குற முழங்கு
மான்ற வன்றிற லானைதா னுரியை தன்பா
லென்று போர்செய வெழுதலு மாங்கவ ளெதிர்த்துத்
தோன்று மின்சுடர் வாளினா லானையைத் துணித்தாள். (௭௧)

சாலு மாயையின் றந்திய தழிந்திடத் தான்முன்
போல வேயொரு பயிடனு மயிடமாய்ப் போந்து
வாலுந் திண்சுரி மருப்பும்வன் மூக்கொடு நாலு
காலு மேகொடு கணங்களின் வலியெலாங் கடிய. (௭௨)

செங்கண் வெஞ்சின மயிடத்தின் செருவலி சிதைப்பா
னங்கண் மூன்றுடை யமலையும் பாத்திரத் தமைத்த
பொங்கு மின்சுரை யுண்டுவெங் களிகொண்டு புவிக
ளெங்கும் பேரொலி யதிர்செய வார்ப்பெடுத் திரைத்தாள். (௭௩)

வெய்ய வெஞ்சிலை வளைத்தடல் வாளிகண் மிகவே
பெய்யு மாமழை போற்சொரிந் துடலினைப் பிளப்ப
வெய்ய வும்பெரு மயிடமுங் கொம்பினா லிடந்து
சையம் பற்பல வெறிந்தது சண்டிகை தன்மேல். (௭௪)

வரைகள் பற்பல வெடுத்தெறிந் தார்த்துவன் மயிடம்
விரைவொ டும்விடும் வெற்பெலாங் கணைபல விடுத்துத்
தரையில் வீழ்வுற நுண்பொடி யாக்கியே தகர்த்துப்
புரையி லம்பிகை மயிடமா மவனொடு புகல்வாள். (௭௫)

அரண தாயுனக் குடன்வரு சேனைக ளனைத்து
மரண மாகியே கிடப்பதுங் கண்டுமுன் மனத்தின்
முரண தெய்தினை யல்லதுன் னுடலினின் மொய்த்த
விரண மெய்தியு மிறப்பதை யறிகிலை விளங்க. (௭௬)

வறிது நீயிவ ணார்ப்பதென் மாய்வதை யறியா
வறிவி லாததோர் மயிடமே யுன்னைநா னடக்கண்
*டுறும்ம் முவகையா லுளத்தினிற் களிப்பெழ வோங்கி
நெறியில் வானவ ரார்ப்பரென் றுளத்தினி னினைப்பாய். (எஎ)

என்னக் கூறிய கேட்டலு மயிடமா மிகலோன்
றன்னை யேதனக் கொப்பவ டன்னையே நோக்கி
யின்னல் கூர்ந்திமை யோர்கண மியாவையு மேங்க
வுன்னை யான்கொல்வ தறிகிலை பேதையென் றுரைப்ப. (எஅ)

களித ருஞ்சுரை மாந்தியே கனன்றுமுக் கண்ணி
யளிபு றுமலர்ச் சேவடி தூக்கியாங் கவுணன்
விளிவு றும்படி மேதியின் றலைமிசை மிதித்தே
யொளிகொள் சூலத்தாற் கழுத்தினிற் குற்றினு ளூன்ற. (எகூ)

ஆதி நாயகி மிதித்திடுஞ் சூலத்தா லழுத்த
மேதி மாமுகத் திருந்துமா வீரிய னென்போன்
பாதி யங்கமுன் வெளிக்கொளத் தோன்றியே பகைத்துக்
காதி யேயெதிர் தேவிமேற் போர்செயக் கனன்று. (அO)

வீர வாளினுல் வெம்மயி டன்றலை வீழ்த்திப்
போர டர்ந்தமா வீரியன் பொன்றிடப் பொருதாள்
சூர மேவிய தேவிமேற் பூமழை சொரிந்தே
யார வாரமோ டாடினர் பாடின ரமரர். (அக)

இனிய நன்மனத் தரம்பைய ராடின ரெங்கு
நனிவ யப்பெரும் பூதங்கள் களிப்பொடு நடித்த
முனிவர் யாவரும் வாழ்த்தெடுத் தேத்தினர் முழங்கி
மனித ருற்றபே ருவகையை யார்சொல்வர் வாயால். (அஉ)

அலகி லாவலி மயிடனு மசுரனை யடல்செய்
துலக மூன்றினு முறுதுயர் நீக்குமுத் தமியை
மலரில் வாழ்பவன் முதலினோர் மறைசொலு முறையே
யிலகு பூசைசெய் தேத்தின ரிறைவியின் புறவே. (அங)

ஆண்டு பூசைசெய் யயன்முத லமரரை நோக்கி
யீண்டு வேண்டுவ தென்னெனத் தேவியங் கியம்பப்

* உறும்ம்-மகரவொற்றுவிரித்தல்விகாரம்.

பூண்ட நின்னரு ளுடைமையெப் போழ்திலும் பொருந்த
வேண்ட லன்றிமற் றென்குறை யெமக்கினி வேண்ட. (௮௪)

பங்க யன்முதற் றேவர்க ளவ்வுரை பகர
வங்க ணாயகி யவர்களை நோக்கியே யன்புற்
றங்க ளுங்கடம் பதத்தினி லுறையுமி னென்றே
பொங்கு நன்மொழி புகன்றுதான் விடுத்தருள் புரிந்தாள். (௮௫)

அருள்பு ரிந்தவச் சத்திதான் குமரியம் பதிவாழ்
பொருவில் கன்னிநா யகியெனப் புண்டரீ கத்தோன்
மருளின் மார்க்கண்ட மாமுனிக் குரைத்ததைச் சூத
னொருநன் னேமியா ரணியமா முனிவருக் குரைத்தான். (௮௬)

தேவி மயிடாசுரனைச் சங்கரித்த சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (௫௪௨.)

## தேவிமயிடாசுரனைச்சங்கரித்த சருக்கச்சுருக்க வசனம்.

மகாமேருமலையிலே சிவபெருமானுந் திருமாலுமெழுந்தருளியிருக்குஞ் சமயத்திலே தேவர்களெல்லாருந்திரண்டு பிரமதேவனுடனேசென்று மனங்களிகூர்ந்து விழுந்து நமஸ்காரஞ்செய்தெழுந்துநின்று இருவரையுநோக்கி விண்ணப்பஞ்செய்வார். திரிபுராதிகளையும் அசுரராசனையுங்கொன்று தேவர்கூட்டங்களை யிரக்ஷித்தருளினீர். சலந்தராசுரனையு மிரணியனையுங்கொன்று தேவர்களைக்காத்தவரும் நீவிரிருவருமன்றோ? ஆலகாலவிடத்தையுண்டும் இனியவமிழ்தத்தை அவுணரை வஞ்சித்துக்கொடுத்தருளியும் வேலாயுதத்தையளித்து முருகக்கடவுளாலே சூரபன்மன்முதலிய அசுரர்களை நாசஞ்செய்தும் நிலவுலகத்தைப்பாயலாகச்சுருட்டிச்சென்ற அசுரனைக்கொன்றும் எங்களைக்காத்தருளினீர். ஒருவராலுங்கெடுத்தற்கரிய வலிமையுடைய மயிடாசுரனெங்களுலகத்தைக்கைப்பற்றிக்கொள்ள நூறுவருடமவனுடன்போர் புரிந்துதோற்றுப்போய்ப்பூமியிலேமறைந்துகொண்டுதிரிகின்றோம். திரிமூர்த்திகளுக்குள்ளே நீங்களிருவருமேயெங்கள் இடுக்கண் களைகின்றவராதலால் மயிடாசுரனால் யாங்கள் துயருறாதவிதங்காக்கவேண்டுமுமக்கேயடைக்கலமென்றனர்.

இந்த வருத்தங்களைக்கேட்ட சிவபிரானுக்குந் திருமாலுக்கும் ஐந்துகண்களும் அக்கினிக்கண்களாகப் புருவம்வளையும்படி கோபமுண்டாதலும், தேவர்களுடலிலிருந்த காந்தியெல்லாம் திரண்டு ஒருவடிவங்கொண்டு வெளியேதோன்றி மேலெழுந்து சோமசூரியாக்கினிகளி னொளிமழுங்க அண்டமுகட்டை முட்டிநின்றது. தேவர்கள் பார்த்துத்தஙகளவயங்களிலிருந்தசத்துயனைத்தையும் ஒளிவடிவாகிய சத்திக்குக்கொடுக்கத்தொடங்கிச்சிவபிரான் முகத்துக்கும் யமன்கூந்தலுக்குந் திருமால்கைகளுக்குஞ் சந்திரன் தனங்களுக்கும் இந்திரனிடைக்கும் வருணன்தொடை சநதுமுழந்தாளுக்கும் இலக்குமி யல்குலுக்கும் பிரமன் கால்களுக்கும் சூரியன் கால்விரல்களுக்கும் அட்டவசுக்கள் கைவிரல்களுக்கும் குபேரன் மூக்குக்கும் பத்துப்பிரமர்கள் பற்களுக்கும் அக்கினி திரிநேத்திரஙகளுககும் வாயுமுதலிய மற்றைத்தேவர்கள் காதுபுருவம் நெற்றி முதலிய அவயவஙகளுக்குங்கொடுத்துச சத்திரூபத்தைப்பார்த்துச சந்தோஷித்து நின்றனர். பின்னரும் சிவபிரான் முதலிய தேவர்கள் தங்கள் தஙகள் ஆயுதத்தின் சத்திகளைத் தஙகள் தஙகள் ஆயுதங்களாக்கிக்கொடுத்தனர். பாற்சமுத்திரம் முத்துமாலையொன்று கொடுத்தது. கிரீடம் குண்டலம் கடகம் சூரியசநதிரப்பிறை வாகுவலயம் சிலம்பு மோதிர முதலியஆபரணங்களும் பற்பல ஆயுதஙகளுநதேவதச்சன் கொடுத்தனன். இமயவரசன் சிஙகவாகனங் கொடுத்தனன். குபேரன் மதுபாத்திரமளித்தனன். ஆதிசேடன் இரத்நாபரணமீந்தனன். வருணன் வெற்றிசசங்கம் வழங்கினன்.

இவையனைத்தும்பெற்ற சத்தியாகிய தேவி யாரவாரித்தெழுமோசையானது கடல், மலை, பூமிமுதலியவை யழியுங்காலத்துண்டாகுமிடியோசைபோலிருந்தது; அதுகேட்டுஅவுணர்களெல்லாருநதிடுக்கிட்டுத்திகைத்தனர். மயிடாசுரனுமீதென்னமுழக்கம் பகைவர்போருக்குவருமுழக்கமன்றிவேறில்லை யாதலாற் சேனைகளெல்லாம் வருக என்று உத்தரவு செய்தனன். சேனாதிபதிகளவரவர் சேனையோடுமுடனே வந்தனர்; அவருள் உக்கிரன் ஆறாயிரம் வீரர் சூழவும் அசிலோமன்பத்திலக்கவீரர் சூழவும் பாற்களன் அறுபதிலக்ஷம் வீரர் சூழவும் உக்கிரதரிசனன் எண்ணில்லாதவீரர் சூழவும் விலாளன் அஞ்சிலக்கஞ்சேனைகள் சூழவும் பூமியிலிடமில்லையென்றுசொல்ல நெருங்கிவருதலைக்கண்டு மயிடன் சாரதியை ரதங்கொண்டுவரும்படிசொல்லுதலும், பூமியினும் வன்மையுடையதும் ஆயிரஞ்சிங்கமும் ஆயிரம்யாளியும் பூட்டியதும் எட்டுத்திசைகளுமளாவக்கூடியதும் அண்டமுகடுவரைஉயர்ந்ததும் மண்ணுலகும் விண்ணுலகும் நாகருலகும் விரைவிலே சென்றுவரும் வேகமுள்ளதுமாகிய இரதத்தைச்சாரதிகொண்டுவந்துநிறுத்தினான். அவ்விரதத்திலே மயிடன் அநேகங்கோடி ரதகஜதுரகபதாதிகள் சூழ ஏறி வயிரக்கவச

# தேவி மகிடாசுரனைச் சங்கரித்த சருக்கச்சுருக்க வசனம்.

மும் வீரக்கழலுந் தும்பைமாலையுமணிந்து யுத்தஞ்செய்யச் சத்தியாகியதேவி முன்னே சென்றனன். அப்பொழுது இரத்தமழைபொழிந்தது. வெள்ளிடிகள் வீழ்ந்தன. மயிடனிடத்தோள் துடித்தது. மதங்கொண்ட யானைகள் பெட்டையானைகளையொத்தன. பெட்டையானைகள் வாயிலே நீர்வறழ்ந்தது. இத்தன்மையாக வருஞ்சேனையைக்கண்டு தேவி யுலகமெல்லாநடுங்கும்படி கர்ச்சித்த வோசையை அவுணர்கள் பார்த்துத் தும்பைமாலைசூடி நெருங்கி வந்து சூலம், தண்டு, தோமரம், வேல், பிண்டிபாலம், வாள், உலக்கை முதலியவைகளை வீசிச்சண்டைசெய்தனர்.

அதுகண்டு தேவிகண்கள் நெருப்புப்பொறிபறக்கவிடுகின்ற மூச்சிலே தோன்றிய எண்ணில்லாத பூதங்களுள்ளே சிலபூதம் அண்டங்கள் வெடிபடமுழங்கின. சிலபூதம் சங்கமூதின. சிலபூதம் பறையடித்தன. சிலபூதம் படைகளேந்திவந்து அசுரசேனையின் முதற்படைகள் நொறுங்கத்தண்டாயுதங்கொண்டடித்தன. அவுணர் விடுகின்ற ஆயுதங்களெல்லாவற்றையுந்தேவியுமந்தந்த ஆயுதங்களைக் கொண்டறுத்துத்தள்ளினாள். தேவர்களதுகண்டு புஷ்பமாரிபொழிந்தார்கள். தேவியேறிவந்த சிங்கவாகனமும் நரசிங்கத்தைப் போலவந்து அசுரசேனைகளைப்பிளந்து உதிரங்களைக்குடித்தது. பலவாறு சிங்கவாகனஞ்செய்த துன்பத்தால் அவுணர்சேனை பூமியில் விழவும் ஆயுதங்கள் முறிபடவுங் கண்டசேனைத்தலைவர் கோபித்துப்பல ஆயுதங்களைப்பிரயோகித்தனர். தேவி அவ்வாயுதங்களை யேந்தின ஆயுதங்களைவிட்டு முறித்துவிட்டுவெற்றிச்சங்கமுழக்கிநின்றனள். உடற்குறைகள்நடித்தன. பேய்க் கூட்டங்கூடின. கழுகு பருந்துகள்கூட இரத்தவெள்ளமோடின. அவ்வண்ணமாக இறந்த அவுணர்கூட்டங்களைக்கண்டு தேவர்கள் கைகொட்டித்தேவிமேலே புஷ்பவருஷம் பெய்தனர். சிட்சுரனப்போது வில்லைவளைத்துப்பாணங்களைத்தேவிமேலே யேவினன். அப்பாணங்களைத்தேவியும் பலபாணங்களாலறுத்துச்சிட்சுரன் இரதத்தையும் குதிரையையும் பாகன் தலையையுந் தகர்த்துச் சிட்சுரன்தேகமெல்லாந் துளைபடச் சரங்களைவிடுத்தனள். சிட்சுரனுடலம் பிளக்கவுஞ்சினந்து தேவி ரதத்திற் கட்டிய யாளியின் தலையினும் தேவிதோளினும் ஒருவாளையுருவிவெட்டினன். அவ்வாளிரண்டாக முறிந்துவிட்டது. பின்னர் ஒருசூலாயுதத்தையெடுத்துத்தேவிமேலே யேவினன். அதையும் வேறொரு சூலத்தாலறுத்துச்சிட்சுரன் சரீரத்தையும் வெட்டிமடித்தனள்.

அதன்மேல் சாமரனென்பவன் கையிலிருந்தவேலைத்தேவிமேலேவீசியெறிதலும், தேவிகோபத்தினாலே அது பொடியாய் விழக்கண்டு சூலாயுதமொன்றெடுத்து விடுத்தான். அதையு மொருபாணத்தாலே தேவி துண்டப்

படுத்தினள். அதன்பின்னர் சாமரன் சிங்கவாகனத்தின்மேல் மோதினன்; அதுகண்டு உக்கிரன் கோபித்துப்பாணமழைகளைத்தேவிமேலே வருஷித்தான். அப்பாணங்களைத் தேவிபூதங்கள் மலைமரங்களால் மாய்த்துவிட்டன. காரனன் சினந்து வில்லைவளைத்துப்பாணங்களைவிட்டான். தேவி பூதகணங்கள் அவன்றலையிலே இரத்தமொழுக மூளைசிதற அவனைக்கொன்றன. விலாளன் உக்கிரவீரியன் உக்கிரமுகன் இம்மூவருஞ்சேர்ந்து அளவில்லாதசேனைகளுடன்வந்து தேவியை வளைந்துகொண்டு பற்பலவாயுதங்களைச்செலுத்தினர். அவைகள் துண்டந்துண்டமாக முறிபடப்பாணங்களைவிட்டு அவர்களையுந்தேவி வதைசெய்தனள். துன்முகன் துர்த்தரனென்னும் முதுகு புறங்காட்டாத சூரர்களிருவரும் தேவியை வளைந்துகொண்டு தேவர்கள் பயப்படும்படி ஆயுதங்களை வீசினார்கள். தேவியுமவ்விருவர் சேனைகளிலுமொருவருமில்லாதபடி நாசமடையச்செய்தனள். அதன்பின் அவ்விருவரும் தேவி புயங்களிலே பாணங்களைச்செலுத்தினர். தேவியந்தப்பாணங்களையும் அவர் வில்லையும் அம்பறாத்தூணியையுமறுத்து அவர்தலையைவெட்டி வீழ்த்தி வீரகர்ச்சிதஞ்செய்துநின்றனள். இவைவெல்லாமயிடாசுரன்கண்டு இந்தப்பெண் வில்லென்னுஞ்சாபத்தாலே யித்தனையுத்தஞ்செய்து வென்றதன்று சொல்லென்னுஞ்சாபத்தாலேதான் வென்றனளென்று நகைத்து ரதத்தைச்செலுத்தி வில்லுங்கையுமாகவந்து தேவிமேலும், சிங்கத்தின்மேலும், பூதங்கள்மேலும் வாளிகளைத்தூவிநிற்றலும், தேவி யந்தக்கொடிய வாளிகளைப்பார்த்து அவைகளைச் சிதைக்கத்தக்க வாளிகள் பலவற்றைத் தெரிந்தெடுத்துவிட்டுச் சேனைகளையுந், தேரிலேகட்டிய சிங்கங்களையும், பாகனையுந், தேரையும், வில்லையுந் தூணியையும் பொடிப்பொடியாக்கிவிட்டனள். தேரும் வில்லுமிழந்து நின்ற மயிடன் தேவி சேனைப்பெருக்கைப்பார்த்து மகிழ்ந்து பயந்து ஒரு எருமைக்கடாவடிவமெடுத்துக் குளம்பினாலே பூமியைக்கிழித்துங் கொம்பாலே மலைகளையொடித்தும் வாலாலே சமுத்திரத்தைக்கலக்கியும் பூதகணங்களை மிதித்தடித்துப் பற்பலவாறு துன்பஞ்செய்யத், தேவிசினந்து அவ்வெருமைக்கடாவின் கழுத்தையுங்காலையுங்கொடிய ஆயுதங்களால் முறித்துத்தள்ளினாள்.

மயிடன் கடாவடிவத்தை விட்டுநீங்கிச் சிங்கரூபங்கொண்டுவந்து பூதகணங்களைத் துரத்தியடித்தனன். அச்சிங்கத்தின்தலையையுந்தேவி யொருபாணத்தாலறுத்தெறிந்தனள். மயிடன் மலைபோலொரு புருடவடிவங்கொண்டு வந்துபொருதனன். அவனையுந்தேவி யொருபாணத்தாலே மார்பைப்பிளந்து வாளாலே தலையையும் அறுத்துத்தள்ளினள். அதன்மேல் மயிடன் யானையுருவங்கொண்டுவந்து கணங்கள் கண்களைமூடும்படி வீறிட்டுமுழங்கினன். அதையுந்தேவி வாளினால் வெட்டித்துண்டப்படுத்தினள். மயிடன்

முன்போலவே எருமைக்கடாவுருவத்தோடுவந்து சண்டைசெய்து வால்கால் முதலியவற்றாற் பூதகணங்களுக்கு வலியற்றுப்போம்படிசெய்தனன். தேவியு மதுபானஞ்செய்து களிப்படைந்துவந்து இடிபோல் பேரொலிசெய்து வில்லைவளைத்துப்பாணங்களைச்சொரிய, மயிடன் மலைகளைப்பிடுங்கித் தேவிமேலேயெறிந்தனன். அம்மலைகளைத்தேவிபற்பல பாணங்களாலே தூளாக்கிவிட்டு மயிடனைநோக்கிச்சொல்லுவாள்; உன்னுடைய சேனைகளெல்லாமிறந்து கிடப்பதுகண்டும் வீணாக ஆரவாரஞ்செய்துகொண்டுதிரிகின்ற யுன்னையுமிப்பொழுதே கொல்வேன் தேவர்களதுகண்டு களிப்படைவார்களென்றுகூறுதலும், அதுகேட்டுமயிடன் தேவியைநோக்கித் தேவர்களெல்லாமிரங்க உன்னையான் கொல்வது தெரியாத பேதையே யென்றனன். தேவிமிகவுங்கோபங்கொண்டு தன்னுடையபாதத்தினாலே மயிடன்றலையிலேமிதித்துச்சூலத்தினாலே கழுத்திலே குத்திநிற்க மயிடன் பாதியாகியகடாவடிவத்தைவிட்டுப்பாதியசுரவடிவுடன்வந்து யுத்தஞ்செய்தனன். தேவி வாளாயுதத்தாலேயவன்றலையையும் வெட்டித்தள்ளினாள். விண்ணவர்கள்கண்டு களித்துத்தேவிமேலே புஷ்பமாரிபொழிந்து ஆனந்தக்கூத்தாடித் தேவி புகழைப்பாடினர். தேவப்பெண்களும் பூதங்களு முனிவருமவ்வாறேசெய்து மகிழ்ந்தனர். மனிதருற்றமகிழ்ச்சி சொல்லுதற்கடங்காது. பிரமன் முதலியதேவர்கள் தேவியை வேதவிதிப்படி பூசைசெய்தனர். தேவியுமவரவர்கள் விரும்பியவரங்களைக்கொடுத்துத்தங்கள் தங்களிருக்குமிடத்திற்குப்போகும்படி விடையளித்தருளினள். இங்ஙனம் அருள்செய்த தேவி யாரென்னில் கன்னியாகுமரியிலெழுந்தருளியிருக்கும் கன்னிநாயகியென்று பிரமதேவர் மார்கண்டேயருக்குச்சொல்லினர். அவ்வாறே சூதமுனிவர் நைமிசாரணியவாசிகளுக்கு அருளிச்செய்தனர்.

தேவி மயிடாசுரனைச் சங்கரித்தசருக்கச்சுருக்கவசனம் முற்றிற்று.

## பதினாலாவது.

## கன்னிநாயகி குமரியில் வரலாற்றுச் சருக்கம்.

திக்கெலாந் துதிக்குமேலாஞ் சிறப்புறுங் கயிலை யென்னத்
தக்கவோர் நாமம் பெற்ற தனிவரை வரைகட் கெல்லா
மிக்கதாய் விளங்கு கின்ற வெள்ளிவெற் பென்றொன் றுண்டாற்
செக்கர்வா னிறத்தோ னங்குத் தேவியோ டிருப்ப தம்மா. (௧)

சித்தர்கண் முனிவர் தேவர் சிறந்தயோ கத்தர் நேயம்
பத்தர்கள் விட்டு நீங்காப் பாசம தகன்மெய்ஞ் ஞான
முத்தர்க ளூழிக் கால முடிவினு முடியா தாய
நித்தர்கள் கணங்க ளோடு நிறைந்ததக் கயிலை வெற்பு. (௨)

குலவரை நிலைக ளெல்லாங் குலைந்தெழு கடலும் பொங்கி
நிலவரை யுள்ள யாவு நிலைகுலைந் தழியும் போதும்
புலவரை கடந்து நின்ற பொங்கொளிச் சொரூபி யாய
தலைவரங் கிருக்கு மந்தச் சயிலம தழியா தம்மா. (௩)

பேரியற் கயிலை யென்னும் பெருவரைப பதகி பாய்ந்து
சூரிய விம்ப மற்றைச் சுடர்நில வனைத் தோற்றுஞ்
சீரிய ககன மீதிற் றிகழ்ந்தெழுந் தங்க ணோடுந்
தாரகைக் குழாங்க ளெல்லாந் தயங்கொளி வெள்ளி போலும். (௪)

பீனெழு படல மட்டும் விளங்கொளிக் கயிலை வெற்பிற்
றூனெழு கிரணம் விண்ணிற் சார்ந்துறப் பரப்ப லாலே
வானெழு மதிய மந்த வரையினின் மருங்கு சாரி
லானவம் மதியந் தோன்றி யதனொளி வேறு காட்டா. (௫)

நாடுநான் மறையி னோதை நரம்பிசை வீணை வல்லோர்
பாடுமின் னிசையி னோதை பயின்முழ வதிரு மோதை
யாடுநல் லமரர் மாத ரருநட னத்தி னோதை
நீடுவிண் ணவர்வாழ்த் தோதை நிறைந்ததக் கயிலை யம்மா. (௬)

சுந்தரக் கயிலை வெற்பின் சோதிவெண் ணிலவின் பத்தி
சந்திர கிரணம் போர்த்தல் போலவே தாக்க லாலே
யந்தவவ் விடங்க டோறு மருவிபாய் மதமா வெல்லா
மிந்திரன் றும்பி யென்ன வினிதுசஞ் சரிக்கு மாதோ. (௭)

வானுயர் குடுமி வெள்ளி வரையின்மிந் கொளிக ளெல்லா
நீனிறக் கேழ லங்க ணிற்பதிற் பாய்த லாலே
தானவன் கரந்த ஞாலந் தன்னைமுன் கொணர்ந்த வெள்ளை
யேனம தென்ன நின்றவ விடர்தொறு மேயு மாதோ. (௮)

பொன்னொளிர் தருக்கண் மீதும் புகனவ மணிக ளாய
மின்னொளிர் தருக்கண் மீதும் வெளளிவெற் பிமைக்குஞ் சோதி
துன்னொளி பரப்பி மூடித தோற்றுவ தகள்பற் றுமற்
றன்னொளி நிறவெண் பட்டாற் சட்டைபோர்த் திடுதல் போலும். (௯

மலர்ப்பயில் வாவி தோறு மாலையின் மலரும் போது
நிலவொளி விரிக்கும் வெள்ளி நெடுவரைக் கிரணந் தன்னு,
லலர்வுறும் பகற்கா லத்து மலர்ந்தவெம் பகற்போ தாய
குலமல ரினங்க ளெல்லாங் கூப்பிவாய் குவியு மாதோ. (௰)

தண்ணிறப் படிகம் போலத் தயங்குநீ ரலருஞ் செய்ய
வொண்ணிறக் குமுதங் கஞ்ச மொளிவரைப் பத்தி பாய்ந்தங்
கெண்ணிறந் தலர்ந்த வாச வெழினிற மலர்க ளெல்லாம்
வெண்ணிற மலர்க ளோடு வேற்றுமை தெரியா தம்மா. (௰௧)

சசியினைத் தோய்த லானுந் தருநிழல் வதித லானு
மிசையுரு யிரங்கண் ணங்கு மெய்யுற விளங்க லானும்
வசையிலா நான்கு கோட்ட வாரண மன்ன லானு
மிசையுறு கயிலை வெற்பு மிந்திரன் போலு மாதோ. (௰௨)

நாற்றிசை முசங்க டோறு நான்மறை நவிற்ற லானும்
போற்றிய பூவின் மீதே பொலிவுற விருத்த லானுந்
தோற்றவோ திமந்தா னாருந் தொழிலுடை மரபி னானுஞ்
சாற்றிய வெள்ளி வெற்புஞ் சதுமுகத் தவனைப் போலும். (௰௩)

இராவணன் வலிய டர்த்தே யிசைபெறுந் தன்மை யானு
மராவணை யுடைமை யானு மமருல களத்த லானும்
பராவரு மாக மீதிற் பகர்திரு மருவ லானுஞ்
சுராதிபர் தொழுமவ் வெள்ளிச் சுடர்வரை மாலும் போலும். (௰௪)

முடியிலைம் புலிமே வுற்று முதுநன்னீர் வைக லானு
மடிமிசை முனிமா வேங்கை யரவுபங் கமர்த லானும்
வடிவுறு வெண்மை யானு மானிட மருவ லானும்
பொடியணி மேனி யானைப் போலுமவ் வரையு மன்றே. (௰௫)

விருப்பொடு வெறுப்பு மில்லா வேதநா யகன்றா னின்பா
விருப்பது சரியை யாதி யியற்றுபுண் ணியர்க ளல்லாற்
கருப்படு மவர்கள் காணக் கயிலைமால் வரையாம் வெள்ளிப்
பொருப்பதி லழகு மிக்காய்ப் பொலிந்தவா லயமொன் றுண்டால்.()

சமைத்தெழி றிகழுந் தூய சந்திர காந்தத் தாலு
மிமைக்குநன் மணிக ளாலு மியங்குசெம் பொன்னி னாலு
மமைக்குநாற் றேவ தச்ச னாக்கிய வாலயத்து
னுமைக்குநா யகன்றா னின்பா லுவந்தினி திருக்கும் போதில். (யஎ)

வேறு.

வானவர் சித்தர் யோகிக ளரிய மாதவ முனிவரர் மறையோ
ரானவர் முன்ன மாங்கொரு காலத் தரனடம் புரியநின் றேத்தி
ஞானநா யகன்ற னல்லருள் பெற்று நலனொடு மாங்கவ ரேகத்
தேனன தீஞ்சொற் றேவியும் பரனுஞ் சேர்ந்தினி திருக்குமவ் வேலை.

இமையநன் மடந்தை மயிடனைக் காய்ந்தன் றிமையவர் தமக்கிட ரொழித்தா, ளமையுறு முளத்தோர்க் கருள்புரி தேவி யாருயி ரனைத்தையு மீன்றா, ளுமையவள் புட்ப காசியென் றுரைப்ப வொரு திரு நாமமு முறவே, சமைவுறு கன்னி யென்றவோ ருருவந் தரித் தரன் றனையருச் சித்தாள். (யகூ)

நோக்கிலா னந்த வருவிமஞ் சனமு நுவன்மலர் முறுவலான் மலரு, மூக்கினாற் சேர்த்த கந்தமு மெய்யான் மொய்த்திடு நறுவிரைப் புகையு, நாக்கினால் வருநை வேத்திய முதவு நயனத்தாற் றீபமுங் கன்னத், தாக்குமூ லத்தி லடித்தவர்த் தியமு மமைத்தரன் றனைய ருச் சித்தாள். (உய)

சத்தியோ சாத முகத்தினிற் கந்தந் தயங்குமீ சானவா னனத்தின்
மொய்த்தநன் மலரா லரியதற் புருட முகத்தினிற் றூபத்தா லகோர
வத்திர மதனிற் றீபத்தால் வாம தேவமா வதனத்தில் வைத்த
பத்தியா லமைநை வேத்தியத் தாலும் பரிவுறச் செய்தருச் சித்தாள்.

மைமுகந் தெழில்சேர் விழியருட் கன்னி மனமுவந் தளமிக வுருகி
மெய்ம்முகந் துரைக்கு முதலாக முதலா மேவுமூன் றாமுகம் வரைக்கு
மைம்முகத் தெண்டோட் பரபனை யன்பா லருச்சனை யிங்ஙனம் புரி
யப், பொய்ம்முகத் தவர்க ளறிந்திடாக் கருணைப் புண்ணியன் பூசை
கண் டுவந்தே. (உஉ)

பொருவரும் புட்ப காசியா நாமம் புனைந்தவக் கன்னியை நோக்கித்
திருவருட் பரம னருள்செய்வா னீதான் செய்தமெய்ப் பூசைகண்
டுவந்தேந், தரு வர முனைக்கு வேண்டுவ கேணீ யென்றலுஞ் சருவ
சங் காரம், வருமந்தக் கால முன்னொடு கிரீடை மருவிநான மகிழ்
வுற வேண்டும். (உங)

என்னவே புட்ப காசியா நாம மியைந்தவக் கன்னிநா யகிதான்
சொன்னவம் மொழிகேட் டானருள் கின்றான் றொல்லுல கனைத்து
மில் லாமற், றன்னையே யொடுக்கி யுயிர்க்கிளைப் பாற்றுஞ் சமைய
மாஞ் சருவசங் கார, மன்னது வருமக் காலமுங் கணக்கு மறைகு
வன் கேட்டியென் றறைவான். (உச)

ஆர்ந்தநாண் முந்நூற் றறுபதோ டைந்து மைம்மூன்று கலையுமங்
கதின்கீழ்ச், சார்ந்திடு விகலை முப்பதின் மூன்று தற்பரை பத்தினோ
டைந்துஞ், சேர்ந்ததோர் வருட மவ்வரு டந்தான் செப்பிய கலியுக
மதற்கு, வார்ந்தநா லிலக்க மேன்முப்பத் தீரா யிரவரு டம்மென
வருமால். (உரு)

தீங்கலிக் கிரட்டி துவாபர மதற்குத் திரேதமு மிரட்டியாங் கதற்கே
யோங்கிய கிரேத யுகமதற் கிரட்டி யுடனிதைச் சதுர்யுக மென்ப
ராங்கிவை யிரண்டா யிரந்தரம் வந்தா லயன்றனக் கொருதின மா
கும், வாங்குமத் தினந்தான் முப்பதோர் மாத மாதமுந் நான்கொரு
வயதாம். (உசு)

பேசிய வயது நூறுசெல் காலம் பிரமன்வீழ் பிரளய மாமா
ஞைமாம் பிரமப் பிரளயம் பத்து நடக்கிலோர் நாழிகை யரிக்கே
யாகின்மா மாயன் பன்னிரு வோர்க ளழிந்திடி லுருத்திரற் கதுதான்
காகிலோர் கணமாஞ் சருவசங் கார காலமா மூர்த்தியாய்த் தோன்
றும். (உஎ)

உருத்திர வடிவாம் பிரளய கால முன்றனக் கின்புறு கிரீடை
விருப்பெழ நலனாய் மேவுது மதற்கு விளம்புமவ் வளவினி நீதான்
றிருத்தகு ஞான வனமதிற் கீழ்பாற் றென்கடற் கரையதி லிடத்தின்
மருக்கமழ் குழலா ரெழுவருன் பாங்கிமாரொடு தவம்புரிந் திருத்தி.

வலக்கையின் மதுக பாலையு மற்றை யிடக்கைவாள் றுடையினில்
வைத்து, விலக்கணத் தோடு நீதவம் புரிந்தங் கிருக்குநாள் வருகு
வம் வாணன், குலத்தொடு மவனை மாய்த்துலகத்தின் குறைதவிர்த்
தினிதுநீ வைகத், தலப்பெயர் கனிகா கேத்திர மெனவுந் தவத்தல
மென்னவுஞ் சொல்வா. (௨௯)

கன்னிகாய் புட்ப காசியே யங்கு கன்னிய ரெழுவருஞ் சூழ
நன்னலம் பெறநீ யேகுதி நாமு ஞானநல் வனமெனச் சொல்லு
மன்னுமத் தலத்திற் பிரமாரி யையாய் வைகுது முருத்திர வடிவா
மன்னது காலஞ் சொன்னதங் கடைவை யருந்தவத் தலத்திலே
கென்றான் (௩௰)

என்றுமால் விடையோ னியம்ப லும் விடைகொண் டிறைவனை யிறை
ஞ்சிமுன் காட்டிக், குன்றலில் வெள்ளிக் குன்றினை யகன்று குரை
கடன் மறிதிரைக் கரைசேர், தென்றிசை யதனிற் குமரியென் றுரை
க்குஞ் சிறந்தமா நகரினை நோக்கித், தன்றுணை மாத ரெழுவரோ
டெழுந்து தமிழ்மல யத்தினைச் சார்ந்தாள். (௩௰௧)

வேறு

சந்தனப் பொதிய மென்னுந் தடவரை மருங்கு சார்ந்த
வந்தநற் கன்னி தன்னை யருட்குறு முனிவன் கண்டு
வந்தடி வணங்கிப் பொன்னின் மணித்தவி சதின்மேல் வைத்துப்
புந்திநொந் தன்பி னோடு பூசனை புரிந்து சொல்வான். (௩௰௨)

அன்னையே வலிய வந்துன் னடியிணை வணங்கத் தந்தா
யென்னைமா தவஞ்செய் தேனோ வென்றருண் முனிவன் கூற
முன்னவன் கயிலை வாழு முதல்வனற் குமரி யென்னும்
பொன்னக ரிருத்தி யென்னப் போந்தன னென்று போனாள். (௩௰௩)

அருவரைப் பொதிய மென்னு மவ்வரை கடந்து மற்றைப்
பெருவரை யேழி னோடும் பெரிதினி தெண்ணற் கொத்த
வொருவரை முப்ப தென்னும் யோசனை யும்ப ரோங்கி
வரும்வரை யென்ன நீண்ட மயேந்திர மலையைக் கண்டாள். (௩௪)

ஏதமில் காலின் செம்ம லிலங்கெயி லிலங்கை தாவும்
போதில்யோ சனைமுப் பானிற் பூமியிற் புக்க போக
மீதெழு யோசனைக்கே விளங்கிய வதனில் விண்ணோர்
மாதவர் சித்தர் வைகு மயேந்திர வரையில் வந்தாள். (௩௫)

அங்கதன் வனங்க ளெல்லா மழகொழு கியமெய்க் கன்னி
செங்கம லங்கள் போலுந் திருக்கணா னோக்கும போதிற்
பொங்குவா ரிதியைத் தென்பாற் பொலிவுறக் கண்டாள போலு
பங்குல்சேர் வரையை நீங்கி வாரிதிக் கரையில் வந்தாள். (௩௬)

வந்தவக் கன்னி பொற்றாள் வணங்கிவா ரிதிதான் காண்பான்
செந்துவர்ப் பவள முத்தந் திகழிள நிலவு கானு
மந்தவெண் சங்கஞ் செம்பொ னவிர் திரைக் கரத்தால் வாரித்
தந்துவைத் திருத்தல் போன்ற தண்டுறை பலவுங் கண்டாள். (௩௭)

மறைபுகல் கன்னி பாதம் வருணன்றன் வணங்கிக் காணத்
துறைதொறுங் கலங்கள் கொண்டு சொரிந்துவைத் ததுபோற்றோன்று
நிறைதரு பொன்னங் குன்று நிறமணிக் குவையும் பட்டும்
கறையடிக் குழாமுங் கோதில் கவனவாம் பரியுங் கண்டாள். (௩௮)

தேனொழு கினிய தீஞ்சொற் செந்துவர்ப் பவளச் செவ்வாய்க்
கானெழு கரிய கூந்தற் கன்னியக் கடல்வெள் வானே
மீனெழுந் தனந்த கோடி விண்மிசை மேல் வேட்டம் பாய்ந்து
வானெளிர் மீனிற் றுக்கி வாளென வருதல் கண்டாள். (௩௯)

மீனிறை கடலி னின்றும் வேட்டம்பாய் மகர மீன
மானவை சென்று சென்றங் கவ்விடை தாக்குந் தோறும்
வானிடை யோடு கின்ற மகரமோ டிலங்கு மீனந்
தானவை யஞ்சல் கண்டு தயாபரை மூரல் பூத்தாள். (௪0)

ஆனையை விழுங்கும் பேழ்வா யடன்மிகு திமிங்கி லங்க
ளூனமில் போர்க ளென்றே டொன்றிடை விடாது தாக்கி
மீனினந் திகழ்ந்து லாவும் வேலையைக் கலக்கஞ் செய்யக்
கானிறை குழலாள் கண்டு கண்களிப் புற்று நின்றாள். (சக)

போருறு திமிங்கி லங்கள் புணரியைக் கலக்கல் கண்டு
சீருறு வலியின் மிக்க திமிங்கில கிலங்கள் சென்றங்
காருறு பசியான் மற்றை யவைகளை விழுங்கிச் செல்வ
காருறு கூந்தற் கன்னி கண்டதி சயித்து நின்றாள். (சஉ)

நீரினி னிற்கு நாவாய் நெடுங்கொடி புனைத லாலும்
மார்வலி வடத்தி னாலு மாழிதான் றங்க லாலுஞ்
சார்வுறுந் தூகிலி னாலுந் தழைத்தநன் மணிக ளாலுந்
தேரெனப் பொலிந்து நிற்ற றேவிகண் களிப்பக் கண்டாள். (சங)

நாகநன் மலரின் வாசம் நறியகே தகையின் வாசம்
பூகமென் மலரின் வாசம் பூத்தசண் பகத்தின் வாச
மாகமே லெழுந்த சோலை வகுப்பின்மேற் றுயிலுஞ் சூலார்
மேகமேன் மணக்கக் காட்டும விரைப்பொழில் பலவுங் கண்டாள்.()

இன்னகர் தனக்கு மேலா மிமையவ ருலக மென்னும்
பொன்னக ரதுவு மொவ்வாப் புண்ணிய நகரென் றெண்ணி
யன்னகர் தன்னிற் றூய வருந்தவப் புட்ப காசி
யென்னுமோர் நாமம பூண்டா ளிருந்தனள் கன்னி யென்ன. (சரு)

மருமலர் மாலை யோர்கை யோர்கைவான் றுடையு மாக
விருகையு மமைத்து முக்க ணிறைவனை நோக்கி நான்கா
மருமறை யேத்துந் தேவி யைம்புல னடக்கி நல்லா
ருரியவ ரெழுவர் சூழ வோங்குமொண் டவஞ்செய் கின்றாள். (சசு)

ஊனமில் காந்தந் தன்னி லுவரிபா கத்தி லுள்ள
தானவை போக காண்டந் தன்னுளே சொலுமிக் காதை
யானதைச் சூத னென்போ னருணேமி வனத்தில் வாழு
ஞானமா தவர்க்குச் சொன்னா னலங்கிளர் மகிழ்ச்சி கூர. (சஎ)

கன்னிநாயகி குமரியில் வரலாற்றுச் சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் (ருஅசு.)

# கன்னிநாயகிகுமரியில்வரலாற்றுச்சருக்கச்சுருக்கவசனம்

திசைகளெல்லாந் துதிக்குங் கயிலாயமலை மலைகளுக்கெல்லா முயர்ந்தது. வெள்ளிமலை யென்னும் பெயருடையது. சிவபிரா னெழுந்தருளியிருக்கப் பெற்றது. சித்தர் முனிவர் யோகிகள் தொண்டர்கள் சீவன்முத்தர் யுகாந்த காலத்தினு மழியாத நித்தியர் கணங்களோடு நிறைந் திருக்கப் பெற்றது. மலை கடல் நிலைகுலையுங் காலத்துங் கெடாத நிலையுள்ளது. அம்மலையினின்று மேற்பக்கத்துப் பரவு மொளிகளையே சூரிய சந்திரர் நக்ஷத்திரங்க ளென்று சொல்லுவர்; அம்மலையின் பக்கம் வரும் சந்திரன் முதலியோர்களைப் பகுத்தறிய முடியாது. வேத வோசையும் வீணையினொலியும் பாடுமிசையு மிருதங்க முழக்கமுந் தேவப் பெண்கள் நடிக்கு மோசையும் தேவர்கள் வாழ்த்தொலியு நிறையப்பெற்றது. அங்கே சஞ்சரிக்கும் யானைகளெல்லாம் அம்மலையின் வெள்ளிய வொளி பாய்தலாலே இந்திரன் வெள்ளை யானையைப் போலக் காணப்படும். பன்றிகள் அம்மலையின் வெண்ணிறத்தால் மூடப்பட்டு, அசுரன் கொண்டுபோன பூமியை யெடுத்து வந்த விஷ்ணுவாகிய வெள்ளைப்பன்றியைப் போலத் தோன்றாநிற்கும். அக்கயிலாசத்தின் வெண்சோதியாற் பொதியப் பெற்ற கற்பக விருக்ஷங்கள் புழுதிபடியாமல் வெண் பட்டாலாகிய சட்டைபோர்த்தது போலத் தோன்றும் அம்மலையின் வெள்ளியவொளியால் மாலையின் மலரும பூக்களெல்லாங் காலையினு மலர்ந்தன, பகற் காலத்து மலர்ந்த மலர்களெல்லாங குவிந்தன. இதுவன்றிப் பலசாதி மலரும் வேறுபாடறியப் படாமலே வெண்ணிற மாகவே காணப்படாநிற்கும். அம்மலை சந்திரனை யளாவலாலும் விருக்ஷங்களி னீழல்தங்குதாலும் மேலே பொருந்திய அநேக மூங்கில்கள் பிரகாசித்தலாலும் நான்காகிய கிளைகளையுடைய வேதங்கள் நிலைபெறுதலாலும் தேவேந்திரனையொத்திருக்கும், நாலு திசையிலும் வேதமுழக்கத்தாலும் பூமேலிருத்தலாலும் அன்னப்பறவை யூர்ந்து செல்லுதலாலும் பிரமனைப் போலவும் இராவணன் வலியைத் தொலைத்தலாலும் அராவணை யிருத்தலாலும் தேவருலகத்தை யுயர்ந்து அளத்தலினாலும் திருமருவுதலாலும் விஷ்ணுவைப் போலவும், தலையிலே சந்திரனுஞ் சலமு மிருத்தாலும் பாதத்திலே முனி வேஙகை அரவு இருத்தலாலும் வெண்ணிறத்தாலும் மானிட மருவு தலாலும் சிவபிரானைப்போலவும் அம்மலையிருக்கும். சரியையாதிகள் செய்யும் புண்ணியர்களன்றிப் பாவிகளாலறியப்படாததாகிய அந்தக் கயிலாய மலையினுச்சியிலே கோயிலொன்றிருக்கிறது.

அக்கோயில் சந்திரகாந்தக் கற்களாலும் நவரத்தினஙகளாலும் பொன்னினாலுந் தேவதச்சன் செய்யப்பட்டது. அதிலே யானந்த நிருத்தஞ்செயது

தேவர் முனிவர்களுக்குக்கருணைசெய்து அனுப்பிவிட்டுச் சிவபிரான் உமாதேவியாருட னெழுந்தருளி யிருக்கும்போது, மயிடாசுர சங்கார தேவியானவள் கன்னிப்பருவமடைந்து புட்பகாசி யென்னு நாமம் உமாதேவியாராலே பெற்றுச் சிவபெருமானை யருச்சித்துப் பூசை புரியத் தொடங்கி, ஆனந்தக்கண்ணீர் திருமஞ்சனமாகவும் புன்சிரிப்பே புட்பமாகவும் சுவாசமே வாசனைத்திரவியமாகவும் சரீரத்திலுண்டாகிய வாசனையே நல்ல தூபமாகவும் நாக்கிலுண்டாகிய வசனமே நைவேத்தியமாகவும் நேத்திரபார்வையே தீபமாகவும் கன்னத்தி லடிப்பதே வாத்தியவோசையாகவு மமைத்துச் சத்தியோசாத முகத்தில் வாசனைத் திரவியமும் ஈசான முகத்திலே மலருந் தற்புருட முகத்திலே தூமமும் அகோரமுகத்திலே தீபமும் வாமதேவ முகத்திலே நைவேத்தியமும் சேர்த்துப் பூசைசெய்தனள். இவ்வாறு மூன்றுயுகம் பூசைபுரிவதைக்கண்டு திருவுளமிரங்கிச் சிவபிரான் மகிழ்ந்து புட்பகாசியாகிய கன்னியை நோக்கி யுனக்கு வேண்டிய வரங்கொள்க என்றருளிச் செய்தலும், அவள் சருவ சங்கார காலத்திலே யும்மோடு கிரீடைசெய்து மகிழ்ந்திருக்க வேண்டும் என்று பிரார்த்தித்தனள். சிவபிரானவளை நோக்கியருளிச்செய்வர் முந்நூற் றறுபத்தைந்துநாளும் பதினைந்து கலையும் முப்பத்தின் மூன்று விகலையும் பதினைந்து தற்பரையுஞ் சேர ஒரு வருடமாம்; அவ்வருடம் நான்கிலக்ஷத்து முப்பத்தீராயிரஞ் சேரக் கலியுக முடிவாகும். அக்கலியுக மிரட்டித்தால் துவாபர யுகமாகும்; அஃதிரட்டித்தால் திரேதயுகமாகும்; அஃதிரட்டித்தால் கிரேதயுகமாகும்; அஃதிரட்டித்தா லொரு சதுர்யுகமாகும்; அந்தச்சதுர்யுக மிரண்டாயிரமானாற் பிரமாவுக் கொருதினமாகும்; அத்தினம் முப்பது ஒருமாதம் அம்மாதம் பன்னிரண்டு ஒருவயது அவ்வயது நூறானாற் பிரமப்பிரளயமுண்டாகும்; அப்பிரளயம் பத்துநடந்தால் விஷ்ணுவுக்கொருநாழிகை. அவ்விஷ்ணு பன்னிரண்டுபேர் இறந்தால் உருத்திரனுக்கு ஒரு க்ஷணகாலமாம். அப்போது சருவசங்காரகால முண்டாகும்; அந்தக்காலம் உன்னோடு கிரீடைசெய்து மகிழ்ந்திருப்போம். அதுவரை தென் சமுத்திரக்கரையிலே சத்தமாதர்கள்தோழியர்களாயிருக்க இலுப்பைப்பூமாலைதாங்கி யிடக்கையைத்துடையிலே வைத்துக்கொண்டு தவஞ்செய்து பின்னர் வாணாசுரனை வதைத்துப்பூமிக்குத்துன்பத்தைப் போக்கி இருக்கவேண்டும். நீயிருக்குமிடங் கன்னிகா க்ஷேத்திர மெனவுந் தவத்தல மெனவுஞ் சொல்லுவர். ஞானவனமெனச் சொல்லும் அத்தலத்திலே நாமும் பிரம சாரியாய் வந்திருப்போம் என்று விடைகொடுத்தருளினர்.

அவ்விடைபெற்றுச் சிவபிரானை வணங்கி மீண்டு சத்தகன்னியருடனே புட்பகாசி பொதியமலையைச் சார்ந்து அகத்தியமாமுனிவர் செய்யு முபசாரமரியாதை பூசனைகளையுவந்து மீண்டுவந்து இலங்கையிலே தாவுதற்காக

# கன்னிநாயகிகுமரியில்வரலாற்றுச்சருக்கச்சுருக்கவசனம்

அனுமார் நின்ற மயேந்திர மலையைக்கண்டு வந்து அங்குள்ள சகலவளங்களையும் பார்த்துத் தென்குமரித் தலத்தைக்கண்டது போல வியந்து மீண்டு தென்சமுத்திரக்கரை வந்து சேர்ந்து பவளம் முத்து சங்கு செம்பொன் னிவைகளை யலைகள் கரையிலொதுக்குதல் சமுத்திரந் தன்னைக்காணக் கொண்டுவந்த காட்சிப்பொருள் போலத் தோன்றுந் துறைகளையும், இஃதன்றியும் கப்பல்களினின்றும் வந்திறங்கிய யானை குதிரை முதலிய பலவிதப் பொருள்களையும், சமுத்திரத்திலேயுள்ள வாளைமீன்கள் வாள்போல வானிலே நக்ஷத்திரங்களைத் தாவி மோதிவருதலையும், மகரமீன்கள் ஆகாயத்தியிலுள்ள மகரராசியைச் சென்று தாக்க அதுபயப்படுதலையும், ஆனையை விழுங்குந் திமிங்கில மீன்கள் ஒன்றோடொன்று போர்செய்து சமுத்திரத்தைக்கலக்கு வதையும், அம்மீன்செய்யுஞ் சண்டையைக்கண்டு திமிங்கில மென்னுமீன் அம்மீன்களை விழுங்கிப்போவதையும், சமுத்திரத்தினிற்கு மரக்கலங்கள் கொடிகட்டியிருப்பதாலும் வலிய வடம்பூட்டியிருப்பதாலும் ஆழிதாங்குதலாலும் துகிற்கொடிகளாலும் இரத்னங்களாலும் ரதம்போலத் தோன்றுவதையும், புன்னைமலர் தாழை மலர் கமுகம்பூ சண்பகப்பூ வாசனை செய்யும் பற்பல சோலை வளங்களையும் பார்த்துப்பார்த்துச் சந்தோஷித்து இந்தக் குமரித்தலத்துக்குத் தேவலோகமு நிகராகாது; இதுவே புண்ணியநகரம் என்று நினைத்துச் சிவபிரான் கட்டளை யிட்டருளியபடியே பூமாலையொரு கையிலே புனைந்து ஒருகையைத் தொடையிலே வைத்துப் புட்பகாசிப் பெயர் பெற்ற சத்தி கன்னிநாயகி யென்று சொல்லத் தவஞ்செய்து கொண்டிருந்தனள். இந்தச்சரித்திரம் காந்தத்தில் உவரிபாகத்தில் தான வைபோக காண்டத்திலுள்ளது, இதைச்சூதருஷி நைமிசாரணிய முனிவர்களுக்கருளிச் செய்தனர்.

**கன்னி நாயகி குமரியில் வரலாற்றுச் சருக்கச்சுருக்க வசனம் முற்றிற்று.**

பதினைந்தாவது

# தேவர்களுக்கபயங்கொடுத்தசருக்கம்.

வெந்திறல் வலியின் மிக்கோன் விப்பிர சித்தி யென்ன
வந்ததோர் நாமம் பெற்றோன் மற்றவன் வரத்தி னாலே
நிந்தையில் சும்ப னோடு நிசும்பனென் றிரண்டு வெய்ய
மைந்தரைப் பெற்று னன்னூர் மாண்டனர் தேவி கையால். (க)

உரமுடை நிசும்ப னுக்கோ ருபசும்ப னென்றோர் மைந்தன்
வரமுடை மைந்த னாக வந்தன னவனுக் கின்பாச்
சுரர்தமை யிடுக்கண் செய்யத் தோன்றினன் வாண னென்பான்
பிரமனை நோக்கி நின்று பெருந்தவம் வருந்திச் செய்தான். (உ)

அருந்தவ வாண னென்பா னையெரி நாப்பண் வைகி
யிருந்தவ நெடிது கால மியற்றலு மயனுந் தோன்றிப்
பெருந்தவஞ் செய்த வாண வேண்டுவ பேசு கென்னத்
திருந்தவ னுவகை கூர்ந்து திசைமுகற் பார்த்துச் சொல்வான். (ங)

மூவகை யுலகின் மிக்க மொய்வலி யுடைமை பெற்றோன்
யாவன்மற் றவனுன் மற்ற வுயிர்களால் வலிதான் குன்றிச்
சாவதில் லாமை யாக்ச் சத்திர வத்திரங்க
ளேவுவெம் படைக ளியாவு மெனக்கரு ளென்ன லோடும். (ச)

தந்தன மென்று சொல்லிச் சதுமுகத் தவனு மேக
வெந்தொழி லவுணர்க் கெல்லாம் வேந்தனும் வாணன் மற்றை
யிந்திரன் முதலா வுள்ள வெண்டிசைப் பாலர் சாய
வுந்துவெம் போரில் வென்றே யோங்கடல் வாகை சூடி. (ரு)

ஆனமூ வுலக மெங்கு மடக்கிவா னுலக மெல்லாந்
தானவர்க் காக்கி வைப்பத் தளர்வுறு மமர ரெல்லாம்
வானெளிர் பதங்க ளின்றி மண்ணின்மேன் மனித ராகிக்
கானுறு நாட்டி னுள்ளுங் கனவரை யகத்தும் வாழ்ந்தார். (சு)

இமையவர் வேந்த னாதி விண்ணவர் யாரு மிங்ங
னமைவொடு சதுர்யு கங்க ளாயிர மல்ல லுற்றே
சமைவுறுஞ் சஞ்ச லத்தாற் றகைமைசால் குருவின் றன்பாற்
சுமைபொறுத் துயர மெல்லாஞ் சொல்லினர் தொழுது நின்று. (எ)

மறைகள்யா வையுமு ணர்ந்த மதிவலோய் கால மூன்றுங்
குறையற வுணர்ந்த ஞானக் குணத்தினோய் குற்ற மற்றோ
யிறையள வேனு மின்ப மின்றியெம் பதமி ழந்தோங்
கறைகெழு நெஞ்ச வஞ்சக் கடுந்திறல் வாணன் றன்னால். (அ)

பொன்னையே யடைந்தா லெல்லாப் பொருள்களும் பெறலா மென்ன
வுன்னையேயடைந்தோம் யாங்க ளுறுதுயர்க் கொழிவும் பெற்று
முன்னையேய்ந் தின்ப முற்ற முடிவரும் பதங்க ளெய்தற்
கென்னையாஞ் செய்ய வேண்டு மிதையெமக் கருள்செய் யென்றார். ()

இந்திரா தியர்க ளெல்லா மியம்பிய மாற்றங் கேட்டுச்
சிந்தை கூர்ந் தெண்ணி யொன்று செப்புவான் மறையோன் யாரும்
புந்தியி னினைத்த வெல்லாம் பொருந்திடப் பெறுவான் வேண்டிற்
சுந்தரி யவளே யல்லாற் கொடுப்பதார் சொல்லுங் காலை. (௰)

ஆதலாற் பத்த ரானோர்க் கருள்புரிந் தவர்க ளுற்ற
தீதெலா நீக்கி நெஞ்சி னினைத்தவை செய்வா ளாகி
வேதநா யகியாந் தேவி விரிகடற் குமரி தன்னிற்
காதல்கூர் தவத்தை மேவி யிருக்கின்றாள் கன்னி யாகி. (௰க)

ஆங்கவ ளிடத்திற் சென்றே யபயமென் றடைந்தா னீவிர்
தீங்குறு துன்ப மியாவுந் தீருதற் கருள்செய் வாளா
லீங்குநில் லாதே யிப்போ தேகுமி னென்ன விண்ணோ
ரோங்கு*மந்திரிதன் சொற்கேட் டுவந்துசெல் விடைகொண்டார்கள்

குரவன தருளி னோடு கோதிலிந் திராதி தேவர்
பிரமனோ டெழுந்து பொங்கிப் பெருமைசால் கருணை சேரும்
பரவரும் பரையாங் கன்னி பகவதி தன்னை நோக்கித்
திரண்மணித் திரைகள் சிந்துந் தென்கடற் குமரி சேர்ந்தார். (௰௩)

கனிதருங் கருணைக் கன்னி கமலச்சே வடிக டண்டும்
புனிதமாங் குமரி யென்னும் பொற்பதி யதனில் வைகு
மனிதரோ வானு ளோரில் வலியரென் றுவந்து வானோர்
நனிதருந் தவத்த ளாய நாயகியிடத்தி லுற்றார். (௰௪)

பொருந்துவை காசித் திங்கட் பூரணைப் பக்கந் தன்னிற்
பரிந்துநற் றுணு தீர்த்தம் படிந்துசீ பாதப் பாறை

* மந்திரி-வியாழன்.

யிருந்தலத் தெழுமா தாக்கள் சூழ்ந்திட விருக்கும் போதி
லருந்தவக் கன்னி தன்னைக் கண்டன ரமர ரெல்லாம். (௰௫)

கண்டவிண் டலத்தோர் கண்ணு முள்ளமுங் களிப்புக் கொண்டு
பண்டைய வசம்போ யின்பப் பரவச மாகப் பெற்று
ரண்டமீன் றவளைக் கன்னி யணங்கினை வணங்கி நின்று
மண்டுபே ருவகை பொங்க வாழ்த்தெடுத் தேத்து கின்றார். (௰௬)

பத்தருக் கன்பு கூர்ந்து பரிந்துபே ரின்ப நல்கு
முத்தம குணத்தா யுள்ளத் தொளிருமெய்ச் சுடரே யுள்ளங்
கைத்தலம் வைத்த நெல்லிக் கனியென யாவுங் காணுஞ்
சத்தியே யெம்மைக் காப்பாய் தஞ்சமுன் சரண மம்மா. (௰௭)

மட்டிலா வலிசேர் தீய வஞ்சரைத் தொலைத்து மாற்றிச்
சிட்டருக் கின்ப நல்குந் திருவரு ளுடைய தேவி
கட்டுவெம் பாச நீக்கிக் கருதுமன் படியா ருள்ளத்
திட்டபே ரின்ப மான விணையடி சரண மம்மா. (௰௮)

மண்ணெனப் புனல தென்னக் கனலென வன்கா லென்ன
விண்ணென வேத மென்ன வேதஞ்சொல் பொருள தென்னப்
பண்ணென வியல தென்னப் பயில்பல கலைக ளென்ன
வெண்ணுதற் காய தாயே யாங்களுன் சரண மம்மா. (௰௯)

படைப்பது மழிப்ப தும்பின் படைத்தளித் துள்ள வெல்லாந்
துடைப்பது மாய மும்மைத் தொழிலுளாய் தொழிலொன் றில்லா
யுடைப்பெரு முலகம் யாவு மொழிவுபட் டொழியு மந்தக்
கடைத்தினத் துள்ளுங் காணுங் காட்சியாய் சரண மம்மா. (௨௰)

மாயவன் றங்கை யாயு மலைமக ளாயு முக்கட்
டேயவன் றேவி யாயுந் தொல்லுல கெல்லாந் தோற்றற்
காயதோ ரன்னை யாயு மவரன்றிக் கன்னி யாயு
நீயிவ்வா றுற்ற தேவி நினைக்கியாஞ் சரண மம்மா. (௨௧)

அருவமா யுருவ மாகி யகிலமா யகிலத் தாறு
பருவமாய்ப் பருவத் துள்ள பலன்க ளாய்ப் பதிந்த ஞானச்
சொரூபமாய் நித்த மாகித் துலங்குபல் லுயிருக் கின்பந்
தருவதாய் நிற்குஞ் சோதி தஞ்சமுன் சரண மம்மா. (௨௨)

தொலைவிலா வலிபெற் றுள்ளோன் றொடுகடல் பொங்குங் காலு
மலைவிலா மனத்தான் வன்மை மயிடனு மடைத்தி றனை
யுலைவிலாச் சுற்றத் தோடு மொழித்தகந்நா வெம்மைக் காத்தங்
கலைவிலெம் பதங்க டந்த வன்னையே சரண மம்மா. (௨௩)

பொன்னுல காழி சூழும் பூவுல குரகர் வாழு
மன்னுல கிவைகண் மூன்றும் வலியினல் வலிந்த டக்கித்
தன்னுல கென்ன வாழுத் தகுசுப்ப னிசுப்பன் றன்னை
முன்னெழித் தெம்மைக் காத்த முதல்வியே சரண மம்மா. (௨௪)

என்றய னேடும் விண்ணோர் யாவரு மேத்தி யேத்தி
நின்றுபின் னொன்று சொல்வார் நெடுந்திற லவுண னென்னும்
வென்றிசேர் வாணன் றன்னல் மெலிந்தெங்கள் பதங்கள் வாழ்தற்
கின்றியே யலைந்தோ முன்னைத் தஞ்சமா விவண்வந் துற்றோம். ()

தஞ்சமென் றுரைக்கு முன்னந் தயவுடைக் கன்னித் தாயு
மஞ்சலென் றபய நல்கி யருட்கணு லவரை நோக்கி
யெஞ்சலில் வரத்தான் வாண னிருந்தலை யரிந்தே யுங்க
ணெஞ்சுறு துயர மெல்லா நீக்குவ னுங்கட் கென்றாள். (௨௬)

பங்கயன் முதலி னோரைப் பார்த்தருட் கன்னி நீங்க
டங்கிய வச்ச நீங்கித் தழைத்திடு மனத்த ராகி
நுங்கடம் பதத்தி னுள்ள நுவலரு மின்பந் துய்த்தே
யங்கினி திருமி னென்று விடைகொடுத் தருளி னளால். (௨௭)

அன்னகன் மொழிசொல் கன்னி யரவிந்த மனைய பாதஞ்
சென்னியிற் புனைந்து கொண்டு திசைமுகன் முதல்விண் ணோர்கள்
பொன்னுல கதனிற் சென்று பொருவிறம பதத்தில் வாழ்ந்தா
ரென்னநான் முகன்மார்க் கண்டற் கெடுத்தினி தியம்பி னனல். ()

தேவர்களுக்கபயங் கொடுத்த சருக்கம் முற்றிற்று.

ஆகத்திரு விருத்தம் (சுக௭)

# தேவர்களுக்கபயங் கொடுத்த சருக்கச்சுருக்க வசனம்.

பலத்திலுயர்ந்த விப்பிரசித்தி யென்பவன் சும்பன் நிசும்ப னென்னு மிரண்டு மைந்தரைப் பெற்றான். அக்கொடிய பாதகர் தேவி கையினாலே யிறந்தனர்; அவருள்ளே நிசும்பன் உபசும்பனென்னு மைந்தனைப் பெற்றான் அவன் தேவர்களைத் துன்பப்படுத்தற்காக வாணனென்னும் புத்திரனைப் பெற்றான். அவன் பிரமாவை நோக்கிப் பஞ்சாக்கினி நடுவேயிருந்து தவஞ் செய்து திரிலோகங்களிலும் வலிமை பெற்றோராலே சாகாதவரமும் பற்பல வாயுதங்களும் பெற்று அசுரர்களுக்கெல்லாம் அரசனாயிருந்து இந்திரன் முதலாகிய திக்குப் பாலகரை யுத்தஞ்செய்து வென்று வெற்றிமாலை சூடித் திரிலோகங்களையுந் தன்னுள்ளடக்கித் தேவலோகத்தை யவுணர்களுக் கிருப்பிடமாக்கி வைத்தனன். தேவர்கள் தங்கள் பதவியையிழந்து பூலோகத்துக்குவந்து காட்டிலு நாட்டிலு மலையிலு மனிதராகி மறைந்திருந்து வாழ்ந்தனர். இவ்வாறு எண்ணிறந்த காலங்கள் செல்ல இந்திரன் முதலிய தேவர்கள் தங்கள் குருவாகிய வியாளபகவானிடத்திலே தமக்கு வாணனால் வந்த வருத்தமாகிய குறைபாடெல்லாம் விண்ணப்பஞ்செய்து இந்தக்குறை நீங்குதற்கும், எங்கள் பதவியை யாங்களடைதற்கும் யாங்கள் செய்யவேண்டிய தென்னையென்று வினவினர். அதுகேட்டுத் தேவகுரு ஆலோசித்துச் சொல்லுவார். யார் எதை நினைத்தாலும் அதையருள்செய்பவள் தேவியல்லாது வேறுயாவரிருக்கின்றார்? ஆதலால் அடியார்களுக்கு அருள்செய்யுமவள்கன்னியாகுமரியிலே கன்னிநாயகியாகித் தவஞ்செய்திருக்கின்றாள். அவளிடத்திலே நீங்கள் அபயமென்றடைந்தால் உங்கள் துன்பம் தீருதற்கு வேண்டிய வுபாயஞ் செய்வாளிப்பொழுதேயேகும் என்று விடைகொடுக்க, அவ்விடைபெற்று இந்திரன் முதலிய தேவர்கள் பிரமாவினுடன் புறப்பட்டுத் தென்சமுத்திரக்கரையிலே பகவதியாகிய தேவியை நோக்கிவந்தனர்.

பகவதியாகிய கன்னிநாயகி திருவடி தீண்டப்பெற்ற குமரித்தலத்திலே வசிக்கின்றவர் மனிதரானாலும் தேவரிலும் வலிமையுடையவரே யென்று வியந்து தேவிபக்கத்திலேவந்து வைகாசிமாதப் பௌர்ணமியிலே தாணு தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து ஸ்ரீபாதப்பாறையிலே சத்தமாதர்சூழ விருந்த தவக்கன்னியாகிய தேவியைத் தரிசித்து மனமுங் கண்களுங் களிக்கப் பரவசராய் வணங்கிப் பத்தரை யிரக்ஷித்துப் பேரின்ப மருளு முத்தமகுணமுள்ள சோதியே! யுள்ளங்கை நெல்லிக்கனிபோலெல்லாமுணருஞ் சததியே! வஞ்சகரைக் கொன்று ஞானிகளுக்கின்பத்தை நல்குங் கருணையுடையாய்! பஞ்சபூதங்களும் வேதப்பொருளுந் தானாய் நின்றவளே! சிருட்டியாதி முத்தொழிலுளவளே! யுகாந்தகாலத்தைக்கண்டுகளிக்கும் காட்சியாயுள்ளவ

ளே! விஷ்ணு தங்கையாயும் பார்வதியாயுஞ் சிவபிரான் றேவியாயு மெல்லாவுலகும் பெறுந்தாயாயு மிவையன்றிக் கன்னியுமாகிய வுனக்கியாங்களடைக்கலம். அரு உரு அருவுரு முதலிய ஞான சொரூபியே! மயிடாசுர சங்காரஞ்செய்தெங்களை யிரக்ஷித்தெங்கள் பதங்களைத்தந்தருளியதாயே திரிலோகங்களையுமடக்கி வாழ்ந்த சும்பனிசும்பனென்னு மசுரரையுங்கொன்று எங்களை வாழ்வித்தருளினை இக்காலமும் வாணாசுரனால் மிகத்துன்பமடைந்து தேவலோகத்தை யிழந்தோம். உன்னிடத்தில டைக்கலம் புகவந்தோம் என்றனர். கன்னிநாயகி தேவர்கள் சொல்லு முன்னமே யவர்களுக்கு அபயங்கொடுத்தருளி வாணாசுரன்றலையை யறுத்துவிட்டு உங்கள்வருத்தத்தைப் போக்குகின்றேன் பயமில்லாமலதுவரையும் நீங்களிருப்பிடத்தில் மகிழ்ந்திருங்கள் என்று கட்டளையிட்டனள். இந்திரன்முதலிய எல்லாரும் அக்கட்டளையைத் தலைமேற்றாங்கி யவரவ ரிருப்பிடம் போய்ச்சேர்ந்திருந்தனர் என்று பிரமன் மார்க்கண்டேய முனிவருக்குச் சொல்லி யருளினன்.

தேவர்களுக்கபயங்கொடுத்த சருக்கச் சுருக்கவசனம் முற்றிற்று.

பதினாறுவது

# கன்னிநாயகி பூஞ்சோலைபுகுசருக்கம்.

வானெலாம் வானை மூட வானெழுங் கதிர்மழுங்க
மீனெலா மறையத் திங்கள் வெண்ணிறம் விளங்கித் தோற்றக்
கானெலா நிறைந்த கொன்றை கனகமே பூப்ப முல்லை
தானெல்ாம் வெள்ளி பூப்பத் தரையெலாம் பச்சை பூத்த. (க)

மின்னொளி பம்ப வெங்கும் விளங்கிடி முழக்கஞ் செய்ய
மன்னிய காரு நீங்கி வாடைவந் துலாவுந் தோறு
மன்னமன் னார்கள் பொற்பா ராடவர் தணந்து ளாரை
யின்னல்செய் கூதிர்ப் போது மெதிர்ந்தது மேய பின்னர். (உ)

கஞ்சவாண் மலர்கள் கூம்பக் கனன்றுவெம் பனியின் கூட்டம
விஞ்சுவெண் படாம்போாத் தென்ன மேதினி யெங்கு மூட

வஞ்சிநுண் மருங்கு லாரு மைந்தருந் தணவா வண்ண
நெஞ்சுறு விரகஞ் செய்யு நெடும்பனி யிரண்டு நீங்க. (௩)

பானலோ டாம்பல் கூம்பப் பதுமமென் மலர்க ளோங்க
வானெழுங் கதிரின் காந்தி வந்தவெம் பனியை மாய்ப்பத்
தேனெழு கிடக்கா வெல்லாஞ் செய்யசெந் தளிர்க ளீன்று
கானெழு மலர்கள் விண்டு கமழ்மணம் வீச வெங்கும். (௪)

மன்றல்செய் மலரின் வாசம் வாரியே கொணர்ந்து பையத்
தென்றல்வந் துலாவ வேற்கட் சேயிழை யாரோ டன்பர்
துன்றுபூந் தடத்தின் கண்ணுந் தூய்நிழற் சோலை யுள்ளுஞ்
சென்றினி திருப்ப வந்து சேர்ந்தது வேனி லம்மா. (௫)

அலங்கன்மெய் யமரர்க் கன்றங் கஞ்சலென் றருள்செங் கையா
னலங்கிள ரெழுவ ராய நற்றுணை வியரை நோக்கி
யிலங்குபூஞ் சோலை யங்க ணினிதுசென் றிருப்போ மென்னத்
தலங்கிள ரெழுவ ரன்னோ டணையலங் காரஞ் செய்தார். (௬)

வேறு

வாசனை கமழுங் கரியமா முகிலை வகிர்செய்து பின்னுறப் பின்னித்
தேசொளிர் செய்ய சிந்தூர விரேகை திகழ்தர நடுவினிற் றீட்டி
நேசுறு துணையோ ரதிற்பிறை யணிந்து நிறைமணி மகுடமுஞ்சூட்டி
யாசறு பைம்பொ னவிர்விரை மாலை யாங்கதி லணிபெற வணிந்து ()

வாலமா மதியை வகிர்செய்து வைத்த வடிவுறு நெற்றியி னடுவண்
கோலமார் செய்ய சிந்தூரத் திலதங் கோமளம் பெறவதிற் றீட்டி
மாலுறு வான வில்லெனச் சொல்லும் வாணுத லழகொளி வயங்கச்
சாலுறு கிரண சந்திரா தித்தர் தமைக்குழை தோடெனச் சாத்தி.

மானினைக் கமல மலரினைக் குவளை மலரினை மன்மதன் றுவச
மீனினைச் செறிந்த வனந்தனிற் புகுத்தி வேலினை வாளினை மேவா-
ரூனினைக் கவரு மம்பினை யுறைபுக் கொளிப்பதற் காக்கியே யுவரி
யானதைப் புயங்கி கண்டலைவுறவாக்கு மருள்விழிக் கஞ்சனமெழுதி.

பூங்குமிழ்ப் புதிய மலரைநன் னிறத்துப் பொற்புறு பெள்ளிளம் பூவைத், தாங்குறு மலர்செய் துவமைமே வின்றித் தயங்குமந் நாசியினின்றுந், தூங்கிசை பயிலுஞ் சுரும்பினம் வீழ்ந்து துவைத்திடா தலர்ந்தசெண் பகத்தி, ஞெங்கொளி மலரின் மணமென வுயிர்க்கு முயிர்ப்பவை யதிமண முமிழ. (கo)

அகிலலேலா கந்த மாயவெப் பொருளு மங்கையா மலகவொண் கனி போற், சகலமு முணருந் தனிமுத லாய தலைவர்தம் மேனியிற் றயங்கும், புகலரி தாய வழகினை நோக்கப் புரிந்தகண் ணாடிநேர் கபோல, மிகலுறும் விழிவே றீட்டியகிடந்த வெழிறிகழ் சாணையி னிலங்க.

முருக்கலர் மலரைக் கொவ்வையங் கனியை முதிர்ந்தசெம் பவளவொண் கொம்பை,யுருக்கிளர் செய்ய குமுதவொண் மலரை யொளிகொள்கோ பத்தினைப் பழித்தது, மருக்கிளர் கமல வாசனை கமழ்செவ் வாயிதழ் மவுணருக் கழிப்பான்,பெருக்கெழ வூறு மமுதடைத் துடைய பெற்றியிற் சிறந்தினி திலங்க. (கஉ)

முல்லைவெண் முகையை முதிர்தர ளத்தை முருந்தினை நகைபெற நகைக்கு,நல்லெழில் படைத்த நகைநகை யுமிழ நசையுறு மமுதமங் கொழுகு, மல்லல்வண் கதிரான் மறுவிலா தொளிரு மதிமுக மதிமுகத் தொடுங்கா, மெல்லிதழ்க் கமல மலர்ந்தொளிர் வதுபோன் மிக்கொளி படைத்தெழில் விளங்க. (கங)

வலம்புரி யென்னு மணிவளர் வளையு மற்றதிற் சிறப்புள தாய,சலஞ்சமெனுமொண் சங்கமும் பெருத்த சஞ்சலங் கொண்டலை சார, நலலங்கிளர் களத்தி னழகினை மறைத்த ணாடிடாத் தணிவியர் நயந்தங் கிலங்கிளை விளங்க வணிந்தன யாவு மெறிசுடர் விடுத்தெழி லிமைப்ப. (கச)

கதிர்மணி சொரியுங் கரும்பொடு வேயைக் கழையெனச் சொலநிலத் தாக்கி, முதிர்வனப் பிலகுந் திரண்மணித் தோளின் மொய்விரைத் தொய்யி லெழுதிப், புதியசெங் காந்தண் மலரெனச் சிவந்த பொற்புறு கரதல மீதின், மதியினை யலைக்கு நவமணிக் கடகம் வளையொடு வயங்குற வணிந்து. (கரு)

ஈர்க்கிடை புகாது புடைத்தறப் பணைத்திட் டெழுந்திரு கண்களுங் கறுத்துச், சீர்க்கெழு திதலை பசந்துசெவ் விளநீர்ச் சிறப்பவை முழுவதுஞ் சிதைத்து, வார்க்கடங் காது பிறைவட மணிந்து மான்மதக் கலவையும் வனைந்தே, கார்ங்கவு ணியச்சேய் தனக்கமு தளிக்குந் தனக்குடந் தனமெனத் தயங்க. (கசு)

ஆலிளந் தளிரி னழகொளிர் வயிறு மந்தவா லிளந்தளிர் நடுவின், மால்வளர்ந் தனைய பேரெழி லிலங்கும் வயிற்றுறு மம்மயி ரொழுக்கஞ் சாலிளங் கொங்கை மதகரி யணைக்குஞ் சங்கிலி யெனவுமே கலையி னீலவொண் மணியின் கதிர்படர்ந் தெனவு நிறைவனப் பதினிடை நிலவ. (கஎ)

வடிவுறு கங்கை வலஞ்சுழி யழிய வனப்புறு முந்தியும் வயங்கத், துடியடி படவு மராப்பணி யுறவந் தோற்றுமின் மறையவும் வஞ்சிக், கொடிகுழை படவுஞ் செய்தநுண் மருங்குல் குலவரைத் துணைத்துணை முலையா, லொடிபடு மென்னத் துவண்டுபொய் போலவுற்றறத் தேய்ந்துதேய்ந் திளைப்ப. (கஅ)

புடைபரந் தகன்று பொலிந்ததேர்த் தட்டும் பொருந்தத ழுழியு மச்சங், குடைதர வமைத்தே யொளிமணிக் குலங்க ளுமிழ்வெயி லெறித்திடக் குலவும், வடிவுடைத் தாகி விரிதலை யொடுக்கா வனப்பெழ வந்தவா யரவின், படமது மணிசே ரணிகொண்மே கலையின் பலமணி யிலகொளி பரப்ப. (கக)

விரியுநெட் டிலைமென மகிழுறைக் கதலி வியன்குலங் குலையுற வென்று, கரிநெடுங் கரத்தைப் புழைகொடு குழையக் கண்டிடுங் கவின்றிகழ் கவானு, முரியபூஞ் சோலை யிடந்தொறு மேவி யொண்பழம் பூக்கவர்ந் துண்ணு, *மரியின முழுது மருள்கொளப் புரியு மணிமுழந் தாள்களு மிலங்க. (உ0)

அடுங்கொலை வாண னுயிர்கவர்ந் துண்ணு மம்புபெய் கூடென லாகி, மடுவினி னுலாவுஞ் சினைவரா லஞ்சி வனம்புகச் செய்கணைக் காலுங், கடுவெனக் கொலைசெய் கண்ணினு ரழகைச் கண்டுகண் டிவ்வள வென்ன, நடுவுற நிறுக்குந் தராசினற் றட்டி னல்லெழிற் பாடுயங் கிலங்க. (உக)

*அரியினம்-குரங்குக்கூட்டம்; குரங்குநண்டுக்குப் பகை.

கதிதரு முதநூற் புத்தகம் போலக் கவின்றிகழ் புறவடி யொடுவிண்
மதியினைப் பவளக் கொம்பினிற் பதித்து வைத்தல்போல் விரலுகிர்
வயங்கத், துதிசெயு மடியார் பவதமொட ரறுத்துத் துலங்குநன்
முத்தியைக் கொடுக்கும், புதியசெங் கமல முண்டெனி னிகர்சொல்
பொன்னடிக் கமலமும் பொலிய. (௨௨)

அன்னமென் குரலின் மிழற்றுபூஞ் சிலம்பு மவிர்மணி யரிகொணூ
புரமுந், தன்னிரு சரண மீதினி லணிந்து தயங்கிட விண்ணினிற் ற
ழைத்த, மின்னொரு கோடி யொளிவிடுத் தனைய விளஙகொளி மே
னியு மிலங்கப், பன்னிடு மெண்ணுன் கறஞ்செய்செம் பதுமம் பரி
மள மாலையொன் றேந்த. (௨௩)

எழுந்தனள் புடைசூழ்ந் திருந்தநன் மாதரெழுவர்தஞ் செங்கையில்
வீணை, வழங்குமின் னிசைத்தெள் ளமுதநற் றேவி வள்ளைமென் செ
விபடுத் துண்ணப், பொழிந்ததே மலரிற் பொரிச்சிறைச் சுரும்பர்
பொங்குநல் லேழிசை பாடுஞ், செழுந்திரு நிறைந்தங் கயலினி லோர்
பாற் றிகழ்ந்தபூஞ் சோலையிற் சென்றாள். (௨௪)

பங்குன்மிக் குறைந்த பொதுப்பர்சேர் சோலை மருவுசெஞ் ஞாயிறு
விடுத்த, செங்கதிர் சிறிதுஞ் செல்கிலா ததனுற் செறியிரு டிகழ்ந்து
றை தருக்க, எங்கதிற் சென்ற வருட்கொடி யன்ன வவடிரு மேனி
யிற் றயங்கும், பொங்கொளி யெங்கும் பரத்தலா லிருள்போய்ப் பொ
ன்னகர்த் தருக்களைப் போன்ற. (௨௫)

பாடல்சே ரேழுவ ரின்னிசை கேட்டுப் பட்டவம் மரமெலாந் தளிர்
த்துக், கோடெலாம் பசந்து கொம்பெலாங் குழைந்து குளிர்நறு ம
ணமலர் சொரிந்தான், மாடெலா நின்ற மரமெலாந் தளிர்த்து வளம்
பெற மருமல ரலர்ந்தே, யேடெலா மவிழ்த்தங் கினியதே னொழுகி
யிருப்பதை யியம்புவ தெவனோ. (௨௬)

### வேறு.

பரிந்துநம் பாடி வீட்டிற் பராபரை பதும மென்றாள்
வருந்தவே வருகின் றாளம் மலரடி வருந்தா வண்ணம்

விரிந்தெழுஞ் சோலை யெங்கு மென்மல ரணிச்ச மண்மேற்
சொரிந்தவை பரத்தன் மாரன் றாவியே விரித்தல் போன்ற. (உஎ)

போதுக ளுதுத்து குத்துப் பொலிந்தபொன் னிறப்பூஞ் சுண்ணத்
தாதுகள் சோலை யெங்குந் தரைதெரி யாது தூற்றன்
மாதருட் கன்னி நம்பால் வருகின்றாள் பதநோ வாமற்
சீதஞ் *செய் கெனவச் சோலைத் தெரிவைதான் பரப்பல் போலும்.

இலங்கெழிற் கன்னி தன்னை யெதிர்கொண்டு காண்பா னெண்ணி
நலங்கிளர் சோலை நல்லா ணவையறு பதும ராகம்
பொலந்திகழ் குடத்திற் பெய்து பொலிவுற வைத்தல் போன்ற
மலர்ந்தசெம் மலர்ப்பூங் கொம்பின் மாதுளங் கனிக ளம்மா. (உகூ)

மாலுறுஞ் சோலை மாது வந்தெதிர் காண்பா னெண்ணிக்
கோலமின் னனைய கன்னி குளிர்விரைக் களபக் கொங்கை
மேலணி தற்கு வைத்து விளங்குசெம பவளம் போன்ற
வாலின்மேற் கொம்பர் தோறு மாயசெம் பழங்க ளம்மா. (கூ0)

விரைகமழ் மலர்ச்சம் பீர விரிதழை மறைய மேவி
நிரைநிரை யாக வெங்கு நிறைந்தொளிர் பழங்க ளெல்லாம்
வரியளி முரல்பூஞ் சோலை மாதரான் கன்னி யென்னு
மரசிதா னுடைப் பைம்பொ னம்மனை வைத்தல் போன்ற. (கூக)

தாலமிங் கிதற்கு நாமந் தன்பெயர் சாற்ற வைத்த
மேலுயர் *மரத்தின் கொம்பர் மீதொளிர் கனிக ளெல்லா
நூலன மருங்குற் கன்னி நுணுகிடை துவள வாட
நீலநன் மணியாற் செய்த நிறமொளிர் கழங்கு போன்ற. (கூஉ)

வென்றிவேற் படையு மஞ்ச விளங்கெழிற் கயலச் செங்கண்
மன்றலங் குழலாள் கன்னி மலர்ப்பதம் வணங்கிக் காண்பான்
றுன்றுபூஞ் சோலை யென்னுந் தலங்கெழின் மடந்தை நல்லாள்
கொன்றையங் குழலு மந்நீள் குழலிலம் மலரி னோடும். (கூகூ)

காவினிற் றிகழ்ந்த கோலக் கருங்கொடிப் புருவத் தோடு
மாவரி வண்டொண் கண்ணு மலர்க்குமிழ் மூக்கி னோடும்
பூவலர் முருக்கின் செய்ய புதுமல ரிதழி னோடு
மேவலர் விரைசெய் முல்லை வெண்முகை நகையி னோடும். (கூச)

*செய்கு-தன்மைஒருமைவினை முற்று. மரம்-நாவல்.

ஓங்கெழிற் கமுகி னாய வொளிகொள்கந் தரத்தி னோடுந்
தீங்கரும் பாய தோளுஞ் செவ்விள நீரி னோங்குங்
கோங்கரும் பாய கோலக் கொங்கையுங் காந்தட் கையுந்
தாங்குநன் னிழல்சே ராலின் றளிருத ரத்தி னோடும். (௩௫)

குளிர்தழை நெடிய யாழைக் குறங்கொடு மெழில்சேர் வன்ன
விளமயிற் சாய லோடு மினிதுற நின்றே யங்கண்
வளமலி மடவாள் கன்னி பாதினைக் கண்டு பூசித்
துளபலி மகிழ்வி னோடு முறுப்பணி செய்தற் கானாள். (௩௬)

தேனொடு மிளநீ ரோடுஞ் சிறப்பபி டேக மாற்றி
வானினன் னீராற் றூய மஞ்சன மாட வாக்கிக்
காவொனுழு கியபூங் கொத்தாற் கமழ்திரு மாலை யாக்கி
யானசந் தொன்றோ டொன்றங் கரைத்தநற் கந்த மாக்கி. (௩௭)

அருந்துறை வேத்தி யங்க ளமுதமுக் கனியா லாக்கி
யிருந்தநல் லசோகம் பூவா லெரிசுடர் விளக்கு மாக்கிச்
சொரிந்தகுங் கிலியங் கண்டில் வெண்ணைக தூப மாக்கித்
திருந்துதீ பங்கள் வாசஞ் சிறந்தமாம் பூவா லாக்கி. (௩௮)

மண்டிளங் கருகம் பூவால் வயங்குசா மரையு மாக்கிக்
கொண்டலின் முழக்க மாங்கோர் கொட்டிய முழவ மாக்கி
வண்டுபா டகனா வாக்கி மயினட மாத ராக்கி
யெண்டரு முபசா ரத்தோ டினிதுறப் பூசை செய்தாள். (௩௯)

திகழ்குயின் மொழிசேர் சோலைத் தெரிவைசெய் யுபசா ரத்தான்
மகிழ்வொடு குமரி யின்கண் வாழமி ராமி யன்பா
மிகவுவந் தவளை நோக்கி வேண்டுவ கேட்டி யென்ன
விகழ்விலாச் சோலை யன்னாள் வேண்டுவ வியம்ப லானாள். (௪௰)

பைங்கிளி மொழியா லன்னாள் பகர்கின்றாள் விண்ணின் மீதே
யைங்களிற் சிறந்த தெய்வ வெழிற்றரு வனத்தை யெல்லா
மங்குற வழித்த வாணன் வன்றலை யற்று வீழ
விங்குநீ செய்ய வேண்டு மெனவவ ளிசைந்தே னென்றாள் (௪௧)

கன்னிநா யகியைப் பின்னுங் காவென்பாள் காலிற் றாழ்ந்து
சென்னிதான் வணங்கா நிற்பத் தேவியை யெழுவர் சூழ்ந்தங்
கின்னிசை யமுத வீணை யிருஞ்செவிக் கூற்ற வாங்கோர்
வன்னமென் மலர்கள் பூத்த வாவியி னருகு வந்தாள். (௬௨)

வாவியின் கரையி ஞேர்பால் வளரொளிப்பளிங்கு மாட
மேவியங் கிருந்து பொய்கை விரிமலர்ச் சிறப்பை யெல்லாங்
காவியங் கண்ணி ஞலே கண்டினி திருந்தா ளங்கட்
பாவியாம் வாணன் வந்து படும்பரி சாச கேட்டி. (௬௩)

கன்னிநாயகி பூஞ்சோலை புகுசருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் (௬௬௦.)

## கன்னிநாயகி பூஞ்சோலைபுகு சருக்கச்சுருக்க வசனம்.

மேகஙகள் ஆகாயத்தைமூட நக்ஷத்திரங்கள் மறையவும், சந்திரன் வெண்ணிறம் படைக்கவும், கொன்றைமுல்லை மலரத் தரைப்பரப்பெல்லாம் பச்சைநிறமடையவும் மின்னல் பிரகாசிக்க இடிமுழங்கவந்த கார்காலம் நீங்கியவுடனே வாடை வருந்தோறும் பிரிந்திருந்த ஸ்திரீ புருஷர்களைத் துன்பஞ்செய்யுங்கார்காலம் வந்தது. அதன்மேல் தாமரையுங்குவியும் பனிக்கூட்டம் வெண்போர்வை போர்த்தல்போலப் பூமியெங்குமூட மாதரும் ஆடவரும் பிரியாதிருக்கும் முன்பனி பின்பனியென்னு மிரண்டுகாலமும் வந்துநீங்கின. ஆம்பல் நீலோற்பலங்குவியத் தாமரை விரியச் சூரிய கிரணம் பனிகைக்கெடுப்பச் சோலைகளெல்லாஞ் செந்தளிரீன்று மலர்ந்து சுகந்தவாசனைவீச அவ்வாசனையைத் தென்றற் காற்றெங்குங்கொண்டுபோய்ப்பரப்ப நாயகரும் நாயகிகளுந் தடாகத்திலுஞ் சோலையிலும் போயிருக்கும்படி யிளவேனிற்காலம்வந்தது. தேவர்களுக்கபயமருளிய கன்னிநாயகி சத்தகன்னியரை நாக்கி, பூஞ்சோலைக்குட்சென்றிருப்போமென்று கட்டளையிடவும் அம்மாதர் கன்னிநாயகியை யலஙகாரஞ்செய்யத்தொடங்கினர்.

கூந்தலைச சிவந்தரேகை விளங்கும்படி நடுவே வகுந்து சூரியப்பிறை சந்திரப்பிறையணிந்து தலையிலே கிரீடமும் பொன்னரி மாலைகளை

ம் பூமாலைகளுமணிந்து இளஞ்சந்திரனைப்பிளந்து வைத்தாற்போன்ற நெற்றியிலே சிந்துரப்பொட்டிட்டு, சூரிய சந்திரர்களென்னுந்தோடுங் காதுகளிலேபுனைந்து மானைக் காட்டிலுந் தாமரைகுவளைமீ னிவைகளைச்சலத்திலும் புகுத்தி வேல்வாள் அம்பு இவைகளை யுறைகளுள்ளொளிப்பச்செய்து, கடலைப்பயங்கொண்டலையச்செய்யுங் கண்களுக்குமையெழுதிக் குமிழம்பூவையும் எட்பூவையும்பழித்து விளங்கும் நாசியில் அம்மலர்களென்று வண்டுகள் வீழ்ந்து மிதியாமல் சண்பகமலரின் வாசனைபோலச்சுவாசம் வெளிவரவும் சருவலோகைக நாயகராகிய சிவபிரான்றிருமேனியினழகைப்பார்க்குங் கண்ணாடிபோலுங்கன்னங்கள் கண்ணாகிய வேல்கள் தீட்டுதற்கு வைத்த சாணைக்கற்போல விளங்கவும் முருக்கம்பூ முதலிய வுவமானப்பொருள்களை நிந்தித்து அமுதத்தை யடைத்துவைத்த தன்மைபோல விளங்குஞ்செவ்வாயிதழும் முல்லைமலர் முதலியவற்றைச்சிரித்துப்பிரகாசிக்கும் பற்களும் சந்திரனைக் கண்டுகுவியாத்தாமரைபோலுமலர்ந்த முகமும்பார்த்து, அதன்மேல்சங்கங்களை அலையச்செய்யுங்கழுத்திலே பிரகாசிக்கும்படியணியப்பட்ட ஆபரணங்களையணிந்து கருமபுமுதலியவற்றை வென்ற தோள்களிலே தொய்யிலெழுதிக்காந்தண்மலர்போலுங் கைகளிலே கடகமும் வளையலும் புனைந்து ஈர்க்குநடுவே புகாமல் நெருங்கித்தேமல்படர்ந்து இளநீரழகைக்கெடுத்துக் கச்சுக்கடங்காமலோங்கிக்கலவைச்சந்தனம் பூசப்பெறும் முலைகள் சொர்ணக்குடம்போல விளங்கவும் ஆலிலைபோலும் வயிற்றிலெழுந்த உரோமவொழுங்கு விஷ்ணுவைப்போலவும் கொங்கையாகிய யானைகள்கட்டுஞ் சங்கிலிபோலவு மேகலாபரணத்தின் நீலவொளிமேலெழுந்ததுபோலவும் பிரகாசிக்குமழகும் நீர்ச்சுழிபோலுங்கொப்பூழும் உடுக்கு முதலியவைபோலக்கொங்கைப்பாரத்தாற்றேய்ந்திளைத்த மெல்லிய இடையும் தேர்த்தட்டு முதலிய வுவமானப்பொருள்களைப்போல வனப்புவாய்ந்த அல்குலும், விரிந்த இலைகளையுடைய வாழையினையும் யானைத்துதிக்கையினையும் வென்ற தொடைகளும் சோலைகளிலே பழத்தையும் பூவையுமுண்ணுங் குரங்குகளு மயக்கங்கொள்ளும் முழங்கால்களும் வாணாசுரனுயிரையுண்ணும் அம்பறுத்தூணிபோன்று வரான்மீனையொளிக்கச்செய்யும் கணைக்கால்களுங்கண்களினழகைமறுக்குந்தராசுத்தட்டுப்போலுங் குதிக்காலும் புத்தகம்போலும் புறவடிகளும் சந்திரனைப்பவளத்துண்டத்திற் பதித்தாற்போலும் நகங்களும் விரல்களும்அடியார்களுக்கு முத்தியைக்கொடுக்குந் தாமரைமலர்போலுந்திருவடிகளும் விளங்கித்தோன்ற அத்திருவடிகளிலே சிலம்பும் நூபுரமும் புனைந்து மின்னலைப்போலுந்திருமேனி பிரகாசிக்கவுங்கரங்களிலே பூமாலையொன்றைக்கொடுத்தனர்.

அம்மாலையை வாங்கிக்கொண்டு கன்னிநாயகி சத்தமாதர்தன்னைச்சூழ்ந்து வீணையினிசை பாடக்கேட்டு வண்டுகளிசைபாடுகின்ற பூஞ்சோலைக்குள்

ளே சென்றனள். மேகங்கள் படிதலால்இருணிறைந்த தருக்கள் கன்னிநாயகியாகிற பகவதியம்மை திருமேனியில் விளக்குமொளி வீசுதலாலேயிருள்கெடக்கற்பகவிருக்ஷங்கள்போலப்பொன்னிறம்படைத்தன. சத்தமாதரின்னிசைகேட்டுப்பட்டமரங்கள் தளிர்த்துப்பூத்துத் தேன்மலரைச்சொரிந்தன. அம்மை வருகின்றாளென்று சோலைகள் பரப்பிய அனிச்சப்பூக்கள் மன்மதன்றூவிய மலர்கள்போலிருந்தன. அன்றியும் பலமலர்கள் நிலத்திலுதிர்ந்தும் மாதுளம் பழங்கள் கொம்பினிறைந்துமிருத்தல் சோலையாகிய பெண் அம்மையையுபசரிப்பதற்கு வைத்தகாக்ஷிப்பொருள்கள்போலிருந்தன. எலுமிச்சம்பழங்களும் கழற்சிக்காய்களும் சோலையில் கன்னிநாயகி விளையாடற்குவைத்த அம்மனையுங்கழங்கும்போலிருந்தன.

சோலையாகிய மடந்தை கொன்றைக்காயாகிய கூந்தலும் கொடியாகிய புருவமும் வண்டாகிய கண்ணுங் குமிழம்பூவாகிய மூக்கும் முருக்கமலராகிய இதழும் முல்லையரும்பாகிய பற்களும் கமுகாகிய கழுத்தும் கரும்பாகிய தோளும் கோங்கரும்பு இளநீராகிய முலைகளும் காந்தளாகிய கைகளும் ஆலிலையாகிய வயிறும் வாழையாகிய தொடையும் மயிலாகிய சாயலுங் கொண்டுவந்து கன்னிநாயகியை இளநீராலபிடேகமும் ஆகாய கங்கையாற் றிருமஞ்சனமும் பூங்கொத்தால் மாலையும் சந்தன மரங்கள் உரோஞ்சுதலாலுண்டாகிய சந்தனக்குழம்பும் பழங்களால நைவேத்தியமும் அசோகம் பூவால் தீபமும் குங்கிலியம்கண்டில்வெண்ணெய் மரங்களாற்றூபமும் மாம்பூவாற்றீபமும் மேகமுழக்கத்தால் வாத்திய வோசையும் வண்டினோசையாற்பாடலும் மயில் நடனத்தால் நிருத்தனமும் அமைத்துப்பூசைசெய்தனள். அந்தப்பூசையை மகிழ்ந்து கன்னிநாயகி சோலைமாதைநோக்கி,யுனக்கு வேண்டியவரத்தைக் கேட்கவென்றருளிச்செய்தனள். அவள் வணங்கித் தாயே!யெங்களிலுயர்ந்த கற்பகச்சோலைகளையெல்லாம் அழித்த வாணாசுரன் தலையை அறுத்தெரியவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தனள். அவ்வாறே செய்கிறேனென்று சொல்லிக் கன்னிநாயகி சத்தமாதர் வீணாகானத்தைக்கேட்டு மகிழ்ந்து ஒருதடாகத்தினருகேவந்து சோலையின் சிறப்பையெல்லாங்கண்டுகளித்தெழுந்தருளியிருந்தனள். இனி வாணனுங்குவந்துபட்ட சரித்திரத்தைச் சொல்லுகிறேனென்று காத்தவீரிய அரசனுக்குத் தெத்தாத்திரய முனிவர் சொல்லியருளினர்

**கன்னிநாயகி பூஞ்சோலை புகு சருக்கச்சுருக்கவசனம் முற்றிற்று.**

## பதினேழாவது

# வாணாசுர சங்காரச்சருக்கம்.

தொன்மைநல் லுலக மூன்றுஞ் சோர்விலா தடக்கி யாளும்
வுண்மையான் வாண னென்பா னேவலின் வழிச்செல் வோர்
டுன்முக னென்றுந் தீய துர்த்தெரி சனன்று னென்றும்
புன்மைய நாம முள்ளோர் பொருவிலா மாயை வல்லோர். (௧)

எங்குந்தா னுள்ள செய்தி யாவையுந் தேர்ந்தங் செண்ணி
யங்குவந் தயர்வொன் றின்றி வாணனுங் கறையு நோர்
செங்கையில் விரைசேர் செம்பொற் றோமலர் மாலைக் கன்னி
மங்கையங் கிருந்த வாச வானுயர் சோலை வந்தார். (௨)

கண்டனர் கன்னி யென்னுங் கருணைநா யகியை யம்மா
மண்டுமின் னொளியோ வென்று மனத்தகத் தயிர்த்திரு ந்தோர்
பெண்டகை யணங்கென் றெண்ணிப் பெரிதுவந் திந்த மின்னைத்
திண்டிறல் வாணன் பெற்றாற் செய்தவப் பேறு பெற்றான். (௩)

என்னவே வியந்து நின்ற விருவரும் விரைவிற் செல்வா
ரன்னவர் காலைக் *கால்போ லாக்கியே விரைவிற் சென்றார்
தன்னைநே ருள்ளா ரில்லை யெனுமனத் தருவ னான
மன்னுவெந் திறலோ னென்னு மதவலி வாணன் முன்னர். (௪)

முன்னர்வந் திறைஞ்சி நின்று மூவுல கடக்கி யாளு
மன்னவோர் நாளுங் காணா வளரதி சயம்யாங் கண்டே
மன்னது நினக்குச் சொல்வா னம்மயாம் விரைந்து வந்தோ
மென்னலும் வாண னென்பான் யாதெனச் சொன்மி னென்றான்.()

மின்னென்கோ மின்னுட் டோன்றும் விளங்கொளி யென்கோ மே
லாழ், பொன்னென்கோ விளக்கென் கோமேற் யொன்னுல கத்து
மின்னார், மன்னென்கோ மன்னர் சூடு மணிமகு டந்தா னென்கோ
வென்னென்கோ வழகுக் கெல்லா மிருப்பெனு முருவை யம்மா. ()

---

* கால்-காற்று

மூவகை யுலகுக் கெல்லா முதன்மையா மரசு பெற்றாய்
தேவரெல் லாரு மேத்திச் செய்பணி கேட்கச் செய்தாய்
மேவருஞ் செல்வம் யாவும் வேண்டுவ வெல்லாம் பெற்றாய்
மாவொளி பெற்ற மிகக மணிக்குல மனைத்தும் பெற்றாய். (எ)

முற்றுறு மொய்ம்பு பெற்றாய் முடிவிலா வாயுள் பெற்றாய்
பெற்றத னுலென் பேறு பெறக்கிடை யாத மின்னை
முற்றிழைக் கன்னி தன்னை முடங்குறப் பெற்று யென்னின்
மற்றவை பெற்ற பேற்றின் மாட்சியுஞ் சிறக்கு மம்மா. (அ)

செங்கையின் மீது பொற்பூச் சிறந்ததே மாலை யேந்திப்
பொங்கொளி மின்போ னின்ற பொருவரு மாதை நோக்கின்
மங்குல்போ னிறத்து மாயோன் மார்பினின் வைகு மின்னு
மிங்கிவட் கேவல் செய்யு மேந்திழை யார்க்கு மொவ்வாள். (கூ)

மாரனைக் காய்ந்த யோக வரதனும் வடிவா ரிந்த
நாரியைக் காண்கின் றானே னலிந்தவே ளவனைக் காய்வன்
வீரனீ விரைந்து செல்லம் மின்கொடி தின்னைக் கண்டாற்
சீரிய செங்கை மாலை சிறந்தநின் றனக்கே யீவாள். (க0)

ஓங்கொரு பாகஞ் சென்னி யோதுநா மணித்தோண் மார்பிற்
றூங்கினர் மூவ ரென்னுந் தலைமைய ராயி னோர்க
ளாங்கவர் தம்மின் மிக்கா மரும்பெருஞ் செல்வம் பெற்றோ
யீங்குநீ யிவளைப் பெற்று லிருத்துவ தெங்ங னென்றார். (கக)

என்றுமின் றினைய சொல்லு மிருவரை யினிதி னோக்கி
மன்றலர் குழலா ளெங்ஙன் வைகிட மென்னக் கேட்பக்
குன்றெனுங் குவவுத் தோளாய் குருமணித் திரைகள் சிந்துந்
தென்றிரைக் கடற்க ரைக்க டிருவளர் நகரொன் றுண்டால். (கஉ)

அப்பெரும் பதியி னும மணிதிகழ் குமரி யென்னச்
செப்புவா ரதனி னோர்பாற் றிகழுங்கற் பகப்பூங் காவு
மிப்பெருஞ் சோலைக் கொவ்வா தென்னுமோர் சோலை யங்க
ணொப்பருங் கன்னி மேவி யுறைகின்று ளெழுவ ரோடும். (கங)

எனவவு ரியம்ப லோடு மெழுந்த பேருவகை மிக்கோன்
புனைமணிக் கொடித்தேர் கொண்டு போதுமின் விரைவின் மிக்க
வனிகமும் வருக வென்ன வறைந்தன னறையா முன்னம்
வனைநெடுந் தேருஞ் சேனைத் திரள்களும் வந்த வம்மா. (கச)

படியெலா மறைய வந்த பதாதிகள் சூழ வெங்குங்
கொடிநெடு மணித்தே ரேறிக் குலமணி யணிகள் பூண்டு
முடியெழுங் கதிரின் மின்ன மொய்வலி வாணன் சென்றான்
றொடியணி தோண் மென்றோகை யிருக்கின்ற சூழ னோக்கி. (க௫)

வேறு.

அண்ட முட்ட வளக்கு முடியினான்
கொண்டசெக்க ரெனப் பொலி குஞ்சியான்
றுண்ட வெண்பிறை போலத் துலங்கொளி
விண்ட வாயின் விளங்கு மெயிற்றினான். (க௬)

காயும் வெங்கனல் கக்குசெங் கண்ணினான்
றீய யாவையுஞ் செய்யுந் திறத்தினா
னேயும் பல்லுயிர் யாவையும் வாரிநீள்
வாயி லிட்டு வயிற்றி லடக்குவான். (கஎ)

தால மேருவை யொத்துயர் தோளினான்
சால மாமர மன்ன தடக்கையான்
கால னஞ்சக் கனைக்குங் கழலினா
னீல வெற்பை நிகர்க்கு நிறத்தினான். (கஅ)

பூண்ட வைந்து புலன்க ளவித்துயர்
மாண்ட மாதவஞ் செய்தலின் வாண்மல
ராண்டு ளான்வந் தளிப்ப வரியவை
வேண்டும் யாவையும் பெற்றுள மேன்மையான். (கக)

அன்ன தன்மை யவுணர்க் கரசனு
முன்ன முற்றிய தீவினை மூட்டலால்

வன்ன நித்தில வார்வட மாமுலைக்
கன்னி வைகிய காவில்வந் தெய்தினான். (உ0)

பந்த மாருதம் வண்மலர்த் தாதெலாஞ்
சிந்து சோலைச் சிறப்பினை நோக்கினா
னிந்தி ரன்மலர்க் காவு மிதற்குநேர்
வந்ததின் றென மாவியப் பெய்தினான். (உக)

ஆங்கொர் சூழலின் யாழ்பயி லங்கைசேர்
பாங்கி மாரவர் பாடிய பாடலைத்
தீங்கு செய்யும்வெந் தீயவன் கேட்டுள
மோங்கு தீயின் மெழுகொத் துருகினான். (உஉ)

தேருஞ் சேனையு நிற்கச் சிறையளி
யாருஞ் சோலை யதின்புறத் தேகிநீஇத்
தாருண் மாமுடி வாணன் றமியனாய்ப்
பேருண் மாமுலை வைகிட மேவினான். (உங)

வேறு.

மின்கொடி யொன்று மேகம் வெண்பிறை வில்வேல் வள்ளை
யின்கொடி பவள முத்த மெழிற்குமி ழிணைப்பொன் மேரு
மென்கொடி வஞ்சி பொற்றேர் மெல்லிய வாழை கஞ்ச
முன்கொடு நிற்றல் போலு மொய்வளை யமுனைக் கண்டான். (உச)

கண்டனன் காமத் தீயாற் கருகினா னுருகி நின்றான்
றிண்டிறல் வலியு மோய்ந்து சிந்தனை யழிந்து தேம்பி
விண்டுயிர்ப் பெறிந்து மீக்கொள் விரகத்தின் பெருக்கான் மையல்
கொண்டவ னுளத்தி னோடு பற்பல குறித்துக் கூறும். (உரு)

கன்னியின் னமுனை யிங்ஙன் கண்டுவந் துரைத்த வொற்றர்க்
கென்னயான் கொடுத்தற் குள்ள யானருந் தவஞ்செய் துற்ற
மன்னுடைச் செல்வ மெல்லாம் வழங்கினும் போது மோமற்
றன்னவர்க் கென்செய் கேனென் றகமகிழ்ந் ததிச யித்தான். (உசா)

உறுமுரு வசியு மல்ல ளுமைதிரு வீராணி யல்லண்
முறுவிலிந் திராணி யல்லண் மகிழ்திலோத் தமையோ வல்ல
ளிறுமிடை தேய்தல் போல வென னுயிர் தேய நின்றாள்
பெறலரி தாய வுள்ள பேரின்ப வடிவ மாமால். (உஎ)

கடியவென் னெஞ்சோ மாரன காவியங் கணையோ கந்த
னெடியவை வேலோ வாளோ நீளிறக் கடலோ நெளுசங்
கொடியதோர் கூற்றோ வீசன் குடங்கையின் மானோ கோலத்
தொடியுடைத் தோண்மி னன்று மிணைவிழி யென்ப தம்மா. (உஅ)

பொருப்பென வெழுந்து பொன்னங் குடமெனப் பூரித் தானை
மருப்பெனக் கூர்ந்து மாரன் மகுடம்போல் வனப்பு வாய்ந்து
பருத்திடை யிர்க்குஞ் செல்லாப் படியொளிர் கொங்கை யென்றன்
விருப்பென வோங்கி வான வெளியையு மடைக்கு மம்மா. (உகூ)

துளிகொடேஞ் சோலை வாயான் றுயருறச் செய்யும் பச்சைக்
கிளியினங் குயிலி னீட்டங் கிளர்ந்தவின் னிசைகள் பாடு
மளியின மன்றி லோடாங் கார்ப்பெழுந் தொழுதி யாய
*விளியின மென்ற ளுவி விளிவுறச் செய்யு மம்மா. (ந௦)

ஆலைநேர் மொழியு முல்லை யருப்பைநேர் நகையு மஞ்செஞ்
சேலைநேர் விழியுங் கொங்கைச் செம்பொன்மால் வரையைத் தாங்கு
நூலைநே ரிடையும் பெற்றே நடந்தமின் பொருட்டா லிந்த
வேலையும் யான்றுன் பெய்தும் வேலையு மறிந்தார்ப் புற்ற. (நக)

கொல்லிய வந்த மாரன் குளிருட்வெண் கவரி யென்னச்
சொல்லிய கமுகின் பூவுஞ் சூடுநன் மகிழின் பூவ
மல்லிகை யென்னும் வாச மலரும்வண் டாழை யென்னு
மெல்லிய வீயு மென்னை வீவுறச் செய்யு மம்மா. (நஉ)

அளித்துயி ரனைத்துங் காக்கு மாழியா னவனு மல்லன்
றுளித்தூவீழ் கங்கை சூடுஞ் சுடர்முடி யோனு மல்லன்
வெளிக்கொளான் கன்னல் வில்லான் மெல்லலர் வாளி யானிங்
கொளித்துநின் றெய்யு மம்பெ னுயிருணு தொழியா தென்றான். ()

* விளி-இசை.

பொன்றரு பூந்தா தென்னும் பொங்குசெந் தழலை வாரி
யின்றென துடப்பு வெப்ப விறைத்திறைத் தெரியச் செய்யுந்
தென்றலம் புலியு மங்கந் தேம்பியுள் வெதும்பு வேளைக்
கொன்றலா தொழியா தென்னக் கொதித்துளந் தளர்வ தானான்.()

என்றவ னுளத்தி னெண்ணி யினையன பலவும் பன்னி
நின்றவன் றேவி தன்பா னெட்டுயிர்ப் புயிர்த்துச் சென்றா
னன்றவன் வருதல் கண்டே யயிர்த்தன்னோ னெண்ணங் கண்ட
மன்றலங் குழலாண் முன்னம் வந்துநின் றினைய சொன்னான்.(௩௰௫)

அன்னமே யமுதே யின்சொ லழகிய கிளியே மானே
வன்னமா மயிலே மின்னே மரகத மணியே பொன்னே
யென்னுடை யுயிரே யார்க்கு மினித்திடுங் கனியே தெய்வக்
கன்னியே யிந்த நின்ற காரண மென்கொ லென்றான். (௩௰௬)

எண்ணிலாத் தவஞ்செய் தாலு மெய்திடா வமுதே யின்பக்
கண்ணியே கன்னி நீயென் கண்ணிலே காண முந்நாட்
புண்ணிய மென்செய் தேனோ புரந்தெனை யாள வென்றோ
நண்ணினை யென்றான் றீய நரகிடைப் புகுது நாவான். (௩௰௭)

சொல்லிய பணிகள் யாவுஞ் சோர்வின்றிச் செய்ய வல்லேன்
புல்லிய விண்ணிற் றேவர் போலெனை நினைக்க வேண்டா
மல்லியல் வளமிக் குள்ளேன் மறுவிலேன் வாய்மை யுள்ளேன்
கொல்லியல் கூற்று மஞ்சுங் கோளுடைக் கொற்ற முள்ளேன்.(௩௰௮)

என்றனக் கஞ்சி யன்றோ விகலும்வெம் புரங்காய்ந் தோனு
மன்றுல களந்து ளோனு மமருல கதில்லை காது
குன்றிலுங் கடலி னுள்ளுங் கொம்பனா யாருங் காணாச்
சென்றுபோ யிருக்க லுற்ற செய்திநீ யறியாய் போலும். (௩௰௯)

மாமக நூறு மாற்றும் வலிமையாம் வானோர் தங்கள்
கோமகா னிந்திராணி குவிமுலை புணரும் புத்தே
ளாமவன் முதல்விண் ணோரை யருள்பணி கேட்ப வாண்டே
னாமழும் வாண னென்பேன் காமத்தா னலிதனன் றோ. (௪௰)

சிலைக்கழை நாணும் பூட்டித் தென்றலந் தேரு மேறி
மலர்க்கணை யைந்துங் கொண்டு மருங்குடை வாளுஞ் சேர்த்தே
யிலக்கதா வென்னை யெய்யு மிப்படை வீட்டி வேளை
விலக்கிட வேண்டு மின்னே மெலிகுவேற் கிரங்கி யென்றான். (சக)

தென்றலோ கரையின் மோதுந் திரையதி ரொலியோ தீமை
யொன்றுமாங் குயிலோ வாய ருதுதீங் குழலோ மாரன்
றன்றுபூங் கழையோ யாழிற் றவணரம் பிசையோ பெண்ணை
யன்றிலோ வறியேன் முன்னென் னுருயி ருண்ணுங் கூற்றம். (சஉ)

கரும்பென மொழியை வைத்தாய் கமழுஞ்செவ் வாய்க்குண் முல்லை
யரும்பென நகையை வைத்தா யடங்கிடாத் தனத்தை வைத்தாய்
சுரும்பென விழியை வைத்தாய் தூயநின் னெஞ்சை யென்னு
மிரும்பென வைத்தா யென்னி லிணங்குமோ வணங்கே யென்றான்.

மின்னையே பழித்து மிக்காய் விளங்கொளி மேனி பெற்ற
வுன்னையே போல வெல்லா வுருவமுந் தோற்ற வைத்தா
யென்னையிம் மாய மாயைக் கியானன்றோ வல்லேன் வல்லேன்
றன்னையு மயக்கு மாயை தன்னைநீ யெங்குக் கற்றாய். (சச)

நிறத்துமின் மேல்வீழ்ந் தன்றோ நினைவற மயக்கஞ் செய்யுஞ்
சிறப்புறுன் மேனி யென்னத் திகழொளி மின்கண் டேற்கு
மறப்புறப் புலன்க ளெல்லா மயங்குற வந்து பின்னு
மிறப்புறச் செயுமோ மின்னே யென்றன னிறக்கு நோயான். (சரு)

அடக்கருங் காம நோய்க்கங் கமைத்தவவ் வவத்தை பத்திற்
கடக்கரு மவத்தை யொன்பான் கழிந்தன காத றந்த
மடக்கொடி யென்னுங் காம வல்லியே யெளியேற் கிப்பா
னடக்குறு மவத்தை சாக்கா டென்பது நவிற்றி லம்மா. (சசு)

தடுப்பரும் விஞ்சை வேண்டா தார்மன்ன ருதவி வேண்டா
வடற்பரித் தேரும் வேண்டா வானையின் னணியும் வேண்டா
படைக்கல மெவையும் வேண்டா பதாதியும் வேண்டா வுன்றன்
கடைக்கணி னோக்க முண்டேற் காமனை வெல்வ னென்றான். (சஎ)

தேவுல கத்தோ ரேவல் செய்திடச் சிறப்பின் மிக்க
மூவுல கத்தை யாளு முதன்மையு முனக்கே யாக்கிக்
கோவென நின்னை வைத்துன் குளிர்மலர்ப் பாதஞ் சூடி
யேவலின் வழியே நிற்ப னெனக்கருள் புரிதி யென்றான். (௪௮)

காமமே யாதி யாய கடிந்தனை புலன்க ளைந்தி
னேமமு மிழந்தா யூணு மிழந்தருந் தவஞ்சா னெய்தித்
தாமமார் மேனி யெல்லாந் தளர்ந்தனை யிதன்பே றென்கொல்
வாமமார் பருவத் தன்றே வருமின்ப மருந்த வேண்டும். (௪௯)

அனைத்துல கத்து முள்ள வரும்பொரு ளேனு மன்றிக்
குனித்திடு மொருவ னேனுங் கொணர்வரும் பொருள தேனுங்
கனைத்துவண் டிமிருங் கூந்தற் கன்னியுன் கருத்தி லுன்னி
நினைத்தவை யனைத்து மிங்ஙன் கொணர்குவ னிமிடத் தென்றான். ()

அம்மொழி புகற லோடு மருள்விழி யனையோ னுக்
கெம்மொழி கொடுத்த னன்றென றெதிர்மொழி மனத்திற் றேர்ந்தே
வெம்மொழி கொடுப்ப தன்று மென்மொழி யாக நன்மைச்
செம்மொழி கொடுப்ப தானு டேமொழிக் கிளியைப் போல்வாள். ()

துளக்குறு தூண்டிற் கண்ணே சுவைக்குவீழ் மீனைப் போன்று
மளப்புறு மிசையா லாவி யழியவீழ் மசுணம் போன்றுங்
களிப்புறு நாற்றத் தெய்திக் கவியவீழ் மளியைப் போன்றும்
விளக்கொளி கண்டு வீழும் விட்டிலும் போன்றாய் வீணே. (௫௨)

கன்னியர் நோக்க மெண்ணா தவாவுறல் கடன தன்றா
லுன்னியே யவரைத் தீண்ட வுளம்வைத்த தீமை யோர்க்கு
மன்னிய வாணாள் குன்று மறுமையு மில்லை யென்னப்
பன்னிய மறைக ளோங்கு மறைப்பின்றிப் பகரு மென்றாள். (௫௩)

என்றெடுத் தியம்புந் தேவி யின்மொழிக் குருகி நின்றான்
கொன்றொழிப் பவளென் றுன்னிக் குறித்திலன் கொண்ட காமம்
வென்றிட வலியொன் றில்லா வெறுவலிக் கொடியோன் பின்னு
நின்றிடர்க் காம நோயா னெட்டுயிர்த் திணைய சொன்னான். (௫௪)

கன்னியே நின்னைச் சேர்வான் கடிமணஞ் செய்யு மட்டு
மென்னுயிர் தரித்து நில்லா தியாழினோர் மணமே போல
முன்னர்யான் புணர்ந்து பின்னர் முதுமறை முறைவ ழாம
னன்னல மணஞ்செய் கேன்யா னென்றன னரகஞ் சேர்வான். (ருரு)

அன்னதற் கையம் யாதிங் கரியவை கொணர்வ னென்ன
முன்னர்நீ சொன்றாய் சொன்ன முறைதவ றாதே நீயான்
சொன்னவை கொணர்ந்தா னீயுஞ் சொன்னவை பெறலா மென்றா
ளின்னவை வேண்டு மென்றிங் கியம்பென விசைத்தான் வாணன். ()

பாடலங் கனியும் பாங்கர்ப் படரறு கதனி லுள்ள
நீடிய கனியுஞ் சீத நிழல்வட மரத்தின் பூவுங்
கோடிய ரத்திப் பூவுங் குலவிய *வித்திப் பூவுந்
தேடிநீ கொணர்ந்தா லின்னுஞ் செப்பு*வான் சிறிது முண்டால்.

சந்திர னிடத்து மற்றத் தாரகை யிடத்து முள்ள
வந்தநல் லரியுந் தேடு மாசை மிக் குள்ளே னீதா
னிந்தநற் பொருள்க ளெல்லா மெனக்கிங்ஙன் கொணர்ந்து வல்லே
தந்திட வேண்டு மென்றாள் சகலமுந் தீரவல் லாடான். (ருஅ)

வேணுமென் றுரைத்த யாவு மிக்கதன் மாயை யாலே
காணுதற் கமைத்து வைத்தான் கன்னிநா யகியுங் கண்டாள்
கோணுத லுற்ற மின்னே கொண்டரு ளிதனை யென்றான்
வாணுதன் மடந்தை காணு முன்னமே மாயை மாய்ந்த. (ருகூ)

கொல்லர்தந் தெருவிற் றூசி கொள்ளெனில் விலைப்போ காபோற்
சொல்லு மாயை யாலே தொகுத்தபல் பண்ட மெல்லா
மில்லன வாகக் கண்டா ளிலங்குமம் மாயைக் கெல்லாம்
வல்லப முடைய ளாய வல்லபை மாது மன்னோ. (கூ0)

வைத்தபல் பண்ட மெல்லாம் வைக்குமுன் காணா வாணன்
வித்தையும் பொய்த்தல் கண்டான் வெயர்த்துடல் புழுங்கா நின்றான்
சித்திரம் புகன்றாய் சொல்வ செய்திடுந் திறமொன் றில்லாய்
பொய்த்ததுன் வார்த்தை யென்றாள் பூத்தமென் கொம்பு போல்வாள்.

---

*இத்தி-ஒருமரம். *வான் தொழிற்பெயர்விகுதி.

முன்பவன் மொழித லோடு மொய்ம்புறும் பணைத்தோள் வாண
னென்பவ னிவளை யச்சஞ் செய்தலா லிணங்கா ளென்ன
வன்புறு தடக்கை தன்னில் வாளெடுத் தேந்தி யென்பா
லன்பிலா யுன்னை யானு மடுவனென் றார்த்து வந்தான். (௬௨)

வாளெடுத் தார்த்து வந்த வாணனை வாவா வென்று
நீளொளி வாளொன் றேந்தி நின்றவத் தேவி தன்னைக்
கோளுடை யன்னோன் றானுங் கொல்லவந் தவளென் றெண்ணி
வேளினன் மெலிதல் விட்டு வெட்டினன் விதிர்த்த வாளால். (௬௩)

அதிர்ப்புற வார வாரித் தடுவனென் றெழுந்து சீறி
விதிர்த்தவன் வெட்டும் வெட்டு விலகியே தன்கை வாளா
லெதிர்த்துநின் றவனை வெட்ட வேற்றன ளெடுத்த வாளிற்
கொதித்தழல் வாணன் கையிற் கொண்டவா டுண்டித் திற்ற. (௬௪)

எடுத்தவா டுண்டிற் றாக வெய்திடுஞ் சிலையொன் றேந்தி
யடுத்தபோ தநேக கோடி யம்புகள் விடுதல் கண்டா
டொடுத்தவன் விடுமம் பெல்லாக் துண்டகண் டங்க ளாகக்
கெடுத்தனள் வாளால் வீசிக் கேடிலாத் தேவி யம்மா. (௬௫)

ஆங்கவன் பின்னு மேவு மப்புமா ரிகளெ லாந்தா
னோங்குமெண் டிசையும் வானு முற்றபூ தலமுஞ் சற்று
நீங்கிடும் வெளியொன் றின்றி நிரைத்தன கண்டா டேவி
தாங்கும்வில் லெடுத்தா லன்றித் தடுப்பரி தென்ன வெண்ணி. (௬௬)

நெடுஞ்சிலை யொன்று கன்னி நின்மலை கையில் வாங்கி
நடுங்கும்வி ண்ணவர்க ளார்ப்ப நாணெறிந் தசுர ரஞ்ச
வடுந்தொழி லம்பு மாரி யழற்பொறி சிந்த வேவிக்
கொடுந்தொழில் வாண னேவுங் கொடுஞ்சரந் தூள தாக்க. (௬௭)

வாணன்றன் சேனை யென்னு மாக்கடல் வளைந்து சுற்றி
நீணிலம் வெளியின் றென்ன நிறைந்தவல் லசுர ரெல்லாம்
பாணம்வேல் குந்தம் பிண்டி பாலஞ்சக் கரம்வேல் கூர்மை
பூணுந்தோ மரங்க ளேவிப் பொருதனர் தேவி மீதே. (௬௮)

ஏவுமப் படைக ளெல்லா மிற்றுக வம்பு மாரி
தூவியே யறுத்து வீழ்ந்தச் சுற்றிய சேனை யாவுங்
காவியங் கண்ணி யென்னுங் கன்னிநா யகியை நோக்கிக்
கூவியே யோர்க்கு வாவென் றுரர்த்தனர் பறைகள் கொட்டி. (சுகூ)

தோணிக் குழுவை மற்றச் செழுமத தாரை காலுங
காரணி யினத்தை வேகக் கவனவாம் பரிக்கூட் டத்தைப்
போரணி செய்து நின்ற பொருநர்மாக் கடலை யெல்லாந்
தாரணி தன்னில் வீழச் சரங்கேயச் சங்க மார்த்தாள். (எ0)

தன்றுணை யாக வந்து சமர்செய்த சேனை யெல்லா
நின்றன வொன்றுங் காணு னிலத்தின்மேற் கிடத்தல் கண்டான்
கன்றியே யெழுந்து வேகக் கடும்பரித் தேர்மே லாணன்
கொன்றவக் கன்னி யாய குமரிவாழ் தேவி மீதே. (எக)

கையினிற் சிலையொன் றேந்திக் கனன்றுதே வாத்தி ரங்க
ளெய்தன னந்த வந்த வெரிமுகப் பகழி யாலே
கொய்தவை வீழ்த்தி வாணன் கொடுஞ்சிலை தூணி பாகன்
வையம்வெம் பாய்மா வெல்லாம் வையமேற் கிடப்பச் செய்தாள்.

முனைத்தொழிற் கொன்று மில்லான் முடிவிலாண் முடிப்பா ளென்ன
மனத்தினி லச்ச மெய்தி வாணனு மாயை வல்லோன்
கனத்தவெம் மாயை யாலே ககனமேன் மறைவோ மென்ன
நினைத்தன னினைத்த துன்னி நேமியை நினைத்தாள் கன்னி. (எங)

விண்ணிடத் தெழுந்து தோற்றி விளங்கொளிப் பரிதி போல
மண்ணிடத் தெழுந்து வந்து வளரொளிப் பரிதி யொன்றங்
கெண்ணிடத் தடங்காக் காம மெய்திய பாவ வாணன்
கண்ணகன் றலையை வல்லே யரிந்துமைக் கடலி விட்டே. (எச)

மிக்கரந் தைகளே யிந்த மேதினிக் கியற்றி வாழ்வன்
மைக்கரன் மாயக் காய்ந்தாள் மலரடி வணங்கி நேமி
புக்கர வுலகத் தங்கண் போயது புவியைக் கீண்டு
சக்கரம் புக்க வந்தத் தலத்திலோர் தீர்த்த முற்ற. (எரு)

மின்னிற வெயிற்று வாணன் வெந்தலை யரிந்து நேமி
மைந்நிறக் கடலிற் போட வாய்வழி யுவரி நீர்பொண்
டன்னிறக் கடற்பா டெங்கு மளறுபட் டதனைச் சேனைச்
செந்நிறக் குருதி வெள்ளஞ் செங்கட லாக்கிற் றன்றே. (௭௬)

கார்த்திரண் முழக்கு மஞ்சக் கனைகட லொலியு மஞ்ச
வார்த்தன ரமரர் பற்ற வரம்பைய ராடி னார்கள்
பார்த்தமா முனிவ ரெல்லாம் பற்பல வாசி கூறித்
தூர்த்தனர் பூவின் மாரி யாடினர் துள்ளித் துள்ளி. (௭௭)

கிஞ்சைய ரியக்கர் சித்தர் வீணைவல் லோர்கள் விண்ணோர்
நஞ்சுறை யெயிற்று நாக நாட்டுளோர் ஞாலத் துள்ளோர்
வஞ்சக வாணன் பட்டா னெனமன மகிழ்ச்சி மிக்கா
யஞ்சலி செய்து வாழ்த்தி யணங்கினை யேத்தி னால். (௭௮)

வேறு

முத்தொழிலோர் தம்மான் முடித்தற் கரிதாய
வத்தொழிலை நீயிவண்வந் தம்மா முடித்தனையே
மெய்த்தொழிலோர் தங்கண் மெலிவினினீ வந்துதவ
வெத்தொழிலு நீகொடுத்த தென்றின் றறிந்தோமால். (௭௯)

மாவலிசேர் வல்லவுணன் மாயா வரவாண
னேவல் செய்தி யாங்களிடைந்தோ மிடர்தீர்த்தாய்
நீவலியை யாவரினு மென்பதனை நெஞ்சினுற்றோங்
காவலினான் முற்றுமெமைக் காக்கக் கடவாயால். (௮0

முன்னையா யாவருக்கு மூவுலகு மீன்றருளு
மன்னையா யெவ்வுயிரு மாக்கியே நீயுமொரு
கன்னியா யெங்களுக்குங் கண்காண வந்தனையா
லுன்னையா ரெண்ணி யுணர்வா ருணர்வாரே. (௮௧)

வேதத்தி னுச்சியோ வெள்ளிவெற்போ மிக்கிமயச்
சீதப் பனிவரையோ தெள்ளுதிருப் பாற்கடலோ
கோதற்ற சீர்மைக் குமரிப் பதியோவுன்
பாதக் கமலம் படுதற் கினியதம்மா. (௮௨)

நீயே பரப்பிரமம் நீயே பராசத்தி
நீயே யுயிர்க்குயிராய் நின்ற பரஞ்சோதி
நீயே மறைமுடியி னிற்குமொரு வான்பொருடா
னீயே யெல்லாமு நிகழ்த்து மகமாயி. (அ௩)

என்றயனும் விண்ணோர்க் கிறையு மிமையோரு
நின்றுபல பன்னி நெடிதுபுகழ்ந் தேத்த
வன்றவரை நோக்கி யருட்கவுரி நீங்களினிச்
சென்றரிய நும்பதங்கள் சேர்ந்தினிதின் வைகுதிரால். (அ௪)

என்னுமருட் கன்னிபின்னு மேத்திமையோர் கேட்டவரஞ்
சொன்னபடி நல்கத் தொழுதுமலர்த் தாள்வணங்கி
மன்னியசீர் வானோர்கள் வாழ்பதத்தங் கேகினராற்
பன்னிநவி னுன்மறையுங் காணாப் பராபரையாள். (அ௫)

மன்றல்கமழ் மாலை மலர்க்கரத்தி லேந்தியெழு
தன்றுணைவ ரோடு தவம்புரிவோர் போன்றிருந்தாள்
சென்றுதொழு மன்பர்கடாஞ் சிந்தித் தவைகொடுப்பான்
றுன்றுவளஞ் சேர்குமரித் தொன்னகரா நன்னகரில். (அ௬)

போதமார்க் கண்டேய மென்னும் புராணமதி
னீதியாற் சொல்லுமந்த நீள்கதையி னீர்மையெலாம்
வேதனவன் மார்க்கண்ட மெய்ம்முனிக்குக் கூறியதைச்
சூதமுனி நேமிவனத் தூயோர்க்குச் சொல்லினனால். (அ௭)

வாணாசுர சங்காரச் சருக்கம் முற்றிற்று.
ஆகத்திரு விருத்தம். (எ௪எ).

## வாணாசுர சங்காரச் சருக்கச் சுருக்க வசனம்.

பழமையாகிய மூன்றுலகங்களையுமடக்கி யரசாட்சிசெய்து வரும் வன்மையுள்ள வாணாசுரனது வேவுக்காரர் துன்முகன் துர்த்தெரிசன னென்னுமிருவர் அளவில்லாத மாயஞ் செய்யவல்லவர் எவ்விடத்துங் காணப்படும் திசயங்களை வாணனுக்குத் தெரிந்துசொல்லுங் குணமுடையவர், அவ்விருவரும் பூமாலையைக் கையிலேதாங்கிப் பூஞ்சோலையில் வீற்றிருந்த கன்னி நாயகியை வந்துகண்டு மின் தானோவென்றையுற்றுப் பெண்ணென்று தெளிந்து, இவளை நமது வாணாசுரன் அடைந்தால் தவப்பயன் பெற்றவனாவன்

என்று விரைந்து சென்று தன்னைத்தானே நிகர்த்த வாணனுக்கு முன்னி ன்று வணங்கி அரசே! யொருநாளுங் கண்டறியாத அதிசயங் கண்டோம். மின்னென்பேமோ? மின்னினொளியென்பேமோ பொன்னென்பேமோ வி ளக்கென்பேமோ இந்திராணியென்பேமோ இராசாக்களணியுங் கிரீடமென் பேமோ? அழகுக்கெல்லா மிருப்பிடமாகிய சொரூபம், இத்தகையபெண்ணை யெல்லாச்செல்வமுஞ் சிறப்பும் பெற்றிருக்கின்ற நீ பெற்றாயாகில் உன்னு டைய மாட்சிமை மிகச்சிறப்புற்றோங்கும். பூமாலையேந்திநிற்கும் அந்தப் பெ ண்ணினுடைய ஊழியக்காரிக்கும் இலக்குமி சமானமாகமாட்டாள். மன்மத னைவென்ற பரமேசுரனும் அவளைக்கண்டால் அம்மன்மதனுணைக்குட்பட்டு நடப்பான். வீரனே! நீ விரைந்து சென்றா லுனக்கே மாலைசூட்டுவாள். அவ ளை நீ பெற்றால் எந்த இடத்தில் வைத்துக்கொள்வாயோ என்றனர். வாண ன் அதிமோகங்கொண்டு தூதர்களே! அப்பெண் எவ்விடத்திருக்கின்றாளெ ன்று கேட்கத் தூதர்சொல்லுவார். தென்சமுத்திரக்கரையிலே குமரியெ ன்னுமொரு நகரமுண்டு அதன்பக்கத்திலே கற்பகப்பூஞ்சோலை போல ஒரு சோலையிருக்கிறது. அங்கே யெழுபெண்கள் சூழவிருக்கின்றாள் என்றனர். உடனே சேனைகள்சூழத் தேர்கொண்டு வரும்படி சொல்லி யதிலேயேறிக் கொண்டு செல்கின்றான். இப்படிச்செல்லும் வாணன் ஆகாயத்தைமுட்டிய தலையும் செவ்வானம்போன்ற தலைரோமமும் பிறைச்சந்திரன் போன்ற வக் கிர தந்தங்களும் அக்கினிகக்குங் கண்களும் தீச்செயல்களே செய்யும்வலி மையும் எல்லா வுயிர்களையும் வாயிலிட்டுண்டு வயிற்றிலடக்குவதும் மகா மேருவை நிகர்த்த புயங்களும் நீண்டகைகளும் யமன்போல முழங்கும் வீர க்கழல்களும் நீலமலைபோன்ற கருநிறமும் பிரமாவினிடத்திலே யரிய தவஞ் செய்து பெற்றவரங்களு முள்ளவன். தீவினை செல்லுத்துதலினாலே விரை ந்து கன்னிநாயகியிருக்கும் பூஞ்சோலையில் வந்து சேர்ந்து அங்குள்ள வளங் களெல்லாங்கண்டு மகிழ்ந்து சத்தகன்னிகள்பாடும் பாடலைக்கேட்டு உலை மெழுகுபோல மனமுருகித் தேரையுஞ் சேனைகளையு நிறுத்திவிட்டுத் தனி யனாய் வந்து கன்னிநாயகியைக் கண்ணாரக்கண்டு, காமத்தீயா லுடல் கருகி மனமுருகி வலியிழந்து பெருமூச்செறிந்து இந்த அமுதம்போல்வாளைக்கண் டு வந்து சொன்ன தூதர்களுக்குப் பரிசில் கொடுப்பதற்கு என்னிடத்தி லெப்பொருள்களிருக்கின்றன என்னுடைய செல்வமெல்லாங் கொடுத்தா லும் போதுமோ? என்றதிசயித்து நின்றனன்.

என்னுயிர்போல இடை குறைய நின்ற இவள் உருப்பசி முதலிய தெய் வப்பெண்ணுமல்லள் பெறுதற்கரிய பேரின்ப வடிவமேயாகும். அவயவங் களினழகோ சொல்லுதற்கு முடியாது. சோலையிலுள்ள குயில் மயில் வண்டு கள் அன்றில் முழங்கி,யென்னுயிரைக்கொல்லுகின்றன. சமுத்திரமுமுழங்கி வருத்துகின்றது. கமுகம்பூவு மகிழம்பூவு மல்லிகைப்பூவுந் தாழம்பூவுமென்

னை யிறந்துபோம்படி செய்கின்றன. சிவனாலும் விஷ்ணுவாலும் போக்குதற்கரிய என்னுயிரை மன்மதபாணம் உண்ணுமற்போகாது என்று,தென்றற்காற்று முதலியவற்றால் வருந்திக் கன்னிநாயகி நேரே வந்து நின்று சொல்லுவான்.

அன்னமே யமுதே கிளியே மானே மயிலே மின்னே மரகதமணியே பொன்னே யென்னுயிரே யினிக்குங்கனியே! யிங்குநின்ற காரணமென்ன? அநேகதவஞ்செய்தாலுங் கிடைத்தற்கரிய வுன்னைக்காண்பதற்குமுன்னை நானென்ன தவஞ்செய்தேனோ என்னையாள்வதற்கோ இங்குவந்து நின்றனை.நீ சொல்லிய ஊழியங்களைச்செய்வேன். அற்பமாகிய தேவர்களைப் போலென்னை நினைக்கவேண்டாம் எல்லாச்செல்வங்களுமுடையேன் யமனும் பயப்படும் வலிமையுள்ளேன். எனக்குப்பயந்தன்றோ சிவனும் விஷ்ணுவும் மலையிலுங்கடலிலும் போயொளித்திருக்கிறார்கள் நீயறியமாட்டாய்போலும். இந்திரன் முதலிய தேவர்களெல்லாரு மேவல்கேட்ப அரசு புரிகின்றேன். என்பெயர் வாணுசுரன் காமத்தினாலே யான் வருந்தலாமோ? மன்மதன் செய்யும் வருத்தத்தை நீக்கவேண்டும் என்று பலவாறு அவளவயவங்களை வருணித்துச்சொல்லிப் பின்னுஞ்சொல்லுவான். காமவியாதிக்குச் சொல்லப் பட்ட அவத்தை பத்தினுள் ஒன்பதவத்தை வந்து போயின. இனிமரணவஸ்தைவந்தெய்தும்; அதைத்தடுப்பதற்கு யந்திர தந்திரமும் அரசருதவியும் ரதகஜ துரகபதாதிகளும் ஆயுதங்களும் வேண்டுவனவல்ல. உன்னுடைய கிருபாநோக்கஞ் சிறிது செய்தாற் போதும் திரிலோகங்களையாளு முதன்மையும் உனக்கேகொடுத்து உன்பாதத்தை வணங்கி யுன்னுடைய ஏவல் வழிநிற்பேன. வீணுகத்தவஞ்செய்து மேனியெல்லா மிளைத்தனை.யிதனாலென்ன பிரயோசனம் யௌவன பருவத்திலன்றோ? இன்பத்தை யநுபவிக்கவேண்டும நீயெந்தப்பொருளைக் கேட்டாலுங் கொண்டு வந்து கொடுக்கின்றேன் என்றனன.

இப்படிச்சொல்லிய பாதகனாகிய வாணனைப்பார்த்துக் கன்னிநாயகி கூறுவாள் பின்வருவதறியாத தூண்டின்மீன் முதலியவற்றைப்போலக் கெட்டுப்போதற் கிருக்கின்ற வீணனே!பெண்கள் கருத்தறியாமல் ஆசைகொள்ளுவது முறையன்று. அவரைத் தொடநினைத்த தீயவருக்கு ஆயுள் குறைவும் மறுமைப்பயனுமில்லை என்றனள். இவள் நம்மைக்கொல்லவந்த கூற்றுவனென் றறியாத கொடியனாகிய வாணன் பெருமூச் செறிந்து பெண்மணி யுன்னை விவாகஞ் செய்யும்வரை யென்னுயிர் தரியாது காந்தருவ முறையாக உன்னை யான் முதலிலே மணந்து பின்னர் விதிப்படி விவாகஞ்செய்து கொள்கின்றேன் என்றனன். அதுகேட்டுக் கன்னிநாயகி வாணனே! யுனக்கு வேண்டியவை யெல்லாங் கொண்டுவந்து தருவனென்று முன்னமே சொன்னாய் ஆதலால் பாதிரிப்பழமும் அருகம்பழமும் ஆலம்பூவும் அத்திப்பூவும் இத்

திப்பூவும் சந்திரன் நக்ஷத்திரங்களிலுள்ள பிரகாசங்களையுங் கொண்டுவந்து கொடுத்தால் நீசொன்ன காரியமுடியும் என்றனள். வாணன் அவையனைத்தையு மாயையினாலே செய்துகொண்டு வந்து வைத்தனன். கன்னிநாயகி பார்க்கு முன்னமே எல்லாப்பொருளு மறைந்தோடிப் போயின. மாயைக்கெல்லாந் தாயாகிய கன்னிநாயகி முன்பு அவை நிற்குமோ வாணன் தன்னுடைய மாயை பொய்த்துப்போனதறிந்து வெயர்த்துப்புழுங்கி வருந்தி நின்று இவளைப் பயப்படுத்தினாலன்றி யிணங்கமாட்டாள் என்று நினைத்து வாளாயுதத்தை யெடுத்து உன்னைக் கொல்லுவேன் என்றுரவாரித்து வந்தனன்.

அதுகண்ட கன்னிநாயகியும் வாளாயுதமேந்தி யுத்தத்துக்கு வந்து நின்றனள். அவளை வாணன் வாளையசைத்து வெட்டினான். அந்த வெட்டு நாயகிமேலே தாக்காமல் விலக நாயகியவன் வாளைத்தன் கைவாளாலே யொரே வெட்டினாலே துண்டித்து விட்டனள். வாணன் வில்லை வளைத்துப் பற்பல பாணங்களைப் பிரயோகஞ் செய்தனன். அவைகளையும் நாயகிவாளால் வெட்டித்தள்ளினாள். பின்னும்வாணன் எட்டுத்திக்கும் வெளியில்லாமல் மூடும்படி பாணவருஷங்களைப் பொழிதல்கண்டு அவற்றைக் கன்னிநாயகி வில்லைவளைத்து அசுரர் பயப்படும்படி குணத்தொனி செய்து தீப்பொறி பறக்கப்பாணப் பிரயோகஞ் செய்து பொடிப் பொடியாகச் சிதறிவிட்டனள். அசுரர் சேனைக்கடல் வளைந்து பாணம் வேல்குந்த முதலிய படைகளைத்தேவி மேலேவிப் போர்க்கு வாவென்று புயங்களைத் தட்டிநிற்றலும், தேவி யொவ்வொரு பாணங்களால் நால்வகைச்சேனையுந் தொலைத்து வெற்றிச் சங்கமுழக்கி நின்றனள். அதுகண்ட வாணன் தேர்மேலேறி நெருங்கிவந்து தேவிமீதுதேவாஸ்திரங் களைத்தூவி நின்றனன். அவைகளையும் வாணனுடைய வில் அம்பறுத்தூணி தேர்ச்சாரதி தேர் குதிரை யனைத்தையும் அக்கினி பாணத்தாலே தரையிலே வீழ்த்தி விட்டனள். வாணன் பயந்து மாயையாலே மறைந்து போக நினைத்தனன். அதுதெரிந்து சக்கராயுதத்தை வரும்படி நினைத்தலும் அது சூரியனைப்போலப் பிரகாசித்து வந்து வாணன் றலையை யறுத்துச் சமுத்திரத்திலே யெறிந்துவிட்டுத் தேவிபாதத்தை வணங்கிப் பூமியைக்கிழித்துக்கொண்டு பாதலம் போய்ச்சேர்ந்தது. கிழித்துக்கொண்டு போன இடத்திலே யொருதீர்த்த முண்டாயிற்று. அதுதான் சக்கரதீர்த்த மென்றுசொல்லப்படுவது. வாணனது அறுபட்டதலை சமுத்திர சல முழுவதையுமுண்டுவிட்டது. வாணன் சேனையிலிறந்தவருடைய ரத்தம்போய்ப் பெருகி அந்தக் கருங்கடலைச் செந்நிறக் கடலாக்கிவிட்டது. உடனே தேவர்முனிவர் முதலியோர் ஆடிப்பாடிப் பற்பல ஆசிகூறிப் புஷ்பமாரி பொழிந்தனராய்த் தேவியைநோக்கித் தாயே! திரிமூர்த்திகளாலு முடித்தற் கரிதாகிய செய்

கையை நீவந்துசெய்து எங்களை யிரக்ஷித்தாய் என்றுபலவாறு தோத்திரித்து நிற்க அவ்வாரத்தேவி கிருபைக் கண்ணாற்பார்த்து நீங்கள் அவரவர் பதவியிலே போய்ச் சுகமாக வசித்திருங்க ளென்று அவர்கள் கேட்ட வரங்களையெல்லாங் கொடுத்தருளித் தன்றுணைவியராகிய சத்தமாதர்களுடன் வந்துபூமாலையைக் கையிலே முன்போலத் தாங்கித் தவஞ்செய்வார் போலக் குமரித் தலத்தில் வீற்றிருந்தனள். மார்க்கண்டேய புராணத்திலுள்ள இக்கதை பிரமதேவர் மார்க்கண்டேய முனியவருக்குச் சொல்லியபடி சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்க்குக் கூறியருளினர்.

வாணாசுர சங்காரச் சருக்கச்சுருக்க வசனம் முற்றிற்று.

---

பதினெட்டாவது

## கன்னியர் குமரித் தீர்த்தச்சருக்கம்.

---

தன்னையே தனக்கு நிகரலா னுவமை தானெடுத் துரைசெயற் கில்லாண், மின்னையே நகைக்க நகைசெயுஞ் சோதி விளங்கொளி மேனியா ளவர்க்கு, மன்னையே யனைய கருணையாள் குமரி யணிநகர் தனில்வீற் றிருக்கு, மென்னையா ளுடையா ளிணை யடிக் கமல மிருப்பதென் னிதயதா மரையே. (க)

ஆர்த்துவண் கயிலை யருவரை யெடுத்த வரக்கனைச் சிறைசெய்த வடலோன், காத்திய வீர்ய னென்னுமோர் மன்னன் கருணையங் குரவனை நோக்கி, நீர்த்தர ங்கஞ்சேர் நெடுங் கட லிடத்து நீள்கரைக் கண்ணினும் பாவந், தீர்த்திடுங் குமரித் தீர்த்தநன் மகிமை செப்பென வருள்செய்வ தானன். (உ)

எங்கணு முள்ள வரியநற் றீர்த்த மியாவையு மெண்ணின்முன் னெண்ணைத், தங்குமுள் ளதுதான் சொற்றமிழ்க் குமரித் தொன்னகர் தன்னிடத் தன்பாத், தங்கிய தேவி தயங்குசந் நிதியுஞ் சந்நிதி வடக்கினுந் தெற்கு, மங்குள தீர்த்த மாடினோர் நினைத்த தடைகுவான் கொடுத்தருள் புரியும். (ந)

அன்னதன் மகிமை நாவினுற் சொல்லற் கடங்கிடாப் பெருமைய தெ
னினு, மன்னிய மகிமை யறிந்தமை சிறிது வகுத்தெடுத் துரைசெய்
வ னவற்றின, முன்னமத் தீர்த்த நாமமிங் கெடுத்து முறைப்படி
மொழிகுவ னென்னுர், பொன்னின்மா முடிக ளுரிஞ்சுபொற் கழ
லாய் புந்தியை வைத் தினிது நீ கேட்பாய். (ச)

புண்ணிய நன்னீர்ச் சக்கர தீர்த்தம் பொருவிலாப் பாவநா சந்தான்
கண்ணிய காவித் திரியொடு சாவித் திரிசர சோதிநற் கன்னி
நண்ணிய கணேசன் றுனுவீ மன்சீர் நவில்பிதிர் மாதர்தந் நாமத்
தெண்ணிய தீர்த்த மிரணடினேடொன்பா னீண்டுமக் கரைக்கணே
யுளவால். (ரு)

அஞ்சினே டாறென் றறைந்தவித் தீர்த்த மானதற் குளவர லாறு
மெஞ்சலில் பெருமை யுடைமையு மிவைக ளீந்திடும் பலன்களு மெ
டுத்து, மஞ்சுறு கொடையாய் சொல்குவ னென்ன மாமுனி கூறலு
மன்ன, னெஞ்சுவந் திறைஞ்சி நின்றிட வன்பா னின்மல னுரைசெய்
வ தானுன். (சு)

சுத்தநின் மலையாய்ச் சோதியா யொளிருஞ் சுந்தரக் கன்னிநா யகி
தான், மத்தமாப் படையான் வாணு மசுரன் வன்றலை யரிந்தவுந்
நாளி, லுத்தம விமையோர் முனிவரர் சித்த ருருத்திரர் மருத்துவர்
வசுக்கள், சத்தமா தாக்கள் விசுவதே வர்கள்சீர் தயங்குநற் பிதிர்
க்களெல் லோரும். (எ)

உரைசெயு மறையா லுபநிட தத்தி னுண்மைசேர் பொருளினுற் ப
ன்னி, விரைசெறி கூந்தற் கன்னிநா யகிதன் மெய்ப்புக ழெடுத்தெடு
த் துரைப்பக், கரையறு கருணை யொடுமவ ளுவந்தக் கடவுளர் யா
ரையு நோக்கிப், புரைதவிர் வரங்கள் வேண்டுவ கேண்மின் பொருந்
தியான் றருவலென் றுரைத்தாள். (அ)

அமரரம் மொழிசொல் லமலையை நோக்கி யம்மைநீ யருளொடு மிந்
தக், குமரியந் தலத்தி லினிதுவீற் றிருந்து கும்பிடு மன்புடை யடியா
ர், தமதுளக் குறைதீர்த் துவந்தன கொடுத்துத் தண்ணளி புரிதலே
வேண்டு, மெமதுளத் தின்னு மிருப்பதொன் றுண்டா லெனச்சில
ரெடுத்தினி துரைப்பார். (கூ)

அன்னையே யெமது நாமமங் குடைத்தா யரியநற் றீர்த்தம தருள வுன்னொளிர் கருணை புரிந்தினி தெமக்கிங் குதவிட வேண்டுமொன் றுரைத்துச், சென்னிமேற் குவித்த செங்கைய ரான தேவரை நோக்கியே நீங்கண், முன்னியே யுரைத்தற் கமைவுறத் தந்தே னென்றனன் முடிவிலா முதல்வி. (௧௦)

வேறு.

அன்பொடு தேவி யந்த வமரர்தந் நாமஞ் சேர
வின்புறு தீர்த்த முந்தா னினிதுடன் கொடுப்ப வாங்கே
முன்புறப் பிதிர்க்க ளெல்லா முகிர்ந்தசீர் நினது தீர்த்தத்
தன்புடை யெங்க ளுமந் தரித்தவோர் தீர்த்தம் வேண்டும். (௧௧)

என்றுதான் பணிந்து கேட்டங் கிறைஞ்சியே நிற்ப நோக்கி
மன்றலங் கூந்தற் கன்னி மணிச்சிறு முறுவல் பூத்து
நன்றெனை மகிழ்ச்சி கூர்ந்து நளினவாண் முகம லர்ந்தே
தென்றிசைப் பிதிரை நோக்கிச் சிறந்தவன் பொடுசொல் வாளால்.

நீயிர்கேட் டிடுமத் தீர்த்த நிகழ்ந்திட வுங்கட் கிந்தே
னுயவத் தீர்த்தந் தன்னி லணைந்தெவ ரேனு மும்மை
நேயமாச் சிந்தை தன்னி னினைந்தொரு தரந்தான் றோய்ந்திட்
டேயதோர் தான மேற்போர்க் கியைந்தன விருப்போ டந்து.(௧௩)

தலமதிற் பிண்ட மிட்டுத் தர்ப்பணஞ் சிராத்த கன்ம
நலனுறச் செய்தா ரேனு நவின்றதங் குலத்தின் மாய்ந்தங்
குலவிடும் பிதிரை நோக்கி யொருதர மூழ்கி னாலு
மிலகவர் குலத்தி னுள்ளோர் யாவருஞ் சுவர்க்க மெய்தி. (௧௪)

மற்றவர் தாமுங் கற்ப காலம்வா னுலகில் வாழ்வ
ருற்றவப் பிதிர்த்தி னத்தி னுவாத்தொறு மோராண் டெய்தி
முற்றுறு பத்தி யோடு மூழ்கினன் முத்தி யின்பம்
பெற்றினி திருப்ப ரென்றும பெருவரங் கொடுத்தாள் கன்னி. ()

அன்றியும் பிதிர்சா பங்க ளனைத்தும் வே றுள்ள சாப
மொன்றிய கொடும்பா வங்க ளொழிந்திடு முள்ளத் தெண்ணி
நின்றகா ரியங்க ளெல்லா நினைத்தவப் படிசித் திக்குங்
குன்றுதம் வழியும் பல்கிக் குலவியே சிறப்புமிக்காம். (௧௬)

துலங்குமப் பிதிர்தீர்த் தத்திற் றோய்ந்திடி லரிய தாய
பலன்களைக் கொடுத்த லாலே படிந்திட வேண்டும் யாருங்
கலந்திடுங் கொடும்பா வத்தோர் கருதிடா ரதனை மேலா
நலம்பெறற் குரியா ரத்தை நாடிடங் காடு வாரால். (௧௭)

பிதிர்க்கடந் நாம தீர்த்தஞ் செய்தபின் பிரமா ணிப்பேர்
துதித்திடு மயேசு ரிப்பேர் செலுங்கவு மாரி வீரி
மதிப்பரும் வயிண விப்பேர் வராகியிந் திராணி மற்ற
விதித்தசா முண்டி யோடு விளங்கெழு மாத ரென்போர். (௧௮)

ஆங்கவர் தங்க ளாம மமைவுறப் பிதிர்தீர்த் தத்தின்
பாங்கரி னமைத்தா ரந்தத் தீர்த்தத்திற் படிந்து ளோர்க
ளோங்குறு பாவி யேனுந் தீயவப் பாவந் தீர்ந்தே
யோங்கிய முத்தி சேர்வா னுவந்தருள் செய்து பின்னும். (௧௯)

மனத்தவ ரினைத்த வெல்லாம் வந்துசித் திக்க வென்று
நினைத்தவேழ் மாத ரங்க ணீள்வர மருள்கை யாலே
யனைத்துள பேரு மங்க ணாடிட வேண்டு மென்னக்
கனத்தமா தவனுஞ் சொல்லக் காத்யவீ ரியனுஞ் சொல்வான். (௨௦)

தென்புலத் தவர்தந் தீர்த்தஞ் சிறந்தவேழ் மாதர் த
மென்புலப் படாநீ சொல்ல யானறிந் தின்ப முற்றே
னன்புலப் பெருமை சானு நற்றவ முனிவ வின்னு
மின்புற மற்றத் தீர்த்தத் தியல்புநீ யியம்பு கென்ன. (௨௧)

அரையர்கோ னுரைப்பக் கேட்ட வருந்தவ னுரைசெய் வானக்
கரையினிற் பாவ நாச மென்ன வோர் கதிசேர் தீர்த்தந்
தரைபுகழ் கின்ற தந்தத் தீர்த்தத்தின் றன்மை யெல்லா
முறைசெய்வன் கேட்டி யென்ன வுவந்தவன் கேட்ப தானன். (௨௨)

இந்திரன் றன்பா னீதிக் கோதம னியம்புஞ் சாபம்
வந்தது தீர்ப்பா னெண்ணி மகிமைசேர் கன்னி யென்னுஞ்
சுந்தரி தன்னை நோக்கித் தொன்னகர்க் குமரி யான
வந்தநற் றலத்தில் வந்தா னருதவஞ் செய்வான் வேண்டி. (௨௩)

புரைதவிர் தவந்தான் செய்வான் போந்தவிந் திரனாறன் மிக்க
வுரைசெறி மகிமைக் கன்னி யுறைதலத் துத்த ரத்திற்
றிரைமறி கடற்க ரைக்கட் டீர்த்தமொன் றுளதா லந்தத்
தரைபுகழ் சுத்த நன்னீர் தயங்குமத் தீர்த்தந் தன்னில். (உச)

தினந்தினந் திரிகா லத்திற் சென்றுசென் றாடி யன்பா
மனந்தரு பத்தி பூண்டு வடிவுடைத் தேவி தன்னை
யினஞ்செறி மலராற் பூசித் தேத்திமா தவங்கள் செய்யக்
கனஞ்செறி கூந்தற் செவ்வாய்க் கன்னிநா யகியுந் தோன்றி. (உரு)

வாசவ நீதான் செய்த மாதவ மகிமை யாலு
நேசமே வைத்தென் பானீ நிகழ்த்துபூ சனையி னாலுந்
தேசுசே ரிந்த நல்ல தீர்த்தஞ்சென் றாட லாலு
மாசிலா மகிழ்ச்சி யுற்றேன் வேண்டுவ வரங்கே ளென்றாள். (உசா)

மூவகை யுலகும் பொய்தீர் முதியநான் மறையு மேத்துந்
தேவநா யகியே யுன்னைத் தெரிசிக்கப் பெற்ற பேறிங்
காவதி னரிய பேறென் னருந்தவக் கோத மன்சொன்
மேவிய சாப நீக்க வேண்டுமென் றடியில் வீழ்ந்தான். (உஎ)

அகநெகிழ்ந் துருகி யன்போ டடிக்கடி வணங்கி நின்ற
மகபதி தன்னை நோக்கி மாதவன் சாபத் துற்ற
பகமதம் பகம தாகும் படியுனக் கருள்செய் தேனீ
சுகமுற வாழ்தி யென்று சொல்லினள் சொல்லாற் றேயாள். (உஅ)

பின்னருஞ் சொல்வா ளுன்பாற் பெரிதுற்ற பாவ மெல்லாம
பன்னரு மிந்தத் தீர்த்தம் பாற்றுமென் றுடம் போற்றி
லன்னவை தொலைவ தாக வாக்கிய வதனா லும
நன்னலந் திகழப் பாவ நாசமென் றுரைக்கப் பெற்ற. (உகூ)

ஆதலா லுலகி லுள்ளோ ரருங்கொடும் பாவ ரேனுங்
காதலா யிதநீர்த் தத்திற் றோய்வுறக் கருது வாரேற்
பாதக மனைத்துந் தீர்ந்து பரிசுத்த ராவ ரப்பாற்
றீதகல் சுவர்க்கம் பெற்றுச் சிறந்தினி திருப்ப ரம்மா. (௩0)

திரைபறி கடலிற் சாவித் திரிகாயத் திரியி னோடு
வருசர சோதி யென்னு மறுவின்மூ வகைய தீர்த்தந்
தரையினி லரிய தீர்த்தந் தானதின் றன்மை யெல்லா
முரைசெய்வ னரசகேட்டி யெனமுனி யுரைப்ப தானான். (௩௧)

கங்கைமா நதிதா னென்றுங் கதிதரு யமுனை யென்று
மங்கவை யிரண்டி னோடு மருஞ்சர சோதி யென்றும்
பொங்கிய தீர்த்த மூன்றின் புகலரும் பெருமை கூறிற்
றிங்கண்மா முடியி னானுஞ் செப்புதற் கரிய தாமால். (௩௨)

அந்தமா நதிக்கண் வையத் தலைவருஞ் செயும்பா வத்தை
வந்துவந் துள்ளே மூழ்கி மாசுற விடுதத லாலே
முந்துறுங் குணங்க ளின்றி முதிர்வுறு மலின மெய்த
விந்தவெம் பாவந் தீர்ப்பா னெங்ஙன மென்று தேர்ந்தே. (௩௩)

வையகத் துள்ளோர் செய்யும் வன்கொடும் பாவந் தீர்ந்துங்
குய்யவே யருள்செய் வாளா யுற்றினி திருக்குங் கன்னித்
தெய்வநா யகிதான் வாழுந் தென்கடற் குமரி யன்றி
வெய்யநம் பாவந் தீர்ப்பான் வேறிலை யென்றங் கெண்ணி. (௩௪)

தரைபுகழ் குமரி யென்னுந் தலத்தில்வந் துற்றே யந்தத்
திரைமறி கங்கை சாவித் திரியென்றும் யமுனை யென்றும்
வரநதி மற்றக் காயத் திரியென்று மகிமை பெற்ற
சரசோதி முன்னை நாமந் தரித்துத்தம் பேர்க ணிற்க. (௩௫)

மாயிருங் கன்னி தீர்த்த மருங்கினில் வடதிக் கின்பாற்
றாயமுத் தீர்த்த மாக்கித் தொழுதகு தேவி முன்ன
ராயிரம் வருட மாங்கே யருந்தவஞ் செய்தல் கண்டு
நாயகி யருள்கூர்ந் தந்த நதிகண்முன் வந்து தோன்றி. (௩௬)

வாய்ந்திடும் வரந்தா னென்பால் வேண்டுவ வழுத்தி ரென்ன
வாய்ந்தசீர் நதிக டேவி யடியிணை வணங்கி யம்மா
வேய்ந்தவிப் புவியின் மாந்தர் யாவரு மெம்பால் வந்து
தோய்ந்தனர் பாவ மெல்லாந் தொடர்ந்தெமைச் சுற்ற லானோம். ()

மாசுள தீரும் வண்ணம் வரந்தர வேண்டு மென்ன
நேசமா முங்கட் கிந்தே னீவிர்சொல் வரந்தா னென்று
தேசுபெற் றுள்ள நீர்முன் செய்திடுந் தீர்த்தத் தங்கண்
வாசமா யுவந்தெப் போதும் வைகுவீ ரென்று பின்னும். (௩அ)

உங்கணுந் நீர்த்தந் தன்னி லுவந்துவந் தாடு மாந்தர்
தங்கள்வெம் பாவந் தீர்ந்து தாம்பரி சுத்த ராகி
யங்கவர் நினைத்த வெல்லா மடைந்துசித் திக்க நல்குஞ்
சிங்கலில் வரமுந் தந்தே னென்றருள் செய்து சென்றாள். (௩௯)

அரியவத் தீர்த்த மூன்றி னருமைநான் மறைக ளாலுந்
தெரிவுறுப் பெருமை யென்னிற் செப்புவ தெவன்று னப்பால்
விரிவுறு பெருமை சாலும் வீமநற் றீர்தத மேன்மை
வரிசில மன்ன கேணீ யென்றுமா தவனுஞ் சொல்வான். (௪0)

குருகுலத் தரச ரான கொற்றவர் குப்ப யோனி
நிருபனோ டுடன் வந் தோர்க ணிலைமை நாற் றொருவர் மாம
னொருவன் பேர் சகுனி யென்ன வுளனவ னமன்சே யான
தருமபுத் திரரதி யைவர் தம்முட னிருக்குங் காலை. (௪௧)

துன்மதிச் சகுனி யென்பான் சூதினி லைவர் தம்மை
வென்மதி நினைந்து வந்து வீழ்கவ ருடல் சொல்ல
நன்மதி நமன்சேய் சூதி னுடினு னைவர் தேற்றார்
பொன்மதி னகரம விட்டுப் புனவனம் போக நேர்ந்தார். (௪௨)

நந்தலில் பெருமை மிக்க நமன்மகன் சகுனி யோடு
வந்து சூதாடித் தோற்று வனத்தினிற் செல்லுங் காலை
நிந்தைசெய் சூதா டுன்கை நெருப்பதுண் டோதோ வென்றங்
கந்தமுன் னேனை நிந்தை செய்தலா லடல்வீ மன்றான். (௪௩)

வந்துறு வறுமை யெய்தி வனத்துறு வாழ்க்கை யாகிச்
சிந்தையுன் மத்தர் போலச் செய்வதொன் றறியா னுக
வந்தவெந் துயர்தான் வீம னுற்றதை யறிந்த முன்னோ
னெந்தவா றிவன்று னேவு தீர்ப்பதென் றெண்ணமுற்று (௪௪)

தம்முது குரவ னான தௌமிய னென்னு நாமத்
தம்முனி வரனை யழைத்தங் கடன்மிகு வீம னுற்ற
விம்முறு துயர மெல்லாம் விளம்பலு மதனைக் கேட்டுத்
தெம்முனி வாதி குற்றஞ் செற்றவன் செப்ப லுற்றான். (௪௫)

நடுவனென் றுரைக்கு நாம நமனுடைப் புதல்வ வுன்னை
நெடுவனத் துறுங்கால் வீம னிந்தனை செய்ய வந்த
கெடுமதிப் பாவத் தாலே கிளர்ந்தவெந் துயர்தா னுற்றான்
கொடுவினைப் பாவந் தீர்ப்பான் கூறுகேன் குறித்துக் கேணீ. (௪௬)

அன்னையைப் பிதாவை மிக்க வாசனை யாசா னைத்தன்
முன்னவன் றன்னை நிந்தை மொழிந்தவெம் பாவந் தீர்ப்பான
மன்னுதென் கடற்க ரைகண் மருவுசீர்க் குமரி யென்னுந்
தென்னகர் வாழுந் தேவி தீர்த்தமே யன்றி யில்லை. (௪௭)

அத்தலந் தன்னிற் றூறு தீர்த்தமொன் றுண்ட தற்கங்
குத்தம குணதிக் கின்பா லுளதொரு தீர்த்தம் பாவ
மெத்தனை செய்தா னேனுந் தீர்ப்பதற் கெழில்சேர் கன்னி
வைத்தவத் தீர்த்தத் துள்ள மகிமையார் சொல்ல வல்லார். (௪௮)

ஆதலா லரச வீம சேனனோ டங்க ணெய்தித்
தீதறத் தீர்த்த மாடித் தேவிதாள் வணங்கி யேத்தில்
வேதநா யகியாங் கன்னி மிக்கரு ளதனான் மெய்ம்மை
நீதிமுன் னவனை வீம னிந்தைசெய் பாவந் தீர்ந்து. (௪௯)

பேதமோ டபேதந் தோற்றுப் பித்துறு மயக்க மும்போய்த்
போதமிக் குள்ளோ னாகிப் புனிதனாய்ப் பொலிவ னென்ன
மாதவன் சொல்லக் கேட்டு மற்றவன் மலர்த்தாள் சூடி
யேதமி லியமன் மைந்தன் றம்பியோ டெழுந்தங் கெய்தி. (௫௦)

நாமநற் றீர்த்தந் தன்னி னமன்மகன் மூழ்கித் தம்பி
வீமசே னனையுந் தீர்த்தம் விதிப்படி யாட்டு விப்பத்
தாமமார் வீமன் பாவஞ் சகலமுந் தீர்ந்து புந்திக்
கேமமா மின்ப மெய்தி யீண்டறி வோனு மானான். (௫௧)

மற்றிரு வோருந் தேவி மலர்ப்பதம் வணங்கி யேத்தி
நற்றிரு வணங்கு மன்னு ணல்லரு ளினிதி னேடும்
பெற்றபின் னுவகை யெய்திப் பெருவனத் துறைவுந் தீர்ந்தா
ரற்றைநாண் முதலா வீம தீர்த்தமென் றதன்பே ரான. (ருஉ)

வீமதீர்த் தத்தின் மேன்மை விளம்பினேன் மிக்க கன்னி
நாமதீர்த் தத்தி னன்மை நவிற்றுகேன் கேட்டி யென்னத்
தீமைதீர்த் துலகாண் மன்னன் றிருமுக மதனை நோக்கிக்
காமதீர்த் தன்ற னுணை கடிந்தவன் கழறு கின்றான். (ருங)

வேறு

கன்னிகா தீர்த்தமெனச் சொல்வதுதான் கன்னிதிருச்
சன்னிதியி லுள்ளதது சகலபல தீர்த்தத்து
மன்னியசீர் மகிமையினு மகிமையுள திதுவன்றி
யின்னிலத்தி லெடுத்துரைப்பான் றீர்த்தமவே றில்லையால். (ருச)

மூன்றுலகு தனிலுமுள முதுமைபெறு முக்கியஞ்சே
ரான்றபெருந் தீர்த்தமெலா மித்தீர்த்தத் தணைந்திருக்குஞ்
சான்றநல வித்தீர்த்தந் தனிலாடி லெங்குப்போ
யொன்றொருவ னுடைபல னித்தீர்த்தங் கொடுத்திடுமால். (ருரு)

புத்திரனைப் புவியையரும் பொருளதனை யறிவுதரும்
வித்தையினைப் பெறற்கரிய வீடதனை விருப்பமுறு
மெத்திரத்து முளதாய யாவையுமற் றித்தீர்த்த
மத்தனையுங் கொடுத்தருளும் பத்தியுட னாடினரேல். (ருசு)

பொருவரிய் தேவியெல்லாப் புத்தேளிர் மயமாகுந்
தெரிவருந்தீர்த் தமுமெல்லாந் தீர்த்தத்தின் மயமாகும்
பரிவுறவித் தீர்த்தத்திற் படிந்தாடாப் பாவியர்க
ளெரியுறும்வெந் நரகுறுவ தெங்ஙனம்போய்த் தீர்குவரால். (ருஎ)

எத்தீர்த்த முள்ளவவை யாவையினுங் கங்கைமுதன்
முத்தீர்த்த மவையன்றே முதுதீர்த்த மவைகளும்வந்
தித்தீர்த்தந் தனிலாடி யிலங்கியதின் மலமாகின்
மெய்த்தீர்த்தங் கன்னிகா தீர்த்தமன்றி வேறுளதோ. (ருஅ)

பத்தியுடன் கன்னிகா தீர்த்தமது படிந்தாடின
முத்தியினை விரும்பினர்க்குக் கொடுத்திடுமேன் முதிர்பாவ
மெத்தனைகோ டிகள்செயினு மெரியுறுபஞ் சினைப்போல
வத்தனையு மாயுமென்ப தறைந்திடவும் வேண்டுமோ. (௫௯)

அறிந்துசெயும் பாவங்க ளுளவவையு மறியாது
செறிந்திடுமப் பாவங்கள் சேர்வதற்கு முளவெனினு
மறந்துமிந்தக் கன்னிகா தீர்த்தமதில் வந்தாடிற்
பறந்திடுமப் பாவங்கள் பரிதிமுனர்ப் பனிபோல. (௬௦)

பன்னரிய கன்னிகா தீர்த்தத்தின் பலப்பெருமை
யுன்னரிய மறைமுழுது முரைப்பதற்கு மடங்காதிங்
கென்னிலதன் பெருமைமுற்று மெடுத்துரைப்பார் யாவரினி
மன்னுசிவ தாணுவினற் றீர்த்தத்தின் மகிமைசொல்வாம். (௬௧)

வேறு

மறையுபா தவமு மிககோர் வடிவெடுத் தனைய ஞான
னிறைவனற் றாணு தீர்த்த மென்பதன் பெருமை யெல்லா
முறையநீ வேண்டு மென்ன வரசனும் புகல வந்த
னிறைமொழி யவனு முள்ள முவந்துரை நிகழ்த்து கின்றான். (௬௨)

புலனுயர் காந்த மென்னும் புராணஞ்சொல் சுசீந்தி ரத்தின்
றலமதிற் பெருமைசாலுந் தாணுநா யகன்றன் சென்னி
நிலவுசெஞ் சடையின் மீது நிறைந்தநீர்க் கங்கை யோடு
பலவபி டேக மாடப் படுவது கலந்தொன் றாகி. (௬௩)

நிலத்தில் வீழ் முன்னங் காணு நீர்மைய தாகிக் கீழ்போய்ப்
பிலத்துவா கினியாய்த் தென்பாற் பெருங்கடற் கரையின் முன்னஞ்
சொலத்தகு வீம தீர்த்தத் துறையதின மேல்பாற் றோன்றுந்
தலத்தினிற் கடலுள் *புக்குஞ் சக்கர கிரியின் சாரல். (௬௪)

ஆயவத் தாணு தீர்த்தத் தாங்கணை பெருமை கூறத்
தூயநான் முகத்தோ னாலுஞ் சொல்லரு மறையி னாலு
மேய்வுறச் சொலமுற் றாதால் யாவரு மேத்துங் கன்னி
நாயகி சென்றங் காடி னதினலம் நவிற்றற் பாற்றே. (௬௫)

---

* புகுமென்பது புக்குமென விகாரப்பட்டது.

இம்மையு மும்மை யுஞ்செய் பாவங்க ளெரிந்து முத்தி
யம்மையி லடைய வேண்டு மெனவருந் தவங்கள் செய்வோர்
செம்மையிற் சென்று தோய்வர் சிறந்தவீ டடைவான வேண்டு
மெம்மையொப் பவரெப் போது மினிதுசென் றதனிற் றோய்வார்.

இகத்தினும் பரத்து முள்ள வின்பம தடைவான் வேண்டிற்
சகத்துளோர் தமக்குத் தானு தீர்த்தமே தக்க தய்யா
வகத்தியன் முதலா வுள்ள வருந்தவ ரிமையோ ராதின்
மிகச்சொலு பத்திர்த் தத்தின் மேன்மையை விளம்பற் பாற்றோ.

எத்துனக் கிடையூ றின்றி யிருமையின் பமுந்தா னல்கு
மூர்த்தியாங் கணேசன் முன்ன முதிர்திரை மறிநீர்த் தத்தின்
வாய்த்தவப் பெருமை தன்னை மதிக்குமட் டிழவில் வையங்
காத்தினி தளிப்போய் முற்றுங் கழறுகேன் கேட்டி யென்றான். ()

அரியவன் கூற தாய வந்தணன் பராசி ராமப்
பெரியநன் னாமம் பெற்றோன பெருப்புவி யாளும் வேந்தர்
விரிவெலா மொடுங்க வென்று மேதினி யதனைத் தான்செய்
யுரியநன் மகத்திற் றானங் காசிபர்க் குதவி னானால். (சுக)

ஈந்துநற் றானஞ் செய்த விருநிலத் திருத்த றீதென்
றாய்ந்தவன் புனற்கு வேந்தா மவ்வரு ணனையே நோக்கி
யேய்ந்தமா தவந்தான் செய்ய விரும்புனற் கரசீன் வந்து
வேய்ந்தநீள் சடையோ யென்கண் வேண்டுவ தென்னை யென்றான்.

ஈங்குனக் குடைமை யாய விருங்கட லெல்லை வைப்பிற்
றாங்குமென் கைக்க ணிச்சி தனையெறி வன்போய் வீழ்ந்த
வாங்கிட மதனுக் கப்பா லாழிநீர் பெயர்ந்து நீங்கி
வாங்கிட வேண்டு மென்றான் வருணனுந் தந்தே னென்றான். (எக)

பழுதின்மா மறையோ னாய பாசிரா மப்பே ரோன்கை
மழுவினை வாரி யின்க ணெறிதலு மழுப்போய் வீழ்ந்து
தழுவயோ சனைதா னென்று தரங்கநீ ரப்பால் வாங்க
வெழுதிலா மறைவல் லோனவ் விடத்தினைக் கைக்கொண் டேதான்.

குமரியந் தலமதென்னுங் கோநகர்க் கடற்கரைக்கட்
சமைவுறங் கரனை யன்னோன் றன்பிர திட்டை பண்ணி
யிமையவர் புகழப் பூசித் தேத்தியன போடு சிறப்ப
வுமைதிரு மகனை நோக்கி யுளமுவந் துரைக்க லுற்றான். (௭௩)

மறையவர் திலக வேண்டும் வரங்களீ கேட்பா யென்ன
வறைகுவன் மறைவல் லோனு மைங்கரக் கணேச விந்த
திறைகடற் கரையிஞ் சாம னிற்கவு நீயெப் போதுங்
குறைவிலா வருளி னோடு குறித்திவ ணிருந்து கொண்டு. (௭௪)

வந்துநின் சந்நி திக்கண் வாரிநீர் படிந்து ளோர்கள்
சிந்தையி னினைத்த வெல்லாந் தீதின்றிப் பெறவு நல்கி
முந்துநின் பதம தாய முத்தியு மெய்தும் வண்ணந்
தந்தரு ளென்ன வன்னோன் றந்தன னினிதி னென்றான். (௭௫)

அங்குப்போய்க் கணேச தீர்த்த மாடினோ ரவர்கட் கின்பந்
தங்கிடும் பெருமை யெம்மாற் சாற்றலாந் தரத்த தன்றாற்
பொங்குமா கருணை யுள்ள போதக முனிக்கு நல்லோர்
பங்கமில் பலங்க ளாதி சிற்றுண்டி படைப்ப ரம்மா. (௭௬)

கரியசக் கரஞ்சூழ் கின்ற காசினி முழுதுங் கைக்க
ணுரியசக் கரத்தான் போல வோங்கிரும் புயத்திற் றாங்கிப்
பெரியசக் கரந்தா னெங்கு நடத்திடும் பெரிய மன்ன
வரியசக் கரதீர்த் தத்தி னருமையா னறையக் கேணீ. (௭௭)

பூதலம் போற்றுந் தேவி பொற்புறு வடிவைக் கண்டு
காதல்கூர் தீமை வாணன் கருந்தலை யறுப்பா னன்று
பாதலத் திருந்து வந்த பரிதியாம் பரிதி வந்த
மாதல மதனைச் சக்ர தீர்த்தமா வகுத்தா ளன்னாள். (௭௮)

புனிதநன் னீரா னேமிப் புண்ணிய தீர்த்த மாடு
மனிதரை நரரோ டெண்ணி வகுப்பதன் றவரைக் கண்டே
யினிதுடன் வணங்கி னோரு மெய்துவர் சுவர்க்க மென்னி
னனிநலன் றருமத் தீர்த்த நன்மைதா னவிற்றற் பாற்றோ. (௭௯)

ஆடுநீர் முறைமை கேணீ யரசவென் றறிவன் சொல்வா
னாடுநல் விருப்பி னோடு முன்னர்த்தா னன்னீ ரான
கேடில்சக் கரதீர்த் தத்திற் கிழமையோ டாட வேண்டுந்
தேடுமத் தீர்த்த மாடுஞ் செயன்முறை செப்பு வேனால். (அ0)

செப்புமத் தீர்த்தத் தெல்லை தெரிவுறு விடத்தி லேகி
மெய்ப்படு மலச லாதி விடுத்தங்கஞ் சுத்தி செய்து
வைப்புறு மத்தீர்த் தத்தை வணங்கியுட் புகுந்த தன்கட்
டுப்புவா யுமிழ்ந்தி டாது தூயநன் னீரி லாடி. (அக)

உடுத்தநீ ராடை நீரிற் பிழிந்திடா தொருபாற் பெய்தே
யெடுத்துமுன் றோய்த்துக் காய்ந்த துகிலினு லீரம் போக்கித்
தொடுத்திரு தூசு டுத்துத் தூயசெய் கடனாற் றிப்பின்
னடுத்தநற் குகநா தன்றன் னடியிணை வணங்கி யப்பால். (அஉ)

தூயதாம் பாவ நாசத் தீர்த்தத்திற் றோய்ந்து பின்ன
ராயவக் கடலிற் றீர்த்த மாடுவான் றொடங்குங் காலைத்
தேயமிக் கேத்துஞ் சாவித் திரிமுதன் முததீர்த் தத்தி
னேயமார் பத்தி யோடு நினைந்துநேர் சென்று நின்று. (அங)

வேண்டுவ வெல்லா நெஞ்சில் விருப்புற நினைத்துள் ளத்தே
பூண்டமெய்ப் பத்தி யோடும் புனிதவே தியர்வி தித்த
மாண்டகு விதியாற் றீர்த்த வாரியை வணங்கிச் சென்று
காண்டகு தீர்த்த மாடல் கடமையென் றுரைப்பர் கற்றோர். (அச)

நன்னலஞ் சிறந்த தீர்த்த மூன்றினு நயந்தங் காடிப்
பின்னரு மறையோன் சொன்ன பெருமைசான் முறைவ ழாமற்
கன்னிநா யகிகற் பித்த கதிதரு மகிமை சேர்ந்த
சன்னிதித் தீர்த்த மாடுந் தன்மையா னுரைப்பன் கேணீ. (அரு)

அருளுரு வான தேவி யடியிணை வணங்கி வேண்டும்
பொருளெலாம் புத்தி யோடும் புந்தியி னினைந்து கொண்டு
மருவிலா மறையோர் சொல்லின் வழிமுறை யவைவ ழாமற்
றெருளுடைத் தேவி தீர்த்தஞ் சிறந்தினி தாடிப் பின்னர். (அசு)

சந்திரா முகத்தி னோன்றன் சந்நிதி யதனிற் சென்று
சிந்தைகூர் பத்தி யோடுஞ் சேவடி வணங்கியென்பால்
வந்திடு மிடையூ றெல்லாம் வராதுகாத் தருளி யானு
முய்ந்திட வேண்டு மென்றங் குவரிநீ ராடி யப்பால். (௮௭)

தாணுவின் றீர்த்த மான தரங்கநீர்க் கடலைச் சார்ந்து
பூணுமன் போடு சென்னி பூமிசைப் படவ ணங்கிக்
காணுமத் தீர்த்த மாடுங் காலையிற் றாணு பாதம்
பேணிநன் மனத்தில் வைத்துப் பெரிதுறு மன்பு பூண்டு. (௮௮)

வைத்துநல் லன்பு பூண்ட மனத்தினில் வேண்டு மென்ப
தெத்தனை யுளவென் றாலு மீந்தருள் புரிவ னென்னப்
பத்தியோ டாடி னோர்க்குப் பற்றுள வெல்லா மீந்து
முத்தியுந் தருமத் தாணு முதுதீர்த்த மூழ்கல் வேண்டும். (௮௯)

விதிப்படி முறைவ ழாமல் விருப்பமோ டப்பாற் சென்று
துதித்திடும் வீம தீர்த்தத் துறைபடிந் தாடிப் பின்னர்
மதித்திடும் பிதிர்தீர்த் தத்தில் வந்ததை வணங்கி யந்தப்
பிதிர்த்துறைத் தீர்த்த மாடும் பெருமைசேர் விதிக ளியாவும். (௯௰)

வேதியர் முதலா வுள்ளோர் விளம்புமா றாடிப் பின்னர்
மாதர்தந் தீர்த்தந் தானும் வரன்முறை யாடிப் பின்னர்
நீதிசேர் தர்ப்ப ணங்க ணிகழ்த்திடு பிண்ட மற்ற
வோதிய சிராத்த கன்ம முவந்தவை செய்க பின்னர். (௯௧)

அவரவர் சத்திக் குள்ள வப்பொரு ளதனை யன்பாத்
தவறின்பா மறையோர் கையிற் றானமு முதவிப் பின்ன
ருவமையொன் றில்லாத் தேவி யொண்மலர்த் தாளைப் போற்றிப்
பவமினி வருவ தில்லாப் பரிசுத்த ராவ ரம்மா. (௯௨)

மன்னுசக் கரகி ரிக்கீழ் வருந்தாணு தீர்த்தந் தோய்ந்தோர்
பன்னருஞ் சுசீந்தி ரத்திற் பத்தியோ டேகிச் சென்று
முன்னைமுத் தேவ ரொன்றாய் முளைத்தருண் மூர்த்தி செய்ய
பொன்னடி வணங்க வேண்டும் புரந்தரன் போல வென்றான். (௯௩)

பூதல முழுதுங் காக்கும் புரவல நீதான் கேட்பக்
கோதிலாப் பெருமை மேவுங் குமரிமா நகர மான
மாதல மூவி சேடம் வகுத்தியான் சொல்லக் கேட்டா
யாதலா லுன்னின் மிக்க வரசர்கள் யாவ ரென்றான். (௬௪)

என்றினி துரைத்த வந்த வேத்தருந் தவத்தி னோனை
மன்றலங் கமல மன்ன மரலடி வணங்கி யேத்திப்
பொன்றிகழ் மணிப்பொற் பீடப் புதியவா சனத்தின் வைத்தே
நன்றிகொள் புனித நீரா னல்லபி டேக மாட்டி. (௬௫)

அருக்கிய முதலா வுள்ள வாறினோ டுரைந தாய
திருக்கிள ருபசா ரங்கள் சிறப்புறச் செய்து மன்னன்
விருப்பொடு மறையோர்க் கெல்லாம் வேண்டுவ வழங்கிப் பின்ன
ரிருக்கொலி முழவோ டார்ப்ப வியற்றிமுன் வணங்கி நிற்ப. (௬௬)

அரசனை நோக்கி மிக்க வருளினோ டாசி கூறி
யுரைசெய்மா மறையோர் சூழ வுயர்தவ னுறையுள் புககான்
கரையிலா வுவகை யுற்ற காத்யவீ ரியனு நாம
விரைசெறி யலங்கன் மாலை வேந்தனுங் கோயில் புக்கான். (௬௭)

போற்றுதென் குமரி யென்னும் புனிதமா நகரின் மேன்மை
யாற்றிய தவத்தின மிக்கோ னருள்செய வதனைக் கேட்டு
மாற்றரும புகழின் மேலா மன்னனும் வைய மேத்தச
சாற்றரும் பெருமை சானுஞ் சகலசித் திகளும பெற்றான். (௬௮)

நன்முறை மன்னன் கேட்ப ஞானநற் குரவன் சொன்ன
சொன்முறை வழாமற் றூய சூதமா முனிவ னென்னுந்
தன்முறை வழுவி லாதான் சவுனக ராதி யாய
பன்முனிக் கணங்கள் கேட்பப் பகர்ந்தனன் குமரி மேன்மை. (௬௯)

சூதிமா முனிவ ரென்னுஞ் சவுனக ராதி யாய
நீதிமா தவரை நோக்கி நீவிர்தாங் கேண்மி னென்னக்
கோதிலாக் குமரி வாழுங் குமரிமூ விசேடஞ் சொன்ன
சூதமா முனிவன் பின்னுஞ் சொல்கின்றான் சொல்லுந் தன்மை. ( )

ஆதியம் பரையாங் கன்னி யமலைவாழ் குமரிக் குள்ள
மேதகு புராணந் தன்னை விரும்பியே கேட்குங் காலை
மாதவன் கோயி லேனும் வண்சிவா லயத்தி லேனு
மேதின்மற் றாலயத்தி லேனுங் கேட் டிடுதல் வேண்டும். (க௦க)

தனத்தினைப் புத்தி ராதி தகும்பெருஞ் செல்வத் தோடு
கனத்தநற் கல்வி தன்னைக் கதியினைக் காமுற் றோர்கண்
மனத்தினிற் பத்தி வைத்து மாநெறி முறையாற் கேட்பி
னினைத்தகா ரியங்க ளெல்லா நேர்ந்தவர்க் குடன்சித் திக்கும். (க௦உ)

உரைத்தவிப் புராண நூலை யுரைசெய்வோர் படிப்போர் கேட்போர்
வரைத்தெழு திடுவோர் சொன்னம வழங்கியே யெழுது விப்போர்
தரைத்தலத் தங்கிட் டோமஞ் செய்பலஞ் சார்வ ரென்ன
விரைத்திடும் புராண நூல்க ளெண்ணில்யான் சொல்வ தென்னே. ()

நிறைதவச் சூதன் சொன்ன நீர்மைகேட் டுவந்தே யந்த
மறையவ ரன்றே னுள்ள மகிழ்வுற வாழ்த்திச் சொல்வார்
குறையறு மகிமை சேருங் குமரிமா விசேட மற்று
மறையநீ யாங்கள் கேட்டிங் களவிலா மகிமை பெற்றோம். க௦ச)

தன்மநற் றவங்கள் பூண்டு தகைமைசா லரிதா வுள்ள
கன்மம்யாஞ் செய்தோ மென்ப கண்டன முன்ற னாலே
புன்மைசேர் பவநோய் தீர்ந்தோம் பூதலந் தழைக்கப் பெய்யு
நன்மழை தனக்குச் செய்யு நலனென்கொன் ஞால மென்றார். (க௦ரு)

இனையன பலவும் பன்னி யேத்தமா முனிவர் சூத
முனைவனு மகிழ்ச்சி கூர மொழியுநல் லாசி கூற
வனையமா தவரு மின்பா யவரவ ரிருக்கை சேர்ந்தார்
நினைவுறும் வியாதன் றன்பா னிறைதவச் சூத னுற்றான். (க௦சு)

திங்கண்மும் மாரி பெய்க செழிக்கவிவ் வுலக மாவின்
றங்குலம் வாழ்க வேதத் தலைமையந் தணர்கள் வாழ்க
மங்குறு துலகங் காக்கு மன்னர்வெண் கவிகை வாழ்க
பொங்குகற் புடைய சீலப் புண்ணிய மாதர் வாழ்க. (க௦எ)

திங்கள்செஞ் சடைமேல் வைத்த சிவன்றிருக் கோயில் வாழ்க
சங்குசக் கரந்தா னேந்துந் தடக்கையான் கோயில் வாழ்க
செங்கம லப்பூப் போலுஞ் சேயரிக் கருங்கட் டேவி
தங்கிய குமரி மூதூர் தழைக்கவா லயமும் வாழ்க. (௧௦௮)

வேறு.

சுருளுலவு குழல்போற்றி நிலவுலவு மதிவதனச் சோதி போற்றி
யருளுலவு மிருநயன வயில்போற்றி யறம்வளர்க்கு மங்கை போற்றி
மருளுலவுமனத்தேனைப்பவக்கடல்வீழ்ந்தலையாமன்மலர்த்தாளேத்துந்
தெருளுலவ வருள்புரிந்த கன்னிநா யகிகமலத் திருத்தாள் போற்றி.

கன்னியாகுமரித் தீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (௨௱௬௬.)

## கன்னியாகுமரித் தீர்த்தச்சருக்கச் சுருக்கவசனம்.

கயிலாச மலையை யசைத்த இராவணனைச் சிறைப் படுத்திய வலிமையுள்ள காத்திய வீரியார்ச்சுனனென்னு மரசன் தனது குருவாகிய தத்தாத்திரய முனிவரைப் பார்த்துத் தென்சமுத்திரக்கரையிலுள்ள கன்னியாகுமரித் தீர்த்தமான்மிய மருளிச் செய்க என்று கேட்க முனிவர் கூறுவாராயினர்.

எவ்விடத்தினுமுள்ள தீர்த்தங்களுக்கு மேலாகிக் கன்னியாகுமரித் தலத்தில் தேவி சந்நிதிமுன்னும் அதன் வடக்குந் தெற்குமுள்ள தீர்த்தங்கள் தம்மிடத்தில் மூழ்கினோர் நினைத்தவைகளைக் கொடுத்தருளும். அவைகளின் மான்மிய மறிந்தவாறு கூறுவேன். சக்கர தீர்த்தம், பாவநாசம், காவித்திரி, சாவித்திரி, சரசோதி, கன்னியாகுமரி, கணேச தீர்த்தம், தாணு தீர்த்தம், வீம தீர்த்தம், பிதிர் தீர்த்தம், மாதுரு தீர்த்தம் ஆகிய பதினொரு தீர்த்தங்களும் சமுத்திரக்கரைக்கண்ணேயுள்ளனவாம். கன்னிநாயகி வாணாசுரனைக் கொன்றகாலத்திலே தேவர் முனிவர் சித்தர் மருத்துவர் வசுக்கள் சத்தமாதர்கள் விசுவதேவர் பிதிர்க்கள் எல்லாரும் தேவியைத் தோத்திரஞ் செய்ய, உங்களுக்குவேண்டிய வரங்களைக்கேளுங்கள் என்று தேவியருளுதலும், தாயே! நீயிந்தக் கன்னியாகுமரித்தலத்திலிருந்து அடியார்க்கருள்செய்யவேண்டும். அன்

றியும் எங்களுடைய பெயராலே யிந்தத் தலத்திலே தீர்த்தங்க ளுண்டாக வேண்டும் என்று தேவர் முதலாயினோர் கேட்கத், தேவி யவ்வாறு வரந்தந்து பிதிர்க்களை நோக்கி யுங்கள் தீர்த்தத்திலே யாவராயினு மூழ்கித் தானங்கொடுத்துப் பிண்டமிட்டுத் தர்ப்பணம் சிராத்தஞ்செய்வாரானாலும் தங்கள் பிதிர்க்களை யுத்தேசித்து எழுதர மூழ்கினாராலும் அவர் குலத்திலுள்ளார் எல்லோருஞ் சுவர்க்க பதவியிற் சென்று கற்பகால மிருப்பார். பிதிர் தினத்தில் மாதந்தோறும் ஒருவருட மூழ்கினவர் மோக்ஷவுலக மடைந்திருப்பர் என்று பெரிய வரமுங் கொடுத்தருளினள். இம்மட்டோ? பிதிர் சாபமும் வேறு சாபமும் பாவங்களும் அத்தீர்த்தத்திலே மூழ்கினோர்க்கு நீங்கும். இட்டசித்தி யெய்தும். தமது குலம் விருத்தியடையும். பாவிகளந்தத்தீர்த்தத்தை யடையமாட்டார்கள் புண்ணியர்களேயடைவார்கள்.

பிரமாணி மயேசுரி கவுமாரி வீரி வராகி இந்திராணி சாமுண்டியாகிய சத்தமாதருந்தங்கள் தங்கள்பெயராலே பிதிர்தீர்த்தத்தின்பக்கமே தீர்த்தங்கள் செய்து அதிலே மூழ்கினவன் பாவியானாலும் பாவந்தீர்ந்து மோக்ஷமடைவன் மனத்திலே நினைத்தவை யெல்லாம் பெறுவனென்று வரங்கொடுத்தனர். ஆதலா லெல்லோரும் அந்தத் தீர்த்தத்திலே தீர்த்தமாடவேண்டும். சமுத்திரக்கரையிலுள்ள பாவநாச மென்னுந் தீர்த்த முலகமெல்லாம் புகழப்பட்டது. அதன் மான்மியஞ் சொல்லுகின்றேன் இந்திரன் கௌதம முனிவரிட்ட சாபந்தீர்க்கும் பொருட்டுக் கன்னியாகுமரித் தலத்திலே தேவியை நோக்கி வந்து வட பக்கத்திலுள்ள ஒருதீர்த்தத்திலே தினந்தோறுந் திரிகாலமுந் தீர்த்தமாடிப் பத்திசெய்து தேவியைப் பூசித்துத் தவஞ்செய்திருந்தனன். கன்னிநாயகி இந்திரன் முன்னெழுந்தருளியிந்திரனே! யுன்னுடைய தவத்தையும் பூசனையையு மகிழ்ந்தேன். உனக்கு வேண்டியவரங்களைக் கேட்க என்றனள். எல்லாவுலகும் வேதங்களுந் துதிக்குந் தேவ நாயகியே! யுன்னைத்தரிசிக்கப்பெற்ற பேற்றைப்பார்க்கிலும் அடியேன் பெறுவதியாதிருக்கின்றது என்று இந்திரன் தேவியைத் தோத்திரஞ் செய்து கௌதமமுனிவர் கொடுத்த சாபத்தை நீக்கியருள வேண்டும் எனப் பிரார்த்தித்தனன். அவனை நோக்கித் தேவி திருவருள் சுரந்து முனிவன் சாபத்தாலுண்டாகிய குறிகளெல்லாங் கண்களாகும்படி வரந்தந்தேன். சுகமாக வாழ்வாய். உன்னுடைய பாவமெல்லா மித்தீர்த்தம் போக்கியபடியால் இது பாவநாச மென்னும் பெயர்பெறக்கடவது. இதிற் கொடிய பாவர்கள் மூழ்கவேண்டுமென்று நினைத்தாலும் பாவங்களெல்லா நீங்கிப் பரிசுத்தராகிச் சுவர்க்க பதவியடை

இனிச் சாவித்திரி காயத்திரி சரசோதி யென்னுமூன்று தீர்த்தங்களின் மான்மியஞ் சொல்லுகின்றேன். கங்கை யமுனை சரசோதியென்னு நதிக

ள் மூன்றினும் உலகத்தாரனைவரும் வந்துவந்து மூழ்கிப் பாவங்களை விடுத்
தலால் அநத நதிகள் குற்றமெய்தி யிந்தப்பாவத்தை யெங்குப் போய்த்தொ
லைப்போ மென்று ஆலோசித்துக் கன்னிநாயகி வீற்றிருக்குங் குமரித்த
லத்தில் வந்து கங்கை சாவித்திரி யாகவும் யமுனை காயத்திரி யாகவும் சர
சோதி சரசோதி யாகவும் நாமங்கொண்டு கன்னி தீர்த்தத்தின் வடதிசையி
லே தீர்த்த வடிவமாகி ஆயிரவருடந் தவஞ்செய் திருத்தலும், அது கண்டு
கன்னிநாயகி திருவருள் சுரந்து தீர்த்தஙகளின் முன்னெழுநது நின்று
உங்களுக்கு வேண்டும் வரங்கேட்க என்றருளிச் செய்தனள். உடனே அத்
தீர்த்தங்கள் வணங்கி யிவ்வுலகத் தாரெல்லாரும் வந்து மூழ்கலால் அவர்கள்
பாவமெல்லா மடையப் பெற்றனம்; அவைகள் நீங்கும்பொருட்டுக் கருணை
செய்ய வேண்டு மென்றன. தேவியந்தப்படியே திருவருள்புரிந்து நீஙகள்
உங்கள் பெயராலேசெய்த தீர்த்தங்களிலே யெப்போது மிருத்தல்வேண்டும்.
அத்தீர்த்தஙகளில் வந்து மூழ்கினோர் பாவமுழுது நீங்கிப் பரிசுத்தராகி
நினைத்த காரியங்க ளெல்லா மடையும் வரமுந தந்தேன் என்று சொல்லித்
தனதிருப்பிடத்துக்குச சென்றனள்.

இனி வீமதீர்த்தத்தின் மான்மியஞ் சொல்லுகின்றேன். குருகுலத்
தரசராகிய துரியோதனனுமியருந் தருமனுமியருஞ் சகுனியென்பவன் வஞ்ச
னையாற் சூதாடல் செய்து நாட்டை யிழந்து தருமனுமியர் காட்டுக்குப்
போய் வாசஞ்செய்திருக்கும்போது, தருமராசனை நோக்கி வீமன் சூதாடிய
உன்கை நெருப்புப்பற்றுதோ? என்று நிந்தனைசெய்தனன். அதனால் தரித்
திரமடைந்து மதிமயங்கி யாதொரு செயலுமற்றுத்துன்புற்று வீமனிருப்ப
தைத் தருமராசனறிந்து தனது பழைய ஆசாரியரான தவுமிய முனிவரை
யழைத்து வீமனுற்ற துன்பத்தைச்சொல்லி யிது தீர்தற்குப் பிராயச் சித்
தம் யாது என்றுகேட்டு அவரது ஆஞ்ஞையின்படி கன்னியாகுமரியின்கண்
வநது தேவி தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து தம்பியாகிய வீமனையும் ஸ்நா
னஞ் செய்வித்தனன். உடனே வீமன் சகல பாவமும் தீர்ந்துமுன்போல
அறிவுடையவனுயினன். பின்னிருவருந் தேவி திருவடித் தாமரையை
வணங்கித திருவருள்பெற்று மகிழ்ச்சியடைந்து வந்து வனவாச நீங்கிச்
சென்றார்கள். அன்று தொட்டுத் தேவி தீர்த்தம வீமதீர்த்தம் என்னும்பெய
ரைப்பெற்றது.

இனிக்கன்னிகாதீர்த்தமான்மியஞ் சொல்லுகின்றேன். அத்தீர்த்தந்தேவி
சந்நிதியிலுள்ளது எல்லாத்தீர்த்தமேன்மையினு மதிகமேன்மையுடையது.
திரிலோகத்திலுமுள்ள தீர்த்தங்களெல்லா மித்தீர்த்தத்திலே வந்திருக்
கும், புத்திரனைப் பூமியைப் பொருளைக் கல்வியை மோக்ஷத்தை இன்னும்

விரும்பிய மற்றவற்றை யிந்தத்தீர்த்தந் தன்னிடத்தில் வந்து மூழ்கினோர்க்
குக் கொடுத்தருளும். எல்லாத்தீர்த்தத்தினு முயர்ந்த கங்கை முதலிய
மூன்று தீர்த்தங்களுமித்தீர்த்தத்தி லாடுமென்று லிதுபோலச்சிறந்த தீர்த்
தமில்லையென்று சொல்லவும் வேண்டுமோ? அறிந்துமறியாமலுஞ் செய்த
பாவங்களெவ்வளவானாலு மிதிலே மூழ்குவார்க்குச் சூரியன்முன் னெதிர்ந்த
பனிபோல நீங்கிவிடும். வேதங்களாலுஞ் சொல்லுதற்கரிய இந்தத்தீர்த்த
மான்மியமுழுது மெடுத்துச்சொல்ல வல்லவர்யாவர், இனித்தானு தீர்த்த
மான்மியஞ் சொல்லுகின்றேன். கந்தபுராணத்திற் சொல்லப்பட்ட சுசீந்
திரமென்னும் க்ஷேத்திரத்திலே தாணுநாயகர் திருமுடியிலே 'யபிடேகஞ்
செய்வித்த பற்பல அபிடேக தீர்த்தம் தாணுநாயகர் சடையிலுள்ள கங்கா
நதியுடன் சேர்ந்தே ஒன்றாகிக் கீழே வந்து பாதலவாகினியாய்ச் சென்று
கன்னியாகுமரித்தலத்திலுள்ள வீமதீர்த்தத்துறைக்கு மேல்பக்கமுள்ள கட
லுள்ளிருக்குஞ் சக்கர மலையின்பக்கமே சேரும். அதிலே கன்னிநாயகி தீர்த்
தமாடுவாளென்றா லதன் பெருமை சொல்லமுடியுமோ? சென்றபிறப்பிலு
மிப்பிறப்பிலுஞ் செய்த பாவங்களைப்போக்கி மோக்ஷமடைய விரும்பித்
தவஞ்செய்பவர் இந்தத்தீர்த்தத்திலே மூழ்குவர். எனக்குச்சமமான முனிவர
ரெப்போதுமிதிலே ஸ்நானஞ்செய்வர். இகபரலாபமடைய விரும்பினவரு
க்கு இத்தீர்த்தமே சாதனமாயுள்ளது. அகத்தியர் முதலிய ருஷிகளும் இதி
லே தோய்வாரென்றால் இதின் பெருமையாராலே சொல்லமுடியும்.

இனிக் கணேசதீர்த்தமான்மியஞ் சொல்லுகின்றேன் விஷ்ணு அமிச
மாகிய பரசிராமன் க்ஷத்திரியரனைவரையும் வென்று யாகஞ்செய்து இந்தப்
பூமியைத் தானங்கொடுத்தனன். பின்னர் தானங்கொடுத்த பூமியிலே தா
னிருக்கலாகாதென்று வருணனைநோக்கித் தவஞ்செய்து உனக்குரிமையா
கிய கடலிடத்திலே யென்மழுவாயுதத்தை யெறிவேன்; அது வீழ்ந்த இட
த்துக்கு அப்புறம், கடல்நீர் போய்விடவேண்டும். நீர்வற்றிய இடத்தை யெ
னக்குக் கொடுக்கவேண்டுமென்று வரம் பெற்று அவ்வாறே செய்து ஒரு
யோசனை தூரமுள்ள இடத்தைக் கைக்கொண்டனன். அதன்மேற் கன்னி
யாகுமரிக்கடற்கரையிலே விநாயகரைப் பிரதிட்டைசெய்து பூசித்துச்
சுவாமீ! யிந்தக்கடல் கரையைக் கடவாதிருக்கவேண்டும். தேவரீ ரிங்கெப்
போது மெழுந்தருளியிருந்து உம்முடைய சந்நிதிக்கு நேரே சமுத்திரத்தி
லே மூழ்கினோர்க்கு இட்ட சித்திகளையருளி முத்தியுங் கொடுத்தருளல்
வேண்டுமென்று வரம்பெற்றனன். சந்நிதிமுன்னுள்ள கடலே கணேச
தீர்த்தமாம். அதிலேயெல்லாருந் தீர்த்தமாடி விநாயகருக்குப் பழ முதலா
கிய சிற்றுண்டிகள் படைத்து ஆராதனைசெய்வர். இதன் மான்மியஞ் சொல
ல்முடியாது.

இனிச் சக்கரதீர்த்தமான்மியஞ் சொல்லுகிறேன். கன்னிநாயகி வாணாசுரனது தலையையறுக்கப் பிலத்தினின்று வரவழைத்த சக்கராயுதம் வந்த இடத்தைச் சக்கரதீர்த்தமாகச் செய்தனள். இதிலே வந்து மூழ்குந் தேவரையு மனிதரையு மளக்கமுடியாது. இவ்விருதிறத்தாரை வணங்கினோருஞ் சுவர்க்கபதவியடைவரென்றா லதன்பெருமை சொல்லுந்தரமுடையதோ?

இனித்தீர்த்தமாடுமுறைமையைச் சொல்லுகின்றேன். சக்கரதீர்த்தமாடவேண்டில் அத்தீர்த்தங்கண்ணுக்குத்தெரியாத தூரத்திலே சென்று மலசலமோசனஞ் செய்வித்துச் சுத்திசெய்துவந்து, தீர்த்தத்தை வணங்கி உள்ளே புகுந்து எச்சிலுமியாது ஸ்நானஞ்செய்து வஸ்திரத்தை வெளியேறிவந்து பிழிந்து தோய்த்துலர்ந்த வஸ்திரத்தாலீரம் புலர்த்திக்காய்ந்த இரண்டு வஸ்திரந்தரித்து நித்திய கன்மமுடித்துக் குமாரக்கடவுளைத் தரிசிக்கவேண்டும். அப்பாற் பாவநாச தீர்த்தத்திலே மூழ்கிச் சமுத்திரஸ்நானஞ் செய்யப்போம்போது சாவித்திரி முதலிய மூன்று தீர்த்தத்தினு மூழ்கி அதன்மேல் வேதியராலே தரிப்பித்த பவித்திரத்தோடு சங்கற்பஞ்செய்து வேண்டியவைகளை மனத்திலே நினைத்து அன்போடு விதிப்படி வணங்கிச் சமுத்திரஸ்நானஞ்செய்து மீண்டும் மேற்சொன்ன மூன்று தீர்த்தங்களினு மூழ்கல்வேண்டும். அப்பாற் சங்கற்பஞ்செய்து தேவியைத் தரிசித்து விதிப்படி சந்நிதியிலுள்ள தேவிதீர்த்தமாடவேண்டும். விநாயகதீர்த்தமாடுவோர் விநாயகரை முன்னர் வணங்கிப் பத்தியுடனே தியானித்து இடையூறுவாராமற் காத்தருளுக அடியேன் பிழைதகல்வேண்டுமெனப் பிரார்த்தித்துச் சமுத்திரஸ்நானஞ்செய்யவேண்டும். தாணுதீர்த்தமாகிய கடலைச் சார்ந்து கும்பிட்டுத் தாணுவாகிய சிவபிரானை நினைந்து வேண்டியவற்றையருளுக என்று மூழ்கல்வேண்டும். வீரதீர்த்தம் பிதிர்தீர்த்தம் மாதர்தீர்த்தமாகிய மூன்றிலும் இந்த விதிப்படி மூழ்கல்வேண்டும்.

அதின்மேல் தருப்பணம் பிண்டம் சிராத்த முதலியவை செய்து முடிவிலே தேவி பாததாமரையை வணங்கினர் பாவங்களைப் போக்கிப் பரிசுத்தராவர். சக்கரகிரியினிடத்து வருந்தாணுதீர்த்தத்திலே மூழ்கினவர் சுசீந்திரத்துக்குப் போய் மும்மூர்த்திகளுமொன்றாகிய தாணுமாலயனை வணங்கல்வேண்டும். பூமிமுழுவதுங் காக்குங் கார்த்தவீரியார்ச்சுன அரசனே! கன்னியாகுமரித்தலத்தின் மூன்றுவிசேடமும் யான் சொல்லக்கேட்டாயுன்னிலுயர்ந்த மன்னர் யாரிருக்கின்றனர் என்று தத்தாத்திரயமுனிவர் கூறுதலும், அம்முனிவரை யரசன் வணங்கிப் பொன்னாற்செய்த புதிய ஆசனத்திலேற்றி யபிடேகமும் அருக்கிய முதலிய வுபசாரமுஞ் செய்வித்துப் பிராமணருக்கெல்லாம் வேண்டிய தானங்களுங் கொடுத்து வணங்கி நின்றனன்.

முனிவர் அரசனுக்கு ஆசிகூறித் தமதிருப்பிடஞ் சென்றனர். அரசனும் கன்னியாகுமரித்தலபுராண மான்மியங் கேட்டதனாற் சகல சித்திகளும் பெற்று வாழ்ந்திருந்தான் என்று சூதமுனிவர் சவுனகாதிமுனிவருக்குச் சொல்லிப் பின்னுஞ்சொல்லுவார். கன்னிநாயகி வீற்றிருக்குங் கன்னியாகுமரித்தலபுராணங்கேட்கவேண்டுமேல் விஷ்ணுவாலயத்திலேனும் சிவாலயத்திலேனும் பிற ஆலயங்களிலேனுங் கேட்கவேண்டும். திரவியம் மக்கள் ஐசுவரியம் கல்வி மோக்ஷம் இவைகளை விரும்பினோர்கள் பத்தியுடன் கேட்பார்களாயிலவர்களுக்கு உடனே சித்திக்கும். இந்தப்புராணத்தைப் படிப்பவர் இதற்குப் பொருள் சொல்பவர் இதைக் கேட்பவர் எழுதுவோர் பொருள் கொடுத்து எழுதுவிப்போர் அக்கினிட்டோமஞ்செய்த பலனை யடைவரானால் யான் சொல்வதேதிருக்கின்றது என்றனர். அதுகேட்டுச் சவுனகாதியர் மனமகிழ்ந்து சொல்லுவார். இப்புராணங்கேட்டு உம்மாலே அளவில்லாத மான்மியமடைந்தோம். பூருவம் புண்ணியஞ் செய்தோமென்றுந் தெரிந்தனம் என்று பலவாறுகவுபசாரஞ் சொல்லினர். அவருக்குச் சூதமுனிவரும் ஆசிசொல்லித் தமதாசிரியராகிய வியாசமுனிவரிடத்துக்குச்சென்றனர்.

மாதமூன்று மழை பொழிக. பசுக்கள் வாழ்க, பிராமணர் வாழ்க. அரசர் செங்கோல் வாழ்க. கற்புடைய பெண்கள் வாழ்க. சிவாலயம் வாழ்க. விஷ்ணுவாலயம் வாழ்க. கன்னியாகுமரி வாழ்க. கன்னிநாயகி யாலயம் வாழ்க.

கன்னியாகுமரித் தீர்த்தச் சருக்கச் சுருக்கவசனம் முற்றிற்று.

## இவ்வசனமெழுதியது

மதுரைத் தமிழ்ச்சங்கம் நூற்பரிசோதகர்

**மு. ரா. அருணசலக்கவிராயர்.**

திருச்சிற்றம்பலம்.

## கன்னியாகுமரித் தலபுராணம் முற்றிற்று

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 14 | 12 | குமரிமூ | குமரி |
| 27 | 27 | | *வினை-முதனிலைத் தொழிற் பெயர் |
| 37 | 13 | வருடம் | வருடங்கள் |
| 40 | 30 | தருள் | தருள |
| 49 | 20 | பெற்றான் | பெற்றா |
| 50 | 14 | கனும் | னும் |
| 55 | 10 | கான்கி | காண்கி |
| 56 | 28 | யொருள் | பொருள் |
| 62 | 29 | கேயிலும் | கோயிலும் |
| 64 | 4 | டெழூ | டெழு |
| 66 | 30 | றேயோ | றேயோர் |
| 68 | 8 | லெமுவ | லெழுவ |
| 79 | 7 | கின்று | சென்று |
| 80 | 19 | குறையு | குவையு |
| 88 | 9 | தூவிநது | தூவிந்து |
| 90 | 24 | பேரை | போரை |
| 92 | 1 | | பதின்மூன்றாவது |
| 105 | 7 | கர்சி | கர்ச்சி |
| 107 | 22 | மார்க | மார்க்க |
| 114 | 3 | னென்றோ | னொன்றோ |
| 115 | 28 | ருத்தானு | ருத்தலானு |
| 116 | 6 | ண்ணீர் | கண்ணீர் |
| 117 | 21 | செல்ல | சொல்ல |
| 118 | 26 | வாழ்த்தா | வாழ்ந்தா |
| 120 | 27 | நினைக்கி | நினக்கி |
| 121 | 4 | மொழிதத | மொழித்த |
| 122 | 20 | கின்றன் | கின்றனன் |
| ஷை | 34 | லுளவ | லுள்ளவ |
| 124 | 22 | மாா | மார் |
| 125 | 20 | சலஞ்ச | சலஞ்சல |
| ஷை | 24 | கிலை | கிழை |
| 127 | 14 | பொரி | பொறி |
| 129 | 24 | வெண்டு | வேண்டு |
| 130 | 19 | நீங்ய | நீங்கி |
| ஷை | 20 | பனிலைகி | பனியை |
| ஷை | 24 | நா | நோ |
| 132 | 25 | கற்பச்க | கற்பகச் |
| ஷை | 26 | தெரி | தெறி |
| 133 | 24 | யொன் | பொன் |
| 138 | 27 | கேமகா | கோமக |
| ஷை | ஷை | திரானி | திராணி |
| 142 | 16 | பெல்லாக் | பெல்லாங். |

| பக்கம். | வரி. | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 144 | 4 | தனைக் | தனைச் |
| 144 | 23 | வருச்கு | வருக்கு |
| 147 | 29 | மரு | மறு |
| 149 | 8 | மூனியவ | முனிவ |
| 150 | 9 | கனே | கணே |
| 151 | 12 | என்று | என்று |
| ஷை | 20 | தர்ப்ப் | தர்ப்ப |
| 156 | 1 | குரித் | குமரித் |
| ஷை | 26 | நீத் | தீர்த் |
| 157 | 24 | மெல்லாங் | மெல்லாத் |
| 158 | 2 | தாழின் | தாடின் |
| ஷை | 25 | யதின | யதின் |
| 159 | 7 | சகதது | சகத்து |

சருக்க அகராதி.



| பக்கம். | சருக்கத்தின் பெயர் | பாடல் தொகை |
|---|---|---|
| 52 | அகத்தியேசுரச்சருக்கம் ... | 36 |
| 43 | இந்திரன்றவம்புரி சருக்கம் ... | 46 |
| 107 | கன்னிநாயகி குமரியில்வரலாற்றுச்சருக்கம் ... | 47 |
| 123 | கன்னிநாயகி பூஞ்சோலைபுகுசருக்கம் ... | 43 |
| 149 | கன்னியாகுமரித் தீர்த்தச்சருக்கம் ... | 109 |
| 41 | குகனண்டேசுரச்சருக்கம் ... | 9 |
| 10 | குமரித்தலவிளைவிடைச்சருக்கம் ... | 27 |
| 29 | குமரியென்னும் பெயர்வரலாற்றுச்சருக்கம் ... | 41 |
| 39 | சேதுமூலத்தலவரலாற்றுச்சருக்கம் ... | 10 |
| 118 | தேவர்களுக்கபயங்கொடுத்த சருக்கம் ... | 28 |
| 92 | தேவிமகிடாசுரனைச்சங்கரித்தசருக்கம் ... | 86 |
| 23 | நகரச்சருக்கம் ... | 39 |
| 17 | நாட்டுச்சருக்கம் ... | 36 |
| 5 | நைமிசாரணியச்சருக்கம் ... | 24 |
| 1 | பாயிரம் ... | 19 |
| 83 | மகிடாசுரேந்திரயுத்தச்சருக்கம் ... | 50 |
| 79 | மதுகைபிடவசங்காரச்சருக்கம் ... | 15 |
| 59 | மூர்த்திவிசேடச்சருக்கம் ... | 104 |
| 133 | வாணாசுரசங்காரச்சருக்கம் ... | 87 |
| | ஆக | 856 |